# கலைச்செல்வி 98




University of Jaffna
370.73
ARA
061(AR; Main)

அரசினர் ஆசிரியர் கலாசாலை
மட்டக்களப்பு
பாங்குடன் பயின்று பண்பாடெய்துக

அரசினர் ஆசிரியர் கலாசாலை - மட்டக்களப்பு

யாழ் பல்கலைக்கழகம் - நூலகம்.

# கலைச்செல்வி

# KALAICHELVI

# 1998

UNIVERSITY OF JAFFNA LIBRARY
UNIVERSITY OF JAFFNA LIBRARY
370.73
ARA
ARCHIVES
250061

## முத்தமிழ் மன்றம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை,

மட்டக்களப்பு.

University of Jaffna
250061
Library

250061

## MUTHTHAMIL MANTRAM,

**GOVT. TEACHERS' COLLEGE,**

**BATTICALOA.**

# கலைச்செல்வி

வெளியீடு:
முத்தமிழ் மன்றம்,
அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

1998

அச்சுப்பதிப்பு:
இளம்பிறை ஒப்செற் - மருதமுனை.
முன்அட்டை : யுனிஆட்ஸ் - கொழும்பு.

கணனி அச்சுக்கோர்ப்பு :
ஜன்னா டெஸ்க்டொப் பப்ளிசிங்
மருதமுனை.

வடிவமைப்பு :
ஜீவா - பாண்டிருப்பு.

KALAICHELVI

## உள்ளடக்கம்

01. சுவாமி விவேகானந்தரும் இந்து மத மறுமலர்ச்சியும் 01
02. 2000 ஆம் யூபிலி ஆண்டும், 1998 ஆம் இறையாவி ஆண்டும். 05
03. கூடுதுறக்கும் குருவிகள் - குறுங்காவியம். 07
04. ஆசிரியர் மாணவர் உறவு - அன்றும் இன்றும் 14
05. மாணவர் மையக் கல்விச் சீர்திருத்தம். 17
06. ஒரு கல்லைறக் குரல் - போட்டிக் கவிதை முதலாம் இடம். 20
07. இதுவரை கலைச் செல்வி - ஓர் வெட்டுமுகம். 22
08. அவனுக்குள் சிரிப்பு - சிறுகதை - முதலாம் இடம். 37
09. ஒரு விஞ்ஞான வகுப்பு - சம்பாசனை. 40
10. வேண்டாம் வேல் விழி. 42
11. மன்னம்பிட்டியில் தமிழர். 44
12. இருபாங்குக் கூத்து - விவரணச்சித்திரம் - 47
13. ஆசான்களே... 51
14. ஆக்கமும் அழிவும். 52
15. மனிதனும் கணனியும். 56
16. ஒரே பார்வையில் நால்வர். 58
17. குழந்தை இலக்கிய வரிசையில் மகா கவி பாரதியின் பாடல் 59
18. தமிழ் நாவல்களும், திரைப்படங்களும். 62
19. ஒரு கல்லறைக் குரல் - போட்டிக் கவிதை இரண்டாம் இடம். 65
20. விவசாயத்தில் ஒரு முறைப்படுத்தப்பட்ட பூச்சி நோய் .... 66
21. உண்மை வழி. 68
22. விலங்குகளின் நடத்தை. 70
23. வளர்முக நாடுகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள்.... 73
24. போட்டி முடிவுகள். 76
25. ஆசிரிய மாணவர். 77
26. மாணவர் ஆளுநர் பேரவை- 1997/1998. 78
27. மன்ற அறிக்கைகள். 79
28. தகிக்கும் தனலிடையே... 87
29. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மரபுக் கவிதையும் புதுக் கவிதையும் 92
30. புற்றுநோய். 97
31. விளையாட்டுப் போட்டிப் பெறுபேறுகள். 99
32. அமரர் நல்லையா அவர்களின் அடியைப் பின்பற்றி.... 102
33. சிரேஷ்ட மாணவர் விபரம். 97/98 103
34. கனிஷ்ட மாணவர் விபரம். 98/99 104
35. நன்றியுரை. 109

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

# பரம்பொருள் வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

UNIVERSITY OF JAFFNA LIBRARY



# முத்தமிழ் மன்றம் - 1998

காப்பாளர்
திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

ஆலோசகர்கள்

திரு. செ. வினாசித்தம்பி
(துணை முதல்வர்)
திரு. பொ. கோவிந்தராஜா
(விரிவுரையாளர்)
திரு. வ. தெய்வேந்திரன்
(விரிவுரையாளர்)

திரு. வே. லகஷ்மிசுந்தரம்
(பிரதி முதல்வர்)
திரு. சி. கிருஷ்ணபிள்ளை
(விரிவுரையாளர்)
திரு. எஸ். இரவீந்திரன்
(விரிவுரையாளர்)

தலைவர்
திரு. மு. மகாலிங்கம்

செயலாளர்
செல்வி. க. திலகலோஜனி
உபதலைவர்
திரு. எ. ந. குரூஸ்

பொருளாளர்
செல்வி. வே. சுபாஜினி
உப. செயலாளர்
திருமதி. ஜி. சவரி

இதழாசிரியர்
திருமதி. ராதிகா திலகசந்திரரத்தினம்

துணை ஆசிரியர்கள்
திருமதி. நீற்றா அருள்தாஸ்
அருட்சகோதரி. அருள்மரியா

உறுப்பினர்கள்

திரு. எம். ரொபட்ரவீந்திரன்
திரு. எஸ். ஆர். பர்சேக்
திரு. எம். யோகராஜன்
திரு. வி. மோகனதாஸ்
திரு. கே. ரவீந்திரன்
திரு. ஏ. முரளிதரன்

திரு. எம். செந்தில்நாதன்
திருமதி. ம. அரியரட்ணம்
திரு. எம். சுந்தரலிங்கம்
திருமதி. ஜெ. பத்மாவதி
செல்வி. ப. உதயகுமாரி
திரு. எஸ். பிரகாஸ்

# கலாசாலைக் கீதம்

பல்லவி

ஒரு தனி முதல்தரு மாதமிழ் வாழ்க
ஓதும் நல் மாணவர் வாழ்க.

சரணங்கள்

ஸ்ரீலங்கா தேவிதரு மட்டுமா நகரில்
மாபெரும் ஆசிரியர் மன்றம்
ஆனநல் ஞான ஒளியினை உதவும்
அரசினர் நீடுழி வாழ்க
அறிவினை யாமறிவோமே
அறிவதும் பிறருக்காமே
அழகுறப் பயின்றிடுவோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

உண்மையும் நன்மையழகாகிய நோக்கமும்
உள்ளதோர் நல்லவராவோம்
திடகாத்திர தேகமும் காத்திர மனமும்
காணும் நல் வீரர்களாவோம்
கல்வியின் மூலமும் நாமே
கடவுளை அடைந்திடுவோமே
களங்கமில் தொண்டு செய்வோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.



நம் மாணவ மாணவி பரிசுத்த தன்மை
மதித்து நல் அறநெறி புகழ்வோம்
சாதனை போதனை யாவிலும் சுத்தசன்
மார்க்க நல் ஆசிரியராவோம்
ஆதியில் மானிடர் ஒன்றே
ஆண்டவன் என்பதும் ஒன்றே
ஒருயிர் போலினி வாழ்வோம் - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.



மட்/ கல்லடி உப்போடை,
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தலைவர்
**சுவாமி ஜீவனானந்தாஜீ மகராஜ்**
அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

"வளரும் கலைச் செல்வி"

"குரு ஸ்தானத்திலிருந்து பிறர்க்குப்போதிப்பது எளிதன்று ஈசனுடைய ஆதேசத்தை அடையப்பெற்றவனுக்கே அது சாத்தியம்"

*- ஸ்ரீராமகிருஷ்ணர்*

மட்டக்களப்பிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தாயாகப் பொன்விழாக் கொண்டாடி மகிழ்ந்த கல்வி நிறுவனமாக இந்த ஆசிரியகலாசாலை விளங்கி வருகின்றது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக இது உருவாக்கிய ஆசிரியர்கள் பரம்பரை அநேகம். அவர்களில் பலர் குரு நிலையிலிருந்து நாடெங்கும் கல்வியைப் போதித்து சிறப்புற்று வருவது நிறைவையளிக்கிறது.

இத்தகு சிறப்பு நிலையளித்துவரும் கலாசாலையின் வருடாந்தப் பண்பாட்டிதழாக வெளிவரும் "கலைச்செல்வி" இம்முறையும் சிறப்பான ஆக்கங்களுடன் வெளிவருவதைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

எழுத்தார்வமும், கலையார்வமும் மிகுந்த ஆசிரிய மாணவர்களும், அவர்களுக்கு வழிகாட்டி நிற்கும் விரிவுரையாளர்களும், துணை நின்று நெறிப்படுத்தும் அதிபர் அவர்களும் தமது பாரம்பரிய வழியிலிருந்து கலைச் செல்வியை இம்முறையும் காத்திரமான கட்டுரைகளையும் கலையம்சங்களையும் கொண்டு வெளியிடுகின்றனர். மட்டக்களப்பில் தொடர்ந்து வெளிவரும் சஞ்சிகைகளில் இது நல்லதொரு கல்வித்துறை ஆவணமாகவும் திகழுகிறது. இவ்வரிய பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளும் யாவரையும் வாழ்த்துகின்றேன்.

*கலைச்செல்வி தொடர்ந்து வளர்ந்து சிறப்புறுவதாக!*

- நன்றி -

இறைபணியில்

சுவாமி ஜீவனானந்தா.

திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட ஆயர்

**அதி. வண. கலாநிதி, யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆண்டுதோறும் 'கலைச்செல்வி' மலரை வெளியிட்டுவருவது அனைவராலும் கவனிப்புப் பெறுகின்ற ஒரு நல்ல முயற்சியாகும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்களதும், ஆசிரிய மாணவர்களதும் தரமான படைப்புக்களை அது தாங்கி வருவதோடு தமிழன்னைக்கு அழகூட்டும் ஆரமாகவும் விளங்குகிறது.

எதிர்கால கல்விச் சமுதாயத்தை உருவாக்கவிருக்கும் ஆசிரிய மாணவர்கள் தம்மை உருவாக்கிக் கொள்ள இத்தகைய ஆக்க முயற்சிகள் உதவுவதோடு, கற்றவைகளைச் சிந்தித்து தெளிவு பெறவும், கூடிச் செயற்படவும் வழிவகுக்கிறது.

இவ்வாண்டும் கலைச் செல்வி கலை அழகோடும் கருத்துச் சிறப்போடும் மலர்வாள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அத்துடன் கண்ணீரோடும், கவலைகளோடும் அந்தரித்து நிற்கும் எமது மக்களுக்கு ஆறுதல் தருவதாகவும், வாழ்வில் நம்பிக்கை ஊட்டுவதாகவும் எமது ஆக்க வெளியீட்டு முயற்சிகள் அமைவது காலத்தின் தேவையாகும்.

'கலைச்செல்வி' மலரைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் கடின பணியில் ஆர்வத்துடன் உழைத்துவரும் கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். கலைச் செல்வி கவினுற வெளிவர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

+ Kingsley Swampillai

Felicitation Message from the
Chief Commissioner of
Teacher Education and Administration Branch.

*I have great pleasure in issuing a message for the Batticaloa, Government Teachers' College Magazine "Kalaichelvi" to be published soon.*

*The production of this magazine this year too is an indication of the excellent work done under difficult circumstances.*

*The teachers who pass out of this college are recognised and respected in society and I am very proud to say so.*

*I have a firm belief that this institution will continue to provide a valuable service in the coming years.*

*I convey my best wishes to all those who have taken an unttiring effort in the publication of this magazine.*

*With Best Wishes.*

"Isurupaya"
Battaramulla.

J. A. ARANGALLA
Chief Commissioner

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின்

# வாழ்த்துரை

"கலைச் செல்வி"
கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் கலாசாலையின் பங்களிப்பு

இலங்கை அரசாங்கம் தனது தேசிய வருமானத்தில் கணிசமான தொகையைக் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்கின்றது. அண்மைக்கால புள்ளிவிபரங்களின் படி இலங்கை மக்களில் 90% கல்வியறிவு பெற்றவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளில் இது மிகப்பெரிய கல்வி வீதமாகும். இவ்வகையில் இந்நாட்டின் ஆசிரியர்கள் நமது கவனத்துக்குரியவர்களாகிறார்கள்.

இக்கல்வி வளர்ச்சியில் அறிவுக்கான கல்வி (Academical), நிபுணத்துவக்கல்வி (Professional), தொழிற்கல்வி (Vocational) என்பன முக்கிய இடம்பெறுகின்றன. நமது ஆசிரியர் கலாசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் அறிவுசார் கல்விக்கு (Academical) அடித்தளம் அமைப்பவர்கள். இந்நாட்டின் எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கவேண்டியவர்கள். அந்தவகையில் இவர்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

மாணவர்களின் பல்வேறு வயதுநிலைக்கேற்ப, கல்வி போதிப்பதற்கு உளவியல் ரீதியான போதனா முறைகளையும் பயின்று, தமது பயிற்சிக்கால முடிவில் இவர்கள் களத்தில் இறங்குகின்றார்கள். இக்களத்தை ஒரு குருஷேத்திரத்திற்கு ஒப்பிடலாம். அங்கே இந்நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் பணி இவர்களைக் காத்திருக்கிறது.

எனவே, ஆசிரியத் தொழில் என்பது வெறுமனே ஒரு தொழில் மட்டும் அல்ல; அது ஒரு மகத்தான உருவாக்கப்பணி (Creative work) என்பதைப் பயிற்சியைப் பூர்த்தி செய்து வெளியேறும் ஆசிரியர்கள் தமது இதயங்களில் தேக்கிவைக்க வேண்டியது மிகமிக அவசியம். இந்த எண்ணமே அவர்களது சகல பணிகளிலும் அடிநாதமாக இருக்கவேண்டும். இவ்வாண்டு வெளிவரும் "கலைச்செல்வி" யினூடாக இந்த எனது எண்ணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தங்கள் கலாசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றிகரமாக இடம்பெற எனது நல்லாசிகள்.

அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

மட்டக்களப்பு மாவட்ட
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துரை

மட்டககளப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை, வருடந்தோறும் கலைச்செல்வி" சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. இச்சஞ்சிகைக்கு மனம் மகிழ்ந்து எனது வாழ்த்துரையை அளிக்கிறேன்.

இச்சஞ்சிகையை வருடந்தோறும் வெளியிடுவது பாராட்டுக்குரிய விடயமாகும். பயிற்சி பெற்றுப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களும் இவ்வாறு சஞ்சிகைகளைப் பாடசாலைகளில் வெளியிடத்தூண்டப்படுவார்கள். மேலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் இடம்பெற இதுவும் வழிகோலும் எனலாம்.

பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் பல்வேறு ஆக்கத்திறன் கொண்டவர்களாக இருப்பர். அவர்களுடைய ஆக்கத்திறன்களை வெளிக்காட்ட இச்சஞ்சிகை சந்தர்ப்பமளிக்குமாப்போல் அவ்வாசிரியர்களும் அவர்கள் கற்பிக்கும் மாணவர்களின் ஆக்கத்திறன்களை வெளிக்காட்டப் பாடசாலைகளின் சஞ்சிகைகளை வெளியிட்டு அம்மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

சஞ்சிகை வெளியீட்டின்மூலம் ஆக்கத்திறன் வெளிப்பாடுமன்றி வேறுபல நல்லெண்ணங்களும் மாணவர் மனத்தில் விதைக்கப்படுவதனால் சஞ்சிகை வெளியீடு மிக முக்கியமானதொரு செயற்பாடென்று கருதுகிறேன்.

எனவே, இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

மாவட்டக் கல்வித் திணைக்களம்,
மட்டக்களப்பு.
22.07.1998.

எஸ். எஸ். மனோகரன்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை, அதிபர்

திரு. வ. கனகசிங்கம் அவர்களின்

## *ஆசிச்செய்தி*

ஆண்டுதோறும் வெளிவருகின்ற "கலைச்செல்வி" இந்த ஆண்டும் நிறைவாக வெளிவருகின்றாள். துன்பங்களைக்கண்டு துவண்டு விடாமல் மிக எழுச்சியுடன் கலைச்செல்வி வெளிவருகின்றாள். பல சுவையான அம்சங்களைக் கொண்டு புதுப் பொலிவுடன் கலைச் செல்வி வெளிவருகின்றாள்.

கற்றறிந்த அறிஞர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள எமது ஆசிரியர் கலாசாலை தனது கடமையை மிகக் கச்சிதமாகச் செய்து வருகின்றது. இக்கலாசாலையில் பயிற்சி பெறும் எமது ஆசிரியர்களது அரும்பணியால் "கலைச்செல்வி" உயர்ந்த தரத்துடன் வெளிவருகின்றாள். இந்த அரும்பணியில் ஈடுபட்டுள்ள முத்தமிழ் மன்ற உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும், பயிற்சி ஆசிரியர்கள் அனைவருமே நன்றியுடையவர்களாக இருக்கின்றனர்.

மேலும் சிறப்புற பயிற்சி ஆசிரியர்களது கைவண்ணத்துடன் கலைச்செல்வி வெளிவர எனது ஆசியை வழங்குகின்றேன்.

வ. கனகசிங்கம்

அதிபர்.

**இதழாசிரியர் நோக்கு**

# 'கலைச்செல்வி' - ஓர் பயிற்சிக்களமாக.......

வளர்முக நாடுகள் தற்போது கல்விப்பிரச்சினையில் சிக்கிக் கொண்டுள்ளன. நம் நாடும் அதில் ஒன்றாகும். வெறும் ஏட்டுக்கல்வியினாலும் கோட்பாட்டுடனான கல்வியினாலும் இப்பிரச்சினையிலிருந்து விடுபட முடியாதென்பது ஆராய்ச்சிகளின் முடிவாகும். இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்விச் சவால்களை எதிர்கொள்ள செயற்பாட்டுடன்கூடிய அனுபவக் கல்வியே சிறப்பானதென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு நல்லதோர் பயிற்சிக்களம் அமைத்து அதில் சிறந்த பயிற்சியளிப்பதன் மூலம் அறிவு நிறைந்த, திறன்மிக்க, நல்ல மனப்பாங்குள்ள சிறந்த ஆசிரியர்கள் உருவாக்கப்பட வேண்டும். இம்முயற்சிக்கு எங்களது கலாசாலை "கலைச்செல்வி" ஓர் பயிற்சிக்களமாக அமைகிறது என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு வருடக் "கலைச்செல்வியும்" அவ்வவ்வருடப் பயிற்சி ஆசிரியர்களுக்கு பயிற்சிக்களமாக அமைகிறது. அத்தோடுமட்டுமல்லாமல் அதன் மூலம் அவர்கள் பெற்ற பயிற்சியே அதன் வெளிப்பாடாகவும் அமைகிறது. இவ்வெளிப்பாடு இப்பயிற்சியின் அறுவடையேயொழிய இவ்வகை சார்ந்த துறைபோனவர்களின் ஒன்றல்ல. இது மொழி, கலை, இலக்கியப் பண்பாட்டுத்துறைகளில் மாத்திரம் எழுத்தாற்றலை வளர்ப்பதோடமையாது ஒரு ஆசிரியனுக்குத் தேவையான அத்தனை பயிற்சிகளையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது.

என்நோக்கு "கலைச்செல்வியை" நோக்க, அது மனிதனை, மனிதனாக வேண்டிய பண்புகளை, மனிதனாக்க வேண்டிய பண்புகளை நோக்குகின்றது. அதாவது,

சிந்திப்பவனாகு, சிந்திப்பவனை ஆக்கு
பண்புள்ளவனாகு, பண்புள்ளவனை ஆக்கு
கற்றவனாகு, கற்றவனை ஆக்கு என்பதாம்.

மொத்தத்தில்,

மனிதனாகு, மனிதனை ஆக்கு.
"ஆகுக, ஆக்குக" என்று அமைகிறது.

மேற்கூறியவை ஒரு ஆசிரியனிடம் வளர்க்கப்பட வேண்டிய தென்பதும், அதன் மூலம் அவன் மற்றவர்களை வளர்க்க வேண்டுமென்பதும் தெளிவான உண்மையாகும். இதுவே கல்வி நோக்கங்களின் அடிநாதமுமாகும். இவ்வாறமையும் போதுதான் சமூகப் பயன்பாடு ஏற்படும். சமூகப்பண்பாடும் உருவாகும். இதற்கு இம்மலர் ஓர் பயிற்சிக்களமாக எந்தளவுக்கு அமைந்துள்ளதென்பதை இதனை நுகர்வதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தைத் தர விரும்புகிறேன்.

**திருமதி. ராதிகா திலகச்சந்திர ரத்தினம்**
*இதழாசிரியர்.*

முதல்வர்



உயர்திரு. வ. கனகசிங்கம் (SLEAS II)
(T.T.', B.A (Cey) Dip. in. Ed)

## துணை முதல்வர்



திரு. செ. வினாசித்தம்பி
(SLEAS III) (B.A (Hon), Dip. in. Ed)

## பிரதி முதல்வர்



திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்
**(Sp Trd. Phy. Ed)**

# கலாசாலை நிர்வாக பீடம் — 1998

*முதல்வர்*

**திரு. வ. கனகசிங்கம்**
[T.T; B.A (Cey), Dip.in.Edu; SLEAS II]

*துணை முதல்வர்*

**திரு. செ. வினாசித்தம்பி**
[B.A (Hons), Dip.in.Edu; SLEAS III]

*பிரதி முதல்வர்*

**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்**
[Sp-Trd, Phy - Edu]

***விரிவுரையாளர்கள்***

**திரு. வ. தெய்வேந்திரன்.**
Sp-Trd (Maths), B.A. (Cey)
Dip.in.Ed. (Merit)
Fellow ship Teacher-Ed-(Australia.)

**திரு. கு. காராளசிங்கம்.**
Sp-Trd Agri - 1st Class, SLPS,
Life Skills Trd undp/unesco.

**திரு. பொ. கோவிந்தராஜா.**
[B.Sc.]

**திருமதி. ஜே.ஜே. யோகேந்திரன்.**
[Sp-Trd. Home Science]

**திரு. கி. நடராஜா.**
[Sp-Trd (Maths)]

**திரு. க.வினாயகமூர்த்தி.**
[B.Sc.,Dip.in.Ed]

**திரு. எம். பாஸ்கரன்.**
[B.Sc.,Dip.in.Ed]

**திரு. பொ.காந்தியடியான்.**
[B.Sc.,Dip.in.Ed]

**திரு. மு. தேவராஜமுதலி.**
[B.Sc.,Dip.in.Ed]

**திரு. சி. கிருஷ்ணபிள்ளை.**
[T.T; B.A (Cey), Dip.in.Edu; SLEAS III]

**திரு. எஸ். அருமைராஜா**
[Evangetist]

**திரு. எஸ். ரவீந்திரன்.**
[Sp-Trd Art]

**திருமதி. கே. தவராஜரெட்ணம்**
[Dip. In. Dance]

**திருமதி. நி. ரவீந்திரநாத்.**
[B.Sc.,Dip.in.Ed]

**திருமதி . ஆர். சோதிநாதன்**
[Sp.Trd. Music]

**செல்வி.பவானி பாலசுந்தரம்.**
[Sp-Trd .Phy.Ed]

வாழ்த்துப்பா

# எல்லா நலமும் இனிதுற...

~ வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ~



தரவு :

எழுவானும் படுவானும் இயற்கையெழில் வளம்பொலிய
உழுவயலும் கடற்புலனும் உயர்கனகக் குவைசொரிய
முழுநிலவில் அரமகளிர் மோகனத்தே னிசைமிழற்ற
செழுமைதிகழ் மட்டுநகர்ச் செந்தமிழ்த் தாய் வீற்றிருப்பாள்
வீற்றிருக்கும் மாதரசின் வியனுதரத் தேமலரும்
ஆற்றல்மிகு மழலையருக் கறிவுகொழுத் திடல்கடனாம்.

தாழிசை:

அறிவுகொழுத் திடல்கடனாய் அமைந்ததொரு கலைக்கூடம்
செறியுதமிழ்த் திறனான்கும் தெருட்டுமொரு கலைக்கூடம்
உரியமுறைக் கலைபுகட்டல் உணர்த்துமொரு கலைக்கூடம்
அரிய பணிப் பயிற்சியருள் ஆசிரியர் கூடமதே.

ஆசிரியர் கூடமதன் அழகொளிரும் கலைப்பொழிலாய்
பேசரிய அறிஞர்களின் பெறற்கருமா மணிகளுடன்
தேசுயரும் பயிலுநரின் செழுமாக்கத் தெரிவினொடும்
காசினியில் இசைபரவக் கலைக்குமரி கமழுவளே.

கமழுகின்ற செல்வியிலே க விதைமலர், கதைமலர்கள்
அமுதநிகர் தமிழ்மலர்கள், அறிவியலின் நறுமலர்கள்
குமுதவிழிக் கயல்மலர்கள் கொஞ்சுநகைச் சுவைமலர்கள்
திமுதிமெனப் பவனிவரும் திகழ்வருடத் தொருமுறையே.

அராகம்: ஒருதனி முதல்தரு தமிழியல் நறையெழ
முருகியல் அறிவியல் முறையியல் தெளிவுற
பெருமறை யருமறை நெறிமன மொளிபெற
வருமுன திருவடி மலர்தலை புனைகுவம்

புனையுநின் னிணையில்பல் புதுமைகள் எமதுயிர்
வினைகளில் வழியெழு விளைவுகள் பொலிவுற
நினைவுகள் செயலுற நிகரில்பல் உயர்வுகள்
அணைவுற நினதடி அலர்தலை மிலைகுவம்



மிலைதலில் எமதுள மிகுமிருள் குலைவுறும்
கலையெழில் வெளிவரும் கவலைகள் விடுபடும்
விலையில்நின் கருணையில் விடிவுகள் பலவரும்
அலைவுக ளினியிலை அருள்கநின் அருள்ஒளி

அருள்ஒளி புகுமெனில் அயலில்நின் றெமைநகும்
இருள்மன முடையரின் இடரெமைத் தொடருமா?
பொருள்களும் உடைமையும் பொருவிலா உயிர்களும்
அறல்நிலை பெருகுமா? அருவர மருளுவை.

அம்போதரங்கம்:

ஈழத் தமிழர்
இகல்மேம் படவும்
இன்னல் அனைத்தும்
இல்லா தகலவும்
வாழ்தற் கனைத்து
மானிடத் துரிமை
மறுப்புத் தகர்த்து
வரப்பெற் றிடவும்
தாழ்வுறு அடிமைத்
தளையறு படவும்
தகைசால் இளைய
தலைமுறை எழவும்
ஊழிதோ றுயரும்
ஒருவிதி சமைக்க
உகப்பார் குருத்துவ
உலகொன் றுதிக்கவும்



தனிச்சொல்:

எனவாங்கு

ஆசிரியச் சுரிதகம்:

நின்வர வொளிர்க நிம்மதி தவழ்க
பொன்னுல கொன்று புதிதாய் மலர்க
புன்னகை பூக்கும் புலரிவந் திடுக
இன்னல்கள் எனும்சொல் இல்லா தகல்க
கலையெலாம் கமழும் காவொன் றமைக
மலைபோல் மனமும் வாய்மையும் ஓங்குக
நிலைபெறு சமத்துவம், நீங்கிடா அமைதி
குலைவுறா உளத்திடம், கூர்மதி உயர்க
செல்வியே நினது திருப்பொலி வரவால்
எல்லா நலமும் இனிதுற
பல்லா ருயிரும் வாழ்தல்நற் பயனே.

-"திமிலைத்துமிலன"-

# முத்தமிழ் மன்றம் - 1998



### முன் வரிசையில் (இடமிருந்து வலமாக)

திருமதி. றீட்டா அருள்தாஸ் (துணையாசிரியர்), திருமதி. ராதிகா திலகசந்திரரத்தினம் (இதழாசிரியர்), செல்வி.வே.சுபாஜீனி (பொருளாளர்), செல்வி. க. திலகலோஜனி (செயலாளர்), செல்வி. ப. உதயகுமாரி, திருமதி.ஜெ.பத்மாவதி, திருமதி. ம. அரியரட்ணம்.

### இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

அருட்சகோதரி அருள்மரியா A.C (துணையாசிரியர்), திரு. பொ. கோவிந்தராஜா (விரிவுரையாளர்), திரு. கு. கராளசிங்கம் (விரிவுரையாளர்), திரு. வ. தெய்வேந்திரன் (விரிவுரையாளர்), திரு. வ. கனகசிங்கம் (முதல்வர்), திரு. வே. லக்ஷ்மிசுந்தரம் (பிரதி முதல்வர்), திரு. சி. கிருஷ்ணபிள்ளை (விரிவுரையாளர்), திரு. எஸ். ரவீந்திரன் (விரிவுரையாளர்), திரு. மு.மகாலிங்கம் (தலைவர்)

### மூன்றாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

திரு. எம். றொபேட் ரவீந்திரன், திரு. எம். சுந்தரலிங்கம், திரு. எஸ், ஆர். பச்சேக், திரு. வி.. மோகனதாஸ், திரு.ஏ.ந. குரூஸ் (உப தலைவர்), திரு. கே. ரவீந்திரன், திரு. எம். செந்தில்நாதன்.

### படத்தில் இல்லாதோர்

திரு. செ. வினாசித்தம்பி (துணை முதல்வர்).
திருமதி. ஜி. சவரி. திரு.எம். யோகராஜன்.
திரு. ஓ. முரளிதரன்
திரு. எஸ். பிரகாஸ்.

# கலாசாலை விரிவுரையாளர்கள் - 1998



முன் வரிசையில் (இடமிருந்து வலமாக)
திருமதி. ஆர். சோதிநாதன் (விரிவுரையாளர்), திருமதி. ஜே.ஜே. யோகேந்திரன் (விரிவுரையாளர்), திரு.எம். பாஸ்கரன் (விரிவுரையாளர்) திரு.சி. கிருஷ்ணபிள்ளை (விரிவுரையாளர்), திரு.வ. கனகசிங்கம் (முதல்வர்), திரு.செ. வினாசித்தம்பி (துணை முதல்வர்), திருமதி. கே. தவராஜரெட்ணம் (விரிவுரையாளர்), திருமதி. நி. ரவீந்திரநாத் (விரிவுரையாளர்).

இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)
திரு. பொ. காந்தியடியான் (விரிவுரையாளர்), திரு. மு. தேவராஜமுதலி (விரிவுரையாளர்), திரு. பொ. கோவிந்தராஜா (விரிவுரையாளர்), திரு. வ. தெய்வேந்திரன் (விரிவுரையாளர்), திரு. க. வினாயகமூர்த்தி (விரிவுரையாளர்), திரு. எம். அருமைராஜா (விரிவுரையாளர்), திரு. எம். ரவீந்திரன் (விரிவுரையாளர்), திரு. கு. காராளசிங்கம் (விரிவுரையாளர்).

படத்தில் இல்லாதோர்
திரு. வே. லக்ஷ்மிசுந்தரம் (பிரதி முதல்வர்).
திரு. இ. நடராஜா (விரிவுரையாளர்).
செல்வி. பவானி. பாலசுந்தரம் (விரிவுரையாளர்).

# கலாசாலை அலுவலக உத்தியோகஸ்தர்களும் நூலகரும், ஊழியர்களும் - 1998.



### முன் வரிசையில் (இடமிருந்து வலமாக)

திருமதி. M.U. மார்க்கண்டு (இலிகிதர்), திரு. V. தெய்வேந்திரன் (விரிவுரையாளர்), திரு. V. லட்சுமி சுந்தரம் (பிரதி முதல்வர்), திரு. V. கனகசிங்கம் (முதல்வர்), திரு. K. நடராஜா (விரிவுரையாளர்), திரு. K. காராளசிங்கம் (விரிவுரையாளர்), திரு. M. பாஸ்கரன் (விரிவுரையாளர்), செல்வி. N. சுமணாவதி.

### பின் வரிசையில் (இடமிருந்து வலமாக)

செல்வி. P. பரமேஸ்ரி, திரு. C. மரியதாஸ், திரு. க. பாலச்சந்திரன், திரு. A. மகேந்திரன், திரு. M. சிவகுமார், திரு. சீ. நடராஜபதி, திரு. N. நாரயணமூர்த்தி, செல்வி. பவானி.

### படத்தில் இல்லாதோர்

திரு. K. புஸ்பராஜா (இலிகிதர்), ஜனாப் A.C. கலீலூர் றஃமான் (நூலகர்), செல்வி. A. பிரரேமிளா, திரு. து. ஜெயகரன், திரு. P. சசிகரன், திரு. M. மாரிமுத்து, திரு. K. விஜேந்திரன், திரு.சா. கனகரெத்தினம், திருமதி. மா. தங்கமணி, திருமதி.த. தங்கபாக்கியம், திருமதி. K.M.T. குரூஸ், திருமதி. கௌ. நாகராஜா, திரு. க. கருணாநிதி, திருமதி. றோசம்மா, திரு. த. கோவிந்தராஜா, திரு. மா. சீனித்தம்பி.



# சுவாமி விவேகானந்தரும், இந்துமத மறுமலர்ச்சியும்

திரு. மா. செந்தில்நாதன் — விஞ்ஞானப் பிரிவு, முதலாம் வருடம்.

பாருலகைக் குலுக்கிய பாரதத் துறவி, துறவிகளிலும் தனக்கு நிகர் தானேயான அரசியல் துறவி, பாரத மணித்திரு நாடேதான் என உருவகித்து வாழ்ந்த பரிபூரண தேசபக்தன்; நவீன இந்தியாவின் ஞானாசிரியன்; பாரத ஆத்மீக ஞானமும், மேற்கத்தேய விஞ்ஞானமும் கலந்து ஒளிவிட்ட கூட்டு மேதை; எம்மதமும் சம்மதம் என்ற பொது நெறிப் பெரியார்; ஏழை, எளிய மக்களின் கருணைக்கடல்; தீர்க்க தரிசிகளின் தீர்க்கதரிசி; பெருநாவலர்; பேச்சில், நடையில், பார்வையில் வீராதி வீரர்; இவரே வீர நரேந்திரர் என்னும் சுவாமி விவேகானந்தர் ஆவார். இவரது காலகட்டத்திலேதான் இந்துமத மறுமலர்ச்சி இந்தியாவில் மட்டுமல்லாது, உலகெங்கனும் ஏற்பட்டது.

பாரதத்தின் விடிவெள்ளியாக 1863ம் ஆண்டு கல்கத்தா நகரில் சுவாமி விவேகானந்தர் விஸ்வநாத தத்தருக்கும், புவனேஸ்வரி தேவிக்கும் புதல்வராக அவதரித்தார். தந்தை தாய் இட்ட பெயர் நரேந்திரன். சுவாமி விவேகானந்தர் இந்துமத தர்மத்தையும், இந்தியாவையும் காப்பாற்றினார். அவர் இல்லாவிடில் இந்துமதம் மறைந்து, இருள்சூழ்ந்து இந்திய நாட்டிற்கு விமோசனமும் கிடைக்காமற் போயிருக்கும். இந்திய நாடு அந்நியர் ஆதிக்கத்திற் சிக்குண்டு, அடிமைப்பட்டு, இந்து மக்கள் சீரழிந்திருந்த காலகட்டத்தில்தான் சுவாமிகளின் பேராற்றல் அவர்களைத் தட்டியெழுப்பும் ஒரு உந்துசக்தியாக, அடிமைத்தளையை உதறித்தள்ளும் ஆத்மீக பலத்தையும் கொடுப்பதைக் காண்கிறோம். அவரது திட நம்பிக்கை, வீரம், ஞானம், ஆத்மீக வாழ்வு, ஆத்ம பலம் என்பன எம்மை ஊக்குவிக்கும் கருவியாக மாறி இந்துமத மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியாகத் திகழ்வதை அறியலாம்.

இந்துமத மறுமலர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள பணிகள் அளவிடற்கரியன. சுவாமிகள் கடவுளைக் கண்டவர்களைத் தேடி அலைந்தார். இறுதியில் பகவான் ஸ்ரீஇராம கிருஷ்ண பரம ஹம்சரைக் குருவாகக் கொண்டு அவர்மூலம் கடவுள் காட்சியைப் பெற்றார். அதன்பின் அவரது நாவில் ஞானவாணி குடிகொண்டாள். அவரது பேராற்றல் கொட்டும் மழையெனப் பொழியலாயிற்று. உலகின் பல நாடுகளுக்கும் சென்று இந்துமதத் தத்துவங்களைப் பிரசங்கங்கள் மூலம் வெளிப்படுத்தினார். சிக்காக்கோ பிரசங்கமே அவரது புகழை இமய மலைச் சிகரம் போன்று உயர்த்தியது. அத்துடன் இந்துமத மறுமலர்ச்சியும், இந்தியாவின் புகழும் எல்லா நாடுகளிலும் பேசப்படலாயிற்று.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி இன்றும் நிலைத்து நிற்கும் சமயமே நமது இந்து மதமாகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மதம். கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட வேதத்திலிருந்து இந்துக்கள் தங்கள் சமயத்தைப் பெற்றுளர். வேதத்திற்குத் தொடக்கமுமில்லை; முடிவுமில்லை. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு மக்களால் திரட்டி வைக்கப்பட்ட ஆன்மீக விதிகளின் கருவூலமே வேதம் என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

இந்தியாவின் விமோசனம் இந்திய மக்களின் உணர்வை வளர்ப்பதில்தான் உள்ளது என்றார். மதமென்பதுதான் எமது வாழ்க்கையின் சாரம். மக்கள் சீர்திருத்தங்களை ஏற்க வேண்டுமெனில் அது மதத்தின் மூலமே வந்தாக வேண்டுமென்பதில் திடநம்பிக்கை கொண்டார். இதனை மாற்ற முற்படுவது கங்கையை மீண்டும் அதன் இமாலய உற்பத்தி

ஸ்தானத்திற்குத் தள்ளி அதனை வேறு வழியில் பாயும்படி செய்வதுபோல் அசாத்தியமான காரியம் என்றார். வேதாந்தம்தான் மற்ற எல்லாப் பிரிவுகளையும் பிணைக்கின்றது. இதனால்தான் நான் உபநிடத்தை உபதேசிக்கின்றேன்; என் மதத்தின் சாரம் வலிமை; உபநிடதத்தையோ, கீதையையோ, பாகவதத்தையோ போதித்த போதிலும் இதயத்திற்குப் பலமூட்டாத மதம் என்னைப் பொறுத்தவரை மதமே அல்ல, என்றார்.

சுவாமி விவேகானந்தரிடம் அவரது சீடர்கள் நாங்கள் என்ன பணிபுரிய வேண்டுமெனக் கேட்டபோது மனிதனை மனிதனாக்குகின்ற அதாவது மனிதனைத் தன் நடத்தையில் உயரச் செய்கின்ற கல்வியைப் பரப்புமாறு கூறினார். கல்வியின் மூலம் இளைஞர்களின் எலும்பானது இடியால் செய்ததுபோலாக வேண்டும். இந்த வச்ராயுதத்தால் இந்தியாவின் அடிமைத்தனத்தை நொறுக்க வேண்டுமென ஆவேசமாகக் கூறினார். தீண்டாதாரிடம் சொல்லுங்கள்! சக்கிலியரிடம் சொல்லுங்கள்! தோட்டிகளிடம் சொல்லுங்கள்! இவர்கள் போன்ற எல்லோரிடமும் சொல்லுங்கள்; நீங்கள் இந்த நாட்டின் ஆன்மா; உங்களுக்குள் உலகத்தையே புரட்டக்கூடிய சக்தி இருக்கின்றது; நிமிர்ந்து எழுங்கள்; தளைகளை முறித்துத் தள்ளுங்கள்; உலகம் முழுவதும் உங்களைக் கண்டு அதிசயிக்கும்; அவர்களை எழுச்சி பெறச் செய்யுங்கள்; அவர்களுக்காகப் பல பாடசாலைகளைத் திறவுங்கள்; எனக் குறிப்பிட்டார்.

சரபவானி ஆலயம் அந்நியர் படையெடுப்பால் அழிவுற்றிருந்தது. இப்படி அநியாயம் நடக்க இங்குள்ள இந்துக்கள் எப்படி அனுமதித்தார்கள்? என்னைப்போல் பலர் இருந்தால் இப்படியான ஒரு கொடுமை நடவாமல் நிச்சயமாகத் தடுத்திருப்பார்கள். ஆம்! நான் மட்டும் முகமதியப் படையெடுப்பின்போது இங்கிருந்திருந்தால் தேவிக்காக என் உயிரையே விட்டிருப்பேன் என்றார். என் குழந்தாய்! என்று சர்வேஸ்வரி கூப்பிட்டது. சுவாமியின் காதில் விழுந்தது; தேவி பேசினாள்; மாற்றார என் ஆலயத்தில் புகுந்தாலோ, என் உருவங்களைச் சிதைத்தாலோ, எனக்கு என்ன வந்துவிட்டது? அதைப்பற்றி உனக்கென்ன? நீ என்னைக் காப்பாற்றுகிறாயா? நான் உன்னைக் காப்பாற்றுகிறேனா? என்றாள் தேவி; சுவாமி சிந்திக்கலானார். இந்தியர்களெல்லாம் அம்பிகையின் நடமாடும் கோயில்கள் என உணர்ந்தார்.

இமயம் முதல் குமரி வரை சுவாமி விவேகானந்தர் யாத்திரைகளை மேற்கொண்டார். அறியாமையாகிய இருளிலும், ஏழ்மையிலும் கோடானுகோடி மக்கள் படும் இன்னல்களைக் கண்டு அவரது நெஞ்சு விம்மியது. மேனாட்டு மோகத்தில் சிக்கிச் சீர்கெட்டிருந்த பாரத மக்களுக்கு அவர்களது ஆத்மீகப் பாரம்பரியத்தின் சிறப்பினை உணரச் செய்வதற்கு, பாரத நாட்டின் பெருமையை மேனாட்டவரும் உணரும்படி செய்தலே சிறந்த வழியென முடிவு செய்தார். இச்சமயத்திலே அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் சர்வமத மாநாடு கூடவிருந்த செய்தி அவருக்குக் கிட்டியது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் தமக்கு என்னென்ன காரியங்கள் உள்ளனவென்றும், உலக அரங்கில் தமக்கு இன்ன காரியங்கள் உள்ளனவென்றும் தெளிவு பெற்றார். இந்திய மக்களின் வறுமைத் துயரும் அறியாமையும் தீர தாம் தமது சக்தியைப் பயன்படுத்த வேண்டும். மத உணர்வு குன்றிவருபவர்களுக்கு அந்த உணர்வை ஊட்ட வேண்டும். மத உணர்வு குன்றாமலே இந்து மதம் தவறானது என்று மட்டும் கருதிப் பிறசமயம் தழுவ முற்படுபவர்களைத் தடுத்து சனாதன தர்மத்தில் மீண்டும் சேர்க்கவேண்டுமெனக் குமுறியது அவரது உள்ளம். இந்துமதத்தின் அழிவுக்கு முக்கிய காரணம் சனாதனிகளின் வீம்புதான்; மதத்தின் சாரமான அம்சங்களை விட்டுவிட்டு இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாத புறத் தோற்றங்களை வற்புறுத்தி மக்களை உயர்வு தாழ்வு மனப்போக்குகளுக்கு ஆளாக்கி வருபவர்கள் அவர்களே எனக் கருதினார். அதே சமயத்தில் இந்த சனாதிகளை விட சீர்திருத்த வாதிகளை மேலும் வெறுத்தார்.

மேல்நாட்டுப் பாணியில் தமது மதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற உத்தேசத்தை சுவாமிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவ்விரு சாராருக்கும் இடையில் நாட்டின் புராதனமான ஆன்மீக உணர்வுகள் நசிந்துவருவதைக்கண்டு வேதனையுற்றார். நன்நடத்தையற்றவர்கள் தர்ம போதனை செய்யும் விசித்திரத்தைக் கண்டு வாடினார். தம்மிடம்

எவ்வித ஆன்மீக அனுபவமும் இல்லாதவர்கள் வேதாந்தங்களைக் கூறுவதால் அது ஒருக்காலும் பலனளிக்காது எனக் கண்டார். அனுபவம் பெற்றவர்களோ மக்களுக்குப் போதிக்காமல் ஏகாந்தமாய் வாழத் தலைப்பட்டிருந்தார்கள். ஆத்ம சாதனைகளைப் புரிந்து அவைகளை மக்களுக்கும் உபதேசிக்கக் கூடியவர்கள்தான் நாட்டை நல்வழியில் திருப்ப முடியுமென்று சுவாமிகள் எண்ணினார். மேல்நாட்டு நாகரிகம், விஞ்ஞானம், பொருளாதார உணர்வு, வேதாந்தத் தத்துவம், தர்மசாஸ்திர ஆசார முறைகள், புராணங்களின் பக்தி இவை யாவும் பாங்கான விகிதத்தில் கலந்து இந்துமதம் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதினார். ஆனால், இப்படித் தனித்தனிச் சாராரிடம் தத்தளித்துக்கொண்டிருந்த இந்துமதம் கோஷ்டிகளாகி பேத உணர்வும், பூசலும், சச்சரவும், வாதிப் பிரதிவாதங்களும் தலைவிரித்தாடின. இவற்றையும் மேன் மக்களின் பிளவுகளையும் கண்டு கலங்கினார். இந்தியாவையும், இந்துமதத்தையும் மறுமலர்ச்சி கொள்ளச் செய்யவேண்டிய நாள் அண்மித்து விட்டதை உணர்ந்தார். இதற்கு முதலில் உலக அரங்கில் பணிபுரியவேண்டுமெனக் கண்டார். உள்நாட்டில் மேல்நாட்டு மோகிகள் பாரத நாட்டுத் தருமத்தின் பெருமையை உணர்ந்து போற்றினால் ஒழிய தனது கொள்கைகளைக் கைவிடமாட்டார்களென அறிந்தார். எனவே, யாரை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியர்கள் தமது வாழ்க்கையை மாற்றிக்கொள்ள நினைத்தார்களோ அந்த மேனாட்டினரிடமே தமது வேதாந்த சமயத்தை விளக்கி அவர்கள் அதனை மதிக்குமாறு செய்ய வேண்டுமென ஆர்வம் கொண்டார். இதனாலேயே தாம் உலகுக்கு ஆற்றவேண்டிய பணியும் பூர்த்தியாகுமெனக் கண்டார்.

1893ம் ஆண்டு செப்டம்பர் 11ந் திகதி உலகின் ஆத்மீக வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். சமயப் போட்டிகள், பூசல்கள் தலையெடுத்த காலகட்டத்தில் உலகின் வரலாற்றிலேயே முதன்முதலாக ஒரு சர்வமத மாநாடு கூட்டப்பட்டது. மதத்தலைவர்கள் பலரும் கூடியுள்ள மாநாட்டிலே இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து இந்துமதத்தின் பெருமையை உலகறியச்செய்து இந்துமத மறுமலர்ச்சிக்குக் கால்கோள் இட்டார்; சுவாமி விவேகானந்தர். பேச்சாளராகக் கலந்துகொண்ட தலைவர்கள் யாவரும் தத்தம் மதத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். சுவாமிகள் "அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே" என விளித்துத் தனது பேச்சை ஆரம்பித்து இந்துமதக் கருத்துக்களை வாரி இறைத்தபோது சபையினர் அவரது ஆரம்ப உரையிலேயே அவர் வசப்பட்டு நின்றனர்.

பிரபஞ்சத்திலேயே மிக மிகத் தொன்மை வாய்ந்த துறவியர் திருக்கூட்டத்தின் சார்பில் எல்லா மதங்களுக்கும் தாயான இந்து மதத்தின் சார்பில் கோடான கோடி இந்துக்களின் சார்பில் சுவாமிகள் அங்கு உரையாற்றினார். பல்வேறு நதிகளும் ஒரே கடலில் கலப்பதுபோல் எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளையே சென்றடை கின்றன என்றுகூறி மதத்தின் பெயரால் சண்டையிடுவதை விடுத்து மக்கள் சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டுமெனக் கூறினார். வேதமும் உபநிடதமும் புகட்டும் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக்கூறி இந்துமதத்தின் பெருமையை உலகறியச் செய்ததுடன் இந்துமத மறுமலர்ச்சிக்கும் வழிவகுத்தார். அவரது சர்வசமய சமரசக் கருத்துக்கள் மேனாட்டு மக்களது ஆன்மீக விழிப்புக்கு வித்திட்டது. இந்துமத மறுமலர்ச்சியானது இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கனும் பரவும் வகையில் அவர் பல நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார். இதனால் அவரது புகழ் மட்டுமன்றி இந்தியாவின் புகழும், இந்துமதத்தின் புகழும் உயர்வடைவதாயிற்று. குருதேவரின் அருளினால் விவேகானந்தர் குன்றிலிட்ட தீபமானார். அமெரிக்காவில் இந்துமத அறிவைப் புகட்டுவதற்கென சான்பிரான்சிஸ்கோவில் சங்கம் ஒன்றையும் "சாந்தி ஆச்சிரம்" என்ற நிலையத்தையும் ஏற்படுத்தினார்.

அமெரிக்காவில் இருந்து திரும்பிய சுவாமிகளை முதலில் தரிசித்து அவரது பேச்சாற்றலைக் கேட்கும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கே கிட்டியது. கொழும்பில் "பரிசுத்த பாரத பூமி" இந்துமதம் என்னும் விடயங்கள் பற்றியும், அநுராதபுரத்தில் "சமய வாழ்வில் சகிப்புத் தன்மை" என்னும் பொருள் பற்றியும், யாழ்ப்பாணத்தில் "நமது மதம்" என்னும் பொருள் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றி இலங்கை மக்களின் ஆத்மீக உணர்வைத் தட்டியெழுப்பி இந்துமத மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.

இகவாழ்வு, பரவாழ்வு இரண்டின் மேம்பாட்டிற்கும் உதவுவதே இந்துமதம் என்ற இராமகிருஷ்ணரின் போதனையில் ஊறிய சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோப் பிரசங்கத்தை முடித்து நாடு திரும்பியதும், பரவாழ்வுக்கு உதவும் சமயப் பணியுடன் இகவாழ்வுக்கு வழிகாட்டும் சமூகப் பணியையும் மேற்கொள்வதற்காக இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரில் இராமகிருஷ்ண சங்கத்தை ஆரம்பித்தார். அதன் விளைவாகத் தோன்றியவையே இராமகிருஷ்ண சங்கம், இராமகிருஷ்ண மடங்கள் போன்றன. அவை எண்ணிறைந்த ஏழைகளுக்கு அநுதாபம், அவர்களது பசித்த வயிற்றிற்குப் பிடியன்னம், பாமர மக்களுக்கு அறிவொளி ஆகியவற்றை அளிக்கவல்ல புனித சேனையைத் திரட்ட அவர் விரும்பினார். பாரத மக்களைப் பிடித்துள்ள அஞ்ஞான இருள், மூடநம்பிக்கைகள் யாவற்றையும் அகற்ற ஆர்வம் கொண்டார். அஞ்சாமையும், உடற் பலமும், தன்னம்பிக்கையும், வீரதீரமும், அறிவாற்றலும் நிறைந்த பாரதத்தைக் காணவிழைந்தார். புறச் சடங்குகள் மட்டுமன்றிப் பக்தியும், சேவையும், தூய்மையுமே மனித வாழ்க்கையின் இலட்சியங்கள்; அவையே சமயத்தின் சிறந்த பண்புகளெனவும் வலியுறுத்தி இந்து மதத்தின் மறுமலர்ச்சியையும் தூண்டினார்.

இந்துமதத்தின் உண்மைக் கருத்துக் களை முழுவதும் மிகத் தெளிவாக எல்லோருக்கும் புலப்படும்படி வெளியிட்டுரைத்த ஞானி சுவாமி விவேகானந்தர் என மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறிய கூற்று இந்துமத மறுமலர்ச்சிக்கு விவேகானந்தரின் பங்களிப்பு எத்தகைய தென்பதை எமக்கு எடுத்தியம்புகின்றது.

இந்து சமயத்தவர்கள் ஏனைய சமயங்களால் கவரப்பட்ட வேளையில் இந்துக்கள் மட்டுமன்றி உலகிலுள்ள ஏனைய சமயத்தவர்களும் இந்துமதக் கருத்துக்களை வியந்து போற்றவும், பின்பற்றவும் முற்பட்டதற்கு அவரது போதனைகளும், செயல்களும் காரணமாய் அமைந்தன. இதுவே இந்துமத மறுமலர்ச்சியின் முக்கிய அம்சமாகும். பாரதத்திற்கும், உலகிற்கும் ஒளியேற்றி அறிவுச்சுடராக, ஆன்மீக ஞானதீரராக வாழ்ந்த சுவாமிகள் 1903ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் திகதி இறையடி சேர்ந்தார்.

*உசாத்துணை நூல்கள் :*

1. சிக்காக்கோ பிரசங்கம்
2. விவேகானந்தரும் இந்துமதமும்

❁

**நல்லாசிரியர் பண்புகள்**

| | |
|---|---|
| 01. முகமலர்ச்சி | 11. நடுநிலைமை |
| 02. நல்லபிமானம் | 12. பரந்த அறிவு |
| 03. சமூக இசைவு | 13. தலைமைத்துவம் |
| 04. ஒத்துழைப்பு | 14. தன்னம்பிக்கை |
| 05. வசீகரமான குரல் | 15. சுறுசுறுப்பு |
| 06. சிநேகித மனப்பாண்மை | 16. மனத்தைரியம் |
| 07. சரியான முடிவெடுத்தல் | 17. சுயகட்டுப்பாடு |
| 08. வசீகரிக்கும் தன்மை | 18. நலம்விரும்பும் மனப்பாண்மை |
| 09. நிபணத்துவம் | 19. ஆக்கமுயற்சிகளை ஆரம்பிக்கும் திறன் |
| 10. தன்னலமற்ற சேவைமனப்பாண்மை | 20. நேரத்திற்கு தொழில்புரிதல் |

# 2000 ஆம் யூபிலி ஆண்டும், 1998 ஆம் இறையாவி ஆண்டும்.

அருட்சகோதரி. அருள்மரியா (விடுகையாண்டு)

கத்தோலிக்க திருச்சபையானது கிறிஸ்து பிறப்பின் ஈராயிரம் யூபிலி ஆண்டினை வெகு சிறப்பாகக் கொண்டாடிய முழுமையான ஆயத்தங்களை மூலைமுடுக்கெல்லாம் மேற்கொண்ட வண்ணமாயுள்ளது. தற்போது திருச்சபையானது இந்த ஆயத்தத்தின் இரண்டாம் கட்டமாகிய உடனடி ஆயத்தக் காலப் பகுதியில் தன்னைத் தயாரித்த வண்ணமாயுள்ளது. இந்த இரண்டாம் காலப் பகுதியானது, இறைமைந்தனுக்கென ஓராண்டாகவும், இறையாவிக்கென ஓராண்டாகவும், இறைத் தந்தைக்கென ஓராண்டாகவும் என்று மூன்று ஆண்டுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடந்தேறிய 1997 இறைமைந்தனுக்குரிய ஆண்டெனப் பிரகடனப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டு 1998, இறையாவியின் ஆண்டென வகுக்கப்பட்டு அவரது அறிவில் தன்னைத் தயாரிக்கின்றது. எதிர்கொள்ளவுள்ள 1999ம் ஆண்டானது இறைதந்தைக்குரிய ஆண்டாக ஒதுக்கப்பட்டு, அவரின் தெளிவில் வளர வாய்ப்பளிக்கவுள்ளது.

1998 ஆம் ஆண்டு இறையாவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட போதிலும், திருச்சபையில் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட ஒரு கடவுளாக அவரது செயற்பாடு இருந்துவந்துள்ளதை நாம் வேதனையுடன் நோக்கவேண்டியுள்ளது. இதனை நிவர்த்திசெய்யும் வழியில் திருச்சபை இவ்வாண்டில் இறையாவி பற்றிய முழுமையான அறிவில் விசுவாசிகள் வளர அழைப்பு விடுக்கின்றது. இறையாவியின் பணி திருச்சபையில், இயேசுவின் விண்ணேற்பு முதல் அவரது மாட்சிமை பொருந்திய இரண்டாம் வருகைவரை எண்ணப்படவேண்டிய இடமாக இருக்கின்றது. இந்தப் பணியில் அவரது தூய்மைப்படுத்தும் புனிதப்படுத்தும் பிரசன்னத்திற்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு திருச்சபை கேட்டுக்கொள்கின்றது. இதனூடாக திருச்சபையில் தூய ஆவியின் பண்புகளை நிறைவாகக் கண்டுகொள்ள, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். எனவேதான், திருச்சபையானது ஒரு புதிய பெந்தகோஸ்தே அனுபவத்தைப் பெறவேண்டுமாயின் தூய ஆவியைத் தவிர்த்து இந்நிகழ்ச்சியை அடைய முடியாது. இவரே கிறிஸ்துவினால் மனித சமூகத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒரே மீட்பினை திருச்சபையின் எக்காலத்திலும், இடத்திலும் நிலைபெறச் செய்கின்றார். அத்துடன் அதனை நம்மில் உயிர்பெற்று உயிரோட்டமுள்ளவர்களாக மாற்றுகின்றார்.

இதனடிப்படையில் யூபிலிக்கான நமது தயாரிப்பில் முதன்மையான பணி, இறையாவியின் பிரசன்னத்தையும், செயற்பாட்டினையும் புதுப்பிக்கப்பட்ட கண்ணோட்டத்தில் அறிதல் வேண்டும். அந்தவகையில் திருச்சபையில் அவரது செயற்பாட்டினை இரண்டு வழிமுறைகளில் நாம் கண்டுகொள்ளலாம். ஒன்று திருவருட் சாதனங்கள் வாயிலாக, அதிலும் விசேடமாக உறுதிப்பூசுதல் வாயிலாக, இரண்டாவது நமக்கென தரப்பட்டுள்ள பலதரப்பட்ட பொது நன்மைக்கான கொடைகளிலும், பணிகளிலும் (1கொரி 12:4-11). இந்த இரண்டுவிதமான செயற்பாடுகளினாலும் மனித மனங்களில் விளைவது நம்பிக்கை, இதயமாற்றம். ஆகவே மேய்ப்புப்பணியில் புதுப்பித்தல் நீடிக்க வேண்டுமாயின், அங்கு தூய ஆவியின் பிரசன்னம் அத்தியாவசியம். இந்த செயற்பாட்டு விளைவாகிய புதிய நம்பிக்கையில் தூண்டப்பெற்ற மனிதன் மனமாற்றம், இதயமாற்றம் பெற்றவனாக தன்னையே

முழுமையாக அர்ப்பணித்தவனாக உலக விடயங்களில் இறைத்தன்மையைக் கண்டுகொள்ள விழைகின்றான். இதன் பெரும் விளைவாக உலகின் மத்தியிலுள்ள "நம்பிக்கையின் கீற்றுக்களை" கண்டு கொள்கின்றான். அதன் தொடர்ச்சியாக, இன்றைய தூய ஆவியின் வழிகாட்டுதலில், இனம் கண்டு கொள்கின்றான். அதன் துணைகொண்டு பின்வரும் 20ஆம் நூற்றாண்டின் நிறைவின் சூழலில் மனிதன், இறையாவியின் துணைகொண்டு பின்வரும் விடயங்களில் மறைந்துள்ள நம்பிக்கையின் கீற்றுக்களை வெளிக்கொணர வேண்டும்.


1. மனித வாழ்வில் பயன்படும் விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவப் பணிகளில்.
2. சுற்றுச் சூழலில் எமது கடமை பற்றிய விழிப்புணர்வில்.
3. அமைதியும், நீதியும் உலகில் எங்கும் மறுக்கப்படும்போது அவை பேணப்பட முயற்சிக்கையில்.
4. பல்வேறுபட்ட மக்களில் காணப்படும் ஒப்புரவிற்கும், ஒற்றுமைக்குமான தன்மைகளில்.
5. இறைமக்கள் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகவும், பிரமத நல்லிணக்க உரையாடல்களை ஊக்குவிக்கும்போதும்.

இவைபோன்ற பல விடயங்களில்.

ஆகவே இந்த நூற்றாண்டின் நிறைவில், இறையாவி ஆண்டின் நோக்கம் முழுமையாகப் பேணப்பட வேண்டுமாயின், இனங்கள், மதங்கள், நாடுகளுக்கிடையே ஒற்றுமை என்னும் பண்பு பேணப்பட வேண்டும். ஏனெனில், இறையாவியின் கொடைகள் எல்லோருக்கும் அருளப்பட்டுள்ளமை பொது நன்மைக்காகவே. எனவே, எதிர்பார்க்கப்படும் ஒற்றுமை திருச்சபையில், சர்வ மத இணக்கத்திலும் நிலைக்குமாயின் தூய ஆவியின் ஆண்டும், 2000 யூபிலி ஆண்டும் அர்த்தமுள்ளதாக மாறும் என்பதில் ஐயமில்லை.

❀

- ***"மனிதர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."***
  - கிறிஸ்தவம் -
- ***"தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி"***
  - வில்லியம்லா -
- ***"கற்காமல் இருப்பதை விட இறப்பதே மேல், ஏனெனில் கல்லாமைதான் அனைத்துத் துன்பங்களுக்கும் ஆணிவேர்."***
  - போனஸ் அயர்ஸ் -



# கூடுதுறக்கும் குருவிகள்

திமிலைத் துமிலன்

மாந்தளிர் கோதி மகிழ்வாகப் பேடையுடன்
'குக்குக்கூ' என்றே குயில் பாடிக்கொண்டிருக்க.....

குரைத்தன நாய்கள் - கூலிக் கொடுநாய்கள்!
அடுத்த நொடியில் ஐயகோ, வேட்டுக்கள்!

ஆண்குயிலும் பெண்குயிலும் அப்படியே செந்தரையில்
வீழ்ந்து துடிதுடித்து வெற்றுடலைப் போட்டனவே.

பொட்டுப் பொட்டென்ற புள்ளிகளாய்ச் செங்குருதி
பட்டிறகு மேலே படிந்து பளபளத்து
செந்தரளமாகத் தெரிந்து மறைந்துவிட
குருதியினை மெல்லக் குடித்து உறிஞ்சியதால்
செம்புலம் மேலும் சிவப்பாய்ச் சிரித்ததுவே.

சிரித்தன நாய்கள்; சிறகு கசங்கிவிழக்
கடித்தன கௌவிக் காவல் இடம் சேர்ந்தனவே.

ஆதவன் மேற்கில் அனல் குறைத்துக் கொண்டிருந்தான்;
காதலால் காற்றிளவல் கன்னிச் செழுந்தளிர்மேல்
சீதக் களபச் செழுஞ்சாந்து பூசுகின்றான்,
பாதம் பதித்து பவளச் சுடர் குறைத்து
கதிரோன் கடலணங்கைக் கட்டித் தழுவுகிறான்.
காணுதற்குக் கூசிக் கண்புதைத்துக் கொண்டுவிட்ட
ஒளித்துமிகள் இந்த உலகைவிட்டு ஓடுகின்ற
கருக்கற் பொழுது; கண்ணம்மை ஓடிவந்தாள்;

"மணி இப்ப ஏழு வரல்லையே இன்னுமிவள்!"
கணீரென்ற மென்குரல்தான்; கவலை தொனிக்கிறது.
"ரியூசன் ரியூசன்" என்று நிலைகொள்ளாதோடுகின்ற
சிறிசுகளுக்கின்றைநிலை தெரியத்தான் போகிறதா?
"வருவாள்" என்றாறு மணியிருந்தே சொல்லிவந்த

ஆறுமுகத் தாருக்கு அதிர்கிறது உள்நெஞ்சம்.
"வருவாள்" என்றின்னம் மனுசிக்குச் சொல்லுவது
உசிதமில்லை என்று உணர்ந்தார்; உடன் எழுந்தார்.
'சென்றி'க்கு வந்தார்; சீற்றம் குரலில் எழ
"நில்லடா" என்றோர் நெடுந்துவக்குக் கத்தியது.
"என்னடா இப்ப மணி? எங்கடா போகவந்தாய்?
போடா திரும்பி". புறப்பட்ட வார்த்தைகளால்
உதறல் எடுக்கிறது. ஒரு வழியும் இல்லை இனி.
வீடு திரும்பிவந்தார். வீடு சா வீடாச்சு!
"என்னப்பா செய்யிறது? எங்கதான் போனாளோ?
ஆரும் புடிச்சி அடைச்சானோ? ஆண்டவனே!"
கண்ணம்மை சோர்ந்து கண்ணீரில் நீந்துகின்றாள்;
தங்கச்சி விம்மிச் சரிந்திருந்து தேம்புகிறாள்;
ஆறு முகத்தார் அதிர்ந்து கிடக்கின்றார்.

"ஆறுமுக மண்ணே,....." அயல்வீட்டுச் செல்லன்தான்.
"புள்ள தமயந்தி, போகக்க நான் கண்டன்.
இன்னம் வரல்லையா? இப்ப மணி எட்டேகால்.
ஒருவேளை நான் நினைச்ச துண்மையாயாயிற்றோ?"
"என்னடா செல்லன்; என்னத்தச் சொல்லுகிறாய்?"
"ஒருநாள், சே, நேத்துத்தான், உங்கட புள்ளையொட
நெல்சன் அந்த 'சென்றி' யில நிண்டு கதைச்சத நான்
கண்ணால கண்டன்; கதைஅதுவாயாயிற்றோ?"
"போடா மடயா, புள்ளையள அப்பிடி நான்
பெத்து வளக்கலடா; பேய்த்தனமாப் பேசாத"
ஆறுமுகத்தார் அவனோடு இந்தவிதம்
எரிந்து விழுந்தாலும் எதோவொன்று உள்மனதில்
இடறி உறுத்தியது. என்ன செய்வார்? பெற்றமனம்.

இரவு உறங்கவில்லை. இடிவிழுந்த வீடாகப்
பொழுது நகர்கிறது. புலருதற்கு முன்னெழுந்து
ஓடினார். சென்றி ஒன்றையுமே விட்டதில்லை.
எல்லா முகாமும் "இல்லை"யென்றே கூறியது.
"பெட்டைகளை நாங்கள் பிடிக்கவில்லை" என்றார்கள்.
'எம்பி'மார், எல்லா இயக்கத்துக் கந்தோர்கள்,
'றெட்குறோஸ்,' அந்த நிறச்சட்டை அத்தனையும்
கையை விரிக்க, கதியிழந்து போனவராய்
நெல்சனைக் காண நீண்ட தவங்கிடந்தார்.
இறுதியிலே "நெல்சன் இல்லை; அவன் லீ"வென்றார்.
மூளை கலங்கியது; மூச்சுமுட்ட வீடுவந்தார்.
"செல்லனின் சொல்போல் திருப்பம்ஏதும் நேர்ந்ததுவோ?
தமயந்தி அந்தத் தறுதலையோ டோடினாளோ?
இக்காலப் பிள்ளைகளை எப்படித்தான் நம்புவது?"
ஆனாலும் தாங்கள் அருமையாய்ப் பெற்றபிள்ளை
இப்படிப் போவாள்என் றெண்ணமனம் ஒப்பவில்லை.
'நெல்சன்' அவன் யார்? நேற்றிரவு நேர்ந்ததென்ன?

“விசாரணைக் கவளை வெளியே கொண்டுவா”.
பொறுப்பதி காரி புகன்றிடக் கேட்ட
நெல்சன் ஒருகணம் நிதானித் தவனாய்,
“எங்கே கொண்டர?” என்று கேட் டிட்டான்.
“தனியா யுள்ள விசாரணை அறைக்கு”
“இப்போ நேரம் பத்தரை யாகுது.
தனியாப் பெண்ணைத் தடுத்து வைப்பதும்
விசாரணை செய்வதும் விதிகளில் இல்லை”
“தெரியும் நெல்சன்; சொல்வதைச் செய்நீ”
“பெண்கா வலரொன் றென்னுடன் வரட்டும்”
“பெண்கா வலரா, பித்தா உனக்கு?
அகமட் நீபோய் அழைத்துவா அவளை”
பொறுப்பதி காரியை மறுக்கொணா தவனாய்
“எனக்கு ‘டியூட்டி’ எட்டொடு முடிந்தது;
வெரி சொறி சேர்” என விலகினான் அகமட்.
அகமட் போனதும் அனல்உமிழ் கண்ணுடன்
முறைத்துப் பார்த்தான் பொறுப்பதி காரி.
நெல்சன் எதுவும் நிகழ்ந்திடா ததுபோல்
அலட்சிய மாக அங்கு நின்றிருந்தான்.
“சிவக்கொழுந்......” “என்ன சேர்?”
“அவளைச் சீக்கிரம்போய்நீ கொண்டுவா விசாரணை அறைக்கு”
“சரிசேர்” என்று ‘சலூட்’டடித் தவனாய்
அவன்போம் முதலே ஆணவ மிடுக்கொடு
பொறுப்பதி காரி போனான் அறைக்குள்.

நெல்சனது நெஞ்சமொரு நிலையில் இல்லை.
நின்றிருக்க வும்முடியா திதயமெல்லாம்
கல்லினையே கிழித்துஎழும் கனலைப்போல
கருகியது. ஆனாலும் கவனமாக
பல்லினையே கடித்தபடி நின்றிருந்தான்.
“பாவம் அவள் இவ்வவலம் படுவதென்றால்
வல்லபமே இல்லாத பேடியாய்நான்
வாழ்பவனென் றர்த்த” மென மனம் பதைத்தான்.

“தமயந்தி, எத்தனைநாள் பார்த்திருந்தேன்,
தலையுயர்த்தி நீஒருநாள் பார்த்ததுண்டா?
அமைதியொடு நடந்துசெல்வாய் ஆனால் என்றன்
ஆசையுளம் உன்அடிக்கீழ் அழுந்திச் செல்லும்
சுமையதிலும் ஒருஇன்பச் சுவைநான் கண்டேன்
சோதனைஏன் இன்றுனக்கு? சுட்டெரிக்கும்
இமையவளாய்க் கொதித்துஎழு. இடம்கொடாதே”
என்னவரும் அதன்பின்தான் என்பொறுப்பு!

"ஒருவேளை உனைமீறி நடந்துவிட்டால்,
ஊழித்தீ நானாவேன்; உழுத்துப்போன
நெறியறியா நாய்அவனை உடல்கிழித்து
நெஞ்சாற நிணம் குடிப்பேன்; நின்றுபார்நீ
வெறிநாய்க்கு நீஇரையா?" எனக் கொதித்து
வீறுகொண்டு நின்றிருந்தான் நெல்சன், அந்தத்
தருணமதில் படாரென்று கதவுநீங்கத்
தலைமயிற்றில் பிடித்தவளை இழுத்தான் நீசன்.

"சிவக்கொழுந்து, இவளை இழுத் துள்ளேதள்ளு
சீறுகிறாள்; பார்க்கின்றேன் நாளை. உள்ளே
சவமாகிப் போனாலும் தண்ணீர், சோறு
தரவேண்டாம் கேட்கிறதா?" "சரிசேர்" என்றான்
அவமானப்பட்டநிலை. பொறுப்புவாய்ந்த
அதிகாரி குமுறலொடு அப்பால் போக,
"நவமான விசுவாசி" சிவக்கொழுந்து
நன்கவளை உள்விட்டுப் பூட்டி வந்தான்.

வந்தவனை, இடைமறித்தான் நெல்சன்; "அந்த
'வடுவா'வின் கைஆள்நீ? சிவக்கொழுந்து,
சொந்தமுள தங்கையைப்போல் அவள் உனக்கு அத்
துட்டனுக்கா பலிகொடுக்கத் துணிந்துவிட்டாய்?
சிந்தைகெட்ட முட்டாளே, தமிழன்தான்நீ!.
தெரிகிறது. நாளைக்கு அவளுக்கேதும்
நிந்தனைகள் நிகழட்டும் இருந்துபார் இந்
நெல்சனைநீ யாரென்று, போடா" என்றான்.

குலைநடுக்க மெடுத்தவனாய்ச் சிவக்கொழுந்து
குறுகிப்போய் நின்றிருந்தான். "தொடைநடுங்கி,
சிலைபோல் ஏன் நிற்கின்றாய்? அகமட் என்ன
செய்தான்டா? அவன் மனிதன். நீயா? நீண்ட
மலைபோல உருவம்தான். எடுதிறப்பை"
மறுமொழியொன் றில்லாமல் கொடுத்தான். நெல்சன்
விலைமதிக்க முடியாத தரளம், குப்பை
மேட்டமுக்கில் புதைந்ததென அவளைக் கண்டான்.

அழுதபடி துணுக்குற்றுத் தலைநிமிர்ந்தாள்
ஆனாலும் அவள் முகத்தில் மந்தகாசம்,
பழுதறியாப் பெண்வேங்கை எனக் காட்டிற்று
பயமில்லை; "தமயந்தி அவன்நானல்ல,
குழுமாடு போயிற்று, நாளைமீண்டும்
குதறுதற்கு வரும். பார்ப்போம்; அஞ்சவேண்டாம்,
எழுந்துறுதி யோடுஇரு, உணவுட்கொள்ளு"
என்றினிமை யோடியம்பி நெல்சன் போனான்.

அடுத்தநாள் இரவு, அதே நேரந்தான்
மிடுக்கோடு வந்தான் பொறுப்பதிகாரி
அவளை விசாரணை அறைக்குக் கொணர்ந்தனர்
தனியறைக் கதவு தாட்பாள் கொண்டது.
விசாரணை தொடங்கும் விதம்அங் கதுதான்;

கட்டிய கைகளை கனிவொடு அவிழ்த்தல்,
இனிமையாய்ப் பேசி இசைய வைத்திடல்,
இசைய மறுத்தால், "இல்லை விடுதலை,
மசிய மறுத்தால் மடிதலும் நேரும்
பலபேர் இப்படி பறந்துளர் தெரியுமா?"
மறுத்தால் அடி,உதை, மயிர்பிடித் துலுப்புதல்!

முந்திய நாளே முடிந்ததிப் படிமுறை,
இன்றெப் படியோ? இதயத் துடிப்பொடு
அமர்ந்திருந் தவள்பின் அவன்வந் தவளை
கட்டிப் பிடிக்கக் கைகளை விரிக்கையில்,
பிடரியில் ஏதோ பெரிதாய் விழுந்தது.

அடுத்த கணங்கள் அமைதியாய்க் கழிந்தன.
செம்பொற் கபாடம் திறந்தடை பட்டது.
சீர்உடை இருவர் ஆர்வமாய் நடந்தனர்.
'ஜீப்'பினில் அமர்ந்து தோப்பிடைச் சென்றனர்.
ஆற்றின் கரையில் 'ஜீப்பு' நின் றதுமே
இருவரும் இறங்கி ஏரியில் குதித்தனர்.

○

"தமயந்தி, சொல்வதைக் கேள். சாவைவிட வேறு வழி
எங்களுக்கு இல்லை. ஏன் என்று கேட்கின்றாய்.
நம் இருவர் 'போட்டோ' நமது விபரங்கள்
அத்தனையும் அந்த ஆட்களிடம் உள்ளனபார்.
எப்படி நாம் இந்த இலங்கையிலே வாழுவது?
எப்படியும் நாளை எல்லாம் தெரிந்துவிடும்.
தேடிப் பிடித்து சிறையில் அடைபட்டு
வேண்டாமே இந்த வேதனைகள். உன்னுடனே
ஒரு இரவு வாழ்ந்ததுவே ஒரு யுகம் வாழ்ந்ததுபோல்"
"நீங்கள் எவரோ; நினைத்தொன்றும் பார்க்காமல்
என்னைக் காப்பாற்றி, இந்நிலைக் கானீர்கள்!......"
"எவனோ ஒருத்தன்? இதை நம்பமாட்டேன் நான்.
என்றுன்னைக் கண்டேனோ அன்றிருந்தே உன்னோடு
என்றோ ஒன்றாக இருந்த அனுபவங்கள்....!
எந்தப் பிறப்போ, எனக்குத் தெரியாது".

"கண்டநாள் தொட்டுக் கதைக்க மனம்; ஆனாலும்
பெட்டைகள் எல்லார்க்கும் பிடிக்குமொரு பித்தமென்று
அதைத் தவிர்த்துக்கொண்டேன். அத்தோடு இன்னொன்று......."

"என்ன, நான் பேரினத்தான் என்பதுவா?" "ஓம்" "சரிதான்;
ஆனால் என் அம்மா அழகு தமிழிச்சி.
மண்டூர். என் அப்பா மாட்டு வியாபாரி.
அப்பா கிறிஸ்தவர்; என் அம்மாதான் சைவ மதம்;
மனத்தாலே நான் தமிழன் வாழ்க்கைதான்......" "அப்படியா?

ஒரு இரவே யானாலும் உத்தமரை நானடைந்தேன்;
அது போதும்; ஆனால் என் அப்பா, என் அம்மா,
தங்கச்சி எல்லாம் தவித்திருப்பார், பாவம்". "என்ன
அழுகையா? வேண்டாம்; ஓர் ஐந்துமணி நேரந்தான்.
விடியும்முதல் நாம் வேறுலகம் போய்விடுவோம்."!

"உண்மைதான்; உங்கள் உளத்தில் இடம்பிடிக்க
என்ன தவம் செய்தேன்!" "எனக்கும் அதே உணர்வு.
இப்படியான இனிய ஒரு பெண் அமுதைப்
பெற்றுக் கடைசிஒரு பெருநாளும் காணாமல்....."
"விடிந்தால் புத்தாண்டு; வேதனைதான், என்னசெய்ய;
நமது விதி இதுதான்; நல்லவர்கள் நாமானால்,
அடுத்த பிறவி அமையட்டும் எங்களுக்கு....."

"மனித மனம் இதுதான்; மற்றொன்றும் எண்ணாமல்;
சாஎன்று சொன்னால், தவிக்குதுளம்; எப்படித்தான்
அந்தப் பொடியன்கள், அமைதியாய்த் தற்கொலைக்கு......?"

"துணிவு பிறந்துவிட்டால், சோகத்துக் கெங்குஇடம்?
நாம் துணிந்துவிட்டோம்; நடத்தவழி ஏதென்று
சொல்லவில்லை நீங்கள்?" "சொல்லாமல் செய்வதுதான்
தமயந்திக் குள்ளம் தந்தநளன் செய்கையம்மா;
நடுக்காட்டில் அந்தநளன், நாயகியை விட்டகன்றான்;
நெல்சன் அதுசெய்யான்; அல்லலிலும் விட்டகலான்.
சாவிலும்கூடத் தமயந்தி யோடிருப்பான்.
இதைப்பார் தமயந்தி. இது நமக்கு வீடுதரும்!"

"என்னஇது? சொல்லுங்கள்" "இதுதான் அக்குப்பியம்மா".
'சைனைட்' இதுதானா? சரியான ஆள்நீங்கள்,
எப்படிப் பெற்றீர்கள்?" "இவையெல்லாம் ஏன் உனக்கு?
இன்று நமக்கு இது அமுதம் பார்த்தாயா....!"

என்றுசொன்ன நெல்சன் எதுவிதமாய் அவ்வமுதை
ஒன்றிக் கடிப்பதென ஓர்ந்துரைத்தான் - நன்றாகக்
கேட்டாள், நெகிழ்ந்தாள்; கிளர்ந்தாள்; இருகரமும்
போட்டணைத்துக் கொண்டாள்அப் பொன்.

உள்ளத்தால் அன்றி, உடலாலும் ஓர்வர்என
வெள்ளத்துக் காதல் வெறிபடைத்தார் - தெள்ளமுதம்
உண்ணுமுதல் எந்த உறுகுறையும் வையாமல்
பண்ணமுதம் கொண்டார் பகிர்ந்து.

ஆசை அனைத்தும் அறநுகர்ந்து கொண்டவராய்
பேசுமொழி யற்றுப் பிணைந்திருந்து - பாசமதை
வீசும் மறலிதரு வியன்குப்பி யையிதழ்கள்
கூசப் பிடித்தார் குழைந்து.

இருவரும் ஒன்றாய் இதழ்கடிக்க உண்ணுகையில்
வருசுடரின் பின்னே மடமடென - அருகில்
வேட்டுக்கள் பாய விழுந்தொன்றிப் போய்க்கிடந்தார்
சீட்டுக் கிழியும் திகில்!

“வந்தவர்கள் மேலும் மறலிவிட்ட தூதுவரா?”
என்றிவர்கள் நெஞ்சில் இடிவிழவே - நின்றவர்கள்
“ஆர் நீங்கள்? இங்கு ஆற்றருகேன் வந்தீர்கள்?
கூறுங்கள்?” என்றார் குறித்து.

என்னசொல்வ தென்று இருவருக்கும் தோன்றவில்லை;
பின்னர்ஏ தேதோ பிதற்றினார் - “முன்னர்நட”
என்றோதி ஆயுதத்தை இருவருக்கும் பின்முதுகில்
ஒன்றவைத்துக் கொண்டார் உடன்.

காட்டினை நோக்கிக் கடுவேக மாய்நடந்தார்
நாட்டிலின்று மேவும் நடைமுறையில் - கூட்டில்
இருப்பதற்கு ஒண்ணா இடர்தொடரு மாகில்
பறப்பதற்கே தூண்டும் படர்!

காதலுக்காய்ச் சாதல், கடமைக்காய்ச் சாதல்; இதில்
ஏதவர்க்கு நேரும் இனி?

*(யாவும் கற்பனை)*

## கடவுளுக்கோர் கடிதம்

*கவிதை ஒன்று எழுத வேண்டும் - அது*
*கடவுளுக்கோர் கடிதமாக அமைய வேண்டும்.*
*கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டேன் - அது*
*இறக்கை கட்டி மேலெழுந்து பறந்ததுமே.*
*கடந்த பல ஆண்டுகளின் செயலாக்க சிந்தனைகள்*
*நடந்து முடிந்த கதை என்றாலும் - அது*
*கிடந்து என் உள்மனதை யாட்டுகின்றதே - அதனால்*
*கடவுளிடம் கடித மூலம் கேட்க வேண்டும்.*

*வன் செயல் ஒன்று நடந்ததுவே - அது*
*வாட்டுது எங்கள் மனத்தினையே.*
*தீர்ந்திடுமோ எம் கவலையெல்லாம்*
*கடவுளே! நீயே பதில் சொல்ல வேண்டும்.*

*அம்மா இல்லை. அப்பா இல்லை*
*அண்ணனோடு தம்பியுமில்லை.*
*அக்கா இல்லை தங்கையில்லை.*
*மாமன் மச்சானோடு உறவேயில்லை*
*சென்றவன் வரவில்லை.*
*தொலைந்தவர் திரும்பவில்லை.*
*பொருள் பண்டத்தோடு*
*வீடு, வாசல் கூரையுமில்லை*

*மீதியாக உள்ளவர்களில்*
*நானொருவன் கேட்கின்றேன்.*
*கடவுளே! என் கடிதத்திற்கு*
*நீ பதிலொன்று சொல்வாயா!*

**திருமதி. ஆர். அருள்தாஸ்**
*இரண்டாம் ஆண்டு*
*ஆரம்பக் கல்வி*

# ஆசிரியர் மாணவர் உறவு... அன்றும் இன்றும்

திருமதி. ம. அரியரட்ணம்,
ஆரம்பப் பிரிவு,முதலாம் வருடம்.

மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

மனித சூரியன்களாக, சமுதாயத்திற்கு ஒளிகொடுப்பவர்களாக, இருட்டை விலக்குபவர்களாக, சிறந்த கலவி முகவரகளாக - பலவேறு கோணங்களில இனங்காட்டப்படுபவரகள இந்த ஆசிரியரகள். அறிவுச் செல்வத்தை வாரிவழங்கும் வள்ளல்களாக விளங்குகின்ற ஆசிரியர்கள் சமுதாயத்தில் மிகப பெரிய இடததை - முககியததுவததைப பெறறுககொளகினறனர. ஆரமபகாலததிலிருநது - அதாவது - மனிதன் அறிவைத்தேட விழைந்த காலத்திலிருந்து இன்றுவரை இந்த ஆசிரியருக்கும் - மாணவருக்கும் எந்த வகையான உறவு இருந்தது - இருக்கின்றது என்பதை இங்கே சற்று எடுத்து நோக்குவோம்.

புராண இதிகாச காலத்திலே - இந்த ஆசிரிய - மாணவ உறவு - அதாவது குரு - சீட உறவு எவ்வாறு இருந்தது என்பதற்கு புராண இதிகாசங்களே பல சான்றுகளை நமக்கு எடுததுககாட்டுகினறன. பிரமசசரியம, இலலறம, வானபபிரஸதம, சநநியாசம என நானகு படிகளை இந்து தருமம் வகுத்துக் காட்டுகின்றது. இதில் பிரமச்சரியம் என்னும் நிலையிலே - மாணவர்கள் குருவின் இல்லத்திலே தங்கியிருந்து குருவுக்கும் - குருபத்தினிக்கும் தொண்டுகள் புரிந்து குருகுலவாசம் செய்வர். அங்கே குருவே அவனுக்குத் தாயாய் - தந்தையாய் - ஆசிரியனாய் - இறைவனாய் விளங்குகின்றார். குருவிடம் சீடன் கற்பது வெறும் அறிவல்ல - அவரது வாழ்வே. அங்கு குருவே சகலமுமாய் நிற்பதால் குரு - சீடன் உறவு ஒரு சரணாகதித் தத்துவமாகின்றது. இச சரணாகதியே பிறகாலததில அம மாணாககன இல வாழககையில ஒனறுபடவோ - சநநியாசி நிலையில் கடவுளுடன் ஒன்றிக்கவோ உதவுகிறது. அங்கே குரு - சீடனின் வாழ்க்கைக்குக் கலவியைப போதிககவிலலை. தானே வாழககையாகினார; கலவியாகினார; அவரே மாணாககனுககுப பாடமாக விளங்கினார்; மாணாக்கன் பயின்றுகொண்டான்.; கற்றுக் கொண்டான். அங்கே ஆசிரிய மாணவ உறவு பிரிக்க முடியாத சரணாகதித் தத்துவமாகின்றது எனக் குறிப்பிடலாம்.

பிராமணர், சத்திரியர் தவிர ஏனையோருக்குக் கலை மறுக்கப்பட்ட ஒரு காலத்தைப் புராண இதிகாசங்கள் எமக்குக் காட்டுகின்றன. இந்நிலையைத் தாண்டி கல்வி மறுக்கப்பட்ட வகுப்பினர்கூட குருவை மானசீகமாக ஏற்றுக்கொண்டு வித்தையைத் தெரிந்துகொண்ட சம்பவங்களும் உண்டு. உதாரணம் : துரோணர் - ஏகலைவன். அங்கேகூட உண்மையான குரு - சீட உறவு பேணப்படுகின்றது. மானசீகக் குருவாக இருந்தபோதிலும்கூட உத்தம சீடனாகிய ஏகலைவன் குருவிற்குத் தட்சணையை வழங்கத் தயங்கவில்லை; என்பதை இதிகாசம் நமக்கு எடுததுககாட்டுகினறது. இவவாறு அனறைய காலகடடததில தனனலமறற ஒரு மனபபாங்கு குருவிறகாக உயிரையும் கொடுக்கத் தயங்காத மரபு குரு - சீட உறவில் இருந்ததை நாம் கண்டுகொள்ளலாம்.

அரசனாக இருந்தாலும் சரி, உயர் செல்வாக்கு அந்தஸ்துப் பெற்றவராக இருந்தாலும் சரி குருவுக்கு முதன்மை கொடுக்கும் ஒரு காலகட்டத்தை நாம் தெரிந்துகொள்ளலாம். வசிட்டருக்கு முன்னால் தசரதச் சக்கரவர்த்தி கைகட்டி நின்றமையும் - துரோணருக்கு முன்னால் கௌரவ பாண்டவ சேனைகள் தலைகுனிந்து நின்றமையும் நமக்கு இதைத் தெளிவாக்கிக் காட்டுகின்றன. எனவே, வித்தைக்கு, அறிவுக்கு முதன்மை கொடுக்கின்ற அச்சமுதாயத்தில் குரு - சீட உறவென்பது - அதாவது ஆசிரிய - மாணவ உறவு - தெய்வத்துக்கும் - பக்தனுக்கும் இடையேயுள்ள உறவாகவே இருந்தது என்பதைக் கண்டுணரலாம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதும் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

குரு - சீட பரம்பரை என்ற நிலைமாறி ஏட்டுக்கல்வி பெறத் தொடங்கிய காலத்தில் அதாவது ஆசிரியர் - மாணவர் என்ற பெயரில் அவர்களது உறவு எப்படியிருந்தது என்பதைக் கவனிக்கலாம். ஆரம்ப காலத்தில் திண்ணைப் பள்ளிகளும், கோயில்களும் கல்விஸ்தலங்களாக மாறிய அக்கால கட்டத்திலும் ஆசிரியர், கடவுள் ஸ்தானத்திலேயே வைத்து நோக்கப்பட்டதாகத் தெரிகின்றது. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற வாக்கு இதைத்தான் சுட்டி நிற்கின்றது.

ஆசிரியன் என்ற பதம் பல பொருள்களைச் சுட்டி நிற்கின்றது. ஆசாரம் உடையவனே ஆசிரியன் என்றும், ஆசு - குற்றம் களைபவனே ஆசிரியன் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. இதற்குத் தகைமை உடையவர்களாகவே அன்றைய ஆசிரியர்கள் நடந்துகொண்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு சமுதாயத்திற்கு வழிகாட்டும் சமுதாயத்தை முன்னேற்றும் உன்னத பணி தங்களுக்கிருப்பதாக அவர்கள் உணர்ந்து கொண்டனர். எனவே, எந்நேரமும் - வாழ்நாள் முழுவதும் - ஆசிரியராகவே வாழ்ந்தனர்; முன்மாதிரியாக விளங்கினர். மாணவர் ஆசிரியரிடமிருந்து கல்வியைக் கற்கவில்லை. ஆசிரியரையே கற்றார்கள். எனவே, அக்காலத்தில் ஆசிரியர் - மாணவர்களால் - சமுதாயத்தால் உன்னத ஸ்தானத்தில் வைக்கப்பட்டார். மாணாக்கர் கைகட்டி ஒரு - தெய்வ சந்நிதானத்தில் இருக்கும் உணர்வோடு - வாழ்ந்தனர். எனவே, அங்கு ஆசிரிய - மாணவ உறவு அற்புதமாக இருந்தது.

அன்றைய ஆசிரியர் வெறுமனே கல்விமானாக மட்டும் விளங்கவில்லை. நோய்களைத் தீர்க்கும் மருத்துவனாக - வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் நீதிபதியாக - துன்புற்று அலைவோருக்கு ஆறுதல் அளிப்பவனாக - அல்லலுறும் சமுதாயத்திற்கு ஆலோசனை தந்துவாழ் மந்திரியாக - பலமுகங் கொண்டவராக அன்றைய ஆசிரியர் விளங்கினார். மொத்தத்தில் அன்றைய ஆசிரியர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார் என்று குறிப்பிடலாம். இதனால் கல்வி பயிலும் மாணவன் மட்டுமல்ல முழுச் சமுதாயமுமே அங்கு ஆசிரியரை ஒரு உன்னத இடத்தில் இருத்திக் கொண்டது. எனவே, மாணவரிடத்தில் மட்டுமல்ல - சமுதாயத்திடமும் ஆசிரியருக்கு மிகப்பெரிய மரியாதை இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அங்கே ஆசிரிய - மாணவ உறவு - மரியாதைக்குரியதாக - பூஜிக்கப்படுவதாக - இருந்தது என்பதை நாம் சுட்டிக் காட்டலாம்.

நெற்றிமீது நீறும், நெஞ்சின்மீது சிலுவையும் கொண்டவர்களாக - கடமை உணர்வு மிக்கவர்களாக - சமுதாய வழிகாட்டிகளாக வாழ்ந்த ஆசிரியர் மாணவரின் நலனிலே மிகவும் அக்கறை கொண்டிருந்தனர். பாடசாலைக் கல்வி பல்வேறு சீர்திருத்தங்களுக்கு உட்பட்ட காலத்திலும் தங்களது கடமையை - செவ்வனே செய்து வாழ்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் மிகவும் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். உடையில் - பேச்சில் - நடத்தையில் ஆசிரியரை இனங்காணக் கூடிய அக்கால கட்டத்தில் மாணவர்கள் ஆசிரியரைத் தெய்வமாகவே மதித்து, தாய் - தந்தையரைவிடப் பாசமும், அன்பும் காட்டி வாழ்ந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

விஞ்ஞான மயமாக மாறிவரும் இன்றைய உலகில் ஆசிரிய - மாணவருக்கிடையிலான உறவு பற்றிக் கவனிக்கும்போது ஒரு விரிசல் நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நாகரிகத்திற்கேற்ப சமுதாயம் வேகமாக மாறிவருகின்ற வேளையில் புதிதாகச் சிந்திக்க - செயல்பட வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

ஒரு மாணவன் இன்று ஆசிரியரிடமிருந்து மட்டும் கல்வியைப் பெறவில்லை என்பது இங்கு முக்கியமானது. அறிவைப் பெறுவதற்கு விஞ்ஞானம் பல வழிகளில் உதவி செய்து வருகிறது. வெகுசனத் தொடர்புசாதனங்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, மாணவன் கல்வியைப் பெறும் வழிகளில் ஆசிரியரும் ஒன்று என்ற நிலைதான் இன்று காணப்படுகின்றது.

மேலும், சமுதாயம் மாற்றமடைகின்றது என்னும்போது அது திடீரென்ற மாற்றத்தை அல்ல, படிப்படியான மாற்றத்தையே குறிப்பிடுகின்றது. எனவே பழைய மரபுகளும், செயற்பாடுகளும் முற்றாகத் தூக்கி எறியப்பட்டுவிடமாட்டா. எனவே ஆசிரியர்கள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்க்கின்றது. அறிவு ஜோதியாக - ஆலோசகராக - எல்லாம் தெரிந்தவராக - என்பன போன்ற ஆசிரியர் பற்றிய ஒரு பெரிய எதிர்பார்ப்பு சமுதாயத்திடம் காணப்படுகின்றது. அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படாத பட்சத்தில் சமுதாயம் ஆசிரியரைப் பொருட்டாக மதிப்பதில்லை. அன்றைய ஆசிரியரோடு ஒப்பிடுகையில் இன்றைய ஆசிரியர் வித்தியாசப்பட்டு நிற்பதாகச் சமுதாயத்திற்குத் தோன்றுகிறது. அந்த இடைவெளியே இன்றைய ஆசிரிய - மாணவ உறவிலும் விரவி நிற்பதாகக் குறிப்பிடலாம்.

அத்துடன், இன்றைய நிலையில் ஆசிரியன் ஒரு தொழிலாளி. மாதாந்தச் சம்பளம் பெறும் ஒரு வேலையாள் பாடசாலைக்குள் மட்டுமே ஆசிரியர் என்ற நிலை. அத்துடன் தனது பணி, தனது சேவை முடிந்துவிட்டதாகக் கருதும் மனப்பாங்கு இன்றைய ஆசிரியரிடத்தில் காணப்படுவதால் - ஆசிரிய - மாணவ உறவும் பாடசாலைக்குட்பட்டதாகவே காணப்படுவதைக் கவனிக்கலாம்.

சில வேளைகளில் - மாணவன் ஒருவன் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் அறிவை - ஆசிரியர் கொடுக்கமுடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன. அறிவியல் ரீதியான சில முடிவுகள் - உண்மைகள் சில வேளைகளில் மாணவருக்கு எட்டும் அளவிற்கு ஆசிரியருக்கு எட்டாமலிருக்கலாம். இதற்குப் பல காரணங்களைக் காட்டலாம். ஆசிரியரின் வாசிப்புப் பழக்கமின்மை, தேடல் தன்மை குறைவு, பொருளாதார, நவீன சாதன வளமின்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவரின் பார்வையில், ஆசிரியரின் அறிவு குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது. எனவே, இங்கு ஆசிரிய - மாணவ உறவு ஒரு போலித்தனமானதாகக் காணப்படுகிறது.

அத்துடன் நவீன கல்விக் கொள்கைகள் காரணமாக ஏற்படுகின்ற குளறுபடிகளும், ஆசிரிய - மாணவ உறவுகளைச் சிக்கலாக்குகின்றன எனலாம். பாடரீதியாக ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், வித்தியாச மாயைகள் என்பன ஆசிரிய வர்க்கத்தினரிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகின்றன. இவை ஆசிரிய - மாணவ உறவுகளைத் தத்தளிக்க வைக்கின்றன. அத்துடன் பெறுபேறுகளையும், சான்றிதழ்களையும் மட்டும் பார்க்கின்ற கல்வி முறையில் ஒழுக்கம், பண்பாடு என்பன அடிபட்டுப் போய்விடுகின்றன. எனவே, அடைவுகளை வைத்து ஆசிரியரை அளக்கும் முறையில் ஆசிரிய - மாணவ உறவுகள் இன்று சிக்கிக் கொண்டுள்ளன.

மேலும், கல்வி வியாபாரப் பொருளாக இன்று மாற்றப்பட்டதால் அது தனித்துவத்தை இழந்துள்ளது. எனவே, காசு கொடுத்து வாங்க முடிகின்ற ஒரு போகப் பொருளாகக் கல்வி கணிக்கப்படுவதால் அதைக் கொடுக்கும் ஆசிரியனும் விற்பனையாளனாகவே கருதப்படுகின்றான். இதனால் இன்றைய ஆசிரிய - மாணவ உறவு விற்பனையாளன் - நுகர்வோனுக்கிடையிலான உறவாகவே உள்ளது எனலாம்.

இதனடிப்படையில் ஆசிரிய - மாணவ உறவு என்பது அன்றிலிருந்து - இன்றுவரை வேறுபட்டு ஒலித்து இன்று கேள்விக்குறியாகவே மாறிவிட்டது எனக் குறிப்பிடலாம்.

# மாணவர் மையக்கல்விச் சீர்திருத்தங்கள்

"பாடசாலைகள் வினைத்திறனுடன் இயங்குவதில்லை. அவற்றின் பெறுபேறுகளும் செயற்றிறனும் திருப்திகரமாக இல்லை, அவற்றின்மீது செய்யப்படும் செலவுகளுக்கேற்ப பயன் சமூகத்திற்கும், நாட்டிற்கும் கிடைப்பதில்லை." இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மட்டுமன்றி ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இவ்வாறான முறைப்பாடுகள் ஏராளமாக உண்டு. இதில் ஒருவகையான இலாப நட்டப் பொருளாதார நோக்குண்டு. இக்கருத்தினை முன்வைப்பவர்களும் பொருளாதாரத்துறை சார்ந்தவர்களாவர். இந்நோக்கத்தை மறுத்து, பாடசாலைகள் மனித ஆளுமை வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பைச் செய்துவருவதாக வாதிடும் கல்வியாளர்களும் உள்ளனர். பொருளியலாளர்கள் பாடசாலைகள் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுகிறதா? என மதிப்பீடு செய்கின்றனர். ஆனால், கல்வியாளர்களின் பாடசாலை பற்றிய மதிப்பீடு தத்துவ உளவியல் நோக்கில் மனித வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

பொருளாதார வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம் என்பன தேசியக் கொள்கைகளாகவும், இலட்சியங்களாகவும் வலியுறுத்தப்படும் இந்நாளில் கல்விச் செயற்பாடு, பாடசாலைப் பணிகள் என்பனவும் பொருளுற்பத்திச் செய்முறை போன்றே நோக்கப்படுகின்றன. தேசிய கல்விக் கொள்கைகளும் இவ்வாறான பொருளியல் கோட்பாடுகளில் செல்வாக்கிற்குட்பட்டுள்ளன. பொருளுற்பத்திப் பணியில் மூலப்பொருட்கள் ஒரு குறிப்பிட்ட செய்முறையினூடாக நுகர்பொருளாக, முடிவுப்பொருளாக மாற்றப்படுகின்றன. இவ்வாறே பாடசாலைக்கு வரும் மாணவர்களை ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறைமூலம் கல்வித் தேர்ச்சியுடையவர்களாய் ஆக்கிவிடலாமெனப் பலரும் நம்புகின்றனர். பாடசாலையும் ஒரு கல்வித் தொழிற்சாலை என்பது பலரது நினைப்பு. ஒரு ஆசிரியர் ஒரு வகுப்பில் கையாளும் முறை மற்றொரு வகுப்பில் வெற்றிதராது.

ஒரு மாணவர் குழுவுக்குக் கற்பிக்கும் முறை மற்றொரு குழுவினருக்கு முற்றாகப் பொருந்தாமல் விடக்கூடும். திங்கட்கிழமை பயன்தந்த கற்பித்தல் முறை வெள்ளிக்கிழமை பயனற்றுப்போய்விடும். 1970 இல் பயன்தந்த கற்பித்தல் முறை 1990 இல் ஒன்றுக்கும் உதவாமல் போய்விடும். எனவே, ஒரு குறிப்பிட்ட வழிமுறையைக் கல்விச் செயற்பாட்டில் நாளாந்தம் கையாள முடியாது. ஏனெனில் பாடசாலையில் ஆசிரியர்கள் சந்திப்பது மனித உள்ளங்களையேயன்றி மூலப்பொருட்களையன்று. மனிதர்கள் எல்லா நேரங்களிலும் ஒரேமாதிரியான சூழலுக்கு ஒரேமாதிரியாக நடந்துகொள்வதில்லை. ஒரு சூழ்நிலையில் அவர்கள் இப்படித்தான் நடப்பார்கள் என்று சரியாக எதிர்வுகூற முடியாது.

தொழிற்சாலையில் மூலப்பொருட்கள் தரமானவையாயின் தொழிலாளர்கள் சிறந்த நுகர்பொருளை உற்பத்தி செய்ய முடியும். தொழிலாளர்களின் கைவினைத் திறனும் முக்கியமானது. ஆனால், பாடசாலையில் ஆசிரியர்கள் எவ்வளவுதான் திறமையாகப் பணிபுரிந்தாலும் இறுதியாகக் கற்கவேண்டியவர்கள் மாணவர்களே! இந்நிலையில் கல்விச் செயற்பாட்டை பொருளுற்பத்தியுடன் ஒப்பிடுவது தவறானது மட்டுமல்ல பயனற்றதும்கூட. கல்விச் செயற்பாடு பல விசேட அம்சங்களைக் கொண்டது: மாணவர்கள் அறிவை உருவாக்கவும், தேடிக் கண்டறியவும், அறிவு முதிர்ச்சி, உணர்வு முதிர்ச்சி, சமூக முதிர்ச்சி என்பவற்றைப் பெற உதவுவது கல்விச் செயற்பாடாகும்.

இப்பின்னணியில் கற்போனின் செயற்பாடும், நடத்தையுமே கல்வி முறைமையில் மிக முக்கிய அம்சம் என்பதை வலியுறுத்த வேண்டும். கல்வி முகாமைத்துவம், பாட ஏற்பாடு, பாடசாலை வசதிகள், சாதனங்கள் மற்றும் பாடசாலை சம்பந்தப்பட்ட அத்தனை அம்சங்களும் கற்றலுக்குப் பேருதவியாக அமையுமென்பது உண்மையே! ஆயினும் கற்போனின் தீவிர ஈடுபாடு இல்லையேல் கற்றல் நடைபெறமாட்டாது என்பதையும், மனங்கொள்ளல் வேண்டும்.

கற்றோர் தம்மை மாற்றிக்கொள்ளாவிடில், தமது கற்றல் வழிமுறையைத் திருத்திக் கொள்ளாவிடில் பாடசாலைக் கல்வி பயனுடையதாக அமைய மாட்டாது.

கல்வி மேம்பாடு பெருமளவில் கற்போனில் தங்கியுள்ளபோதிலும் கல்விக் கொள்கைகளும் ஆராய்ச்சிகளும் இவ்வுண்மையை இனங்காணத் தவறிவிட்டன. பாடசாலைக் கல்விச் சீர்திருத்தங்கள் பெரும்பாலும் பாட ஏற்பாட்டையும் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகளையுமே கருத்திற் கொள்கின்றன. இச்சீர்திருத்தங்களைச் சரியாகச் செய்தால் கற்றலும் சரியாகவே நடைபெறும் என்று பெரிதும் நம்பப் படுகின்றது. மாணவர்கள் வெற்றுக் குடங்கள் போன்றவர்கள்; ஆசிரியர்கள் அறிவாகிய நீரை விட்டு அவர்களை நிரப்புபவர்கள்; பாடசாலை மாணவர்களின் கல்வித் தேர்ச்சியைவிட அவர்களைக் கீழ்ப்படிய வைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன; பாடசாலைக் கல்வி முறைமையில் மாணவர்கள் கேள்விகளையும், ஐயங்களையும் கேட்க வாய்ப்பில்லை. பாடசாலைகள் சொல்வதைச் செய்வதே அவர்கள் பணி. இந்நிலையில் கல்விச் செயற்பாட்டின் மைய அம்சம் கற்போர் அல்ல என வாதிடும் ஆய்வாளர்கள் உள்ளனர்.

நவீன கல்விச் சிந்தனையும் ஆய்வுகளும் கல்வித் தேர்ச்சியை மேம்படுத்த மாணவர்கள் தமது பணிகளைத் தாமே ஒழுங்குசெய்து கட்டுப்படுத்த வேண்டும்; அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள அறிவின் அடிப்படையில் கற்றல் தொடரவேண்டும்; பாட ஏற்பாடு விதிக்கும் விடய அறிவை விடுத்து மாணவர்களின் அனுபவங்களையும், சமுதாய, குடும்ப வளங்களையும் பயன்படுத்தல் வலியுறுத்தப்படுகின்றது.

கல்விக் கொள்கைப் பிரகடனங்களும், சீர்திருத்தங்களும் கற்போனுக்கு அதிக முக்கியத்துவமளிக்காது, கல்வி நிருவாகிகள், ஆசிரியர்கள், அவர்களுடைய பயிற்சி, தொழிற் தகைமைகள் என்பவற்றிலேயே கூடிய அக்கறை செலுத்துகின்றன. இவ்வம்சங்கள் தொடர்பான சரியான சீர்திருத்தங்கள் கற்றலை மேம்படுத்தும் என நம்பப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'பாடசாலை மைய முகாமைத்துவம்' பற்றிய இன்றைய ஆய்வுகள் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கல்விச் செயற்பாட்டில் வகிக்கவேண்டிய பங்கினை மட்டுமே விளக்குகின்றன; தலைமைத்துவம் பற்றிய ஆய்வுகள் மாணவர் பற்றி எதுவும் சொல்வதில்லை. ஆசிரியர்களின் தொழிற்தகைமையை மேம்படுத்தல், ஆசிரியரின் சுதந்திரம், ஆசிரியருக்கு வலுவூட்டல் (Impowerment) என்பன பற்றி ஏராளமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவ்வாறே மாணவர்களுக்கும் வலுவூட்டப்படல் வேண்டும் என்னும் விடயத்தில் ஆய்வாளர்கள் இதுவரை அதிக அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் கற்றல் நோக்குடன் செயற்படுவோர் என நோக்கப்படாது ஆசிரியர், கல்வி நிர்வாகிகள் போன்றோரின் பணிகளினால் பயனடைவோர் என்ற முறையிலேயே மாணவர்கள் ஆய்வாளர்களால் கருதப்பட்டனர். மாணவர்களின் அனுபவம் என்னும் விடயம் எப்போதுமே ஆய்வுப் பொருளாக அமைந்ததில்லை.

பாடசாலையில் இருக்கும்போது மாணவர் செய்யும் பணிகள், அவர்களுடைய சிந்தனைகள், நேரத்தைக் கழிக்கும் முறை, அவர்களின் கற்றல் முயற்சிகளுக்கான காரணங்கள், அவர்களுக்கு ஊக்கம் வழங்கும் பாடப் பொருள், கற்பித்தல் முறை, வகுப்பறை அமைப்பு போன்ற விடயங்களில் புதிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இவைபற்றி நாம் அறிந்துள்ளவை மிகக் குறைவே. இக் குறைந்த அறிவுடன் கற்போரின் நன்மையை முன்னிட்டு பாடசாலைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என நோக்குவோம்.

பாடசாலைக் கல்வியின் ஒரு முக்கிய நோக்கம் சுயமாகக் கற்றலை (Independent Learning) ஊக்குவிப்பதாகும். சுய கற்றல் திறன் இருப்பின் பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் மாணவர்கள் புதியனவற்றைக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் பாடசாலைகள் இத்திறனை வளர்ப்பதில் பொதுவாகக் கவனம் செலுத்துவதில்லை.

ஆரம்பக் கல்வி நிலையில் சுயமாகக் கற்க சில வாய்ப்புக்கள் உண்டு. இடைநிலையில் இவ்வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன. எனவே இந்நிலையில் மாணவர்கள் தாமாகச் செய்யக்கூடிய ஒப்படைகளும், செயற்றிட்டங்களும் வழங்கப்படவேண்டும். இவற்றைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பதற்கான சுதந்திரம் வழங்கப்படவேண்டியதும் முக்கியமானது. பாடசாலைப் பாட ஏற்பாடு, கால அட்டவணை மற்றும் பாடசாலை வசதிகள் மாணவர்கள் சுதந்திரமாகவும் சுயமாகவும் கற்கும் முறையில் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும் எனக் கருதும் கல்வியாளர்கள் உளர்.

கற்பித்தல் பணியை ஆசிரியர்களாலேயே செய்ய முடியும் என்ற சிந்தனையின் அடிப்படையிலேயே பாடசாலைக் கல்வி இன்று ஒழுங்கு செய்யப்படுகின்றது. கற்பித்தல் பணியின் சில அம்சங்களை மாணவர் குழுக்களிடம் ஒப்படைப்பதும் சாத்தியமானதே! மாணவர்கள் கூட்டாகப் பணிபுரியும் திறனை வளர்ப்பதும் முக்கியமானது. சமவயதுடையோர் தமக்குள் ஒருவருக்கொருவர் கற்பிப்பதும் (Peer Tutoring) நல்விளைவுகளைத் தரவல்லது. மாணவர்களின் அறிவும் திறனும் இங்கு வகுப்பறைக் கல்விக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறே கற்றல் நோக்குடன் பணிபுரியும் மாணவர் குழுக்களையும் ஒழுங்குசெய்ய முடியும். இவை பயனுடையன என்பதற்கு ஆய்வு ஆதாரங்களும் உண்டு.


கற்போரில் விசேட கவனம் செலுத்த மற்றொரு வழி அவர்கள் வெவ்வேறு சூழலில் கற்க வாய்ப்பளிப்பதாகும். வகுப்பறையில் நான்கு சுவர்களுக்கிடையில் மட்டுமன்றி சமுதாயத்தின் பல்வேறு நிலையங்களிலும் கற்றல் ஒழுங்குசெய்யப்படலாம். வகுப்பறைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட முக்கிய காரணம் மாணவர்களைக் கட்டுப்படுத்த வகுப்பறையே வசதியானது. சுற்றுலாக்கள், வெளிக்களப் பயணங்கள், பூங்காக்கள், தொழில் மையங்கள், பண்ணைகள், விளையாட்டுத் திடல்கள், வீட்டுச் சூழல் போன்றன கற்றலுக்கு உதவுவன. வகுப்பறைக்கு வெளியே மாணவர்கள் கூடிய சுதந்திரத்துடன் இயங்க முடியும். சுதந்திரம் வழங்குவதை ஒரு பிரச்சினையாகக் கருதாது அதனை ஒரு இலக்காகக் கொண்டியங்க வேண்டும் என்பது நவீன கல்விச் சிந்தனை. கற்போனை மையமாகக் கொண்ட கல்விமுறை நவீன கல்விச் சிந்தனையின் வழிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுருங்கக் கூறின் கல்விச் செயற்பாட்டில் முக்கிய பாத்திரத்தை வகிக்கவேண்டியவர்கள் மாணவர்களே! பாடசாலையின் பணி வெற்றிகரமாக அமைய இச்சிந்தனை உதவும் என்பதே இக்கருத்தை முன்வைக்கும் கல்வியாளர்கள் முடிவு.

**பேராசிரியர். சோ. சந்திரசேகரன்**
*கொழும்பு பல்கலைக்கழகம்.*

மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

# ஒரு கல்லறைக் குரல்



ஓ!.......... என் தாய் மண்ணே,
தலை சாய்க்கின்றேன்.
உன் மடியில் நான்
மடிந்ததை இட்டு
மண்டி யிடுகின்றேன்.
ஓர் விடியலைத் தேடி
மீண்டும் தவழக் காத்திருக்கின்றேன்.
அதுவரை உறங்க
அனுமதிப்பாயா?
என் தாய்மண்ணே ~ உனக்குத்
தலை சாய்க்கின்றேன்!

முன்னூறு நாள் சுமந்து
உன் உதிரம் ஈந்து
உதரம் நோக
கதறிக் கதறி ஈன்றவளே,
எனக்குத் தெரியும்,
என் இழப்பு ~ உன்னை
இறக்க வைத்திருக்கும்.
கலங்காதே, நான் காலமாகவில்லை.
கல்லறைக்குள்ளே
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
மீண்டும் பிறப்பேன்
உன் கருவறையைக் கொஞ்சம்
காப்பாற்றிக் கொள் தாயே!

உயிரினும் இனிய என் தோழா,
தோளில் துப்பாக்கியுடன் ~ நான்
தாங்கிக் கொண்டிருப்பதை ~ நீ
மக்களுக்கு அறிவிப்பது
மிகத் துல்லியமாகக் கேட்கிறது.
"அவன் வீழ்ந்து விடவில்லை ~ அங்கே
வாழ்ந்து கொண்டிருக்கிறான்"
என் செவிக்கு இன்பமாகிறது.
"புதைக்கப்படவில்லை அங்கே
விதைக்கப்பட்டிருக்கிறான்"
நீ உரைப்பது உறைக்கிறது.

**செல்வி. ப. உதயகுமாரி**
*விஞ்ஞானப் பிரிவு முதலாம் வருடம்*

"தமிழ் கொலைக்காக
தாய் மண்ணை நேசித்தவன்,
தாய்நாட்டைப் பூசித்தவன்,
என் தோழன்" என்று நீ
முழங்குவது விளங்குகின்றது.

ஏன் தோழா
இன்னுமா புரியவில்லை எம் மக்களுக்கு?
தமிழ் என்றால்
தரம் பிரிப்பார்கள் என்று;
தனிநாடு இல்லையென்று;
நிரந்தரமின்மையே அவனுக்கு நிரந்தரமென்று;
அகதியாவதே நியதியென்று;
அவனியுறுவதே பவனியென்று;
இன்னுமா தெரியவில்லை
எமக்கு விடியவில்லையென்று?

சற்றுப் பொறு
என் பாசத்திற்குரிய
தேச மக்கள்
ஓசையிடுகின்றார்கள்!
தூக்கத்திலே தான் அவர்கள்
"திறப்பணம்" தேடுகிறார்கள்
ஏக்கத்தில் தான்.
இன்னும் சுவாசிக்கிறார்கள்.
அழித்துக் கொண்டிருக்கும்
ஆதிக்கத்தை அழித்து
உரிமை பெற அவர்களுக்கு
உறுதி பிறக்கவில்லை.
விடியலுக்கு உரமூட்ட
விண்மீனாய்ப் பூத்த தோழர்களின்
விரதம் தெரியவில்லை.
கருவறைச் சிசுக்கூட
கல்லறைக்காய் போட்டியிடும்
காலம் கனதூரம் இல்லையடா.
கால் எடுத்து வைக்குமுன்பே
பார் செழிக்க முனைந்து நிற்க
பல காலம் இல்லையடா.
பால் குடித்து ஓயும் முன்பே
காரியத்தை செய்யும் காலம்
கனகாலம் இல்லையடா.
போர் முழக்கம் என்றவுடன்
கார் மேகம் போல தமிழ்
கால்கள் எல்லாம் ஓடுமடா.

கல்லெடுத்து பொல்லெடுத்து
வில்லெடுத்து வாளெடுத்து
தோள்கொடுத்து துணைபுரிந்து
தமிழ் காக்க வருவார்கள்.
ஏர் எடுத்து, போர்தொடுத்து
கார் முழங்க, பார் எங்கும்
பார்
அங்கே,
என் நெஞ்சிற்கினிய தோழர்
துணை நிற்பார்.

நான் விழித்துக் கொள்வேன்.
உன் நினைவை அழித்துக்கொள்ளாதே.
கல்லறை என்னைக்
காதலிக்கிறது ~ நான் அதற்கு
காவல் செய்கிறேன்.
பேதலிக்காதே ~ நீ
பிதற்றிக் கொள்ளாதே.
நான் மரணிக்கவில்லை
மறுதலிப்பேன்!
என் தாய் மண்ணைக் காதலிப்பேன்
செந்தமிழைச் சுவாசிப்பேன்!

என் தாயே,
காரணம் இல்லாமல்
கண்ணீர் வடிக்காதே.
மீண்டும் வருவேன் ~ அதுவரை
கருவறையைக் காப்பாற்றிக்கொள்!



# இது வரை கலைச்செல்வி

# ஓர் வெட்டுமுகம்




கலாசாலையில் ஒவ்வொரு வருடமும் "கலைச்செல்வி" வெளிவருவது வழமை. ஆனால் அவ்வவ்வருட பயிற்சி ஆசிரிய மாணவர்களுக்கு அது ஓர் புதுமையான அனுபவம். ஏனெனில் ஆசிரிய மாணவர்கள் எல்லோரும் எழுத்தாற்றலில் துறைபோனவர்கள் என்பதற்கில்லையாதலால் அவர்களின் செயற்பாடுகள் புதுமையான அனுபவமாகத்தான் கலைச் செல்வியினூடே வெளிப்படும்.

இவ்வருடம் வழமையின் நிமித்தம் தெரிவு செய்யப்பட்ட இம்மலர் வெளியீட்டுக் குழுவினராகிய நாங்களும் வெளியீடுகள் சம்பந்தமாக சிறந்த தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. இதற்காக இவ்வெளியீட்டுக்குப் பொறுப்பான விரிவுரையாளர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுவரும் போது அவர்கள் இதுவரை கலைச் செல்விகளை நோக்கிப் பார்க்குமாறும், அதன் மூலம் கிடைக்கும் எண்ணங்களும் கருத்துக்களும் இதற்கு உதவும் எனவும் வழிப்படுத்தினர். அவ்வாறே நாங்களும் செயற்பட்டோம். எல்லா மலர்களையும் கண்ணோக்குவது எங்களுக்கு கடினமாக இருந்த போதிலும் நாங்கள் துவண்டு விடாது முயன்று, ஓர் மலர் வெளியிட்ட அனுபவங்களைப் போன்று பன்மடங்கு பலன் எய்தினோம். இவற்றை எங்களுடன் மாத்திரம் எடுத்துச் செல்லாது எல்லோருக்கும் பயன்படக் கூடியதாகவும், இனி வருவோருக்கும் பயன் கிடைக்கக் கூடியதாகவும் இம்மலரில் பிரசுரிக்கின்றோம்.

இவ்வாக்கமானது, எல்லாக் கலைச் செல்விகளையும் கண்ணோக்கிய அனைவரும் பங்கு கொள்ளும் முகமாக நேர்காணல் முறையில் அமைந்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் உரைநடைப்பகுதிகள் உரைநடையாகவும், கவிதைப்பகுதிகள் கவிதையாகவும், அமைந்திருப்பது இதனை வாசிப்பதற்கு சுவாரசியமாக இருக்குமென நினைக்கின்றோம்.

இது முற்றுமுழுதாக ஓர் ஆய்வாகவோ, கருத்துக்கண்ணோட்டமாகவோ அல்லது விமர்சனமாகவோ அமையாவிட்டாலும் இவையனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய இதுவரை கலைச் செல்விகளது ஓர் வெட்டுமுகமாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

*ராதிகா! இக்கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் இம்மலருக்கு கலைச் செல்வி எனும் பெயர் எவ்வகையில் பொருத்தமானது என்று கூறுவீர்களா?*

அமைச்சுக்கள், பிரதேச கலாச்சாரப் பேரவைகள், சமய சமூக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், முத்தமிழ் மன்றங்கள், இலக்கிய மன்றங்கள் என்பனவற்றால் பல ஏடுகள் வெளியிடப்படுகின்றன. இவ்வேடுகள் பல நிறுவனங்களால் வெளியிடப்படும் போது, அவற்றின் செயற்பாடுகள், பிரதேச பண்பாட்டுக் கோலங்கள், உயிர்ப்பான ஆக்கங்கள், விசேட ஆக்கங்கள், ஏட்டின் கருப்பொருள், ஆக்கமொன்றின் கருப்பொருள் என்பனவற்றுள் ஒன்றையேனும் அல்லது சிலவற்றையேனும் மையமாகக் கொண்டே பெயர் சூட்டப்படுகின்றன. அந்தவகையில் எமது கலா சாலையும் ஒரு கல்விநிறுவனம் ஆதலால் நாம் சில கல்வி நிறுவனங்களையும் அவற்றின் வெளியீடு களையும் நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

| நிறுவனம் | வெளியீடு |
|---|---|
| ❑ அரசினர் ஆசிரியர் கலாசாலை (அட்டாளைச்சேனை) | கலையமுதம் |
| ❑ அரசினர் ஆசிரியர் கலாசாலை (பலாலி) | கலாவதி |
| ❑ அரசினர் ஆசிரியர் கலாசாலை (கொட்டகலை) | கலையருவி |
| ❑ அரசினர் ஆசிரியர் கலாசாலை (கோப்பாய்) | கலைமலர் |

மேற்படி வெளியீடுகளை அவதானிக்கையில், ஏடுகளின் பெயர்கள் "கலை" என்னும் சொல்லை ஆதாரமாகக் கொண்டு அதனுடன் பொருந்தக்கூடிய வகையில் வளமான இன்னுமொரு சொல்லை இணைத்து, பொருள் பொதிந்ததும், கருத்தாழமிக்கதுமான சிறப்புப் பெயரைத் தாங்கி வெளிவருகின்றன. இவ்வாறே கல்வி நிறுவனமாகிய எமது ஆசிரியர் கலாசாலையினால் வெளியிடப்படும் சஞ்சிகையும் "கலை" என்னும் பதத்துடன் "செல்வி" எனும் சொல்லும் இணைந்து கலைச் செல்வியாக உருப்பெற்றுள்ளது.

ஆழ்கடலில் தேடியெடுக்கும் அரும்முத்தைப் போல இக்கலாசாலையின், ஆசிரிய மணிகளிடையே முத்தமிழ் மன்றம் முத்துக் குளித்ததால் கிடைத்தநன்முத்தாக கலைச் செல்வி விளங்குகிறது. எழுத்தாணியையும், கலைமகள் கைப்பொருளையும், நாட்டிய மணியையும் ஒருங்கே இலச்சினையில் கொண்ட முத்தமிழ் மன்றத்தின் வெளியீடான கலைச் செல்வியானது இயல், இசை, நாடகம் ஆகிய நுண்கலைகளை மாத்திரம் கொண்டதாக எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறில்லாமல் இதை சற்று ஆழமாகவும், பரந்த ரீதியிலும் சிந்திக்கும் போது ஆயகலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதே கலை எனும் பதமாகும். இதே போன்று செல்வியென்பது இளமைத்துடிப்பும் புதுமையழகும் பொருந்திய கன்னிப் பெண்ணை ஒக்கும். எனவே எமது (வெளியீடான கலைச் செல்வியானவள் நுண்கலைகளை மாத்திரமல்லாது கணிதம், விஞ்ஞானம், சமயம், சோதிடம், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் போன்ற பற்பல கலைகளையும் தன்னுள் அடக்கி புதுமணம் வீசும் நறு மலராக மலர்ந்து ஆண்டுதோறும் பவனி வருகிறாள்.) இந்த வகையில் நோக்குமிடத்து இம்மலருக்கு கலைச்செல்வி எனும் பெயர் சாலப்பொருந்தும் எனலாம்.

*இக் கலைச்செல்வியின் உயிரோசையாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள் றீற்றா?*

கலைக்கு அதிபதியான கல்வித் தெய்வத்தின் கைப்பொருளான வீணையை உடலாகவும், அதன் நரம்புகளை உயிராகவும், அதனை ஒழுங்கான முறையில் மீட்டும் போது அதில் எழுகின்ற நாதம் இனிய ஓசையாகவும் அமைகின்றது. இதேபோன்று கலைச்செல்வியை உடலாகக் கொண்டால், அதன் உயிராக இக்கலாசாலையில் இடம்பெறும் கல்விச் செயற்பாடுகளான விளையாட்டுக்கள், இலக்கிய மன்ற நிகழ்வுகள், முத்தமிழ் விழாக்கள், சமய நிகழ்ச்சிகள், சாரணப் பாசறைகள், கற்பித்தற் பயிற்சிகள், சுற்றுலாக்கள், செயற்றிட்டங்கள் போன்றவை தொடர்பான அனுபவங்கள் அமைகின்றன. இவை செயற்றிறன்கள் கொண்ட ஆசிரிய மாணவர்களது ஆக்கங்களாக கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் என்று பல்வேறு வடிவம் பெற்று ஒரு இனிய சந்தத்தோடு ஒலியெழுப்புகின்றன. இவ்வொலியின் தாக்கங்கள் உயிர்த்துடிப்புடையதாகவும், காலஓட்டத்தை பிரதிபலிப்பனவாகவும் காணப் படுகின்றன. (இத்துடிப்புக்கள் ஆக்கங்களை உருவாக்கியவர்களினதும் வாசகர்களினதும் மனதில் ஒரு நன்மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஓர் ஒழுங்குமுறையில் அமையுமானால் இதுவே இக்கலைச் செல்வியின் உயிரோசையாகும்.)

இவ்வகையில் கவிதைச்சரமொன்றை எடுத்து நோக்குவோமாயின், 1978இல் இடம்பெற்ற "விடுகை வருட மாணவர் கல்விச் சுற்றுலா" எனும் தலைப்பில் இடம்பெற்ற கவிதையானது, ஆசிரிய மாணவர்களுக்கு சீரிய அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், சிறந்த கற்றல் கற்பித்தல் திறனுடையவர்களாக அவர்களைச் செம்மைப்படுத்துவதாகவும் அமைகிறது.

அடுத்து, கட்டுரையெனும் வைரச் சுரங்கத்திலிருந்து சிலவற்றை அகழ்ந்தெடுத்து ஆராயும் போது, 78இல் வெளிவந்த "பழஞ்சேனை செயற்றிட்டப் பணியிலே" எனும் வைரமானது, ஒரு நாட்டின் முதுகெலும்பான கிராமமொன்றைச் சீர்திருத்தி வளமிக்க வாழ்க்கைக்கு மாற்றியமைப்பது, செயற்றிறன்மிக்க நல் ஆசான்களால் முடியும் என்பதையும், 1997ல் வெளியான "வேளறுவோ வேறுளவோ" எனும் வைரமானது, ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதோடு, சிரத்தையோடு மாணவர்களை நல்வழிப்படுத்தவும் வேண்டுமென்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறே கலைச் செல்விக்கு இரசனையையளிக்கும் சிறுகதைகளைப் பார்க்கும் போது, 1993ல் வெளியான "நிஜங்களின் நிகழ்வு" எனும் கதையானது, மலர்ந்து மணம்பரப்ப வேண்டிய இளம் மொட்டொன்று போர்ச் சூழலால் கருகியதைக் கண்கூடாகக் கண்டு இந்தப் போர் அரக்கன் மாயும் காலம் வாராதோ எனும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறாக செல்வியின் சில நரம்புகளை மீட்டும் போதே இனிய ஓசை இன்பம் இசைக்கின்றதென்றால் இதன் முழுநரம்புகளையும் மீட்டினால் எத்தகைய ஓசை பிறக்கும்? இதன் உயிர்ப்பு எத்தன்மையானது என்பதை வார்த்தைகளால் கூறத்தான் முடியுமா?

*கலைச் செல்வியில் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எந்தளவில் இடம் பெற்றுள்ளன எனக் கூறமுடியுமா ராதிகா?*

இயற்கையுடன் இணைந்து நிகழ்ந்த மனித இனத்தின் நுண்ணறிவுச் செயற்பாடுகளின் ஊடாக தோற்றமளிக்கும் கல்வியானது மனித சமுதாயத்தின் மாற்றத்திற்கும், சமூக அசைவிற்கும் வழிகோலுகிறது. இப்பாரிய பொறுப்புக்களுக்குரியோரான ஆசிரியர்களை உருவாக்கும் ஒரு களமாக கலைச் செல்வி மிளிர்கிறது. இக்கலாசாலையில் நாம் பெறும் கல்வியியல், உளவியல், மெஞ்ஞானம், விஞ்ஞானம், கணிதம், விளையாட்டுப் போன்ற பல துறைகளை கற்றூறும் அறிவை செயற்றிறனாக்கி, கலைச் செல்வியை வயல் நிலமாக்கி, தாம் பெற்ற அறிவுப்பயிர்களை வளர்த்தெடுத்து, சிறந்த விளைச்சலைக் காட்டும் விதத்தில் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமைகின்றன.

இக்கல்விச் சிந்தனைகள், செயற்பாடுகளை நோக்கும் போது, இவை பல கட்டுரைகளின் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக "மட்/ தாண்டவன் வெளி பெண்கள் பாடசாலையில் கற்பித்தல் நடைமுறை விபரம்" எனும் 1970 இல் வெளியான கட்டுரையில் கேத்திர கணிதப்பகுதியான கனவுருக்கள் பற்றிய கணிதக் கற்பித்தல் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது. இன்னும் ஆசிரிய மாணவர்கள் வகுப்பறையில் கற்ற உளவியல் கருத்துக்களை ஆய்வு செய்வதற்காக, கல்லடி உப்போடை இராம கிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலையில் கணிதபாட செயற்றிட்டமொன்றை மேற்கொண்டார்கள். அதாவது கணிதத்திற்கு அடிப்படையான எண்ணக்கருக்களை மாணவர்களிடம் விருத்தி செய்வதற்கு, அவர்களை செயல்முறையில் ஈடுபடச் செய்வது அவசியமென இச்செயற்றிட்டத்தின் மூலம் உணரப்பட்டுள்ளது என்பதை, 1972இல் வெளியான "ஆரம்ப வகுப்புக் கணிதத்தில் ஏன் மாற்றம் ஏற்பட வேண்டும்" எனும் தலைப்பின் கீழ்வரும் விபரங்கள் காட்டப்படுகின்றன.

இவ்வாறு 1977இல் வெளியான "பழஞ்சேனைச் செயற்றிட்டப் பணியிலே" எனும் கட்டுரையில் ஆசிரிய மாணவர்கள் செயற்பாட்டு ரீதியான முறையில் கிராம மக்களை சுயதொழிலில் ஈடுபட வைத்தல், சுற்றாடல் சுத்தத்தைப் பேணவைத்தல், பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதை அறியக்கூடியதாக இருக்கின்றது. மேலும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிக்க வேண்டுமென்பதையும், அவர்களை சமூகத்திற்கு ஏற்ற நற்பிரஜைகளாக எவ்வாறு உருவாக்க முடியுமென்பதையும் 1996ல் வெளியான "தரிசனம் ஓர் தரிசனம்" எனும் ஆய்வுக் கட்டுரை காட்டி நிற்கின்றது. இவ்வாண்டிலேயே வெளியான "இலங்கையில் ஆசிரியர் கல்வி" எனும் கட்டுரை ஆசிரிய பயிற்சியின் அவசியத்தையும், ஆசிரியக் கல்வி மேம்பாட்டின் முக்கியத்துவத்தையும் உணர்த்தி நிற்கின்றது. அத்துடன் ஓர் ஆசிரியர் ஆழ்ந்தகன்ற அறிவும், ஐயங்களைச் சீராக்கும் திறனையும் கொண்டு கற்பித்தலில் ஈடுபட வேண்டுமென்பதைக் காட்டும் வகையில், 97ல் இடம் பெற்ற "வேளாறுவோ வேறுளவோ" எனும் கட்டுரை அமைந்துள்ளது. மேலும் இக்கட்டுரையானது கற்றல் - கற்பித்தல் பயிற்சியின் போது ஒரு பயிற்சி ஆசிரியர் பெற்ற அனுபவத்தையும் அவரின் ஆய்ந்தறியும் திறனையும் காட்டுவதோடு ஏனைய ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைகிறதெனக் கூறலாம். அத்துடன் "40 நிமிட நேரப்பாடக் குறிப்பின் அவசியம்" என்ற கட்டுரையில் பாடக்குறிப்பின் அவசியம், பாடக்குறிப்பிலுள்ள குறைபாடு, அதைத்தயாரிக்கும் முறை போன்ற பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு ஆசிரியர் பாடக்குறிப்பின் அவசியத்தை உணர்ந்து அதனை அமைத்து, சிறந்த முறையில் கற்பித்தலில் ஈடுபட வழியமைக்கிறது.

இவ்வாறாக பல்வேறுபட்ட முறையில் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் கலைச் செல்வி இதழ்களில் இடம்பெற்று வருவதைக் கூறலாம்.



*கவிதை வளர்ச்சியில்*
*காலந்தோறும் கலைச் செல்வி*
*பாங்குடன் உகந்த*
*பங்களிப்பை எடுத்துரைப்பீர்களா பத்மாவதி?*

கவிதை வளர்ச்சியிலே
கலைச் செல்விப் பங்களிப்பை
நவில முயலுகிறோம்
நலமுளதேல் ஏற்றிடுக

மரபு வழிக்கவிதை
மாண்புற்ற அக்காலம்
தரமாய்க் கவி வடிக்கத்
தக்கவர்கள் அன்றிருந்தார்

அவர்கள் கவிதையிலே
அழகு ததும்பியது
கவரும் பொருட்செறிவும்
கற்பனையில் துள்ளியது

வித்துவத்தி னாற் செதுக்கி
விழற்கவிதை செய்தளித்த
பித்தர்களின் ஆட்சி
பின்னடைய வந்துதித்தான்

சித்தன் நவ பாரதியாம்
செஞ்சொற் கவிவேந்தன்
புத்தெழுச்சி கொண்டு
புதுக் கவிதை தோன்றியது

அந்தப் புதுக் கவிதை
அழகாம் கவியுருவைத்
தின்றுவிடவில்லை
செப்பனிட வந்ததுவே

செய்யுள் உறுப்புகளை
சிதைத்தழிக்க வில்லை அது
வையம் செழிக்க
வளம் சேர்க்க வந்தது

சொல் புதுமை பொருள் புதுமை
சொல்லவந்த முறை புதுமை
வல்ல எளிமை
மாறாத நல்லினிமை

எல்லாம் ஒருங்கே
இயைந்த நவகவிதை
பல் நலமும் சேரப்
படைத்தவன் தான் பாரதியே

நவீன கவிதை
நாட்டுப் புறப்பாடல்
வடிவங்கள் கொண்டு
வடித்தெடுத்த பாரதிதான்

கவிதை வரலாற்றில்
காட்டினான் ஓர் திருப்பம்
அந்தத் திருப்பத்தின்
அடியொற்றி நின்றவர்கள்

நவீன யுகக் கவிதை
நாயகர்கள் ஆனார்கள்
இந்தத் தருணத்தில்
எங்கள் கலைச் செல்வியவள்

கவிஞர் உருவாக்க
களம் அமைத்துத் தந்திட்டாள்
ஐம்பதாம் தசாப்தத்து
ஆசிரியப் பயிலுனரில்

கவியார்வம் கொண்ட சில
காளையர்கள் கன்னியர்கள்
முத்தமிழ் மன்றத்து
முழுப்பொறுப்பும் ஏற்றார்கள்

ஈற்றடி தந்து
எழுத வைத்தார் வெண்பாக்கள்
நாற்புறமும் இந்த
நடைமுறைகள் எட்டினவாம்

தமிழ்த் தாயும் தந்தையுமாய்
தமிழ் வளர்த்த சான்றோரின்
காலத்தே இந்தக்
கவிமரபு தோன்றியதாம்

அந்தக் கவிமரபில்
அணையாத நல்விளக்காய்
இன்றும் சிலபேர்
இலங்குவதைக் காண்கின்றோம்

இன்றைப் புதுக்கவிதை
எழுதுவதற்கு வித்திட்டோன்
பாரதி என்று
பலபேரும் பேசுகின்றார்

வசனகவிதை அந்த
வழி செய்த தென்கின்றார்
வசன கவிதை அந்த
வழிகாட்டியானாலும்

இறுதி அடிகளினை
எவரேனும் ஆய்ந்தீரா?
மரபுக்கு மீண்டும்
வந்து விட்டான் கண்டீரா?

கவித்துவமே தானாய்க்
கனிந்து நின்ற பாரதிக்கு
மரபு தடைக் கருத்தை
வைப்பதற்கு என்பீரா?

அந்த வழி நின்று
அழகான பாட்டெழுத
வந்த பயிலுநர்க்கு
வாய்ப்பளித்தாள் நம் செல்வி

மரபு வழி நின்றோர்
மலைபோல் உயருதற்கு
களமமைத்த செல்வி
கவியெழுத ஆர்வமுற்றோர்

வரிவரியாய்த் தீட்டும்
வசனத்துக் கோப்புக்கும்
இடந்தந்து பூத்தாள்
இல்லையென்று சொல்லவில்லை

ஆனால் புதுக் கவிஞர்
ஆகி உயர்ந்தவர் யார்?
எவருமே இல்லை
இன்றும் மலைபோல

உயர்ந்து நிற் க்கின்ற
ஒரு சில பாவாணர்
மரபு வழி வந்தோர்!
மகத்தான இவ்வுண்மை

கலைச் செல்வி ஏடு
காட்டுகின்ற நற்செய்தி

*சுபாஜினி, இம்மலரானது மட்டக்களப்பின் தனித்துவத்தையும் அங்கு வாழ்ந்த கல்வி மான்களின் வரலாறுகளையும் எவ்வாறு காட்டிநிற்கின்றது?*

இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் இலங்கைத்தீவின் கிழக்கே பல சிறப்புக்களுடன் திகழ்வது மட்டக்களப்பாகும். இவ்வூர் தேனாடு, பானாடு, மீனாடு, நென்னாடு என்றெல்லாம் பல சிறப்புப்பெயர் கொண்டழைக்கப்படுவதற்கு இதன் தனித்தன்மையே காரணமெனலாம். மட்டக்களப்பின் தனித்துவத்தை நோக்கும்போது புவியியல் ரீதியாக வடக்குத் தெற்காக நீண்ட வாவியைக் கொண்டுள்ளதுடன், இவ்வாவி மகாவலிப் பெருநதியின் ஒரு கிளையையும் தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளது. இதனுடன் இயற்கை எழில் கொஞ்சும் பாசிக்குடா என்னும் அழகிய கடற்கரையையும் தன்னகத்தே கொண்டு பார்க்குமிடமெங்கும் கடல், வயல், வாவி, ஆறு என்று பார்ப்போரைப் பரவசமூட்டும் வகையில், விளங்குகின்றதென்பதை கலைச்செல்வியில் 1968 இல் வெளியான "யாம் கண்ட பாசிக்குடா", 1972 இல் வெளியான "வளம்மிகு மட்டக்களப்பு வாவி" எனும் ஆக்கங்கள் உணர்த்துகின்றன. மேலும் இவ்வூர் மக்களுக்கு அருள்புரிவதற்காகத் தாமாகவே தோன்றிய தான் தோன்றீஸ்வரர் ஆலயம், ஈழத்துப்புகழ் பெற்ற மண்டூர் கந்தசாமிகோயில், புண்ணிய தீர்த்தத்துடன் விளங்கும் மாமாங்கப் பிள்ளையார் கோயில் போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டு சிறப்புற்று விளங்குவதையும் இவ்வாக்கங்கள் விளக்குகின்றன. இலங்கை அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்ததை நினைவூட்டுவதற்காக ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டை அமைந்துள்ளது. இதனை 70ல் வெளியான "மட்டக்களப்பில் ஒல்லாந்தர் கோட்டை" எனும் கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

1973இல் வெளியான "மட்டக்களப்பில் நாடகம்" எனும் கட்டுரை கூத்துக்கலை மட்டக்களப்பு மக்களின் பாரம்பரியச் சொத்து என்பதையும், இவர்கள் இதனை வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் எனப் பேணி வளர்த்து வருகின்றனரென்பதையும் காட்டுகின்றது. இக்கூத்துக்கலையை வளர்ப்பதில் மட்டக்களப்புக் கோயில்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. அநேகமான கூத்துக்கள் கோயில்களிலேயே அரங்கேற்றப்பட்டுள்ளதை 1997இல் வெளியான "மட்டக்களப்புக் கோயில்கள் வளர்த்த நுண்கலைகள்" எனும் மகிழை மகேசனின் கட்டுரையிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு மக்களின் வாழ்வு, கோயில் வழிபாட்டுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இவர்களது சமூகம், சாதியமைப்பு, குடிமுறைகள் என சில தனித்துவங்களை உடையது. மேலும் பண்டைய விஞ்ஞானங்களான சோதிடம் மாந்திரீகம் போன்ற சிந்தனைகளை உள்ளடக்கியதுடன், இவர்கள் தமக்கென்று சட்டமுறைகள், சம்பிரதாயங்கள், பண்பாட்டுப்பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் கொண்டுள்ளனர். இவ்வாறாக கலாநிதி சி. மௌனகுரு அவர்களால் எழுதப்பட்ட "கிழக்கு மாகாணத்தைப் புரிந்து கொள்ள" எனும் கட்டுரையில் கூறப்படுகின்றது. 1971இல் வெளியான "மட்டக்களப்பு பேச்சுத் தமிழ்" எனும் கட்டுரை மட்டக்களப்பு பேச்சுத் தமிழை ஏனைய மாவட்ட மக்களுக்கு அழகாக அறியத்தருவதுடன் இப்பேச்சுத் தமிழானது, பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சில செந்தமிழ் சொற்களையும், சிங்கள இஸ்லாமிய சொல் வளங்களையும் கொண்டமைந்துள்ளதைக் காட்டுகின்றது.

இவற்றுடன் மக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணித்த துறவிகளினால் கல்வி, சமயம், கலாசாரம், சமூக சேவை ஆகிய பலதுறைகளிலும், சர்வ சமய நோக்குடன் சகோதரத்துவ உணர்வையூட்டும் இணையற்ற ஸ்தாபனமான இராமகிருஷ்ண மிசன் அமைக்கப்பட்டு, சிறப்புற விளங்குவதை 1997ம் ஆண்டு கலைச்செல்வியில் "நுற்றாண்டு விழாக்காணும் ஞானச்சுடர் விளக்கிற்கு அஞ்சலி" எனும் தலைப்பின்கீழ் வெளியான விடயங்கள் காட்டுகின்றன. மேலும் "தரிசனம் ஓர் தரிசனம்" எனும் ஆய்வுத் தொகுப்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் விழிப்புலனற்றவர்களுக்கான நிறுவனம் உருவாக்கப்பட்டு சேவை புரிந்து வருவதைக் காணக்கூடியதாயுள்ளது.

இவ்வாறாக மட்டக்களப்பின் தனித்துவத்தையும் சிறப்புக்களையும் பல வழிகளில் வெளிக்காட்டியுள்ள கலைச்செல்வியானது, செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கி வாழ்வதற்குத் தம் வாழ்நாளை அர்ப்பணித்துத் தொண்டு பல புரிந்த கல்விமான்களையும் ஈழத்துத் தமிழ் மக்களுக்குப் பெருமையுடன் காட்டியுள்ளது. குறிப்பாக மட்டுநகர் ஆசிரியர் கலாசாலையின் தோற்றத்திற்குக் காரணகர்த்தாவாக

இருந்தவரும் 17 வருடங்களாக இக்கலாசாலையின் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றி அயராது உழைத்தவருமாகிய பண்டிதர் திரு. செ. பூபாலப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பில் மகளிருக்கென தனியொரு ஆசிரியர் கலாசாலை உருவாக அயராது உழைத்ததுடன், 1945ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழ் மாணவர்களுக்காக மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையை உருவாக்குவதற்காக அரும்பணி புரிந்ததையும் ஈழத்துத் தமிழருக்கு வெளிக்காட்டிய கலைச்செல்வியைப் பாராட்டாமலிருக்க முடியாது. 1967 இல் பண்டிதர் திரு. செ. பூபாலப்பிள்ளை அவர்களின் நினைவு மலராக வெளிவந்த கலைச்செல்வி இப்பெரியாரை உலகறியச் செய்தலில் பெரும் பங்கு வகித்துள்ளது. "மாண்டாயில்லை வாழ்வாய்நீ" எனும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கவிதையும் "நமது குரு சீவான்மா சாந்தி" எனும் செல்வி நா. வள்ளியம்மையின் கவிதையும் பண்டிதர் அவர்களுக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது. சைவமும் தமிழும் தழைத்தோங்க நல்வழி பல காட்டிய, தமிழ்கூறும் நல்லுலகில் இன்றுள்ள இசைத்தமிழ் நூலான யாழ் நூலை இயற்றிய முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்த அடிகளாரின் பெருமைகளையும் கலைச்செல்வி வெளிக்காட்டியுள்ளது. 1971 இல் வெளியான "முத்தமிழ் வித்தகன்" எனும் கவிதையும் 1992 இல் வெளியான விபுலானந்தர் நூற்றாண்டு சிறப்பு மலரும் இதில் பெரும் பங்காற்றியுள்ளன. இவ்வாறே மட்டக்களப்பு தந்த மாபெரும் தமிழ் மணியும், புலவர் பலர்போற்றும் புலவர்மணியுமான பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் சிறப்புக்களை 1978இல் வெளியான கலைச்செல்வி எடுத்துரைக்கின்றது.

பதினைந்து வருட அரசியல் வாழ்வில் மட்டக்களப்பு மாநகரின் முன்னேற்றத்திற்காக அரும் பெரும் சேவை புரிந்த நல்லையா அவர்களையும் அவரது சேவைகளையும் 1994இல் வெளிவந்த கலைச்செல்வி தெளிவாக விளக்கியுள்ளது. இவர் கல்வியை விருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை உட்பட பல கல்விக் கூடங்களையும் சகல சமூகத்தவருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் மட்டக்களப்பு வாழைச்சேனை கடதாசி ஆலையையும் பொதுமக்களின் நலன்கருதி பல வைத்தியசாலைகள், தபாலகங்கள் போன்றவற்றையும் நிறுவி மக்கள் மனதில் நிலையாக நிலைத்து விட்டதை கலைச்செல்வியின் ஒவ்வொரு ஆக்கமும் வெளிக்காட்டியுள்ளன. மேலும் தனது அரசியல் வாழ்வில் சலுகைகள், கைக்கூலிகள் பெறாத மானஸ்தனாக தனக்கென எதனையும் தேடாத தயாளனாக, நேர்மையாளனாக வாழ்ந்து அரசியல் வாதிகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய நல்லையா அவர்களை தமிழ் சமூகத்துக்கு வெளிக்காட்டிய பெருமை கலைச் செல்வியைச் சாரும் என்பதில் ஐயமில்லை.

இவர்களுக்கு அடுத்ததாக 1993ல் கவிமணி திமிலைத் துமிலனின் மணிவிழாச் சிறப்பு மலராக வெளியான கலைச் செல்வி மட்டக்களப்பின் பண்பாடு, கலை, இலக்கியம் என்பவற்றோடு இணைந்தவரான திரு. சி. கிருஷ்ணபிள்ளை அவர்களின் ஆற்றல்களையும் வெளிக்காட்டியுள்ளது. கவிமணி "திமிலைத்துமிலனின் கவிதை கூறும் சிறுகதைகள்" , "திமிலைத்துமிலன் என்றொரு கலைஞன்" போன்றவற்றிலிருந்து இவர் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஓவியம் சிற்பம் எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கியதை அறிய முடிகின்றது. இவற்றுடன் "திமிலைத் துமிலனும் பின்லாந்துக் காவியமும்" எனும் கட்டுரையிலிருந்து இவர் பின்லாந்துக் காவியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பைக் கவிதையாக் அமைத்த பெருமையுடையவர் என்பதும் தெரிகின்றது. சுருங்கக்கூறின் திமிலைத்துமிலன் அவர்கள் ஒரு "நடமாடும் கலைக்கூடம்" என்பதை வெளிக்காட்டுவதில் கலைச்செல்வி பெரும் பங்கேற்றுள்ளது.

ARCHIVES

மட்டக்களப்பின் தனித்துவத்தையும் அங்கு வாழ்ந்த பெரியார்களையும் மட்டுமன்றி ஏனைய கல்விமான்களையும் சிறப்புக்களையும் கூட கலைச்செல்வி வெளிப்படுத்தியுள்ளது. 1982ல் வெளியான "எங்கள் மாகாணம் கிழக்கு மாகாணம்" , 67ல் வெளியான "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள்", "கோணேஸ்வரர்" , 1986 இல் வெளியான "இலங்கையில் கலாநிதி ஆனந்தக் குமாரசாமி" போன்ற பல ஆக்கங்கள் இவற்றிறகுச் சான்று பகர்கின்றன.

மட்டக்களப்பின் சிறப்புக்களையும், வரலாறுகளையும், தனித்துவங்களையும் ஆராய்ந்து வெளிக்காட்ட வேண்டியது மட்டக்களப்பு மக்களுடைய கடமையாகும். அவ்வகையில் இக்கலாசாலையானது தனது ஆண்டு மலரான கலைச்செல்வி மூலம் தனது கடமையைத் திறம்பட மேற்கொண்டுள்ளது எனக் கூறுவதில் பெருமை யடைகின்றேன.

250061



ARCHIVES

***கலைச்செல்வி பற்றிய ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கியவர்களது எண்ணப் பிரதிபலிப்புக்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் றீற்றா?***

"திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர்தம் கை"

என்பதற்கிணங்க, யாதொரு கருமத்தை எடுத்துக் கொண்டாலும், அது சிறந்த முறையில் பூரணத்துவம் பெறவேண்டுமெனில் இறையாசியையும், சான்றோர்களின் வாழ்த்துக்களையும் பெற்றுத் தொடங்க வேண்டும் என்பது எமது நம்பிக்கை.

இவ்வகையில் ஓர் ஏடானது, நன்முறையில் வெளிவரவேண்டுமெனில், சீரிய பெரியார்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பன இடம்பெறுவது அவசியமெனக் கூறலாம். இதன் அடிப்படையில் கலாசாலையில் ஆண்டு தோறும் கலைச் செல்விக்கு சமயப்பெரியார்கள், தமிழகப் பெரியார்கள், உயர்கல்வி அமைச்சர்கள், கல்விப்பணிப்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிபர்கள் ஆகியோரால் நல்கப்படும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பன செல்வியின் சிறப்புக்கும் உயர்வுக்கும் உரமூட்டுகின்றது எனலாம்.

எடுத்துக் காட்டாக, இராமகிருஷ்ண மிசன் சுவாமிஜீ அவர்கள் இம்மலரானது, கலைமகளுக்கு நல்லதொரு காணிக்கையாகுமெனவும், நல்லாசானுக்கு குருதட்சணையாகச் சமர்ப்பணம் செய்யும் தொண்டாற்றுகிறது எனவும், இங்கு உருவாகிய கல்வியாளர்களின் அறிவுத் தேட்டங்களின் பெட்டகமாக விளங்குகிறதெனவும் கூறுகிறார். இவ்வாறே அதி வணக்கத்துக்குரிய பிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் ஆசிச் செய்தியில் "கலைச்செல்வியானது கலை இலக்கியம், அறிவியல் சார்ந்த கனத்த விடயங்களை தன்னுள் கொண்டதென்றும், ஆசிரியர்களது ஆற்றலையும், ஆக்கத்திறனையும், வளர்க்கிறது எனவும் இயம்புகின்றார்.

அடுத்து முன்னாள் தமிழக முதல்வர் கௌரவ சி. எம். அண்ணாத்துரை அவர்கள், கலைச்செல்வியானது ஆசிரியரின் அறிவுத்திறனை எடுத்துக்காட்டும் கருவியாக அமைகின்றதெனக் கூறுகின்றார். அதனைத்தொடர்ந்து முன்னாள் தமிழக கல்வியமைச்சர் கௌரவ. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "கற்பனைச் செறிவிலும் கருத்தாழத்திலும் ஈடு இணையற்ற தமிழ் மொழியானது திறமையாகவும் தெளிவோடும் பயன்படுத்தப்பட்டு புதிய பல கலைப்படைப்புக்கள் உருவாக்கப்படுகின்றது" எனவும் கூறுகின்றார்.

மேலும் வடகிழக்கு மாகாண/மாவட்ட கல்விப்பணிப்பாளர்கள் தரமான கட்டுரைகளையும், பயனுள்ள கருத்துக்களையும் தாங்கி கலாசாலையின் பிரதிபலிப்பாக கலைச்செல்வி விளங்குவதோடு, சிறந்த ஆசான்களையும் உருவாக்கி வருகிறதெனக் கூறுகின்றனர். அத்துடன் தமிழ்த்துறை நம்மிடம் கையளித்த முதுசத்தைப் பேணிப்பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்கு ஒப்படைக்கும் தலையாய கடமையை ஆற்றி வருகின்றதெனவும் கலாசாலையின் வளர்ச்சிச் சின்னமாக கலைச்செல்வி விளங்குகிறாள்" எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள், இலக்கிய ஆர்வலர்கள், கலாசாலை முதல்வர்கள் போன்றோர் தமது ஆசியுரைகள், வாழ்த்துரைகளில் கூறியுள்ளனர்.

***சுபாஜினி, இந்த இதழ்களில் வெளியான சிறுகதைகள் காலஓட்டத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றன? இதன் படிப்பினைகள் யாவை?***

சமூகத்தில் அடிக்கடி நிகழும் நிகழ்வுகளின் பிரதிபலிப்புக்களே மனிதனின் எண்ணத்தில் தோன்றி நடத்தையில் வெளிக்காட்டப்படுகின்றன. தற்போது நமது நாட்டில் எழுதப்படுகின்ற சிறுகதைகளில் அநேகமானவை இனப்பிரச்சினையை கருவாகக் கொண்டனவாகவே அமைகின்றன. இது மக்களின் மனதில் சிந்தனையில் இனப்பிரச்சினையின் தாக்கங்கள் வேரூன்றி விருட்சமாகி விட்டதையே காட்டுகின்றது. அதே போன்று கலைச்செல்வியில் வெளியாகியுள்ள சிறுகதைகளும் காலங்களின் கோலங்களையே காட்டி நிற்கின்றன.

ஆரம்ப காலச் கலைச்செல்விகளில் சிறுகதைகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. 77,78க்களில் வெளியான "திருந்திய உள்ளம்" , பிரிந்தவர் கூடினால்" , "குடிமகனே" போன்ற கதைகளுடன் 85இல் வெளியான "கறையான்கள்" போன்ற சிறுகதைகளும் மது, போதை, கொலை, களவு போன்றவற்றால் ஏற்படும் விளைவுகளையே விளக்குகின்றன. இவை அன்றைய சமுதாயத்தின் சீர்கேடாக அமைந்திருக்கலாம். 84இல் வெளியான "ஒரு சுமைதாங்கி அழுகின்றது" எனும் சிறுகதை புயலின் விளைவைக் காட்டுவதுடன், 85இல் வெளியான "சுமைகள்" எனும் சிறுகதை இனப்பிரச்சினையின் கொடுமை ஆரம்பமானதையும் காட்டுகின்றது. அதன்பின் 1992,93,94,97ஆம் ஆண்டுகளில் வெளியான "நிர்க்கதி, தண்ணீரில் மீனழுதால், நிஜங்களின் நிகழ்வு, ஒற்றைக் கனகாம்பரம், முடிவில்லா அவலங்கள், வாசற்படி" என்பன போன்ற சிறுகதைகள் இனப்பிரச்சினையானது ஒவ்வொரு வாசற்படியையும் ஏதோ ஒரு வகையில் தொட்டுவிட்டே சென்றுள்ளது என்பதை விளக்குகின்றது.

கலைச்செல்வி இதழ்களில் வெளியான சிறுகதைளில் அநேகமானவை ஆசிரியர்-மாணவர் உறவை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. குறிப்பாக த. வசந்தராஜா என்பவரால் எழுதப்பட்ட "சின்ன உணர்ச்சி" எனும் கதையின் கதாபாத்திரமான "ராஜா" வாசிப்போர் மனதைக் கொள்ளை கொள்கிறான். ராஜா ஆசிரியர் மீது கொண்ட அன்பு ஆசிரியர் மாணவரின் சிறந்த உறவைக் காட்டுவதுடன் எப்போதும் தன்னைத் தன்பிடியிலேயே வைத்திருக்க வேண்டுமெனவும் அவ்வாறில்லாமல் தன் கட்டுப்பாட்டிலிருந்து விலகும்போது அது மாணவரைப் பாதிக்கும் என்பதையும் ஆசிரியர்களுக்கு எச்சரிப்பதாக அமைகின்றது.

இதே கருத்தையே 97இல் வெளியான மண்டூர் அசோகாவின் "மாணவனாக அல்ல........." எனும் சிறுகதை விளக்குகின்றது. இவற்றுடன் "கறையான்கள்" , "ஒரு பிஞ்சின் உதிர்வு" , "ஊமையாகும் உண்மைகள்" எனும் சிறுகதைகள் ஆசிரியர் மாணவரிடையே உள்ள நெருங்கிய உறவால் மாணவர் ஆசையுடன் கற்பதைக் காட்டுகின்றது. குறிப்பாக 92இல் வெளியான "ஊமையாகும் உண்மைகள்" எனும் சிறுகதை தூய்மையான ஆசிரியர் மாணவர் உறவைப் பொறாமைக் கண்ணுடன் நோக்கி பல பொய்க்கதைகளை உருவாக்கும் ஆசிரியரால் பாடசாலைக்கும் மாணவருக்கும் ஏற்பட்ட இழப்பைத் தெளிவாக விளக்குகின்றது. உண்மைக்கும், நேர்மைக்கும், மாணவரின் நன்மைக்கும் உழைக்கின்ற ஆசிரியர் இருக்கின்ற சமூகத்தில் சுயநலத்திற்கு உழைக்கும் புல்லுருவி ஆசிரியர்களும் இருக்கத்தானே செய்கின்றார்கள்! இதனைத் தெளிவாக விளக்கியுள்ளது இச்சிறுகதை. மேலும், "அவள் ஏன் தனியானாள்" எனும் திருமதி நளினி சசிதரனின் சிறுகதை (1981) அரச நிறுவனங்களின் சீர்கேட்டைக் காட்டுவதுடன் பணத்திற்கும் அந்தஸ்திற்கும் முதலிடம் கொடுக்கும் நிலை என்று மாறும்? எனும் ஏக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது. 93இல் வெளியான "பாசமும் பந்தமும்" எனும் வரலாற்றுச் சிறுகதை, தனது பெண்ணாசையால் மதியை இழந்து நாட்டையும் இழந்த எம் இன மன்னனை எம்மினத்தவருக்கு தெளிவாக எடுத்துக் காட்டுவது சிறப்பாக உள்ளது.



### *கலைச்செல்விப் பெண்வளர்த்தகவிஞர்கள் யாரென இயம்புவீர்களா பத்மாவதி?*

கலைச்செல்விப் பெண்வளர்த்த
கவிஞர்கள் யாவரென
வலைவீசி நாங்கள்
வடித்தெடுக்கத் தேவையில்லை.

செல்வியின் பொன்னிதழ்கள்
தேர்ந்தெடுத்துக் காட்டும் அதை
அல்லல்களே இல்லை
அகம் குளிரப் பார்த்திடலாம்.

கலைச்செல்வி ஏட்டினிலே
காதலுளப் பாமிளிர
நிலைத்த பணி புரிந்த
நெஞ்சாளன் - தலைத்தமிழன்
பூபாலப் பிள்ளைப்
புனிதமிகு பண்டிதனாம்
காவலனென்றே புகலல்
காண்.

செல்வி யிதழ் கமழும்
செந்தேன் கவித்துளிகள்
மல்கப்பணி புரிந்த
மாண்புடையாள் - சொல்லெழிலார்
கங்கேஸ்வரி யென்னும்
கவினார்ந்த பண்டிதையாம்
மங்களத்தாள் என்றே
மதி.

தமிழ்த்தாய் தந்தையர்
தந்தசெந் தமிழும்
அவர்கள் காட்டிய
அயரா ஊக்கமும்
கட்டிளங் காளையர்
கன்னியர் என்ற
பயிலுநர் பாக்களைப்
படைக்கத் தூண்டின.

பற்பல பொருளிலும்
பாடல்கள் எழுந்தன
அற்புதம் கண்டு
அனைவரும் போற்றினர்

விந்தைகள் பலதரு
விஞ்ஞா னத்தையும்
அந்தமில் துறைதரு
ஆன்மீ கத்தையும்
செந்தமிழ் வனிதையின்
செழுமைத் திறத்தையும்
சந்தக் கவிகளில்
தந்தனர் பயிலுநர்

உள்ளம் தெளியும்
உளவியற் கருத்தும்
கள்ளமே யறியாக்
கவினார் மழலையர்
துள்ளும் பருவத்
துடிப்பின் இயல்பும்
அள்ளித் தந்தனர்
அற்புதப் பாக்களில்

ஆழ்ந்த கருத்து
அழகார் கற்பனை
சூழ்ந்த இயற்கையின்
சொல்லொணாப் புதுமை
தாழ்தவர் இலையெனும்
தத்துவச் சமதை
வாழ்ந்தவர் வாழ்வோர்
வகைவரும் காலம்.

காதலின் புனிதம்
கல்வியின் மனிதம்
மாதரின் சிறப்பு
வளர்கலைப் பரப்பு

மோதலின் தவிர்ப்பு
முத்தமிழ்ப் பரப்பு
ஆதியாம் கருத்துகள்
அருங்கவிப் படைப்புக்கள்

ஐம்பது களிலே
அமைந்ததோர் சூழ்நிலை
மரபுக் கவிக்கு
வளமிகச் சேர்த்தது
இளமைத் துடிப்பும்
எழிற் கவித் துவமும்
கலையின் புனிதம்
கனிந்த நெஞ்சமுமாய்
சிலபேர் பயிலுநர்
சேர்ந்தனர் ஒருங்கே
அவர்களில் ஒருவன்
அருங்கலைத்திறவோன்
முத்தமிழ் மன்ற
முதல்வனா யாயினன்
ஈற்றடி கொடுத்து
இயற்றும் வெண்பாப்
போட்டியும் பரிசிலும்
புதுமையாய்க் கொணர்ந்தனன்
மரபுக் கவிவளம்
வானுயர்ந் திட்டது
தரமாகும் மரபுக்
கவி தழைத்திட்டது
செல்வியின் இதழ்களை
செம்மையாய் நோக்குறின்
காணலாம் இந்தக்
கவிச்சிறப் பினையே

அந்தக் காலம்
அருங்கவி படைத்த
சிலபே ருள்ளே

சிகரமாய்த் திகழ்பவர்
திசையெலாம் புகழும்
திமிலைத் துமிலனே

திமிலைத் துமிலன்
செந்தமிழ்ப் பாவலன்
ஆழத் தெழுங்கவி
ஆணிமுத் தெனலாம்

அமுதம் நிகர்த்த
அருங்கவி அனைத்தும்
அருந்தத் தெவிட்டா
அற்புதத் தேன்துளி

கலைச்செல்வி தந்த
கலைஞர் பலர் ஆனாலும்
நிலைத்த பெயருடனே
நின்றிருப்போர் ஓர் சிலரே.

வந்தாறு மூலை
வழங்கிவைத்த நற்கவிஞன்
சொற்சுவையில் அற்புதம் செய்
சோமலிங்கப் பாவலனாம்.

இன்பத் தமிழ்க் கவிதை
இயற்றும் திறன் படைத்த
அண்ணாவின் தாசன்
அருமந்த நற்கவிஞன்

குன்றின் குமரன்
குடிகொண்ட தில்லை மண்டூர்
அசோகாவும் நற்கவிதை
ஆக்கும் படைப்பாளி.

இன்று கலைச்செல்வி ஏந்திவரும் பாக்களது
பண்பு பற்றிச் சற்றுப் பார்த்தல் பயனுடைத்து

மரபுக் கவியியற்றி வந்தோரைப் பின்பற்றல்
குறைவென்றே இன்று கூறுதற்கு வேண்டும் நாம்
காரணம் என்ன? கவி ஆர்வம் உள்ளோர்க்கு
நேராய் மரபினிலே நிற்கத் தெரியாது
காரிகை கற்று கவிபடைத்த லைவிடமனம்
பேரிகை தட்டிப் பிழைப்பது மேல் என்பதனால்
வரிவரியாய் ஏதோ வந்தபடி தீட்டிவிட்டு
புதுக்கவிதை என்று புகழாங் கிதமடைவார்

ஆசிரிய மாணவரும் அந்த வழி போவதனால்
கலைச்செல்வி இதழ்களிலும் காண்கின்றோம் அவ்வடிவை
புதிய பொருள்களிலே புதுக் கவிதைப்பூக்கள் பல
கண்சிமிட்டல் கூடக் காண்கின்றோம் நல்லதுதான்.

பகிடிவதை பற்றி, படும் இன்றைப் பாடு பற்றி
கண்டதும் காதல் கனிந்து விட்டதைப் பற்றி
கலையுணர்வோடு கண்டோம் கவிதை சில
புதுக் கவிதை என்று புல்லரிக்கும் பாங்கினரை
நாம் ஏன் தடுக்க, நல்லதுதான் ஆனாலும்
மரபு வழி நின்று வடித்த வடிவழகை
நிகர்த்த புதுவடிவம் நெஞ்சையள்ள வேண்டாமோ?

*சுபாஜினி! காலஓட்டத்திற்கேற்ப கலாசாலையின் நடைமுறைகள், செயற்பாடுகள் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா? ஏற்பட்டுள்ளதெனின் அவை எவ்வாறானவை என்பதைக் கலைச்செல்வியினூடாகக் காட்ட முடியுமா?*

நடைமுறைகள், செயற்பாடுகள் எனும்போது இவை காலத்திற்கேற்ப மாற்றமடைந்து செல்லும் அம்சங்களாகவே உள்ளன. மனிதனின் அறிவு, நவீன கண்டுபிடிப்பு, நாகரிகம் போன்றவற்றின் வளர்ச்சிக்கேற்ப அவனது நடைமுறைகளும் செயற்பாடுகளும் மாற்றமடைந்து செல்லும்போது ஆசிரியர் கலாசாலையிலும் இம் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவே வேண்டும். எனினும் இம்மாற்றங்கள் கலாசாலைக்குப் பொருத்தமானதாக ஏற்பட்டனவா என்பதை இங்கு அவதானிப்போம்.

கலாசாலையின் நடைமுறைகளை நோக்குவோமெனின ஆரம்ப காலத்திலிருந்தே மட்/அரசினர் ஆசிரிய கலாசாலை தமிழர்களின் பண்பாட்டைப் பேணிவந்துள்ளது. இதனைக் கலாசாலையின் உடையிலிருந்தும் விழாக்களிலிருந்தும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும் 1975 இற்குப் பிற்பட்ட காலங்களில் இவ் உடை மாற்றப்பட்டு ஆண்கள் நீளக்காற்சட்டையும் சேட்டும் அணியும் முறை ஏற்பட்டுள்ளதுடன், தூய்மையான வெண்ணிற ஆடையில் வலம் வந்த பெண்கள் பல வர்ணச் சேலை அணியும் முறையும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கலைச்செல்வியில் வெளியான புகைப்படங்கள் காட்டுகின்றன. ஆண்களின் இவ்வுடை மாற்றம், வெளிநாட்டுக் கலாசாரம் எமது கலாசாரத்திற்குள் புகுத்தப்படுவதைக் காட்டுகின்றது. (நாகரிகம் எனும் போதையில் உழலும் மனிதன் தனது பண்பாட்டையும் தனது நாட்டு காலநிலையினையும் மறந்து வெளிநாட்டவரின் உடையைப் பின்பற்றும்போது ஆசிரியர் கலாசாலை மட்டும் இதற்கு என்ன விதிவிலக்கா? என்று இவர்களும் தமது உடையை மாற்றிவிட்டனர் போலும்.) எனினும் தமிழரின் பண்பாட்டைப் போற்றிப் பேணும் நோக்கம் இருந்திருப்பின் இம்மாற்றம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். பெண்களின் சேலை மாற்றமும் பலவர்ணமாக அமையாமல் ஒரே வர்ணச் சேலையாக மாற்றம் பெற்றிருப்பின் அது ஒரு சீருடைத் தன்மையைப் பேணியிருக்கும். கலாசாலையின் உடையில் இன்றும் சீரான தன்மை இல்லாதிருப்பதற்கு அன்றைய இம்மாற்றமே அத்திவாரமாக அமைந்துவிட்டது எனலாம்.

அடுத்து கலாசாலையின் செயற்பாடுகளை அவதானித்தால் இவை கலாசாலையின் மன்றங்களின் அறிக்கைகள் மூலம் வெளிப்படுகின்றன. முத்தமிழ் மன்றமானது தமிழ்நாட்டு, ஈழத்து அறிஞர்கள், கலைஞர்கள் பலரை அழைத்து பல சொற்பொழிவுகளையும் இசை நடன நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது. இவற்றுடன் தமிழ் விழா, பாரதியார் விழா, வள்ளுவர் விழா, விபுலானந்தர் விழா, போன்ற விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடி தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் பரவும் வகை செய்துள்ளதை 1966, 75, 81 ஆம் ஆண்டு கலைச் செல்விகளின் முத்தமிழ் மன்ற அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. இக்காலப் பகுதியில் தமிழ்ப்பற்று எம் சமூகத்தவர் மத்தியில் மாலைநேரத் தென்றலாக வீசிக் கொண்டிருந்தது என்பதற்கான சான்றாக இவை அமைகின்றன. எனினும் தொடர்ந்துவந்த காலப்பகுதியில் அதாவது 1985 ஆம் ஆண்டிற்குப் பின் இவ்வுணர்வு சூறாவளிபோல் வீசத் தொடங்கிவிட்டது. இச் சூறாவளித்தன்மை கலாசாலை முறைகளுக்கு ஏற்றதல்ல என்ற காரணத்தினால் என்னவோ கலாசாலையில் இவ்வுணர்வு வீசுவது குறைந்துவிட்டது. இருப்பினும் 1992 இல் விபுலானந்தர் விழா கொண்டாடப்பட்டு விபுலானந்தர் அவர்களின் உருவச் சிலையும் திறந்து வைக்கப்பட்டது சிறப்பான அம்சமாகும். 1984 முதல் கவிமணி திமிலைத் துமிலனின் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டு வந்த கவிமணி வெளியீட்டு மன்றமும் தனது பணியினை 1994 ஆம் ஆண்டுடன் நிறுத்திவிட்டது. அதன் பின் இவ்வெளியீட்டு மன்றம் இயங்காமல் போனதற்குரிய காரணங்கள் எவையெனப் புலப்படவில்லை.

ஆரம்ப காலத்தில் கலாசாலை மாணவர்களுக்கென கலாசாலை வளாகத்தினுள் ஆலயம் ஒன்று இல்லாதது பெரும் குறைபாடாக இருந்தது. இக்குறையை நீக்கும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சிறிய கோயில் ஒன்றைக் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 88 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி ஆலயம் குடமுழுக்கு கண்டது. இதனையும் கலைச்செல்வி மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

1970, 72, 78 களில் வெளியான விவசாய மன்ற அறிக்கைகளிலிருந்து நெற்பயிர்ச்செய்கை, காய்கறித் தோட்டம், கோழி வளர்த்தல் போன்ற வருவாய் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதை அறிய முடிகின்றது. 1978 இற்குப் பிற்பட்ட காலங்களில் இம் முயற்சிகள் கைவிடப்பட்டு மீண்டும் 94 இற்குப் பின் இவை சிறுசிறு அளவாக நடைபெறத் தொடங்கியுள்ளதையும் இவ்வறிக்கைகள் காட்டுகின்றன.

1985 காலப்பகுதி கணனி முக்கியத்துவம் பெறத் தொடங்கிய காலப்பகுதியாகும். எனவே அன்றைய கணனித் தேவையை அறிந்து கணனிக் கல்வியைக் கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை 85 இல் வெளியான கணனிக் கழக அறிக்கை உணர்த்து கின்றது. எனினும் இவை தொடர்ந்து நடைபெறாமல் போனது வேதனைக்குரிய விடயமாகும். 1994இல் கணித விஞ்ஞான மன்றம் ஆரம்பிக்கப்பட்டு பல கணித விஞ்ஞான அறிவு சார் நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவது வரவேற்கத்தக்க விடயமாகும். சமய விழாக்கள் (வாணிவிழா, ஒளிவிழா, சிவராத்திரி விழா, குருபூசை), சுற்றுலாக்கள் போன்றவை ஆரம்பக் காலத்திலிருந்து தொடர்ந்து மாற்றங்களின்றி நடைபெறுவதையும் இக்கலைச் செல்விகள் தவறாமல் காட்டுகின்றன. மேலும் கலாசாலையின் ஆரம்ப காலத்திலிருந்து 1979ஆம் ஆண்டு வரை இங்கு பொதுப்பயிற்சியே இடம்பெற்றது. அதாவது ஆரம்ப கல்வி தொடக்கம் க.பொ.த சாதாரண வகுப்புவரை கற்பிக்கக் கூடிய பயிற்சியே இடம்பெற்றது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக் கல்வி, தமிழ், ஆரம்பக் கல்வி போன்ற விசேட துறைப் பயிற்சிகள் 1997ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. இவ்விசேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட முன்னர் வெளியான ஆக்கங்களில் அநேகமானவை சமய, தமிழ் இலக்கியங்களுடன் தொடர்பு பட்டதாகவே அமைந்திருந்தன. விசேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்ட பின் ஒவ்வொரு நெறியுடனும் தொடர்புடைய விசேட ஆக்கங்கள் இடம்பெறத் தொடங்கின. எனினும் ஆங்கிலம் இருவருடப் பயிற்சியுடனும், தமிழ், சமூகக்கல்வி போன்றவை 1985ஆம் ஆண்டுடனும் நிறுத்தப்பட்டுவிட்டன. கணிதம் விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி போன்ற நெறிகளே தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே தற்போதைய காலங்களில் கணித விஞ்ஞானத்துறை சார்ந்த ஆக்கங்கள் உதாரணமாக "இருதய மாற்றீடு", "20ம் நூற்றாண்டின் இரும்பு மூளை", "ஓசோன் படை அழிவதால் பூமிக்கு ஏற்படும் ஆபத்து", "எயிட்ஸ்" போன்றன அதிகமாக இடம்பெறத் தொடங்கியுள்ளன. எனவே கல்வித் துறையில் ஏற்படும் மாற்றங்களையும் இக்கலைச்செல்வி வெளிப்படுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை.

***கலைச் செல்வி இதழ்களின் அட்டைப் படங்களின் வளர்ச்சி பற்றிய உங்கள் கருத்தென்ன நீற்றா?***

கிராமத்திற்கு அழகு பசுமை. நகருக்கு அழகு வானுயர்ந்த கட்டிடம். கோயிலுக்கு அழகு கோபுரம். நூலுக்கு அழகு அட்டைப்படம். ஒரு நூலுக்கு அட்டைப்படம் அமைவது அவசியமாகும். அவ்வட்டைப் படமானது அந்நூலின், பொருளடக்கத்திற்கேற்பவோ, அப்பிரதேசத்தின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையிலோ, அல்லது ஆக்கத்தின் கருப்பொருளாகவோ, நூல் வெளியிடும் நிறுவனம் சார்ந்ததாகவோஅமையும் வகையில் கருத்தாழமும் அழகும் நிரம்பிய சித்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதே வழக்கமாகும்.

இதற்கமைய ஆரம்பகாலக் கலைச்செல்வி இதழ்களை நோக்கும் போது காலத்திற்கேற்ப, வசதிகளுக்கமைய 66-83 வரையிலான ஆண்டுகளில் கலாசாலையின் சின்னம் மட்டும் இடம்பெற்ற நிலையில் ஓர் எளிமையான தோற்றத்தையே இவ்வட்டைப்படங்களில் காணக்கூடியதாயுள்ளது. இதில் ஓரளவு முன்னேற்றம் காணும் வகையில், 84-85 களில் அட்டைப்படங்களானவை கலாசாலையின் கற்கைநெறிகளைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

துரதிஸ்டவசமாக 1987-1991 ஆம் ஆண்டுகளிற் கிடைப்பட்ட இதழ்கள் எமது கைவசம் கிடைக்கவில்லையாதலால் அவற்றின் அட்டைப்படங்கள் பற்றி எதுவும் கூறமுடியவில்லை. அதனைத் தொடர்ந்து 1992ல் வெளியான கலைச் செல்வியானது, முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் சிறப்பு மலராக இருப்பதனால் முன்னேற்றகரமான முறையில் அவரது நிழற்படத்துடன் மீன்பாடும் தேனாடாம் மட்டுநகரின் தனிச்சிறப்பைக் காட்டும் சித்திரமும் கண்ணைக்கவரும் வண்ணம் அட்டையில் இடம்பெற்றுள்ளது. மேலும் 1993இல் வெளியான ஆண்டு மலர் கவிமணி திமிலைத்துமிலன் அவர்களின் மணி விழாச் சிறப்பு மலராக இருப்பதனால் அவரின் நிழற்படமும், கலாசாலையின் செயற்பாடுகளைக் காட்டும் வண்ணச்சித்திரங்களும் முத்தமிழ் மன்ற சின்னத்தை வெளிப்படுத்தும் ஓவியமும் புதிய நவீனத்துவம் பெற்று அட்டையை அலங்கரிக்கின்றன.

சேவைக்குப் பெயர் போனவராம் இக்கலாசாலையின் ஸ்தாபகருமான அமரர். நல்லையா அவர்களின் சிறப்பு மலராக 1994ம் ஆண்டு

கலைச்செல்வி மலர்ந்துள்ளது. இந்த வகையில் அதன் அட்டைப்படத்தில் தாபகரின் நிழற்படமும் அன்னாரால் எமக்குக் கிடைக்கப் பெற்ற பெரும் பொக்கிஷமான எமது கலாசாலையின் உருவப்படமும் அழகுற இடம்பெற்றுள்ளன. 1995இல் கலைச்செல்வி எனும் முத்தை ஆண்டுக்கொருமுறை வெளிக்கொணரும் முத்தமிழ் மன்றத்தின் சின்னத்தைப் பிரதிபலிக்கும் வகையில், வண்ண ஓவியங்களும் செயற்பாட்டு முறையான உடற்பயிற்சியைக் காட்டும் உருவப்படங்களும் அமைந்துள்ளதைக் காணலாம். கலாசாலை தனது பணியில் அரை நூற்றாண்டு காலத்தினை நிறைவு செய்து, பொன் விழாக் கொண்டாடும் வேளையில் அதனை மெருகூட்டும் வகையில் 1996ம் ஆண்டு கலைச்செல்வியானது பொன்விழாச் சிறப்பு மலராக மலர்ந்து மணம் பரப்புகின்றது. இதனையொட்டி கலாசாலையின் உருவப்படத்துடன், இக்கலாசாலையின் காரண கர்த்தாவும் ஸ்தாபகருமான அமரர். நல்லையா அவர்களின் நிழற்படமும், இம்மலரை பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மலரவைக்கும் முத்தமிழ் மன்ற சின்னத்தை உருவகிக்கும் சித்திரங்களும் பல வண்ணங்களோடு கலைச்செல்விக்கு புதுமெருகூட்டுகின்றன. இவ்வாறே 1997 இல் மட்டுநகரின் கலை, பாரம்பரிய பண்பாடுகளை வெளிக்காட்டும் நவீன சித்திரம் கணனி பதிப்பு முறையில் அட்டைப்படமாகிப் பொலிவூட்டுகின்றது.

1992-1997 ஆண்டுகள் வரையிலான கலைச்செல்வி இதழ்களை நோக்கும் போது, அவற்றின் அட்டைப்படங்கள் இன்றைய நவீன தொழிநுட்ப வளர்ச்சிக்கேற்ப (லெமினேற்றிங், கணனிப்பதிப்பு ஆகிய) புதிய உத்திகளைக் கையாண்டு அழகூட்டப்பட்டு இடம் பெறுவதைக் காணக்கூடியதாயுள்ளது. ஆரம்ப காலங்களில் கலைச்செல்வியானவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களையும் அணிகலன்களாக அணிந்து, ஒரு சித்திரப் பாவை போன்று எளிமையான நடை பயின்று வந்ததையும், நவீன யுகமான இக்காலத்தில் ஞானம், அறம், வீரம், சுதந்திரம் எனும் நாற்குணங்களால் ஆன அணிகலன்களை அணிந்த நாகரீகப் பெண்ணாக வீறு நடைபோட்டு வருகின்றாள் என்பதையும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

***கலைச்செல்வியானது கதை, கட்டுரை, கவிதை தவிர்ந்த வேறு எவ்விடயங்களால் அலங்கரிக்கப்படுகின்றது என்பதை உங்களால் கூறமுடியுமா ராதிகா?***

கலைச்செல்வி எனும் கதம்பத்துள் கதை, கட்டுரை, கவிதை தவிர்ந்த ஏனைய விடயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அதாவது அறிஞர்கள் உதிர்த்த "பிறர்மீது குற்றம் காண்பதை விடுத்து உன் கடமையில் கண்ணாயிரு", "துன்பத்தைக் கண்டும் தோல்வியைக் கண்டும் மனம் தளராதே, அவையே உன் வெற்றிக்கு அறிகுறி" (புத்தர், விவேகானந்தர்) எனும் விழுமியம் பேணும் பொன் மொழிகளும், "கல்விக் கரையில, கற்பவர் நாள் சில", "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" எனும் மரபுவழிப் பழமொழிகளும், "அலைஅலையாய் ஆடிவரும் கடலும் அல்ல, நிலையாய் இருக்காத நிலவும் அல்ல", வட்டமுகம் உண்டு, வாய்திறந்து பேசாது - காட்டக்கை உண்டு காலூன்றி நடக்காது" என்பன போன்ற சிந்திக்க வைக்கும் விடுகதைகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் "ரசிக்க வேண்டியவை சங்கீதம், அழகு, புத்திக்கூர்மை, அடக்க வேண்டியவை - நாக்கு, கோபம், பொறாமை" போன்ற சிந்தைக்கு விருந்தாகும் சிந்தனைத் துணுக்குகளும், 92ல் இடம்பெற்ற "சார்க்-சார்வ்" எனும் தலைப்பில் வந்த அறிவுப் பசியை ஆற்றும் பொது அறிவு விடயங்களும், 97இல் இடம்பெற்ற கலாசாலை வளர்த்தெடுத்த இலக்கியச் சிற்பிகளை கௌரவப்படுத்திய நிகழ்வுகள் பற்றிய குறிப்புக்களும், கலைப் பெண்ணை வாழ்வாங்கு வாழ வாழ்த்தும் வாழ்த்துரைகள், ஆசியுரைகள், நன்றி மறவாமையைப் பேணும் நன்றியுரைகள் போன்றவைகளும், ஆசிரிய செல்வங்களின் ஆற்றல்மிக்க செயற்றிறன்களைக் காட்டும் விளையாட்டு மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், கணித விஞ்ஞான மன்றம், விவசாய மன்றம், முத்தமிழ் மன்றம், கவிமணி வெளியீட்டுக்குழு ஆகிய மன்றங்களின் மன்ற அறிக்கைகளும், கண்ணுக்கு விருந்தளிக்கும் நிழற்படங்கள், பிரபல்யத்தை விரும்பும் விளம்பரங்கள், கலாசாலையின் உயிரோட்டமாக விளங்கும் ஆசிரிய மாணவர்களின் முத்திரையான பெயர்ப்பட்டியல்கள் என்பனவும், உண்மை, அழகு, நன்மை ஆகிய நறுமணம் தரும் மலர்களாக தொடுக்கப்பட்டுள்ளன. ஆம், சிற்பி ஒருவனின் கையில் கல்லானது, அழகிய சிற்பமாகின்றது, குயவனின் கையால் மண்ணானது அழகிய மட்பாண்டமாகின்றது. மொழியானது கவிஞனின் உள்ளத்தில் கவிதையாகின்றது. இவ்வாறே முத்தமிழ் மன்றத்தால் உருவாக்கப்படும் கலைச்செல்வியானது பல வித மலர்களால் அலங்கரிக்கப்படுகின்றது.

*பத்மாவதி! கலைச் செல்வி ஏந்தி வந்த*
*கவிதை மலர்களிலே*
*சிறப்பிடம் பெற்றுத்*
*திகழும் வடிவம் யாதெனக் கூறுவீர்களா?*

கவிதை என்பதென்ன?
கவிஞன் வெளிப்படுத்த
முந்தும் பொருளை
முறையாய் வெளிக்கொணர்தல்.

"என்ன சொன்னான்?" என்பதல்ல
"எப்படியாய்ச் சொல்லுகிறான்?"
என்பதி லேதான்
இருக்கும் இதன் உயிர்ப்பு

உயிர்ப்பைக் கலையாய்
ஒளிப்படுத்த வல்லோர்க்கு
மரபு தடையென்ற
வார்த்தைக்கிடமில்லை

ஓசை ஒழுங்கை
உகந்தோர் மரபுவழி
சொல்லே கதியென்போர்
தொடர்வர் புதியவழி

மரபா புதுக்கவிதையா?
வருமா பதில் இதற்கு?
மரபுதான் இங்கு
வரும் மாற்றம் வேறில்லை.

*பொதுவாக வெளியாரின் ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்று வருகின்றன. ராதிகா! இவை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

பொதுவாக, வெளியாரின் ஆக்கங்களும் இம்மலரை அலங்கரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றுள் இது கால வரையிலான கலைச்செல்விகள் சிலவற்றை நோக்குவோம். அவற்றுள் வெளியார் ஆக்கங்களினது நூற்று வீதம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்படுகிறது.

| ஆண்டு | 66 | 67 | 77 | 78 | 81 | 93 | 94 | 96 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெளியார் ஆக்கங்கள் வீதம் | 12.50 | 42.42 | 10.00 | 10.53 | 15.79 | 26.09 | 15.79 | 54.89 |

இவ்வட்டவணையிலிருந்து சில ஆண்டுகளில் உதாரணமாக 67,93,96 ஆம் ஆண்டுகளில் வெளியார் ஆக்கங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. அதே வேளையில் எல்லாக் கலைச்செல்விகளிலும் வெளியார் ஆக்கங்கள் சிலவேனும் இடம்பெற்றுள்ளன.

67,94,96 ஆம் ஆண்டு கலைச் செல்விகள் சிறப்பு மலர்களாகக் காணப்படுகின்றன. இவை முறையே கலாசாலையைத் தாபிக்க வித்திட்ட பண்டிதர் பூபாலப்பிள்ளை, கலாசாலையின் ஓய்வு பெற்ற விரிவுரையாளரும், தற்போது பகுதி நேர விரிவுரையாளருமாக கடமையாற்றுகின்ற கவிமணி. திமிலைத்துமிலன், கலாசாலையின் தாபகருமான அமரர். நல்லையா போன்றோரை சிறப்பிக்கும் மலர்களாக வெளிவந்தவை. இதனால் இவர்களைப் பற்றி அறிந்தவர்கள், இவர்களுடன் சேர்ந்து பழகியவர்கள் போன்றோரிடமிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள் சார்ந்த ஆக்கங்களே உண்மையான விபரங்களைத் தருமென்பதனாலேயே அவர்களது ஆக்கங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன எனலாம்.

இருந்தாலும் கலைச்செல்வி ஆசிரிய மாணவர்களின் பயிற்சிக் களமாக இருப்பதால், அவர்களால் ஆக்கப்படுகின்ற கலைப்படைப்புக்களே இதில் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும். எனினும் நல்லதொரு செய்தியைப் பெறுவதற்கும், துறைபோன அறிஞர்களிடம் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் தெளிவாக அறிவதற்கும், பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறிய எழுத்தாற்றல் உள்ளவர்களை ஊக்குவிக்கவும், எழுத்தாளர்களைக் கௌரவிக்கவும், பயிற்சியாசிரியர்கள் தமது எழுத்துப்புலமையை வளர்க்க ஒரு முன்மாதிரியாகவும் அமையும் வகையில் வெளியார் ஆக்கங்கள் சிலவற்றைத் தாங்கி வருவது வரவேற்கத்தக்கதே.

**கலைச் செல்வியின் ஆக்கங்கள் தொடர்பாக ஆசிரிய மாணவர்களின் பங்களிப்பை அறியக் கூடியதாக விளக்க அட்டவணையை உங்களால் தர முடியுமா நீற்றா?**

| ஆண்டு | பக்கங்களின் எண்ணிக்கை | கட்டுரை % | | | கவிதை % | | | சிறுகதை % | | | மொத்த வீதம் % | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆசிரிய மாணவர் | விரிவுரையாளர் | வெளியார் | ஆசிரிய மாணவர் | விரிவுரையாளர் | வெளியார் | ஆசிரிய மாணவர் | விரிவுரையாளர் | வெளியார் | கட்டுரை | கவிதை | சிறுகதை |
| 66 | 85 | 83.33 | - | 16.67 | 83.33 | 16.67 | - | 100.00 | - | - | 75.00 | 18.75 | 6.25 |
| 67 | 100 | 52.17 | 8.70 | 39.13 | 40.00 | 10.00 | 50.00 | - | - | - | 69.70 | 30.30 | - |
| 68 | 85 | 71.43 | 4.76 | 23.81 | 85.71 | - | 14.29 | - | - | - | 75.00 | 25.00 | - |
| 70 | 126 | 77.14 | 8.57 | 14.29 | 88.89 | 11.11 | - | - | - | - | 79.54 | 20.46 | - |
| 71 | 125 | 82.14 | 3.57 | 14.29 | 100.00 | - | - | - | - | - | 90.32 | 9.68 | - |
| 72 | 96 | 86.96 | - | 13.04 | 100.00 | - | - | 100.00 | - | - | 82.14 | 14.28 | 3.58 |
| 73 | 114 | 90.92 | 4.54 | 4.54 | 100.00 | - | - | 100.00 | - | - | 73.33 | 23.33 | 3.34 |
| 75 | 24 | 100.00 | - | - | 100.00 | - | - | 100.00 | - | - | 50.00 | 25.00 | 25.00 |
| 77 | 28 | 80.00 | - | 20.00 | 100.00 | - | - | 100.00 | - | - | 50.00 | 20.00 | 30.00 |
| 78 | 58 | 83.33 | - | 16.67 | 100.00 | - | - | 100.00 | - | - | 63.16 | 26.32 | 10.52 |
| 81 | 76 | 66.67 | - | 33.33 | 80.00 | 20.00 | - | 100.00 | - | - | 47.37 | 26.32 | 26.32 |
| 82 | 53 | 73.33 | 26.67 | - | 75.00 | 25.00 | - | - | - | - | 78.95 | 21.05 | - |
| 84 | 92 | 70.00 | 30.00 | - | 100.00 | - | - | 100.00 | - | - | 50.00 | 30.00 | 20.00 |
| 85 | 70 | 80.00 | 20.00 | - | 83.33 | 16.67 | - | 100.00 | - | - | 60.00 | 24.00 | 16.00 |
| 86 | 66 | 66.67 | 33.33 | - | 75.00 | 25.00 | - | 100.00 | - | - | 52.17 | 34.78 | 13.05 |
| 92 | 184 | 80.64 | 12.90 | 6.46 | 81.82 | 9.09 | 9.09 | 83.33 | 16.67 | - | 64.58 | 22.92 | 12.50 |
| 93 | 122 | 59.38 | 9.38 | 31.24 | 80.00 | - | 10.00 | 100.00 | - | - | 69.56 | 21.74 | 8.70 |
| 94 | 100 | 64.00 | 16.00 | 20.00 | 90.00 | - | 10.00 | 100.00 | - | - | 65.79 | 26.32 | 7.89 |
| 95 | 72 | 80.00 | 20.00 | - | - | 66.67 | 33.33 | 100.00 | - | - | 78.95 | 15.79 | 5.26 |
| 96 | 132 | 27.27 | 22.73 | 50.00 | 25.00 | 12.50 | 62.50 | - | - | 100.00 | 70.97 | 25.81 | 3.22 |
| 97 | 117 | 71.43 | 14.29 | 14.29 | 87.50 | 12.50 | - | 50.00 | - | 50.00 | 67.74 | 25.81 | 6.45 |

இதுவரை இவ்வெட்டுமுகத்தை உங்களுக்குத் தந்து முடிக்கும் இவ்வேளையில் மேலும் ஒரு விடயத்தை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். இதை வாசித்து முடித்த உங்களுக்கு இது வெறும் சுவாசமாக மட்டும் அமைந்து விடாது, எடுப்பும் துடிப்புமுள்ள உயிர்ப்பாகவும் மாற வேண்டும். என்பதே அவ்விடயமாகும். அதாவது இவ்வெட்டுமுகத்தின் மூலம் அல்லது இவ்வெட்டுமுகத்தை ஆதாரமாகக் கொண்டு மேலும் நுணுகி ஆராய்வதன் மூலம் இனிமேல் வரும் கலைச்செல்விகள் காலத் தேவைக்கேற்ப புதுப்பரிமாணம் பெற வேண்டும். அத்துடன் இதுவரை கலைச்செல்வியில் இருந்த உயிர்த்துடிப்பைவிட மேலும் உயிர்ப்பைக் கொடுத்து நீண்டகாலம் ஆரோக்கியமாக இம்மலர் வாழ்வதன் மூலம் கலாசாலைக்கும், கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்களுக்கும், சமூகத்திற்கும் நற்பயனை அளிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

இந்நேர்காணலில் பங்கு கொள்ள கடினமாக உழைத்த எனது சக பயிற்சி ஆசிரியர்களான திருமதி. ராதிகா திலகசந்திர ரத்தினம், திருமதி. றீற்றா அருள்தாஸ், செல்வி. வே. சுபாஜினி, திருமதி, ஜெ. பத்மாவதி ஆகியோருக்கு நன்றி நவில்கின்றேன்.

செல்வி. க. திலகலோஜினி.
நேர்கண்டவர்.

# தாய்

ஐயிரண்டு திங்கள் எனைச் சுமந்தாய்
அளவில்லாத் துன்பமதை அனுபவித்தாய்
ஊனை உறக்கத்தை நீ மறந்தாய்
உடல் நொந்து எந்தனை நீ ஈன்றெடுத்தாய்

பாலுடனே பண்பினையும் பருகவைத்தாய்
பார்போற்ற என்னை நீ படிக்க வைத்தாய்
கால் கடுக்கப் பலதூரம் நீ நடந்தாய்
கடுகளவு தூக்கத்தையும் நீ மறந்தாய்

துன்பமே நெருங்கவிடாதென்னைக் காத்தாய்
துயர் ஏதும் வருத்தாது பார்த்திருந்தாய்
என்றுமே புகழோடு வாழ வழி செய்தாய்
ஏமாற்றுலகிதெனப் புரிய வைத்தாய்

பிரியமுடன் உறவுகளை நீ நேசித்தாய்
பிரிவில்லா நட்புகளை நீ யாசித்தாய்
பெரியவனாய் ஆக்கிவிட நீ யோசித்தாய்
பெருமையுடன் வாழ்ந்துவிட நீ பூசித்தாய்

தீபமென என்றும் என்தாய் இருந்தாய்
தெய்வமென முன்நிற்பாய் என்றும் என்தாய்
பாவங்கள் போக்கிடுவாய் என்றும் என்தாய்
பாசத்தின் உறைவிடமே நீயே என்தாய்

மன்னிக்கும் நீதிமன்றம் என்னன்புத்தாய்
மாசற்ற உள்ளம் கொண்டாய் என்னருமைத்தாய்
கண்ணிரு மணியான நீயே என்தாய்
கறையில்லாத் தங்கமான நீயே என்தாய்

தாயே உன்பெருமை அளவிலதாய்
தமிழில்லையம்மா அதை எழுதுவதாய்
தாய்க்கு நிகர் தாயே எனக்குள்ளதாய்
தரணியிலே காணுகின்றேன் என்னன்புத்தாய்

தன்னிகரின்றியே நீ உருவமைத்தாய்
தயக்கமின்றி என்னையுமே வாழவைத்தாய்
என்னகத்தில் அழியாத இடம்பிடித்தாய்
என்றுமே நான் மறவேன் என் அன்புத்தாய்.

திரு. எம். மகாலிங்கம்
தலைவர்,
முத்தமிழ் மன்றம்,
அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

# அவனுக்குள் சிரிப்பு

"சந்தோஷ் அன்று இன்டர்வியுக்குப் போனாயே வேலை கிடைக்குமா?"
"ஓ, கிடைக்குமாம் அப்பா, ஆனால் எனக்கில்லை. ஐம்பதாயிரம் கட்டினால் தான் கிடைக்குமாம். யார் முதலில் கட்டுவார்களோ அவர்களுக்குத்தான் வேலை. அங்கு படிப்பிற்கு முக்கியத்துவமில்லை."

"ஹூம்....." நம்பிக்கையற்ற பார்வையால் மகனைத் தூண்டினார் சிவராமன். "எப்போது கேட்டாலும் இதே பதிலைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறாய்" சந்தோஷிடம் மறுமொழி இல்லை. வெற்றுச் சுவரை வெறித்துப் பார்த்தான் அவன்.

தந்தையின் குரல் மீண்டும் வெடித்தது. "உன்னுடன் படித்த எத்தனையோ பேர் இன்று வேலையில் இருக்கிறார்களே அதாவது உனக்குத் தெரியுமா?"
"தெரியும் அப்பா"
"தெரிந்து என்ன பிரயோசனம்?" என்று ஒரு கேள்விதான் அவர் வாய்விட்டுக் கேட்டது. "உன்னால் அப்படி முடியவில்லை. நீ தண்டச் சோறுதானே" என்று இரண்டாவது வார்த்தை அவரது உஷ்ணப் பார்வையில் தெரிந்து கொண்டிருந்தது. சந்தோஷ் தலைகுனிந்து கொண்டான். தரையைத் தேய்த்துக் கொண்டு வெளியேறினார் சிவராமன்.

இப்படி ஒரு நிலைமை தினமும் அந்த வீட்டில் நடப்பது சகஜமாகிவிட்டது. அதுவும் மாத இறுதியில் கையில் வரட்சி தாண்டவமாடும் போது சந்தோஷ் வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்கிறானே என்ற வருத்தம் ஒரு பெரிய பாறாங்கல்லாய்க் கனக்க ஆரம்பித்துவிடும் சிவராமனுக்கு. அவரைச் சொல்லியும் குற்றமில்லை. அவருக்கு இரண்டு பெண்கள். கலியாணப் பரீட்சைக்கு "அப்ளிகேஷன்" போடும் நிலையில் நிற்கின்றனர். இன்னொரு மகன் உயர்தரத்தில் இரண்டாம் ஆண்டு படிக்கின்றான். சந்தோஷ்தான் மூத்தவன்; பட்டம் பெற்று நான்கு ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இன்னும் அப்படியே இருக்கின்றான். வேலை கிடைத்தபாடில்லை.

தன் சம்பாத்தியம் கட்டுப்படியாகாத கட்டம் வரும் போதெல்லாம் சிவராமன் மிகவும் மனம் குமைவார். சந்தோஷைப் பார்த்தால் அவர் மனம் மேலும் குமுறும். தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையை வைத்துக்கொண்டு இப்படிக் கஷ்டப்படவேண்டியிருக்கிறதே என்ற அங்கலாய்ப்பில் "அக்கறை இன்றி ஊர் சுற்றுகிறானே" என்று வாய்விட்டுத் திட்டுவதும் உண்டு.

"மதன்" அலுவலகம் போய்க்கொண்டிருந்த மதனகோபாலை வாசலில் யாரோ அழைத்தார்கள். சந்தோஷ்தான்.
"வா, சந்தோஷ் வா" என்று வாய்தான் வரவேற்றதே தவிர மனம்,
"வந்துட்டான் இராப்பிச்சைக்காரன்" என்று சபித்தது.
"என்ன விசேஷம்?" என்றான் மதனகோபால்.
"விசேஷம் ஒன்றுமில்லை இருநூறு ரூபா பணம் வேணும்" என்று தனது கருமையான மீசையைக் கம்பீரமாகத் தடவிவிட்டுக்கொண்டான் சந்தோஷ்.
"எதற்கு?"
"என்னைமாதிரி வயசுப்பையனிடம் இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி?"
"நான் பைத்தியம்தான், தெரியாமல் கேட்கிறேன் சொல்லு."
"சுப்பர் ஸ்டார் ரஜனியின் "பாட்ஷா"வைத் திரும்பவும் பார்க்கவேணும் என்று ஒரே ஆசையாய் இருக்கிறது. அப்புறம் பெண்களுக்கு மட்டும் என்று ஒரு டியூட்டரி இருக்கே அதுக்கு முன்னால் ஒரு கூல் ஸ்பொட் புதுசா திறந்திருக்கான். சும்மா நின்றால் நல்லா இருக்காதுடா. அதனால் ஏதாவது கொறித்துக்கொண்டு, சிகரட் பிடித்துக்கொண்டே இன்றைய நாகரிகம் எவ்வளவு உயர்ந்திருக்கு என்று உடைகளைப் பார்த்துக்கொண்டே பட்டிமன்றம் நடத்தலாம். மறுநாள் சொல்லவேண்டியதில்லை.

பிள்ளையார் கோயிலில் காலை தரிசனம், மாலை அறிமுகம்'' என்று தனது புரோகிராமை இல்லையில்லை இருநூறு ரூபாவுக்கான லிஸ்டை முடித்தான் அவன்.
''நீ உருப்படவே மாட்டாய்'' என்று தலையில் அடித்துக்கொண்டான் மதன். ''ஏன்தான் உன்னுடன் ஒரே வகுப்பில் படித்தேனோ? தெரியவில்லை''
''அந்த அதிஸ்டம்தான்டா நீ எனக்கு முதலிலேயே வேலை பார்க்கிறாய்?
''அதிருக்கட்டும் இப்படி வந்து ஒரே என் கழுத்தை அமுக்கி, நாயே, நான் பணம் தராவிட்டால் என்ன செய்வாய்?''
''கடிகாரத்தை அடகு வைப்பேன்.''
மதனகோபால் திரும்பவும் தலையில் அடித்துக்கொண்டான். ''அந்த அளவிற்குப் போய்விட்டாயா?''
''பின்ன என்னடா? இப்படி நெருக்கடி வரும்போது உதவும் என்றுதானே அப்பா எனக்கு கடிகாரம் வாங்கித் தந்திருக்கிறார்.''
''அப்படியெண்டா அதைக் கழற்றித் தந்துவிட்டு பணம் தந்ததும் வேண்டிக்கொள்''
சந்தோஷ் கன நேரம் யோசித்தான். பின் ''உதவுவதற்கு இல்லாதது பின் எதற்கு? ''இந்தா பிடி'' என்று கழற்றிக் கொடுத்தான்.

ஆரஞ்சு வண்ணத் தாள்கள் கைமாறின. சினிமாப் பாடலை முணுமுணுத்தபடியே வெளியேறினான் சந்தோஷ். மதனின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்தன. ''இவன் எப்போதுதான் திருந்தப்போகிறானோ?'' என நினைத்துக்கொண்டான். சந்தோஷின் கடிகாரத்தைக் காரணமின்றி வாங்கவில்லை. அவன் சென்றமுறை கடன் வாங்கியபோதே அவனது அப்பாவிடம் சொல்ல நினைத்தான். பின் என்ன நினைத்தானோ நினைத்தவுடனேயே விட்டுவிட்டான். ஆனால் இந்த முறை? சந்தோஷின் செய்கைக்கு ஆதாரம் கிடைத்துவிட்டது. இப்போதே சொன்னால் சூடாகவும் இருக்கும். தொந்தரவும் குறையும் என நினைத்தான்.

மதனின் அலுவலகத்துக்கு அருகில்தான் சிவராமனின் அலுவலகமும். அங்கேதான் அவர் ஹெட்கிளார்க்காகப் பணிபுரிகிறார். அங்கே சென்று ''இந்தாங்க அங்கிள் உங்கள் மகன் சந்தோஷின் கடிகாரம்'' என்று அவர் மேசைமேல் வைத்தான். விக்கித்துப்போனார் சிவராமன். ''இது உனக்கு எப்படிக் கிடைச்சது?'' என்றார். மதனகோபால் நடந்ததை விளக்கமாகச் சொன்னான். உடம்பில் கொதிநீரை ஊற்றியதுபோல் இருந்தது அவருக்கு. அவர் கேள்விப்பட்டது போல் ஊதாரித்தனம் செய்கிறானா? சந்தோஷ் ''பொறுப்பில்லாதவன்'' என மனம் கொதித்தது. அதன்பின் அவருக்கு வேலையா ஓடும்? சிந்தனைக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லாமல் அலுவலக நேரத்தைக் கழித்தார் அவர்.

ஐந்துமணி........
புயலாக வீட்டுக்குள் நுழைந்த சிவராமன் ''எங்கே அவன் சந்தோஷ்? தலைப்பிள்ளையா அவன் தறுதலை?'' பதறிப்போனாள் தாய் பரிமளம். ''ஏன் அவன் என்ன செய்தான்?'' ''என்னவா; உன் அருமை மகன் கடிகாரத்தை அடகு வைத்து கடன் வாங்கியிருக்கிறான்; ராஸ்கல்!?''

''அப்படியா..... கொஞ்சம் முதல்தானே கேட்டேன். அவன் சினேகிதன் இரவல் வாங்கினதாகச் சொன்னானே!'' ''ஏன் சொல்ல மாட்டான்? எங்க அந்த ஊதாரி?'' ''கூப்பிட்டீங்களா அப்பா?'' அறையை விட்டு மிக அமைதியாக வெளியே வந்தான் சந்தோஷ்.
''வாடா வா வெத்திலை, பாக்கு, வைத்து கூப்பிடுகிறேன் வந்து வாய் சிவக்கப் போடு'' என்று கொதித்தவர் மறுகணம் சந்தோஷின் கன்னத்தில் இடம் வலம் பாராமல் ''பளார், பளார்'' என தன் கொதிப்பைக் காட்டினார்.

''ஐயோ வேணாம் விடுங்க. ஏதோ தெரியாமல் செய்துவிட்டான். வளர்ந்த பிள்ளையை அடிக்காதீங்க'' என கணவனைத் தடுத்தாள் பரிமளம்.
''உடம்பு வளர்ந்த அளவுக்கு இவனுக்கு மூளை வளர்ந்திருக்கா?'' மூச்சிரைத்தது சிவராமனுக்கு. வலி ஒருபுறம். அவமானம் மறுபுறம். அழவும் முடியாமல் அடக்கவும் முடியாமல் கண்கலங்கி நின்றான் சந்தோஷ்.

மறுநாள் காலை-
பூஜை அறையில் கொளுத்தி வைத்த ஊதுபத்தியின் புகை அடங்கத் தொடங்கியது. வாசலிலுள்ள மல்லிகைப் பந்தல் பூக்கள் மணம் பரப்பத் தொடங்கின. நேரத்துடன் எழுந்து தயாராகி உடைகளை அணிந்துகொண்டார் சிவராமன். என்னவோ தயக்கத்துடன் யோசித்தார். பின் சில வினாடிகள் அங்கும் இங்குமாக அலைந்தார். இறுதியில் சாமி உண்டியலில் இருந்து கொஞ்சம் சில்லறைகளை எடுத்துக் கொண்டார்.

அறையில் படித்துக்கொண்டிருந்தான் சந்தோஷ். அவன் முகத்தில் நேற்றைய சோகம் அப்படியே தெரிந்தது. மன ஆறுதலுக்காக ஏதாவது பேசினால் நல்லாய் இருக்கும் என நினைத்தார் சிவராமன். என்ன இருந்தாலும் அவர் பெற்ற மகனல்லவா? "சந்தோஷ் இன்று சாமி உண்டியலிலேயே கைவைத்துவிட்டேன். ஏன் தெரியுமா? பஸ்ஸிற்குக் காசில்லை. இப்படித்தான் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் எல்லா இடங்களிலும் நடக்கிறது. ஆனால் இந்த நிலையை உணரத் தவறுவதுதான் முட்டாள்தனம். வயசுக்கு வந்தவன் நீ. பொறுப்பாக யோசித்து நடந்துகொள். நான் வாறன்" என அவன் தலையைத் தடவிவிட்டு கலங்கிய கண்களுடன் வெளியேறினார்.

பத்துப் பதினைந்து நிமிடம் கழிந்திருக்கும். காய்கறிக் கூடையுடன் வந்தாள் பரிமளம். திருதிருவென மேலும் கீழுமாய் கொஞ்ச நேரம் விழித்தாள். பின் அவளும் பூஜை அறையிலிருந்த உண்டியலில் இருந்து கணிசமான சில்லறைகளை எடுத்துக்கொண்டாள். "சிவா" என்று கூப்பிட்டாள்.

சந்தோஷின் தம்பி கல்லூரிக் களையுடன் வந்தான். "இன்று காலைச்சாப்பாடு செய்யவில்லை, கடையில் வாங்கிக்கொள்" என்று சில சில்லறைகளைக் கொடுத்தாள். கையில் மிகுதியாய் இருந்த சில்லறைகளை எண்ணினாள். "இது போதும் விலை மலிவான காய்கறிகளைக் கொஞ்சம் வாங்கிக் கொள்ளலாம்" எனத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். சந்தோஷின் தோற்றம் அவளுக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது.

"சந்தோஷ்.....ஒவ்வொரு மாதக் கடைசியிலும் நான் சாமி உண்டியலில் கைவைப்பது உனக்குத் தெரியும். நீயும் இப்ப வேலைக்குப் போறதெண்டால் எவ்வளவு உதவியா இருக்கும் யோசித்துப்பார். நேற்று அப்பா உன்னை அடிச்சிட்டாரே என்று கவலைதான். ஆனால் நீ செய்ததும் கூடாதுதானே?" எனத் தன் பங்கிற்கு சமாதானம் சொல்லிவிட்டு அம்மாவும் காய்கறிக் கடைக்குப் போய்விட்டாள்.

சந்தோஷின் நெஞ்சை அடைத்துக்கொண்டு ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. லேசாகச் சிரித்துக்கொண்டான். அவன் "ஒவ்வொரு மாதக் கடைசியிலும் நீங்கள் இருவரும் பணத்திற்கு இப்படித் திண்டாடுவதைப் பார்க்கும்போதெல்லாம் என் பட்டதாரிச் சின்னம் ஏதோ பொம்மை மாதிரி தோன்றுகின்றது. உங்கள் கஷ்டங்களை ஒழித்துக்கட்ட நான் எவ்வளவோ முயற்சிகள் செய்துகொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும் வேலை கிடைக்கும் அதிஸ்டம் எனக்கு இன்னும் வந்தபாடில்லையே. அதேநேரம் உங்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவவேண்டுமென்ற எண்ணத்தில் மனம் துடியாய்த் துடிக்கிறது...... வீட்டுச் செலவுக்கு என்று கேட்டால் அப்பாவை அவமானப்படுத்துவதுபோல் இருக்கும் என்று, படம், அது, இது என்றெல்லாம் சந்தோஷமாகக் கதைத்துக் கடன் வாங்குகின்றேன். அதைச் சில்லறைகளாக மாற்றி யாருக்கும் தெரியாமல் சாமி உண்டியலில் போட்டுவிட்டு மாதம் அப்பா செலவுக்குத் தரும் காசில் கடனை அடைத்துவிடுகிறேன். நேற்றும் அப்படித்தான் செய்தேன். அப்பா போட்டிருப்பார் என்று அம்மாவும், அம்மா போட்டிருப்பார் என்று அப்பாவும் நினைத்துக்கொண்டு செலவு செய்கிறீர்கள்." இப்படி மனதில் தோன்றிய எண்ணங்களின் வெளிப்பாடாக அவன் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது.

"என்ன அண்ணா நீயாக உன்பாட்டில் சிரிக்கிறாய்?" என்ற தங்கையின் வியப்பான கேள்வியில் சிந்தனை தெளிய, "ஒன்றுமில்லை" என்றான் சந்தோஷ். அவனால் வேறு என்ன சொல்ல முடியும்?

திரு. S. பிரகாஷ்,
ஆரம்ப பிரிவு, முதலாம் வருடம்.




# ஒரு விஞ்ஞான வகுப்பு

(மணி அடிக்கிறது. ஆசிரியர் ஆவர்த்தனர் இரசாயனவியல் ஆய்வுகூடத்தினுள் நுழைகிறார்.)

மொனிட்டரான ஐதரசன், வெண்கட்டி, துடைப்பம், பாடப்பதிவு என்பவற்றை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு,

**ஐதரசன் :** சேர் இன்று வெள்ளிக்கிழமை College இற்கு நிறச்சட்டை அணிந்து வந்திருக்கிறார்கள். நான் ஏன் யூனிபோமை மாற்றினீர்கள் என்று கேட்க, என்னோடு சண்டைக்கு வருகிறார்கள்.

**ஆசிரியர் :** யார் அவர்கள்? எழும்புங்கோ ஐந்துபேரும். (அயடீன், குளோரின், காபன், செம்பு, கந்தகம் முதலியோர் எழும்புகின்றனர். அதற்கிடையில் கசமுச என்ற சத்தமும் "பொப்" என்ற வெடிச்சத்தமும் கேட்கிறது.)

**மாணவர் :** சேர், சேர் இந்த ஒட்சிசன், ஐதரசனைப் பிடித்து இழுத்து உருட்டுகிறார்.

**ஆசிரியர் :** தம்பி ஒட்சிசன் விடப்பா ஐதரசனை. இங்கே வாங்கோ. (ஒட்சிசன் மேசையருகே செல்ல ஆசிரியர் புத்திமதி சொல்கிறார். அதற்குள் ஆய்வுகூடம் எல்லாம் ஒருவித மணம் பரவுகிறது.)
என்ன ஒருவித நாற்றம் வீசுகிறது?

**மாணவர் :** ஐதரசனும் கந்தகமும் சேர்
(ஆசிரியர் கோபமாகப் பார்க்கிறார்.)

**ஐதரசன் :** நான் உங்களிட்டச் சொல்லிவிட்டேன் என்று கந்தகம் என்னை உதைக்கிறார் சேர்.

**ஆசிரியர் :** என்ன கந்தகம்? உங்களிருவரையும் ஒருவரையொருவர் தொடக்கூடாதென்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். ஒழுங்காக இருக்கிறதென்றால் வகுப்பில் இருங்கோ அல்லது வெளியே விட்டிடுவேன் கவனம்.
(ஆசிரியர் கோபத்துடன் தடியை ஓங்குகின்றார்.)

**மாணவர் :** சேர், சேர் எங்களுக்கு மூச்சுத் திணறுது. குளோரினைக் கொஞ்சம் சும்மா இருக்கச் சொல்லுங்கோ.
(ஆசிரியர் குளோரினை அடக்க வகுப்பெல்லாம் புகை பரவுகின்றது.)
பொஸ்பரஸ் பாவம் சேர், ஒட்சிசன் அவளோடு கொழுவிக்கொண்டே இருக்கிறார். அவள் பாவம் அழுகிறாள் சேர்.

**ஆசிரியர் :** (பொஸ்பரசை விலக்கி அப்பால் கூட்டிக்கொண்டு செல்கிறார்.)
என்ன சிரிப்பு? ஏன் எல்லோரும் சிரிக்கிறீர்கள்?

**மாணவர் :** ஒட்சிசனும் நைதரசனும் ஒன்றாக நின்று எங்களுக்குச் சிரிப்புக் காட்டுகிறார்கள். இவர்களை நெருங்க நெருங்க சிரிப்பை அடக்கமுடியவில்லை.

**ஆசிரியர் :** (சினத்துடன் தனக்குள் கூறிக்கொள்கிறார்.)
ஒட்சிசன் சரியான குழப்படி. குழப்படி இருந்தால் கெட்டித்தனமும் இருக்குமென்று சொல்வார்கள். கெட்டிக்காரன்தான். குழப்படியைத்தான் எப்படி அடக்குவது என்று தெரியவில்லை.

(அதிபர் திரு. பொற்றாசியம் வகுப்பறைக்குள் நுழைகின்றார். நைதரசன் ஓடி ஒளிந்துகொள்கிறார். அதிபரான பொற்றாசியம் ஒட்சிசனைக் கூட்டிக்கொண்டு செல்கிறார்.)

**மாணவர் :** சேர், அவர் குழப்படி செய்யமாட்டார் சேர். விடுங்கள் (கெஞ்சுகிறார்கள்.)

**ஆசிரியர் :** இதோ பாருங்கள் பிள்ளைகள். கீலியம், நேயன், ஆகன் மாதிரி அமைதியாக இருக்கப் பழகவேண்டும். இன்று அநியாயமாக ஒரு பாடவேளையை வீணாக்கிவிட்டீர்களே.
மூலகங்களும் அவற்றின் இயல்பு பற்றியும் இன்று படிக்க இருந்தோம்......

(வகுப்பில் ஒவ்வொருவராய் மயக்கமுற்று விழுகின்றனர் ஒட்சிசனை அதிபர் அழைத்துச் சென்றுவிட்டார் என்ற சோகத்தில்....)

- ஒட்சிசன் இல்லாவிட்டால் சுவாசிக்க முடியுமா? -

**செல்வி. உதயகுமாரி பசுபதி,**
*விஞ்ஞானப் பிரிவு,முதலாம் வருடம்.*

# வேண்டாம் வேல்விழி

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையின் இரண்டாவது கற்பித்தல் பயிற்சிக்காக எனக்குக் கிடைத்த பாடசாலை மட்/ கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம். அங்கு ஒன்றிணைந்த பாடத்திட்டத்தின் கீழ் ஆண்டு மூன்று மாணவர்களை நான் சந்தித்தேன். அன்று புதன்கிழமை வழமையான பாடங்களைக் கற்பித்து அழகியல் பாடத்தினை கற்பிக்கத் திட்டமிட்டபடி "சின்னச் சின்ன சிறுமியர் நாமே.... எனும் பாடலைலலிதத் தன்மையுடன் கற்பிக்க விழைந்தபோது எதிர்ப்பட்டவையே இவை......

சிறுவர்களும் சிறுமியர்களும் உள்ள அந்த வகுப்பு மாணவர்கள் பிஞ்சு உள்ளங்களுடனும் ஆவலுடனும் பாடலுக்காக என்னை நோக்கியபோது என் மனதில் ஏதோ பட்டுத் தெறித்தது. "சின்னச் சின்ன சிறுமியர் நாமே..." எனத் தனியே சிறுமியர்களை மட்டும் விளிக்கும் இப்பாடல் எவ்வகையில் இருபாலாருக்கும் பொருந்தும்? எனும் வினாவை எனக்குள் போட்டுக்கொண்டு பாடலை மிகவும் லலிதத் தன்மையுடன் மாணவர்களுக்குப் பாடி அபிநயித்தும் காட்டினேன். பின்னர் மாணவர்களையும் பாடி அபிநயிக்குமாறு கூறும்போது, மேற்பார்வையாளராக வந்த விரிவுரையாளரும் வகுப்பை அவதானித்துக் கொண்டிருந்தார். மாணவர்களும் சிறப்பாக ஒவ்வொரு வரிகளையும் கூறியபடி அபிநயித்துக் காட்டினார்கள்.

"வண்ண வண்ண தீபங்கள் ஏந்தி" எனும்போது கைகளைத் தீபங்களாக உருவகித்தும் "காலில் சிலம்பொலி கணீர், கணீர்" எனும்போது கால்களை சிலம்புகளாக உருவகித்தும் காட்டினார்கள். இவ்வாறாகக் காட்டிய மாணவர்கள் "வேலின் விழிகள் மொழிகள் பகர" எனும்போது மட்டும் முன்னிருந்த ஆர்வத்தினின்று விலகி தம்முள் உடன்பாடில்லா நிலையில் நான் காட்டிய அபிநயத்தை அப்படியே தள்ளிவிடுவது போன்று பாவனை செய்தார்கள். அத்துடன் "மின்னலிடை அசைந்திட நாமே" எனும்போதும் மாறுபட்டதை நோக்கினேன். இதன் பின்னர் விரிவுரையாளரும் வகுப்பு நிறைவில் வேலின் விழிகள் என்பதில் ஏற்பட்ட விகாரத்தைச் சுட்டிவிட்டு இவர்களுக்கு வேலின் விழிகள் என்பதற்குப் பொருள் விளங்குமா? எனக் கேட்டுவிட்டுச் சென்றார்.

பாடசாலையை விட்டு வீட்டுக்கு வந்து அமர்ந்தபோது மதியம் பாடலில் விகாரப்பட்ட பிஞ்சு முகங்களும் விரிவுரையாளரின் கூற்றும் நிழலாடின. அப்படியும் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட வரிகள் விளங்கினவா? என அறிய முற்பட்டு, வாய்மொழியாகப் பின்வருவனவற்றின் பொருள் என்ன? என மறுநாள் வினவியபோது விரிவுரையாளர் சுட்டியதும் என் எண்ணத்தைக் கிளறியதும் சரியாகவே பட்டது. வேல்விழி என்றால் என்ன? மின்னலிடை என்றால் என்ன? எனக் கேட்டபோது மௌனமே கேள்விகளுக்கு விடையானது.

இந்தவகையில் இப்பாடல் ஆண்டு மூன்று வகுப்புக்கு எவ்வகையில் பொருந்தும் என நோக்கில் ஆண், பெண் எனும் இருபாலாரும் கலந்துகொள்ளும் வகுப்பில் தனியே சிறுமியர்களை மட்டும் விளிக்கும் பாடலாக இது காணப்படுகின்றது. அத்துடன் "வேலின் விழிகள் மொழிகள் பகர" எனும் வரி உண்மையில் இம்மாணவர்களுக்குப் புரியாத சுமையாகவே விளங்கும். அதாவது காதலன் காதலி சந்திப்பின்போது, மொழிக்கு வேலையில்லாதுபோக காதலியின் விழிகள் வேலாக மாறி காதலனை முற்றுகையிட்டு வதைக்கும் எனவும் இதனால் இவை வேல்விழி என்றும் இவ்வேல்விழிகள் மொழிகள் பேசக்கூடியன எனவும், கவிகள் கூறுகின்றன. இதனை இரசிக்கவோ பிரித்தறிந்து நயக்கவோ மாட்டாதவர்களாக இம் மாணவர்கள் காணப்படுகின்றனர். எனவே இவ்வரி எவ்வகையில் இம்மாணவர்களுக்கு இன்பம் பயக்கும்? புரியாத ஒன்றைக் கண்டு விழிக்கும் பருவமாக உள்ள வயது தெரியாததைத் தெரியாது என்றுதான் கூறும்.

அடுத்து இப்பாடலில் காணப்படும் வரியான "மின்னலிடை அசைந்திட நாமே" எனும் வரிகளை நோக்கும்போது மின்னலை உருவகித்துக்கொள்ளும் தன்மையும் அவ்விடையைக் கொண்ட மாந்தர்களைக் கொண்ட வகுப்பறைச் சூழலும் இன்றி இதனை பாடுவதால் என்ன பயன்? பருவ மங்கையின் எழிலை, எழிலான இடையைப் பாடும் சொற்கள் சிறுவர் பாடலாக மாற்றம் பெறுவது உண்மையில் சுமை அதிகம் ஏற்றப்பட்ட சிறுவண்டியைப் போன்றதாகும். எனவே பொருத்தப்பாடு இன்றிக் காணப்படும் வார்த்தைகளால் எப்பயனும் இல்லை.

இந்நோக்கில் பார்க்கும்போது சிறுவர் பாடலாகக் காணப்படும் "புள்ளிப் புள்ளி மானே..." எனும் பாடலும் இத்தன்மையைக் கொண்ட பாடலாக உள்ளது. அப்பாடலில் வரும் வரியான "பெண்ணினத்தின் சாயல் தெரியுதுந்தன் வடிவில்" எனும் வரியைப் பாடும்போது மானின் தன்மை எவ்வாறு பெண்ணாகும்? பெண்ணின் அழகு மானின் அழகாகுமா? எனும் சந்தேகம் மாணவரிடையே ஏற்படலாம். இதனை அறியும் முதிர்ச்சி, பக்குவம் இம்மாணவர்களிடம் காணப்பட மாட்டாது என்பதை ஐயம் திரிபின்றி உணர்ந்துகொள்ளலாம். இவ்வாறு பாடல்களுக்கிடையில் காணப்படும் வரிகள் மாணவர்களின் பருவத்திற்கு ஒவ்வாததாக உள்ளது மேற்படி விடயங்களினூடாகத் தெளிவாகின்றது.

ஏன் இவ்வாறு குழந்தைகளுக்கு இன்பம் பயக்கவேண்டிய பாடல்கள், கதைகள் சுமையாகின்றது என்றால் குழந்தை இலக்கியம், பாடல் என்பன படைக்கும் படைப்பாளி, உண்மையில் குழந்தையாகப் பரிணமித்து, தன்னைக் குழந்தையாக உருவகப்படுத்தி குழந்தைக்குரிய மொழியில் பாடாமையினாலாகும். உதாரணமாகப் பாப்பாப் பாடலைப் பாடிய பாரதியார் தன்னை ஒரு குழந்தையாகவே பரிணமித்துப் பாடியுள்ளதால் குழந்தைக் கவிஞனாகவும் மதிக்கப்படுகின்றான். அழவள்ளியப்பா, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோரும் இவ்வண்ணமே. எனவே குழந்தைக்காக இலக்கியம் படைக்கும் போது மாறுபட்டு குழந்தையாக பரிணமிக்காமல் தன் நிலையில் நின்று பாடும்போது விலகல்களும், வியாக்கியானங்களும் எழவே செய்யும். எனவே குழந்தைகளுக்குப் புரியும் மொழியில், புரியும் வழியில் இலக்கியம் படைப்பதும், குதூகலிக்க வைப்பதும் அவனை அணைத்து உச்சிமோந்து தட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானது. மொழிக்கும், சொல்லுக்கும் சக்தியுண்டு. அச்சக்தி உண்மையில் விளங்கிக் கொள்வதில்தான் பிறப்பெடுக்கிறது. எனவே சிறுவர் இலக்கியங்களில் இப்போதைக்கு "வேண்டாம் வேல்விழி" என்பதைச் சிறுவர்கள்பால் பற்றுக்கொண்ட நெஞ்சங்கள் கூறட்டும்.

**திரு. ஏ. முரளிதரன்**
*ஆரம்பக் கல்வி, முதலாம் வருடம்.*

# மன்னம்பிட்டியில் தமிழர்

திரு. ஆர். தேவராசா
ஆரம்பக் கல்வி,
முதலாம் வருடம்.

சோழர் காலத்தில் ஜனநாதமங்களம் என்ற பெயரோடு விளங்கிய பொலநறுவை மாவட்டம் பின்னர் பொலிவு குன்றிப் போனாலும் இன்றுவரை அங்கு தமிழர்களும் வாழ்ந்து வருகிறார்கள். அது மன்னம்பிட்டியிலாகும். பொலநறுவையிலிருந்து கிழக்கே எட்டு மைல் தொலைவில் மட்டக்களப்புக்குச் செல்லும் பிரதான பாதையின் மருங்கில் அமைந்திருப்பது மன்னம்பிட்டி என்ற சிறிய நகரமாகும். இது முல்லையும், மருதமும் சேர்ந்த ஓர் நிலப்பரப்பாகும்.

இந்து சமுத்திரத்தின் நித்திலமான இலங்கைத் தீவு அந்நிய ஆட்சியாளர் வயப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வடுக்கள் இன்னும் மறைந்துவிடவில்லை. ஒல்லாந்து தேசத்தவர்களால் இலங்கை ஆட்சி செய்யப்பட்ட காலத்தில் அவர்களின் அடக்கு முறைகளைப் பொறுக்க முடியாது மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கிப் புலம்பெயரத் தொடங்கினர். இவ்வாறுதான் இக்கால கட்டத்தில் நீர்கொழும்பின் கடற்கரைத் தெரு, கடைத்தெரு போன்ற பகுதிகளில் வசித்துவந்த சின்னத்தெரு முதலி, பெரியதெரு முதலி போன்றோரும் இவர்களது சுற்றத்தாரும் குடிமக்கள் சிலரும் இடம்பெயர்ந்துவந்தவேளை மன்னம்பிட்டி ஓர் வளமான பிரதேசமாகக் காணப்பட்டதால் அதனைச் சின்னத்தெரு முதலியும் அவர்களது உறவினர்கள் சிலரும், குடிமக்கள் சிலரும் தமது வசிப்பிடமாக்கிக் கொண்டனர். பெரியதெரு முதலியும், உறவினர்களும் மன்னம்பிட்டியிலிருந்து ஐந்துமைல் தொலைவிலுள்ள சொறிவில் என்ற பகுதியில் குடியேற, ஏனைய குடிமக்கள் கறுப்பளை, சவன்பிட்டி (தற்போதைய செவனப்பிட்டி) போன்ற இடங்களில் தமது உறைவிடங்களை அமைத்துக்கொண்டனர்.

இங்ஙனம் வாழ்வை மறுசீரமைத்த மக்கள் சூழலுக்கேற்ப விவசாய உற்பத்தியையே தமது தொழிலாக்கினர். இதற்கு மகாவலி நீரைப் பயன்படுத்துவதோடு பல குளங்களையும் தேவைக்கேற்ப உருவாக்கித் தம் தொழிலைச் செம்மைப்படுத்தினர். இப்பகுதியில் இன்றும் “கண்காணாவில்” என்ற பெரிய குளம் காணப்படுகின்றது. இது இரண்டுமைல் விஸ்தீரணமுள்ளதாகும். மலைநாட்டில் மழை அதிகரிக்கும்போது இங்கு நீர்ப்பரப்பு அதிகரிக்கும். இதனால் மாரிகாலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்துத் தடைப்படுவதுண்டு. ஆனால் கோடைகாலத்தில் வரட்சி நிலவும். நீர்மட்டமும் குளம், கிணறுகளில் குறையத் தொடங்கும். இக்காலத்தில் கங்கைக்கரை ஓரங்களில் செய்கை பண்ணப்படும் புகையிலைக்கு தொப்பை, கமலை போன்றவற்றால் நீர்ப்பாசனம் செய்யப்படும். இங்கு நெல் சாகுபடி செய்யப்படுவதுடன் குரக்கன், மிளகாய், எள்ளு, சோளம், கத்தரி போன்ற பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன.

முழுக்க முழுக்க சுதேச முறையிலான நீர்ப்பாசன முறையைக் கொண்டிருந்த இப்பகுதி மக்களுக்கு தற்போது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசனத்துறை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளமை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

அரசியலைப் பொறுத்தவரை இவர்கள் அநாதைகள் என்றே கூறவேண்டும். குடியேற்றங்களால் சிறுபான்மையினராய்ப்போன இவர்களுக்குத் தமக்கென ஓர் பிரதிநிதியைக்கூட தேர்ந்தெடுக்க முடியாத நிலைமையே காணப்படுகிறது.

இம்மக்களின் கலாசாரப் பண்பாடுகளை நோக்கும்போது இவற்றில் மிகுந்த அக்கறை பூண்டவர்களாக கட்டுக்கோப்புடன் வாழ்ந்துள்ளமையைக் காணமுடிகின்றது. எதிர்காலச் சந்ததியினருக்கு தமது கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கையளிக்கும் வகையிலேயே இவர்களின் வாழ்க்கைமுறை காணப்படுகின்றது.

இவர்கள் தமது மூதாதை வழிவந்த கொடிகள், ஆலவட்டம், முத்துக்குடை போன்ற இந்துக்களின் புனிதச் சின்னங்களை இன்னும் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள். மேலும் இங்கு பல ஆலயங்களும் காணப்படுகின்றன. சிறப்பாக கங்கைத்துறை ஸ்ரீசித்திர வேலாயுதர் ஆலயம், மன்னம்பிட்டி கண்ணகி அம்மன் ஆலயம், விநாயகர் ஆலயம், ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் போன்றவற்றைக் கூறலாம்.

ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் உற்சவம் ஆடி அமாவாசைத் தினத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்து நாட்கள் மிகவும் கோலாகலமாக நடந்தேறும். இறுதிநாள் உற்சவத்தின்போது "மான் வேட்டை" என்னும் ஓர் நிகழ்வு இடம்பெறும். அனைவரையும் கவர்ந்த இவ்விழாவில் மான்வேட்டை முடிந்தபின் மான் இறைச்சி (தேன் + தினைமாவினால் செய்தது) பகிர்ந்தளிக்கப்படும். இதைப் பெறுவதற்கு மக்கள் கூட்டம் அலைமோதுவதைக் கண்டுகளிக்கலாம். இதை உண்டால் நோய்நொடி அணுகாது என்ற நம்பிக்கை இம்மக்களிடையே காணப்படுகின்றது. இவ்வாலயம் மன்னம்பிட்டி, கறுப்பளை, சொறிவில், சவன்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு உரிமை உள்ளதாயினும் மன்னம்பிட்டிக்கே கூடிய ஆதிக்கம் உள்ளதாகக் காணப்படுகின்றது. இவ்வூரைச் சேர்ந்த முதலி பரம்பரையில் வரும் ஒருவரே இவ்வாலயத்தின் தலைவராக (மணியகாரர்) இருக்க வேண்டுமென்ற மரபு இருந்துவருகிறது. இந்த வகையில் தற்போது இவ்வாலயத்தின் தலைவராக திரு. க. கனகராஜா (பொல/மன்னம்பிட்டி த.வி. அதிபர்) அவர்கள் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொரு வண்ணக்கர் தேர்ந்தெடுக்கப்படுவதும் வழக்கமாகும்.

சடங்குமுறையான வழிபாடாக விளங்கும் கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் வைகாசிப் பௌர்ணமி அன்று பொங்கலுடன் நிறைவுபெறும். ஒன்பது நாட்கள் விழா நாட்களாகக் காணப்படும். இவ்வாலயத்தில் வருடத்திற்கொரு முறையே கதவு திறக்கப்படும். வாய்கட்டிப் பூசை செய்கின்ற அதேவேளை மந்திரம் மூலம் உருக்கொடுத்து தெய்வம் ஆட்டுகின்ற நிகழ்வும் இங்கு இடம்பெறும். இது சங்ககால மக்கள் மத்தியில் காணப்பட்ட வேலன் வெறியாடலை நினைவூட்டுவதாக இருக்கிறது. இங்கு கண்ணகி அம்மன் காவியம், மழைக்காவியம் போன்றன பாடப்படுவதுடன் இறுதிநாளில் அம்மன் குளிர்த்தி பாடப்படுவதும் மரபாகும். இத்தோடு தீக்குளித்தல் நிகழ்ச்சியும் இடம்பெறும். விநாயகர் ஆலயமும், ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயமும் முறையே பங்குனி உத்தரத்தையும், பௌர்ணமியையும் விழாக்காலமாகக் கொண்டுள்ளன.

இப்போது நம்மத்தியில் அருகிவருகின்ற கொம்பு விளையாட்டு என்னும் வழிபாடும் இப்பகுதியில் காணப்படுகின்றது. இது வரட்சிக் காலத்தில் விவசாயிகளால் மழைவேண்டி நோற்கும் ஒரு நிகழ்வாகும். நோக்கம் நிறைவேறின் அறுவடை முடிந்த பிற்பாடு அம்மனுக்கு காளாஞ்சி வைத்து ஊர்மரபிற்கேற்ப மக்கள் வடசேரி, தென்சேரி என்ற இரு பிரிவினராகப் பிரிந்து கொம்பு விளையாட்டில் ஈடுபடுவர். இவ்வாறு இரு பிரிவினரும் கொம்பு இழுப்பதற்குத் தயார் பண்ணிய பிற்பாடு பொருத்தமான இடத்தில் அது பூட்டப்பட்டு இழுக்கப்படும். இவ்வேளை உடையும் கொம்பு எப்பிரிவினரதோ அவர்கள் தோல்வியைத் தழுவியவர்களாகக் கொள்ளப்படுவர். இவர்களை மறுபுறத்தோர் தோல்வியைத் தழுவியவர்களாகக் கேலி செய்யும் பொருட்டு ஊர் இரண்டுபடும்படியாகக் கோசமிட்டு ஆர்ப்பரித்துப் பின் நகைச்சுவை கலந்த வசைகவிகளைப் பாடி மகிழ்வர். இத்தோடு வெற்றிக்களிப்பில் கோலாட்டமும் இடம்பெறுவதைக் காணலாம். இறுதிநாள் தென்சேரியே வெற்றிவாகை சூடவேண்டும் என்றும் இல்லாதுபோனால் ஊருக்குத் துன்பம் நேரும் என்றும் ஒருவகை நம்பிக்கை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இம்மக்களின் திருமண முறை எமது இந்துப் பாரம்பரிய முறைகளை ஒத்ததாகவே காணப்படுகின்றது. மரணவீட்டைப் பொறுத்தவரை இறந்தவரின் ஆத்மசாந்திக்காகவேண்டி பல ஆத்மீகப் பாடல்கள் பாடப்படுகின்றன. விசேடமாக "வைகுந்த அம்மானை", "கந்தரலங்காரம்" போன்றன பாடப்படுகின்றன.



250061

விவசாயப் பொருளாதாரத்தை முழுக்க முழுக்க நம்பியதாகவே ஆரம்பகால சமூகங்கள் இங்கு காணப்பட்டன. இவர்கள் தமது ஓய்வுகாலங்களில் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளைப் பெரிதும் விரும்பி நடைமுறையில் இணைத்துக் கொண்டனர். இப்பழக்கமே காலப்போக்கில் பண்டிகைகளாக வளர்ச்சிகண்டன. இந்த வகையில் இம்மக்களின் இந்து சமயப் பண்டிகைத் தினங்களைப் பார்ப்போம். ஆங்கில வருடம் பிறந்த முதல் மாதமே இவர்கள் தமது முதலாவது பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற கருத்திற்கேற்ப உழவர் தமக்கு உதவிபுரிந்த சூரியப் பெருமானுக்கு தை முதல்நாள் பொங்கி உதயத்தின்போதே படைத்து மகிழ்கின்றனர். இப்பண்டிகை நாளடைவில் உழவரால் மட்டுமன்றி ஏனையோராலும் கொண்டாடப்படும் ஒரு விழாவாக மாறிவிட்டது.

இதையடுத்து அங்குவாழ் மக்களால் தமிழ், சிங்களப் புத்தாண்டுத் தினமும் விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது. இத்தினத்தில் கோலாட்டம், ஊஞ்சல் போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபடுவர். இவ்வாறே சிவராத்திரி, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு, தீபாவளி போன்ற தினங்களும் விமரிசையாக இம்மக்களால் கொண்டாடப்படுகின்றது.

மேற்கண்ட வகையில் மன்னம்பிட்டிவாழ் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகளைப் பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மக்கள் பற்றிய பூர்வீக அம்சங்கள் பல மேலும் ஆராய்பட வேண்டியவையாகும்.

### *மேற்கோள் நூல்கள்*


1. THE KARAVA OF CEYLON, K.V.G.DE SILVA & SONS
   *BY : M. D. RAGHAVAN*
2. மட்டக்களப்பு மான்மியம்


**மாணவன்:**

- *காலையில் படித்து, மாலையில் விளையாடுவான்;*
- *அறிவின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவன்;*
- *மாண்புகளை உண்டாக்குபவன்;*
- *ஆணவம் ஒழித்து ஆக்கம் தேடுபவன்;*
- *வன்முறை தவிர்த்து நன்முறையில் நாட்டம் கொள்பவன்;*

கலாசாலையின் பழைய ஆசிரிய மாணவரும், தற்போது கனடாவில் வசித்து வருபவருமான திரு. க. தா. செல்வராஜகோபால் அவர்கள் தயாரித்துக்கொண்டிருக்கும் "தமிழ் நாடக கலையிலிரு பாங்கு மரபுக் கூத்துக்கள்" எனும் நூலில் எமது கலாசாலை பற்றிய அவரின் அனுபவக் கருத்துக்களைக் கொண்ட ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம்.

*"இப்படிப்பட்ட அன்னையின் "சீராட்டு" ஒன்றை நான் 1996 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பதினொராந் திகதி நடந்த அதன் பொன் விழாவின்போது பெற்றேன். அந்தச் சீராட்டைப் "பனுவற்பாரி" என்று என்னை என் அன்னை அழைத்து வழங்கிய தினத்தன்று 15000 மைல்களுக்கு அப்பால் இருந்த என்னால் நேரில் சென்று பெற முடியாதிருந்தது."*

- விவரணச் சித்திரம் -

# இரு பாங்கு கூத்து

ஈழத்தின் (இலங்கை) கிழக்கு மாகாணத்தின் தமிழ் ஆசிரிய பயிற்சிக் கல்வியின் வரலாற்றை இங்கு சற்று அறிந்துகொள்வது நலம். ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பு - அரசடி எனும் இடத்தில் அமைந்திருந்த மெதடிஸ்த மிசன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும், புளியந்தீவில் அமைந்திருந்த அர்ச் அகஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையுமே இயங்கி வந்தன. இவை முறையே மெதடிஸ்த மிசன் தமிழ் பாடசாலைகளுக்கும், கத்தோலிக்க தமிழ் பாடசாலைகளுக்கும் வேண்டிய தமிழ் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அளித்து வந்தன. இதேவேளை இப்பகுதியில் இயங்கிவந்த அரசினர் தமிழ்ப் பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களை யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பயிற்றுவித்தது. இவையெல்லாம் ஆண் ஆசிரியர்களின் பயிற்சிச் சாலைகளே.

கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த ஆசிரிய மாணவிகள் இளவாலை, நல்லூர் முதலிய இடங்களில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குச் சென்று பயிற்சி பெற்று வந்தனர். கிழக்குமாகாணத்தைப் பொறுத்தளவில் நாற்பதின் இறுதிப் பகுதியில் அட்டாளைச்சேனை எனுமிடத்தில் ஒரு அரசினர் தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதில் இந்து, இஸ்லாமிய ஆண் ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு வந்தனர். இங்கு கற்றுவந்த ஆசிரிய மாணவர்களுக்குள் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அதனை முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாகத் தனித்து இயங்கவிட்டு மட்டக்களப்பில் ஒரு தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதே நேரம் அரசடியில் இயங்கிவந்த மெதடிஸ்த மிஷன் பாடசாலை தன் சேவையை நிறுத்திக் கொண்டது. சென் அகஸ்தீனார் பயிற்சிச் சாலையும் தன் சேவையை நிறுத்த வேண்டிய கட்டாயத்துள் தள்ளப்பட்டது.

எனவே 1946ம் ஆண்டளவில் மட்டக்களப்பில் இரண்டு ஆசிரிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒன்று மட்டக்களப்பு கோட்டைமுனையில், அதாவது அரசடி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அமைந்திருந்த இடத்தின் அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆண் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. இதில் அட்டாளைச்சேனை ஆசிரிய கல்லூரியில் இருந்து பிரிந்துவந்த முதலாம் இரண்டாம் வருடப் பயிற்சி நெறிகளில் கற்றுவந்த முப்பது மாணவர்கள் பயிற்சியைத் தொடங்கினர்.

அடுத்து மட்டக்களப்பு ஆனைப் பந்தி இராமகிருஷ்ண பெண் பாடசாலையின் ஒரு பகுதியில், அரசினர் பெண் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பமானது. இதற்கான கற்கை நெறியாளர்களாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் புதுமுகப் பரீட்சையில் தேறியவர்கள் இடவசதிக்கேற்பச் சேர்க்கப்பட்டனர்.

அரசினர் ஆண் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குரிய ஒரு இடம் கிடைப்பதற்கு அருமையாக இருந்தபடியாலும், அதை இரவோடு இரவாக ஆரம்பிக்கவேண்டியிருந்தபடியாலும் தற்காலிக ஒழுங்கு ஒன்று செய்யப்பட்டது. இரண்டாவது யுத்த காலத்தில் ஆங்கிலேயப் படைவீரர்கள் முகாமிட்டிருந்த இராணுவ முகாம், யுத்தம் முடிந்ததும் விடுவிக்கப்பட்டபடியால் அந்தக் கட்டிடங்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆங்கிலேய வீரர்கள் வசித்த இராணுவ முகாம் என்றால் அது பல வசதிகளும் இடவசதியும் கொண்ட ஒரு நவீன அமைப்புள்ள பெரிய கட்டிடத் தொகுதியாக இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். உண்மையிலே அப்படியல்ல. அந்தக் கட்டிடத் தொகுதி தென்னங் கீற்றுக்களால் ஆன கூரையும், சுற்றி அடைக்கப்பட்டதுமான ஐந்து கீற்றுக் கொட்டகைத் தொகுதி. அந்தக் கட்டிடத்தின் தூண்களும் மேற்கூரையும் "மாங்கு" என்றழைக்கப்படும் காட்டுக் கம்புகளால் உருவாக்கப்பட்டவை. சாளரங்களும் கதவுகளும் தென்னங் கிடுகுகளாலும் காட்டுக் கம்புகளாலுமே அமைக்கப்பட்ட தட்டிகளாலானவை. மலசலகூடத் தொகுதியும் கிடுகுக் கட்டிடங்கள்தான். நீர் வசதிக்காக ஒரு தண்ணீர்தாங்கி எந்த நேரமும் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும். இரு குழாயடிகளில் குளிப்பதற்கு நெருக்கம் ஏற்படும்போது அந்த நீர்த்தொட்டியை குற்றால அருவியாகப் பாவித்து பலர் அதனடியில் நின்று நீராடுவர். ஆனால் எல்லாக் கட்டிடத் தொகுதிக்கும் மின்சார ஒளி இணைப்பு இருந்து ஓலைக் கொட்டகைகளைச் சற்று நாகரீக உலகத்துக்கு இழுத்து வந்தது.

இந்தத் தொகுதியில் இருபது அடி நீளமும் அறுபது அடி நீளமும் கொண்ட கொட்டகைகள் மூன்று இருந்தன. இவை மூன்றும் மாணவர் விடுதியாகப் பாவிக்கப்பட்டன. இதைவிட இதே அளவிலான இன்னொரு கொட்டகை உணவுச் சாலையாகவும், உணவு நேரங்கள் தவிர்ந்த நேரத்தில் முதலாவது வருடப் பயிற்சியாளர்களின் வகுப்பறையாகவும் இருந்து வந்தது. இரவுநேர வகுப்புக்கள் முடிந்ததும் உணவு மேசைகள் கட்டில்களாக மாறிவிடும். மாணவர் விடுதிகளுக்கு மலைமகள், திருமகள், கலைமகள் இல்லங்கள் எனப் பெயரிடப்பட்டன. இதே பெயர்களும் அன்று பாடப்பட்ட பாடசாலைக் கீதமும் இன்றும் தொடர்கின்றன.

தொகுதியின் முன்னுக்கு இருந்த முதலாவது கட்டிடம் மற்றக் கட்டிடங்களின் நீளத்திலும் பார்க்கச் சற்று நீளமானது. இதன் இரு முனைகளிலும் சிறிய அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் ஒன்று நூல் நிலையமாகப் பாவிக்கப்பட்டுவந்தது. அடுத்த தொங்கலில் இருந்த மற்ற அறை மாணவர் விடுதியாக இயங்கி வந்தது. இதன் நடுப்பகுதி இரண்டாம் வருடக் கற்கை நெறியாளர்களின் வகுப்பறையாக இருந்தது. இங்கும் இரவு வகுப்பு முடிந்ததும் வகுப்பு மேசைகள் இணைக்கப்பட்ட படுக்கை அறையாக மாறிவிடும்.

1946 இன் பிற்பகுதியில் இங்கு ஏறக்குறைய 30 மாணவ ஆசிரியர்களே இருவருடப் பயிற்சி நெறிகளிலும் பயின்று வந்தனர். புது வருடத்திற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்காக ஒரு நேர்முகப் பரீட்சை 1946 டிசம்பர் மாத இறுதியில் நடைபெற்றது. அதற்கு ஏறக்குறைய 50 பேர் அழைக்கப்பட்டனர். அதில் முப்பது பேருக்கு மட்டுமே 1947 தை மாதத்தில் நுழைவு கிடைத்தது. அதில், நானும் ஒருவன். அப்போது எனக்கு பதினெட்டு வயது ஆரம்பித்து இருந்தது. அந்தக் கற்கை நெறியாளர்களில் மாணவன் சித்தாண்டி நல்லையா, மாணவன் ஆரையம்பதி தெய்வநாயகம் பிள்ளை, நான் என்னும் மூவரும் வயதில் இளையவர்கள், ஏனைய மாணவர்கள் யாவரும் வயதில் கூடியவர்கள் மட்டுமல்ல உதவி ஆசிரியர்களாகவும், விவசாய ஆசிரியர்களாகவும் சேவையாற்றிக் கற்பித்தல் அனுபவத்துடன் பயிற்சிபெற வந்தவர்கள்.

அதுவரையும் ஆசிரியப் பயிற்சி பெறும் காலம் மூன்று வருடமாக இருக்கவேண்டுமென்ற விதியும் அந்த வருடத்திலிருந்து விலக்கப்பட்டு இரு வருடங்களாக்கப்பட்டிருந்தது. நான் முன்னர் சொன்னவாறு, ஆவணி மாதம் முதல் நேர்முகப் பரீட்சையில்லாமல் கல்வித் திணைக்கள அனுமதிக் கடிதங்களுடன் நேரடி நுழைவுபெற்ற புதியவர்களின் வருகையால், கற்கை நெறியாளர்கள் மணமாகாதவர்களாகவும், திருமண ஒப்பந்தம் செய்துகொள்ளாதவர்களாகவும் இருக்க வேண்டுமென்று அதுவரை அமுலில் இருந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டது.

ஆரம்பத்தில் எங்களுக்கு இட நெருக்கடி இருக்கவில்லை. ஆனால் அந்த வசதி ஆறுமாத காலங்கள்தான் நீடித்தன. 1947 ஆவணி விடுமுறை முடிந்ததும், தினமும் புதுப்புதுக் கற்கை நெறியாளர்கள் புகுந்துகொண்டே இருந்தனர். இப்படியாக இரண்டொரு மாதங்களில் முதலாவது வருடக் கற்கை நெறியாளர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலாகிவிட்டது. இந்த வசதிக் குறைவை நாங்கள் யாவரும் சகித்து மனமுண்டானால் கிடைக்கும் இடத்தைப் பகிர்ந்துகொண்டு துன்பமுற்றோம்.

ஆறுமாத காலத்தின் பின்னர், நாங்கள் எங்கள் இரண்டாம் வருடப் பயிற்சிநெறிக்கு காலெடுத்து வைத்தபோது, அந்தத் துன்பம் மேலும் இருமடங்காக அதிகரித்தது. 1947ல் மேலும் நூறு கற்கை நெறியாளர்கள் முதலாவது ஆண்டு கற்கை நெறிக்குச் சேர்க்கப்பட்டனர். மாணவர் தொகை அதிகரித்ததே தவிர வேறு எந்தவொரு வசதிகளும் அதிகரிக்கப்பட்டதேயில்லை. அதே கட்டிடத் தொகுதி, அதே மலசலகூடங்கள், அதே நிலப்பரப்பு, அதே நீர்த்தாங்கியின் கண்ணீர்வடிப்பு, அதே தளபாடங்கள்தான். சாப்பாட்டுப் பீங்கான், கலன்கள் மாத்திரம் இரட்டிப்பாக அதிகரித்திருந்தன.

ஆரம்பத்தில் நான்கு விரிவுரையாளர்களாக இருந்த ஆசிரியர் தொகை மட்டும் ஏழாக அதிகரித்தது. இப்போது இவ்விரண்டு படுக்கைகளின் இடைவெளிகளிலும், முன்னாலிருந்த ஒரே ஒரு சிறு கற்கட்டிடமான அலுவலகத்தின் திண்ணைகளிலும் படுக்கைகள் போடப்பட்டன. இத்தகைய குருகுலத்தில்தான் நாங்கள் எங்கள் பயிற்சியை முடித்தோம். இங்கும் மனமிருந்தது எனவே இருநூறு பேருக்கு அதே இடம் போதுமானதாக இருந்தது. அதுதான் நாங்கள் எங்கள் ஆசிரிய பயிற்சிக் காலத்தில் அனுபவித்து, சகித்து, சாதித்த ஒரு மாபெரும் சாதனை. ஏன் ஆசிரிய மாணவர்களின் - அருச்சுனன் தவநிலை என்றும் சொல்லலாம்.

எப்படியிருந்தாலும் ஆசிரிய மாணவர்களாகிய எங்களுக்கு, நகரத்தில் ஒரு பெரிய மதிப்பு இருந்தது. காரணம் எங்கள் வாலாமணி, வேட்டி, சால்வை கொண்ட வெள்ளைச் சீருடையும், ஆளணி எண்ணிக்கையுந்தான்!. இருவருடக் கற்கை நெறியாளர்கள் இருநூறு பேரும் அணிவகுத்து மட்டக்களப்பு வீதியால் சென்றால் பெரியதோர் அமைதிப்படையின் ஊர்வலமாகவே தோன்றும். பொதுக் கூட்டங்களிலும், முக்கிய பிரமுகர்களை வரவேற்கும் ஊர்வலங்களிலும் எங்களின் சேவை முக்கிய தேவையாக இருந்துவந்தது. அதைவிட இன்னுமொரு முக்கிய தேவைக்கும் எங்களை நகரசபை நாடி நின்றது. அதன் தேர்தல்களின்போது எங்கள் கலாசாலை அமைந்திருந்த வட்டாரத்தின் வேட்பாளர்கள் தங்கள் வெற்றிக்கு எங்கள் உத்தரவாதம் உதவும் என்று நம்பி இருந்தனர். அதனால் நகரத்தில் எங்களின் பாதுகாப்பும் கண்ணியமும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. அதேபோல "வெள்ளைச் சட்டைக் கள்ளர்" என்ற பொறாமைப் பேச்சும் வீசாதிருக்கவில்லை.

எப்படி இருந்தாலும், இப்போது "பசுமை நிறைந்த நினைவுகளே; என்ற ஒரு திரைப்படப் பாடலில் வரும் "மரங்களில் ஏறிக் குரங்குகள்போலத் தாவித் திரிந்தோமே" என்ற சம்பவத்தை மட்டும் நாங்கள் நன்றாக அனுபவித்தோம். அந்த ஒரு திருப்தியே அக்காலத்தில் நாங்கள் அனுபவித்த பற்றாக்குறை வாழ்க்கையின் துயரங்களைப் போக்குகின்றது என்று சொல்வது மிகையாகாது. எங்களின் கலாசாலையின் முன்பக்கம் பரந்ததொரு மாந்தோப்பு இருந்தது. அதில் ஏறிக் கிளைகளில் உட்கார்ந்துகொண்டு காய்களைப் பறித்து உண்பதற்கும், அவற்றைப் பக்கத்தில் இருந்த உயர் கல்லூரி மாணவ மாணவிகளின் வேண்டுதலை நிறைவேற்ற வீசி எறிந்து மாங்காய் தானம் கொடுப்பதற்கும் எங்களின் ஓய்வு நேரத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டோம். அந்த அளவில் இன்றும் அந்தப்பாடலைக் கேட்குந்தோறும் கலாசாலைக் காலத்திற்கு சிறகு கட்டிப்பறந்து விடுவதுண்டு.

இந்தக் கலாசாலையை நான் என் அன்னையைப்போல மதிப்பதுண்டு. அதன் அரவணைப்பு என்னுடன் என்றும் இருந்துவருவதாகவே நான் சிந்தையிற் செறித்துள்ளேன். அந்தக் காலத்திலே நான் பத்திரிகைகளுக்கு கதை, கட்டுரை, கவிதை ஆகியன எழுதி வந்ததை அறிந்த என் ஆசிரிய மாணவ நண்பர்கள் என் கற்பனை வளத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கித் தேவையான காதல் கடிதங்களாக வரையச் செய்வித்துப் பெறுவதுண்டு. அதற்காகப் பெறும் ஊதியம் பக்கத்தில் உள்ள சாப்பாட்டுக் கடையில் ஒரு சாப்பாடு!. ஒரு திரைப்படம் பார்க்கும் வாய்ப்பு!. அவ்வளவுதான்! என் அழகான கையெழுத்தில் எழுதப்பட்ட கடிதங்களை கையெழுத்திடாமலே அவர்கள் எடுத்துச்சென்று ஆனைப்பந்தியில் சேர்ப்பதுண்டு.

இவ்வாறான கடிதங்களில் மூன்று நிருவாகத்தின் கரத்தில் அகப்பட்டுக்கொண்டது. கோழைகளான அந்த ஆண் காதலர்கள் தப்பித்துக் கொண்டனர். நான் அகப்பட்டுக்கொண்டேன். இந்த இளம் வயதில் உனக்கு இப்படியொரு பெரிய எண்ணமா? என்ற எண்ணம் பரவலாயிற்று. அது செய்யாத குற்றத்திற்குக் கிடைத்த ஒரு தண்டனையாகவே கொண்டேன். தலைகுனிவுதான். ஆனாலும் கையெழுத்து என்னுடையதுதானே. எனவே எதுவும் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாத அவலநிலை. ஆனைப்பந்திப் பக்கம் போகவே பயந்தேன். இதன் காரணமாக நான் கலாசாலையிலிருந்து விலக்கப்படும் நிலையிலிருந்தேன். ஆனாலும் ஒரு விரிவுரையாளரின் துப்பறிதலால் நான் தப்பித்துக்கொண்டேன். இப்படியான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஆளாகும்வண்ணம் இருந்த எனக்கு இந்தக் கலாசாலை அன்னை அன்று தன் மடியில் இடம் தந்து காத்தாள்.

இப்படிப்பட்ட அன்னையின் "சீராட்டு" ஒன்றை நான் 1996ம் ஆண்டு கார்த்திகை மாதம் பதினொராந் திகதி நடந்த அதன் பொன் விழாவின்போது பெற்றேன். அந்தச் சீராட்டை "பனுவற் பாரி" என்று என்னை என் அன்னை அழைத்து வழங்கிய தினத்தன்று 15000 மைல்களுக்கு அப்பாலிருந்த என்னால் நேரில் சென்று பெறமுடியாதிருந்தது. என்றாலும் அது நான் இதுவரை பெற்ற பாராட்டுக்களிலும் பார்க்க நிறைவைத் தந்தது. இது ஒரு விருதல்ல என் அன்னையின் சீராட்டு என்று சொல்வதில் மிகவும் பெருமிதமடைகிறேன். அன்று எனக்குப் போர்த்த இருந்த பொன்னாடை அவள் என்னை அரவணைத்து மூடிய ஒரு போர்வை என்றே கருதுகிறேன். இந்த வைபவத்தில் கௌரவிக்கப்பட்ட திருவாளர்கள் மு. கணபதிப்பிள்ளை, த. செல்வநாயகம், க. விநாயகமூர்த்தி, வ.அ. இராசரெத்தினம், காரைதீவு விநாயகமூர்த்தி எனும் ஐவரும் என் ஒரு சாலை மாணவர்கள் நாங்கள் யாவரும் சம காலத்தில் அங்கு ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள், இவர்கள் ஐவரும் தாயகத்தில் பல விருதுகளைப் பெற்றவர்களெனும் போது கிடுகுக் கொட்டகைக் குருகுலக் கல்வி எவ்வளவு உயர்வானது என்பதை எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

நான் இந்த உலகில் வாழ்ந்த கால நினைவுகளை "வாழவைக்கும் நினைவுகள்" என்ற நூலாக வரலாற்றுப் பின்னணியில் எழுதி வருகிறேன். அதன் முதற் பகுதி "இளமைப் பருவச் சிந்தனைகள்" இது பத்து வருடங்களுக்கு முன்பே வெளிவந்தது. அடுத்தது "பள்ளிப் பருவச் சிந்தனைகள்" என்ற இரண்டாவது பகுதி. அதில் ஆசிரிய பயிற்சிக் காலச் சம்பவங்களை அசை மீட்டுள்ளேன்.

இனி இந்த நூல் பற்றிய முத்தாப்புக்கு வருகிறேன். பொன் விழாவில் கௌரவிக்கப்பட்டவர்களுள் ஒருவர் ஆரையம்பதி மு. கணபதிப்பிள்ளை. இவரை நாங்கள் மூனா கானா என்றே அழைப்பதுண்டு. இவர் ஒரு ஓவியர், கவிபாடும் புலமை மிக்கவர், அதைவிட எதிலும் ஒரு புதுமையைப் புகுத்த நினைப்பவர். அதன் பேறாக அவர் இரு மோடி மரபுக் கூத்துக்களில் புதியதொரு பரிசோதனை செய்ய முன்வந்தார். இது 1947ல் நல்லதொரு பலனைத் தந்தது. அதாவது "லட்சுமி கல்யாணம்" என்ற பெயரில் ஒரு வடமோடி நாடகத்தைத் தயாரித்தார். இதன் பாத்திரங்கள் கல்லூரி மாணவி, கூப்பன் கடை பரிசோதகர், வயற் சொந்தக்காரர், இப்படியான சாதாரண பாத்திரங்கள் தான். இவர்களைப் பின்னிய அந்த நாடகத்தில் ஆடை அலங்காரங்களும் நடைமுறையில் இருந்துவந்த வேட்டி, சால்வை, பாவாடை ஆகியனதான். சண்டைத் தருக்களில் அவர்கள் பாவித்த ஆயுதம் டோர்ச் லைட், ஆமணக்கந் தடி என்பனவாகும். நடித்தவர்களும் ஆசிரிய மாணவர்களே.

இதுவரை மரபு நாடகங்களாக இருந்துவந்த புராண, இதிகாசக் கருக்களை கொண்ட நாடக முறை, இதனால் ஒரு புதிய பரிமாணம் பெற்றது. பின்னர் இந்த நாடகத்திற்கு அகில இலங்கை ரீதியாக நல்ல வரவேற்பு இருந்தது. இது இட்ட அத்திவாரத்தில்தான் இலங்கையில் மோடிக் கூத்து மரபில் மலர்ச்சி ஏற்பட்டது. இதற்கு முன்பாக இவ்விதப் பரிசோதனை மரபுக் கூத்துக்களில் தமிழகத்திற்கூட செய்யப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆக்கப்பட்ட மரபுக் கூத்தின் தாய் என்று "லட்சுமி கல்யாண"த்தைச் சொல்வது தகும். இந்தத் திருப்புமுனையின் பிறப்பிடம் என்ற பெருமை மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலைக்குண்டு. வடமோடி தென்மோடிக் கூத்து மறுமலர்ச்சியைப் பொறுத்தளவில் இது ஒரு அழியாத பெருமை.

# ஆசான்களே...

செல்வி. எஸ். ஆனந்தி, ஆரம்பப்பிரிவு, முதலாம் வருடம்.

அழுது கொண்டிருக்கிறாள்
நேசமாதா
இரத்தம் சிந்தி
அழுது கொண்டிருக்கிறாள்.

அன்னவளின் துயரை
அழித்திடவே ஒன்றாய்
படையணி திரள்வோம்!
பாங்குடன் நடப்போம்.

இடையினில் வரும்
தடைகளைக் களைந்து
இன்முகத்துடனே- இனியொரு
புதுயுக மனிதனைப்
புதிதாய்ப் படைப்போம்!

எதிர்கால சமூகத்தைக்
கட்டி எழுப்பும்
வித்தகர் நாம் - இந்த
விந்தை உலகாள
வீரியம் நிறைந்த
சீரிய மனிதனைச்
சிரத்தையுடன் படைப்போம்!

ஐந்து வயதிலே
அன்னை மடியிறங்கி
பிஞ்சுக் குழந்தையாய்
பிரியத்துக்குரியதாய்
கொஞ்சும் மொழி பேசி
குலவ வருவான்.

அவன்
உள்ளத்தை மகிழ்வித்து
உரிய தேவையறிந்து
உள்ளும் வகை தெரிந்து
உவந்தளிப்போம் கல்வியை
பிள்ளை வளர்ந்திடுவான்
வெறும் பித்தனாய் அல்லாமல்
சொத்து என் பிள்ளை
என்று
சொல்லி மகிழும்படி
பிள்ளை வளர்ந்திடுவான்
அவனைப்
பெற்றவர் மகிழ்ந்திடுவர்.
ஆரம்பக் கல்வி
அத்திவாரம் போன்றது
அத்திவாரம் பிழைத்தால்
ஆட்டம் காண்பது
தவிர்க்க முடியாதது.

ஆழமாகப்
போடவேண்டியது
அத்திவாரமே!.....
அதற்கு மேல்
கட்டுபவை......
பிடிக்காது போனால்
பிறிதொன்றாய்க் கட்டலாம்.

பிள்ளைப் பிராயத்துப் புரளிகளும்
பின்பு அதனைப் பிழையென்று
உணர்ந்து கொண்டு வணங்குவதும்
பிரியத்துக்குரியவராய்
உரிமையோடு - பல
பிரச்சினைகள்
பேசுவதும்
சிரிப்பதுவும்
சிரிப்பினூடே
சிந்திப்பதும்
சிநேகமுள்ள
சீராசானுடன் அன்றோ?.....

அன்னை சொன்ன மொழி
அடுக்காமல் போகலாம்
அத்தன் சொல்
பித்தனின் அதட்டலாய்த்
தெரியலாம்.....
ஆசிரியன் மொழி என்றும்
அவ்வாறு ஆகாதே!
ஆஹா அதுவன்றோ
வேதமஹா வாக்கியம்.....

சூதுவாது தெரியாத
சுத்தமான மனமதியே
ஏது எவை என்றாலும்
அவை சூட்டுபவர்
நாம் அன்றோ?.....
ஆதலினால்
தோழர்களே
அற்புதமானதொரு
ஆற்றலுள்ள சமூகத்தை
ஆற்றும் பணியால் படைப்போம்
அன்னையின் துயர் துடைப்போம்

நேற்று
இந்த நேசத்து மங்கை
நிரம்ப வைத்திருந்தே
நேசத்தை.....
நேர்மையை....
பாசத்தை....
பரிவை...
ஊரோம்பும்
உத்தமத் தன்மைகள்
அனைத்தையும்....
மொத்தமாய்
மீண்டும்
குழைத்து....
பிசைந்து...
புதியதோர்....
உலகம் செய்வோம்.

அங்கு
அம்புகள் வேண்டாம்
அன்பே அதிகமிருக்கட்டும்
அதிகாரம் வேண்டாம்
அடக்கமே நிலவட்டும்
அடிமைத் தளை செய்ய
ஆட்களே இருக்க வேண்டாம்

அன்போடும் அறத்தோடும்
பண்போடும் வாழும்
பாங்கொன்று மலரட்டும்
புதுயுகம்-
புதிய சமூகம் சமைப்போம்.

வான் முட்டும்
கோபுரங்கள் மட்டும்
எங்கள்
வாழ்க்கையை உயர்த்தாது
என்று
வண்ணமுற
எடுத்துரைப்போம்!

அண்டவெளியைச்
சுற்றி
அரண் அமைத்தாலும்
அதிலொன்றும்
பயனில்லை......

வெளியில் பகை
இருந்தாலன்றோ
வேலிகள் பயன்படும்
என்ற வேதாந்தம்
விண்டுரைப்போம்.

எந்த மொழியும் இலா
அன்பிருந்தால்
மொத்தமும் வசப்படும்
என்று
எண்ணவும்
எண்ணியபடி
இயங்கவும் - ஒரு
விண்முரசு கொட்டும்
வேத சமூகம்
விரைவாய்ப் படைப்போம்
விரைந்து வாரீர்.



# ஆக்கமும் அழிவும்

திரு. கு. சிவராஜா, முதலாம் வருடம், ஆரம்பப்பிரிவு.

இன்று உலக சமுதாயம் எதிர் நோக்கும் பாரிய அளவிலான அச்சுறுத்தலாக இருந்து வருவது அணுக்குண்டாகும். அறிவியல் வளர்ச்சி ஓர் உயர் நிலையை எய்தியதன் பயனாக பல நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் அதே வேளை இவ்வணுக்குண்டையும் பிரசவித்துள்ளது. சமூகத்தின் நிரந்தர இருப்பையும் கட்டுக்கோப்பான நலனையும் பாதிக்கும் காரணிகளாக வரட்சி, வெள்ளம், சூறாவளி, பூகம்பம், எரிமலை போன்றவை இருப்பினும் தற்காலத்தில் உடனடி அச்சுறுத்தலாக இருப்பது அணுக்குண்டு என்பதில் ஐயமில்லை.

நவீன உலகின் அணுஆயுத வல்லரசுகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா ஆகிய நாடுகள் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவ்வரசுகள் இதற்குத் துணையாக விமானங்கள், தாங்கிகள், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், இரசாயன ஆயுதங்கள் போன்றவற்றையும் உற்பத்தி செய்து வைத்திருக்கின்றன. அடுத்து அணுக்குண்டுகளை உற்பத்தி செய்து இரகசியமாக வைத்திருக்கும் அல்லது அணுக்குண்டு உற்பத்திக்கான தொழில்நுட்ப ஆற்றலையும் வளத்தையும் கொண்டிருக்கும் அணியில் இஸ்ரேல், ஈராக், ஈரான், கியூபா, வடகொரியா, சிரியா, ஜப்பான், லிபியா ஆகிய நாடுகள் உள்ளன. இவ்வளங்கள் அனைத்தையும் பெற்றிருந்தும் 1990, 91ஆம் ஆண்டு காலப்பகுதியில் அணுக்குண்டு உற்பத்தி முயற்சியைக் கைவிட்டு மனித வாழ்வை மேம்படுத்தும் அணியில் அல்ஜீரியா, ஆஜென்டினா, உக்ரேன், கஜகஸ்தான், பெலாரஸ், பிறேசில், தென்ஆபிரிக்கா போன்ற நாட்டின் அரசுகள் முயற்சித்து வருவது அறியற்பாலது.

அணுச்சோதனைகளைத் தொடராக நடாத்தி வெற்றியளித்ததன் காரணமாக அவை பெருமளவு அணுக்குண்டுகளை வைத்திருக்கின்றன. அதன் விபரம் பின்வருமாறு,

| அணுஆயுத நாடுகள் | 1வது அணுச்சோதனை நிகழ்த்திய ஆண்டு | அணுச்சோதனைகளின் எண்ணிக்கை | அணுக்குண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அமெரிக்கா | 1945 | 1030 | 12070 |
| ரஷ்யா | 1949 | 715 | 22500 |
| பிரிட்டன் | 1952 | 45 | 380 |
| பிரான்ஸ் | 1961 | 210 | 500 |
| சீனா | 1964 | 45 | 450 |
| இந்தியா | 1974 | 07 | 65 |
| பாகிஸ்தான் | 1972 | 08 | 15-25 |

இன்றுவரை உலகில் இருந்த ஐந்து அணுவாயுத நாடுகளின் நிலையைத் தாமும் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஈடுபட்டுள்ளன. 1998மே மாதத்தில் இவ்விரு நாடுகளும் ஏட்டிக்குப் போட்டியாக நடாத்திய அணுப்பரிசோதனைகள் இதனையே வெளிப்படுத்துகின்றன. இதன் காரணமாக உலக மக்களைப் பெரும் பரபரப்பில் ஆழ்த்தியிருப்பது

கூர்ந்து நோக்கத்தக்கதாகும். இவ்வாறான பரிசோதனைகள் நிலத்துக்கடியில் 8000' ஆழத்திலும் நீரின் கீழ் 2000' ஆழத்திலும் விண்ணில் 200மைல்களுக்கு அப்பாலும் நடாத்தப்பட்டுள்ளன. இன்றுவரை நடைபெற்றுள்ள பரிசோதனை அணுவின் நிறை 438 மெகா தொன்களாகும். இதனால் வளிமண்டலத்தில் 4800kg புளுட்டோனியமும் பூமியில் 3830kg புளுட்டோனியமும் கலந்திருக்கின்றது. பசுபிக்கில் அமெரிக்கா மேற்கொண்ட பரிசோதனையினால் ஒரு தீவுப்பகுதி கடலில் அமிழ்ந்துள்ளது. மற்றும் கதிர்வீச்சால் நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக அண்மையில் இந்தியா நடாத்திய பரிசோதனையின் கதிர் வீச்சுக்கள் மூக்கழற்சி, நுரையீரலழற்சி, தோற்புண் என்பனவற்றை ஏற்படுத்தியுள்ளதைக் குறிப்பிடலாம்.

வல்லரசுகள் ஐந்தும் தமது நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையிலும் உலகின் அமைதியைப் பேணுகின்றோம்என்ற பாசாங்கிலும் அணுக்குண்டை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. அன்றியும் ஏனைய நாடுகளின் சிந்தனைக்கும் ஆற்றலுக்கும் முடிச்சுப்போடும் செயலாக 1968ஆம் ஆண்டின் அணுஆயுத பரவல் தடை உடன்படிக்கையையும் 1997ல் முழுஅளவிலான அணுவெடிச் சோதனைத்தடை ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றன. இதற்கமைவாக வலிமையற்ற 149 நாடுகள் உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளன. இதன் நியாயபூர்வமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி இந்தியா, கியூபா, பாகிஸ்தான், ஆகிய நாடுகள் உடன்பட மறுத்துவருகின்றன. அத்துடன் உலகின் அரசநிர்வாகமாக இயங்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர இவ்வல்லரசுகள் உறுப்புரிமை பெற்றுத் திகழ்கின்றன. இதனால் உலக நாடுகளின் பாதுகாப்பு ஆயுதப் பரிகரணம் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கவும், கட்டுப்படுத்தவும், திருத்தங்களைச் செய்யவுமான இரத்து அதிகாரத்தினையும் (Veto Power) பெற்றிருக்கின்றன. இந்நிலை ஏனைய நாடுகளின் மத்தியில் அச்சத்தையும், பதற்றத்தையும் அதிகரித்திருக்கின்றது. மேலும், இவ்வல்லரசுகளின் பொய்மையை நிரூபிப்பதுடன் தாங்கள் மட்டுமே உலகின் மேலாண்மையை பெற்றிருக்க வேண்டுமென முயற்சிப்பதும் தெளிவாகின்றது.

அறிவியல் வளர்ச்சியின் மத்திய காலப்பகுதியில் அணுவைப் பிளக்கமுடியாது என்ற கருத்து நிலவியது. இருப்பினும் 1933இல் என்ரிகோ பேமி (Enrico Fermi) தனியே கருப்பிளவு ஏற்படாதவகையில் எடுத்து அவற்றிற்கிடையே காபன் துண்டைச் செலுத்தி நியூட்ரன் வீச்சைக்கட்டுப்படுத்த வேண்டும்; பின் காபன் கோலை விலக்கிக் கொண்டுவரும்போது ஒரு சங்கிலித் தொடர்தாக்கம் அணுவைப்பிளந்து பெருமளவு சக்தி கிடைக்குமென கண்டறிந்தார். 1938இல் அணுவைப் பிளக்க முடியுமென ஜெர்மனிய விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர். அத்துடன் பல அணுக்களை அவற்றின் கருக்களைப் பிளக்கச் செய்வதால் பெருமளவு சக்தி பெறலாம் என அல்பர்ட் ஐன்ஸ்டைன் என்னும் விஞ்ஞானி கண்டறிந்தார். இவரின் முடிவு அனைத்து நாட்டின் அறிஞர்களின் ஆராய்ச்சியின் பின் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டது. இதன் விளைவு அணுக்குண்டின் தோற்றத்திற்கு வழிகோலியது.

அணுக்குண்டென்பது யாது? அதன் மூலப்பொருட்களும் இயக்கமும் பற்றி நோக்குவோம். அணுக்குண்டு உற்பத்திக்கு யூரேனியம், புளுட்டோனியம், லித்தியம், பெரிலியம், ரெப்டோனியம் போன்ற அணுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. யூரேனியம் $^{235}U$, $^{238}U$ என இருவகைப்படும். யூரேனியம் $^{238}U$ ஐ அணு உலையிலிடப்பட்டு புளுட்டோனியமாக மாற்றப்படுகிறது. இந்த அணுக்கள் பலவற்றைச் சேர்த்து பிளக்கச் செய்தல் வேண்டும். அணுக்கருவைப் பிளக்க நியூத்திரன்களை மெதுவாக யூரேனியத்தின் மீது மோதச் செய்ய வேண்டும். இங்கு அணுக்கரு பிளக்கும் போது அதிலுள்ள நியூத்திரன் மற்றுமொரு அணுக்கருவைப் பிளக்கின்றது. இவ்வாறு சங்கிலித்தொடராக நிகழும் தாக்கம் மற்ற அணுக்கருக்களையும் பிளப்பதால் கிடைக்கும் பெருமளவு சக்தியின் மூலம் அணுகுண்டு வெடிக்க வைக்கப்படுகிறது. இவ்வெடிப்புக்கள் இருவகைப்படும்.

1. அணுக்கருக்களை ஒன்றுடன் ஒன்று மோதச் செய்து வெடிக்க வைப்பதற்கு உதாரணம், மின்காந்த அதிர்வுக் குண்டு (EMB) T.N.T குண்டு, யூரேனியக் குண்டு, புளுடோனியக் குண்டு என்பனவாகும்.

2. அணுக்களை உருக்குவதால் வெடிக்க வைக்கப்படுவது.
   உதாரணம் : ஹைற்ரஜன் குண்டு.

அணுமின் காந்தக் குண்டு வெடிப்பதனால் மின் விநியோகம், செய்தித் தொடர்புகள், கணனி இயக்கம், மின் அணுக்கருவிகள் போன்றவை செயலிழக்கும். மின் காந்த மண்டலம் ஏற்படும். T.N.T குண்டு வெடிக்கும் போது 2000 பீரங்கிகள் ஒருமித்து வெடிக்கும் ஒலியை எழுப்பும். உயிர்கள், கட்டிடங்கள் அனைத்தும் அழிந்து சாம்பலாகும். நியூத்திரன் குண்டு உயிர்களை மட்டும் அழிக்கும். ஏனைய கட்டிடங்கள், சொத்துக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. மனித உடலின் சாதாரண வெப்பநிலை $37^0$C ஆகும். ஆயின் ஒரு அணுகுண்டு வெடிப்பு $10,0000000^0$C வெப்பத்தை ஏற்படுத்தும். ஒரு மெஹா தொன் நிறை அணுகுண்டு வெடிப்பு உலகெங்கும் பாரிய தீச்சுவாலையை உண்டாக்கும். நாடு, நகரங்கள், வளங்கள் யாவற்றையும் அழிக்கும். வளிமண்டலத்தின் படைமண்டலத்தில் பெருமளவு புகை படியும். அங்கு ஒரு இலட்சம் நிறையளவான தூசும் மண்ணும் கலந்து விடும். இதனால் சூரிய ஒளி பூமியில் விழாது வருடக்கணக்கில் இரவின் தன்மையும் நீடிக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

அணுக்குண்டுத் தாக்கம் பற்றிய இச்சிறு ஆய்வில் கடந்த கால அனுபவத்தை மீட்டுப்பார்ப்போமாயின் அது அழிவுக்குரிய பாதையை விட்டு நலத்திற்கு வழிசமைக்கும் ஒரு படியாகும். 2ஆம் உலகப்போர் உக்கிரமடைந்த போது அமெரிக்காவால் 1945.08.06 அன்று 4500kg நிறையுடைய இரு குண்டுகள் ஹீரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் மீது வீசப்பட்டன. இதனால் அதிர்ச்சியலை நிமிடத்திற்கு 12 மைல் வேகத்தில் பரவியது. 7 சதுர மைல் பரப்பில் இருந்த சகல கட்டிடங்களும் அழிக்கப்பட்டன. அணுக்கதிர் வீச்சின் (Radio Activity) தாக்கம் காரணமாக 150,000க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். அன்றியும் கதிர் வீச்சின் தாக்கத்தால் இந்நகரங்களில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இன்றும் அங்கவீனர்களாக பிறந்து கொண்டிருக்கின்றனர். இவ் அனர்த்தத்தை ஏற்படுத்திய (Little Boy) சின்னப்பையன் குண்டுடன் ஒப்பிடும் போது தற்காலத்தில் உள்ளவை 29200 மடங்கு பெரியன என்பதை அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

இந்த அணுக்கதிர் வீச்சு மனித நலனை அழிக்கும் ஒரு சக்தியாக உள்ள போதிலும் மனித நல விருத்தியை ஆக்கும் ஒன்றாகவும் உள்ளது. அது போரின் பேராபத்தை நோக்கிய நகர்வை விடுத்து மனிதனுக்கு எவ்வெவ் வழிவகைகளில் உதவுகிறது என்பதை இங்கு சிறிது நோக்குவோம். அந்த வகையில் முறையே எக்ஸ், அல்பா, பீற்றா, காமா, ஆகிய கதிர்களை அணுமின் உற்பத்தி, போக்குவரத்து, மருத்துவம், விவசாயம், கைத்தொழில், தொல்பொருள் ஆய்வு போன்ற துறைகளின் ஆக்கத்திற்கு பயன்படுத்த முடிகின்றது. சக்திகளுள் வெப்பம், மின், ஒலி, ஒளி, சூரிய சக்தி போன்றவற்றில் மின்சக்தி, அணுசக்தி என்பன மிகப் பிரபல்யமானதாக உள்ளன. இவ்வணுசக்தி அணுவைப் பிளப்பதன் மூலம் உருவாகிறது. இத்தொழிற்பாட்டின் போது அணுத்திணிவு அழிக்கப்பட்டு கதிர்வீச்சுக்களாகவும், வெப்பசக்தியாகவும் பெறப்படுகிறது. இம்மாற்றம் அணு உலையிலும் அணுகுண்டிலும் பிளவுறும் மூலகங்களான யுரேனியம், பொலோனியம் போன்றவற்றில் உற்பத்தியாக்கப்படுகிறது. அணு உலையில் இத்தாக்கம் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் செய்யப்பட்டு வெளிவிடப்படும் வெப்பமானது பெறப்பட்டு அவ்வெப்ப சக்தியைக் கொண்டு உருளைகளையும், மின்பிறப்பாக்கிகளையும் இயக்கி மின்சக்தி பெறப்படுகிறது. அணுஉலையில் பிறப்பிக்கப்படும் வெப்பத்தைக் கொண்டு பெறப்படும் மின்சக்தியை மனித வாழ்வின் எண்ணிலடங்கா தேவைகளின் போது பயன்படுத்தலாம். மனித தேவை பல்கிப் பெருகிக் கொண்டு செல்லும் இக்காலத்தில் போக்குவரத்து மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். இப்போக்குவரத்து சௌகரியம், விரைவு, செலவின்மை என்பன நிறைந்திருக்க வேண்டும் என்பதால் அணுஉலையில் பெறப்படும் மின்சக்தி இத்தேவையை முழுமை செய்யும் ஒரு அலகாக அமைந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதாகின்றது. வருங்காலத்தில் எரிபொருள் தீர்ந்துவிடும் போது இம்மின்சக்தி மாற்றீடாக உள்ளது என்பதும் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

மனித உடலை புற்றுநோய் பாதிக்கும்போது கதிர்த்தொழிற்பாடுடைய தலியம்-201 சமதானியை நோயாளிக்குக் கொடுத்து சில மணி நேரங்களில் காமா கமராவால் (காமா Camera) ஒளிப்படம் எடுத்து கண்டுபிடிக்கலாம். உடலில் சுரப்புக்கள் சரியாகத் தொழிற்படுகிறதா இல்லையா என்பதை கண்டறிய வேண்டின், அயடின் -131 கலந்த உணவைக் கொடுத்து சில மணித்தியாலயங்களில் கைகர் எண்ணி மூலம் அகச்சுரப்பி அயடினை உறுஞ்சும் விகிதத்தைத் துணிந்து கேடய சுரப்பியின் இயங்குதிறனை மதிப்பிடலாம். சத்திரசிகிச்சைக் கருவிகள், உட்பாய்ச்சிகள் ஆகியவற்றின் போலிச் கிருமிகளை அளிக்கவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலங்களை அளிக்கவும், தொற்றுநீக்கவும் காமா கதிர்வீச்சு பயன்படுத்தப்படுகிறது.

பொட்டாசியம், பொஸ்பரசு ஆகிய மூலகங்கள் தாவர வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். எனவே வெவ்வேறு உரங்களிலுள்ள மூலகங்களை தாவரம் எவ்வளவு விகிதத்தில் உறுஞ்சுகின்றன என்பதை கதிர்த்தொழிற்பாட்டு சமதானிகளை உரங்களுடன் கலந்து இடுவதன் மூலம் கண்டு கொள்ளலாம். உதாரணமாக பொஸ்பேற்று உரங்களில் கதிர்த்தொழிற்பாட்டுடைய P-31 ஐ வெவ்வேறு அளவுகளில் சேர்த்து இவ்வுரங்கள் தாவரங்கட்கு இட்டு சில நாட்களின் பின் தாவரத்தின் செயற்பாட்டை அறிய முடிகின்றது.

கடதாசி, அலுமினியத்தகடு, இரும்புத்தகடு என்பவற்றின் தடிப்பு சீரானதா இல்லையா என்பதை அறிய தகட்டின் மேல் கைகர் (Geigar) கருவியை வைத்து பின் அது கதிர்களை எவ்வளவிற்கு உறுஞ்சுகின்றது என்று மதிப்பிடப்படுகிறது.

கைகரின் இம் மதிப்பீட்டிலிருந்து தகடு சீரானதா? இல்லையா? என்பதும் எவ்விடத்தில் சீரற்ற தன்மை காணப்படுகிறது என்பதும் கண்டுபிடிக்கப்படுகின்றது. நிலத்தின்கீழ் அமைந்திருக்கும் நீர்க்குழாயில் அல்லது எண்ணெய்க்குழாயில் ஏற்படும் துவாரத்தை குறுகிய அரைஆயுளுடைய அயடின் - 31ஐச் செலுத்திக் கண்டுபிடிக்கலாம். இவ்அயடின்-31 குழாயினூடாகச் செலுத்தி அது வெளிவிடும் காமாவை கதிர்வீச்சை அவதானிக்கும் போது அக்கதிர்கள் துவாரத்தினூடாக வெளிவரும் இடத்தைக்கண்டு துவாரத்தை அறியலாம். உணவுப் பொருட்களை கலன்களில் அடைக்கும் போது அதனுள் கிருமிகளை அழிப்பதற்கு காமா கதிர் வீச்சுக்கள் பிரயோகிக்கப்படுகின்றது. இயந்திர சாதனங்களின் தேய்வுறும் விகிதத்தை அறிய வேண்டுமாயின் அச்சாணியின் உராய்வுக்குள்ளாகும் பாகத்தை நியூத்திரன்களால் தாக்கி Fe-59 ஐ உருவாக்க வேண்டும். இப்பகுதியை மீண்டும் இயந்திரத்தினால் பொருத்தி தொழிற்பட வைத்தால் தேய்வுற்ற இரும்பு பயன்படுத்தப்பட்ட உராய்வுநீக்கியில் கலந்து விடும். இவ்வுராய்வு நீக்கியின் கதிர் வீச்சை கைகர் எண்ணி மூலம் அளந்து இயந்திரப்பகுதியின் தேய்வு விகிதம் அளவிடப்படுகிறது.

C- 14 என்னும் கதிர் தொழிற்பாட்டு சமதானியைக் கொண்டு உலகம்தோன்றிய வருடங்களின் எண்ணிக்கையை தொல்பொருட்களின் வயது, அழிந்து போன மிருகங்களின் எச்சங்கள் என்பவற்றை ஆராய்ந்து அறிய முடிகின்றது. இவற்றை ஆராய்ந்து இவ்விடயத்தை அறிந்து கொள்வதற்கு ஏற்கனவே உள்ள முறைகளை விட C- 14 சமதானியைப் பிரயோகித்து உலகின் வயதை நிச்சயிக்கலாம் என்பது ஒரு முன்னேற்றகரமான செயலாக அமைந்திருக்கின்றது. இவ்வாறு அணுக்கதிர் வீச்சை மனிதனின் நாளாந்த வாழ்க்கையில் பல வளர்ச்சிப் படிகளுக்குப் பயன்படுத்தலாம் என்பது வெளிப்படை அணுப்பிளவின் போதும் அணுக்குண்டு வெடிப்பின்போதும் வெளியேற்றப்படும் அணுக்கதிர் வீச்சுக்கள் மனித உடலை ஊடுருவி கலங்களில் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் கதிர்த் தொழிற்பாட்டு மூலங்களுடைய உணவை உண்பதாலும் அல்பா, பீற்றா, காமா கதிர் ஊடுருவல்களாலும் மனித உடல் உறுப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மனித தேவை அதிகரித்து அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் இவ்வாறு பெறப்படும் சக்தியினால் உலக ஜீவராசிகளை அழித்து பாலைவனத்தையும் விட கீழான நிலைக்கு உயிரினங்கள் வாழமுடியாத பிரதேசங்களாக மாற்றுவதை கைவிட வேண்டும். இதற்கு ஹீரோசிமா நாகசாகி அனுபவம் தக்க சான்றாகும். எனவே இவ்வழிவுப் பாதையைத் தவிர்த்து மனித மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல் வேண்டும். இந்த அணுகுண்டு உற்பத்திச் செலவீனங்களை உலகின் வறிய நாடுகளில் நிலவும் வீடமைப்பு, கல்வி, மருத்துவம், உணவு உற்பத்தி, போன்ற தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய தற்கால நவீன அறிவியலாளர்கள் முன்வர வேண்டும்.

*உசாத்துணை:*

நட்சத்திரப்போர் - மு. வரதராசா.

இயந்திர மனிதன் - பெரிஸ் பெக்கர்

இந்தியா டுடே.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றது.



# மனிதனும் கணனியும்

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்றால், மனித மாண்புகளை கேள்விக்குறிகளாக்கும் ஒரு அதிசயப் பிறவி என்றால், அதுதான் கணனி. வேலைப்பளுவைக் குறைத்துக்கொள்ளவும், புதிய புதிய கண்டுபிடிப்புகளினூடாக விஞ்ஞான வளர்ச்சியின் உச்சநிலையை அடைவதற்கும் கணனியானது முன்னிலை வகிக்கின்றதென்றால் அதன் பெருமை சொல்லிலடங்காது.

1646 இல் "பளெயஸ் பஸ்கால்" என்ற பிரான்சுக்காரர் உலகில் முதன் முதல் கூட்டல் போடும் இயந்திரத்தை உருவாக்கியபோதே கணனி யுகமானது ஆரம்பமானது எனலாம். இதனைத் தொடர்ந்து கணனியானது மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கணனியின் முதலாவது பிரிவில் கணனிக்கு ஆணையிடல், விபரமளித்தல் என்பதையும், இரண்டாவது பிரிவானது மனித மூளையைப் போன்று சிந்தித்து எமக்குத் தரமான முடிவுகளைத் தரவல்லதாகவும், மூன்றாவது பிரிவானது முடிவுகளைப் பெறுவதற்கான காட்சித்திரையையும் அச்சுப் பொறியையும் பயன்படுத்தி முடிவுகளைத் தரும் ஒரு அமைப்பாகவும் இக்கணனிப் பிரிவுகள் துலங்குகின்றது.

கணனியை இயக்கவைக்க வேண்டுமெனில் மொழியானது ஒரு முக்கிய ஊடகமாகக் காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் மொழியமைப்பை நோக்குகின்றபோது பல்வேறுபட்ட மொழியமைப்புக்கள் காணப்படுகின்றது. ஆனால் கணனிக்கோ எந்தவொரு மொழியமைப்பும் கிடையாது. அதற்கு 0, 1 என்னும் இரு குறியீட்டு எண்தான் காணப்படுகின்றது. இக்கணனியானது கட்டளையிட்டு இயங்குவதற்கு பல வழியமைப்புக்கள் தேவைப்படுகின்றன. எந்த முறையிலும் சரி, எந்த மொழியிலும் சரி கணனிக்குக் கொடுக்கப்படும் செய்திகள் எழுதப்பட்டாலும் கணனிக்குரிய குறிப்பிட்ட அதற்குப் பொருத்தமான மொழியைக் கொண்டுதான் எந்தச் செயற்பாடுகளையும் செய்யக்கூடியதாக இருக்கின்றது. எனவே, எந்த மொழியைப் பயன்படுத்தி கணனியின் முடிவுகளைப் பெறத் தூண்டப்பட்டாலும் அது, கணனி மொழிக்கு மாற்றியமைக்கப்படுகின்றது.

இன்று மனிதனிடையே மனிதனா? கணனியா? முக்கிய இடம் என்று கேட்டால் அனேகமான மக்கள் கணனியேதான் என்று கூறுவர். எது எவ்வாறு இருந்தாலும் மனிதனால் மனிதனுக்காக, மனித தேவைக்காக உருவாக்கப்பட்ட ஒரு உயரிய சாதனம் கணனியே ஆகும். எவ்வாறாக இருப்பினும் கணனியானது மனிதனது அறிவுறுத்தல்கள் எதுவுமில்லாமல் எந்தவொரு வேலையையும் செய்ய முடியாதுள்ளது. இதற்குச் சுய நுண்ணறிவு இல்லாததால் இதன் நுண்ணறிவு எண்ணிக்கை (-1, Q)0என்று சொல்லப்படுகின்றது. இது மனிதச் செயற்பாட்டிற்கு உட்பட்டிருப்பினும் அதன் தன்மை, வேகம், தவறின்மை, ஞாபகசக்தி என்பனவற்றில் ஒருபடி மேலோங்கி நிற்பதை இன்றைய விஞ்ஞான யுகத்தில் அறிய முடிகின்றது.

மனிதன் மனிதனை ஆளத் தொடங்குமுன் இன்று கணனியை ஆளத் தொடங்குகின்றான். இன்று கணித உலகில் மனிதனால் உடன் செய்யமுடியாத பல இலக்கங்களைக் கொண்ட முடிவுகளை ஒரு விநாடிக்குள் துல்லியமாகத் தருவதில் கணனி மனிதனை வென்றதென்றால் அது உண்மையே. சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கு ஈடாக இன்றைய நூற்றாண்டில் இக்கணனி தொழிற்படுகின்றது எனக் குறிப்பிடலாம்.

இன்றைய நவீன உலகத்தில் கணனியின் யுகத்தில் காலடி வைத்து கம்பீரமாக வாழுகின்ற இக்காலத்திலே ஒரு மனிதன் தன் பிறப்பில் இருந்து இறப்புவரை காணப்படும் நிகழ்வுகளில் அவனுடைய பங்களிப்பு என்ன? அவனுடைய பயன்பாடு என்ன? முழுமை என்ன? குறைபாடு என்ன? போன்ற வினாக்களுக்கு முழுமையான முடிவுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இக்கணினியின் செயற்பாடு காணப்படுகின்றதென்றால் அது மிகையாகாது. ஒரு குழந்தையானது வெளி உலகத்திற்குத் தான் யார் என்பதை அறிமுகமாக்கும் முன்னமே அக்குழந்தையானது ஆணா? பெண்ணா? அதன் தன்னியல்பான தன்மை என்ன? எதிர்கால நிலைப்பாடு என்ன? என்பதையும் வெளிக்காட்டக்கூடிய தரவுகளை இக்கணனி மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இவ்வாறே சுகாதாரத் துறையில் நோயுடன் சம்பந்தமானதும் சுகவாழ்வுடன் சம்பந்தமான தரவுகளையும், குற்றப் புலனாய்வுத்துறையில் குற்றவாளி யார்? சுற்றவாளி யார்? என்பது பற்றிய தரவுகளையும், உணவுத்துறையில் காலாவதியாகிய உணவுகளை எவ்வாறு அறிதல்? போஷாக்கான உணவுகளை எவ்வாறு அறிதல்? போன்ற மனிதனோடு தொடர்புபட்ட பல தரவுகளையும் அதனால் உண்டாகின்ற சாதக பாதக நிலைமைகளையும் அறிந்து நல்லதொரு மனித சமூகத்தை உருவாக்குவதற்கு இக்கணனியானது பயன்படுத்தப்படுகிறது.

இன்றைய காலகட்டத்திலே ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனையின் வேறுபாட்டுத் தன்மையை நுணுக்கமான முறையில் அமைக்கவும், செயல்படுத்தவும் கணனியானது திறமை பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் இப்படித்தான் வாழவேண்டுமென்று நினைக்கும் பட்சத்தில் தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கின்றான்; செயல்ரீதியில் காட்ட முனைகின்றான். ஆனால் அவன் வாழ்க்கையை வெளிக்காட்டும் முன்னமேஅவன் வாழ்க்கையைக் குறித்தும் அவன் நிலைப்பாடு குறித்தும் அறியும் திறனைக் கணனியானது விவேகப்படுத்திக் கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது. அதுமாத்திரமன்றி இன்று உலகில் நடக்கும் நிகழ்வுகளையும், செய்திகளையும் விண்வெளியில் ஏவப்பட்டுள்ள சற்றலைட் (Shatter Light) என்னும் விண்கலம் உள்வாங்கிக் கொள்கிறது. அப்படி உள்வாங்கிய செய்திகளையும், நிகழ்வுகளையும் இன்டர்நெற் (Internet) என்னும் கம்பியில்லாத் தந்தித் தொடர்புமூலம் கணனியானது ஈர்ந்து எமக்கு நிழற்படமாகவும், செய்தியாகவும் தந்து உதவுகின்றது.

கணனியானது மனிதனிலும் மேம்படும் தன்மையை நோக்குகின்றபோது ரஷ்ய நாட்டின் சதுரங்க விளையாட்டில் தலைசிறந்த வீரரான கோபர்ஸ்வேவ் என்பவரும் இந்திய நாட்டில் தலைசிறந்த வீரரான ஆனந்த் என்பவரும் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள் என்பது உலகளாவிய ரீதியில் மக்கள் கண்டறிந்த உண்மை. இவர்கள் இருவருடனும் யாருமே போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது என்ற எண்ணப்பாட்டைத் தகர்த்தெறிந்து மனிதனையே தோற்கடிக்கச் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டில் கணனியானது இவ்வீரர்களுடன் விளையாடி வெற்றியீட்டியதன் பெருமை, ஆகா! கணனி என்றால் சொல்ல முடியாது.

பொதுவாக இன்றைய கணனி யுகமானது கல்வித்துறை, போக்குவரத்துத்துறை, தொழிற்துறை, விண்வெளித்துறை, பாதுகாப்புத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. இந்தவகையில் கணனியின் பங்களிப்பு மனிதவாழ்வில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. எனினும் கணனியால் சில காரியங்களைச் செய்ய முடியாதுள்ளது என்பது விஞ்ஞானிகளின் கூற்றாகும். உதாரணமாக மனித மூளையின் பகுத்தறியும் தன்மையின் அமைப்பையும், மனித மூளையானது எப்படித் தொழிற்படுகின்றது என்றும், மூளையின் ஞாபக அமைப்பு எப்படித் தொழிற்படுகின்றது என்றும் இன்றுகூட மனித அறிவியலால் கண்டுபிடிக்க முடியாதுள்ளது.

இன்றைய காலத்தில் போரா! சமாதானமா! உள்நாட்டுப்போரா! வெளிநாட்டுப் போரா! புரியவில்லை. இவ்வாறான காலகட்டத்தில் மனிதனை, மனிதனாக, மனித மாண்புடன் வளமாக வாழவும் தனது எதிர்கால நிகழ்வுகளை நிகழ்காலத்தில் கண்டுணரவும் இக்காலத்தில் கணனியின் கண்டுபிடிப்பு, விவேகச் செயன்முறைகள் என்பவற்றை கணனியானது செய்து மனித வாழ்வை விழிப்படையச் செய்கிறது, திகைப்படையச் செய்கிறது என்றால், அது உண்மையன்றி வேறில்லை.

*திருமதி. என். யேசு மேரி*
*ஆரம்பப்பிரிவு, முதலாம் வருடம்.*

# ஒரே பார்வையில் நால்வர்

திரு. என். செந்திதாசன
கணிதப்பிரிவு. முதலாம் வருடம்.

| சமய குரவர்கள் | திருஞானசம்பந்தர் | திருநாவுக்கரசர் | சுந்தர மூர்த்தி நாயனார் | மாணிக்கவாசகர் |
|---|---|---|---|---|
| 01. பிறந்த இடம் | சீர்காழி | திருவாரூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| 02. பிள்ளைத் திருநாமம் | பிள்ளையார் | மருணீக்கியார் | நம்பியாரூரர் | வாதவூரர் |
| 03. தாய் பெயர் | பகவதியார் | மாதினியார் | இசைஞானியார் | சிவஞானவதி |
| 04. தந்தை பெயர் | சிவபாத விருதயர் | புகழனார் | சடையனார் | சம்புபாதாசிரியர் |
| 05. முதன் முதல் பாடிய பாடல் | தோடுடைய செவி... | கூற்றாயினவாறு... | பித்தாபிறைசூடி.... | நமச்சிவாய வாழ்க.. |
| 06. முதன் முதலில் பாடிய திருத்தலம் | சீர்காழி | திருவதிகை | திருவெண்ணெய் நல்லூர் | சிதம்பரம் |
| 07. இறுதியாகப் பாடிய பாடல் | காதலாகி கசிந்து... | எண்ணுகேன் என்... | தலைக்குத் தலை மாலை... | திருக்கோவையார் |
| 08. இறுதியாகப் பாடிய திருத்தலம் | திருநல்லூர் | திருப்புகலூர் | திருவஞ்சைக்களம் | தில்லை |
| 09. ஒழுகிய நெறி | கிரியை | சரியை | யோகம் | ஞானம் |
| 10. ஒழுகிய மார்க்கம் | சற்புத்திரமார்க்கம் | தாசமார்க்கம் | சகமார்க்கம் | சன்மார்க்கம் |
| 11. முத்தியடைந்த வயது | 16 | 81 | 18 | 32 |
| 12. அடைந்த முத்தி | சாமீபம் | சாலோகம் | சாரூபம் | சாயுச்சியம் |
| 13. வாழ்ந்த நூற்றாண்டு | 7ம் நூற்றாண்டு இடைப்பகுதி | 7ம் நூற்றாண்டு நடுப்பகுதி | 9ம் நூற்றாண்டு நடுப்பகுதி | - - |
| 14. குரு பூசை தினம் | வைகாசி மூலம் | சித்திரைச் சதயம் | ஆடிச்சுவாதி | ஆனிமகம் |
| 15. திருப்பாடல் அடங்கியுள்ள திருமுறைகள் | 1, 2, 3, ஆம் திருமுறைகள் | 4, 5, 6ஆம் திருமுறைகள் | 7ம் திருமுறை | 8ம் திருமுறை |
| 16. பாடிய மொத்தப் பதிகம் | 16000 | 49000 | 38000 | -1058 பாடல்கள் |
| 17. தற்போதுள்ள மொத்தப் பதிகம் | 384 | 311 | 100 | - |
| 18. பெற்ற தீட்சை | நயனதீட்சை | திருவடித்தீட்சை | திருவடித்தீட்சை | திருவடித்தீட்சை |



# குழந்தை இலக்கிய வரிசையில்

# மகாகவி பாரதியின்

# பாப்பாப் பாட்டு

தமிழ் இலக்கியத்தில் குழந்தை இலக்கியம் என்பது இன்று ஒரு துறையாகவே வளர்ச்சியடைந்துள்ளது. குழந்தை இலக்கியத்தின் வரலாறு கி. பி. 6ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆல்ட் கெல்ம் (604-709) என்னும் பாதிரியாரின் வினாவிடைக் கவிதை நூலோடு தோன்றுவதாக அறிஞர் கூறுவர். ஆனாலும் வாய்வழி செவிவழி இலக்கியமாக இருந்து வந்த இதன் தொன்மையை வரையறுக்க இயலாது.

தமிழ் நாட்டில் நாட்டார் பாடல்களாக பல தலைமுறைகளாகக் குழந்தை இலக்கியங்கள் வழிவந்துள்ளன. ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றவையும் குழந்தை இலக்கியங்களாகப் பரிமளித்தவையே. குழந்தைகளுக்கு நீதியைச் சொல்லும் நோக்கில் இவை எழுந்தன.

குழந்தைகளுக்காக இலக்கியம் படைப்போர் தமது அறிவாற்றல் புலமைகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டுத் தாமும் குழந்தைகளாகி, குழந்தைகளின் மனஇயல்புகளை ஆராய்ந்து அவர்கள் சுவைக்கும் விதத்தில் கவிதைகளைப் படைக்க வேண்டுமென்பது அறிஞர் பலரது கருத்தாகும். இந்த வகையில் தமிழ் இலக்கியம் பல குழந்தைக் கவிஞர்களைப் பெற்று மகிழ்ந்திருக்கிறது. அழ. வள்ளியப்பா, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் சில தலைமுறைகளுக்கு முன்பு உணவைப் பிசைந்து குழந்தைகளுக்கு ஊட்டும் அதே நேரத்தில் பாட்டையும், கதையையும் ஊட்டும் நிலை இருந்து வந்தது. இந்த நிலை இன்று மாறிவிட்டது. இந்த அவசர யுகத்தில் கூட்டுக்குடும்ப நிலை மாறி பாட்டிமாரும் தாத்தாமாருமின்றி தனித்தனியாக குடும்பங்கள் நிற்கின்ற வேளையில் குழந்தைகளுக்காக இலக்கியங்கள் படைக்கப்படுவது அத்தியாவசியமாகிவிடுகின்றது.

இப்பணி இன்று ஒரு துறையாகவே மாற்றமடைந்து பலர் குழந்தை இலக்கியப் படைப்பாளிகளாக உருவெடுத்து வருகின்ற நிலையை நாம் தமிழ் இலக்கியப் பரப்பிலே அவதானிக்கலாம்.

இந்த வகையில் மகாகவி பாரதியை ஒரு புரட்சிக் கவி சுதந்திரக் கவியாக நோக்கும் அதே வேளை அவனது பாப்பாப் பாட்டைக் கொண்டு அவனை ஒரு குழந்தைக் கவியாகவும் நோக்கலாம்.

பண்டிதர்களிடம் சிறைப்பட்டுக் கிடந்த பாட்டு இலக்கியத்தைப் பாமரர் நோக்கி இழுத்துவந்த பெருமைக்குரியவன் மகாகவி பாரதி. சுதந்திர வேட்கையில் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கவி தந்த இந்தச்சுதந்திர சூரியன் தன்கால சமுதாயத்துக்காக கண்ணீர் வடித்தவன். தன்கால சமுதாயத்தில் நம்பிக்கையற்றுப்போனவன் புதிய பாரதத்துக்காக "ஒளிபடைத்த கண்ணினாய் வா... வா... உறுதி கொண்ட நெஞ்சினாய் வா... வா.." என்று விழிமலர்த்திப் பாடினான்.

குழந்தைகள்தான் எதிர்காலச்சிற்பிகள் என்றுணர்ந்த மகாகவி தான் எவ்வகையான சமுதாயத்தை விரும்பி நின்றானோ அச்சமுதாயத்தை அவர்கள் மூலம் கட்டியெழுப்ப விழைவதை அவனது பாப்பாப் பாடல் ஊடாகக் கண்டு கொள்ளலாம்.

தனது சமுதாயத்தில் நிலவி வந்த சாதிக்கொடுமை கண்டு கொதித்தெழுந்தவன் பாரதி. சாதிக்கொடுமைகளுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியவன். சாதி என்னும் கொடிய நஞ்சைப் பிஞ்சு நெஞ்சங்களில் புகவிடாது காப்பற்ற வேண்டும் என்பதில் குறியாய் இருந்தவன் பாரதி. இதனாலேயே தனது பாப்பாப் பாடலில்,

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று பக்குவமாகக்கூறி வைக்கின்றான். வெறுமனே பிரச்சினைகளை மட்டும் சொல்லிவிட்டுச்செல்வதில் பாரதிக்கு உடன்பாடில்லை. அவன் அதற்கான தீர்வையும் குழந்தைகள் முன் ஆணித்தரமாகவே கூறுகிறான்.

"நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

யார் மேலோர்? பாரதி குழந்தைகளுக்குக் கோடிட்டுக்காட்டுகிறான் இங்கே மனிதர்களை வித்தியாசப் படுத்த உயர்வு தாழ்வு கற்பிக்க பாரதி ஒரு புதிய வழியையே குழந்தைகளுக்குக் கற்றுத்தந்து விடுகிறான்.

குழந்தைகளின் உணர்ச்சிகளை - ரசனைகளை எந்த ரீதியில் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று பாரதி விரும்பினானோ அதையெல்லாம் தனது பாப்பாப் பாடலில் வடித்துத் தந்தான். எதுஊனம் என்று பாரதி குழந்தைகளுக்குத் தெளிவாக்குகின்றான். "தேம்பி அழுங் குழந்தை நொண்டி" - என்ற வரிகள் குழந்தைகளின் உணர்ச்சியைத் திசைதிருப்புவதாகும்.

வீர உணர்வு கொண்டு சுதந்திரத்துக்காகப் போராடிய பாரதி அழுகையையும் புலம்பலையும் அறவே வெறுத்தவன். எனவேதான் அவன் உள்ளத்து உறுதியே திடமான வாழ்வைத் தரும் என்பதைக் குழந்தைகளுக்கு உபதேசிக்கின்றான். "மனதில் உறுதி வேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும்" எனப்பிறிதொரு இடத்தில் வேண்டுதல் செய்யும் பாரதி - தனது பாப்பாப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

"வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா"

இதன் மூலம் முறையான - ஒழுங்கான வாழ்க்கை வாழ உறுதியான உள்ளம் எவ்வளவு அவசியம் என அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு எடுத்துக் காட்டுகிறான்.

இயற்கையை ரசிக்க - அழகை ரசிக்க - ஆராதிக்க - அன்பு செலுத்த - குழந்தைகளுக்கு மிக அழகாகக் கற்றுக் கொடுக்கின்றான் பாரதி.

"சின்னஞ்சிறு குருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா -
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா."

எவையெல்லாம் சந்தோசத்தைத் தருவன, எவை இரக்கப்படத் தக்கன எதைக்கண்டெல்லாம் கொதித்தெழ வேண்டும் என்றெல்லாம் பாப்பாப் பாட்டில் பாரதி பட்டியல் போட்டுத் தருகின்றான்.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

அக்கிரமங்களைக் கண்டு பொறுக்காத கவிஞரின் ஆவேசக் குமுறல் இங்கே பாப்பாப் பாடலில் குதித்து வருகின்றது. குழந்தை நெஞ்சங்கள் அநீதிக்குத் துணைபோகக் கூடாது. அநீதியை இனங்கண்டு கொள்ள வேண்டும். அதனைப் பொறுத்துக் கொள்ளக் கூடாது என்பதை அந்தப் பிஞ்சு நெஞ்சங்களுக்குத் தன் பாணியிலே புரிய வைக்கின்றான் அந்தப் புரட்சிக் கவி.

தீவிர ஆஸ்திகனாகவும், பராசக்தியின் பரம பக்தனாகவும் விளங்கியவன் பாரதி. தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் கூட்டுக்கலவையாக்கி மகிழ்ந்தவன் அவன். குழந்தைகளிடத்தும் அவன் தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் ஒருங்கே புரிய வைப்பதை நாம் கவனிக்கலாம்.

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்"

- என்றும்

"தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா"

- என்றும்

தெய்வத்தையும் தேசத்தையும் குழந்தைகளுக்குக் காட்டி வைத்தவன் அவன்.

தெய்வம் எங்களுக்கு எந்த வகையிலும் தீங்கு செய்யாது, எங்களுக்குத் துணை நிற்கும் என்று கூறிய பாரதி, அவ்வாறு இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று குழந்தைகளுக்குத் தெளிவாகக் காட்டுகிறான்.

"பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா."

இவ்வாறு குழந்தைகளுக்கு அவர்கள் பாணியிலேயே சென்று அறத்தைப் போதிக்கும் பாரதியின் பாங்கு இங்கு வியக்கத்தக்கது.

இந்த வகையில், குழந்தைகளுக்கு மிகவும் தெரிந்த இலகுவான எளிமையான சொற்களையும் கொண்டு மழலைகளுக்குப் பிடித்த துள்ளல் இசைக்குத் தக்கவாறு பாடல் அமைத்துக் கொடுத்து அதன் மூலம் தான் சொல்ல வந்த கருத்துக்களையும் இலகுவாக அவர்களுக்குப் புரிய வைப்பதன் மூலம் பாரதியின் பாப்பாப் பாடல் ஒரு சிறந்த குழந்தை இலக்கியமாகவே மிளிர்கின்றது என்று குறிப்பிட்டுக் காட்டலாம்.

திருமதி. ம. அரியரத்தினம்
*ஆரம்பப்பிரிவு, முதலாம் வருடம்.*



# தமிழ் நாவல்களும் திரைப்படங்களும்

**மயில்வாகனம் ரவீந்திரன்**
*கணிதப் பிரிவு, முதலாம் வருடம்.*

நாவலாக வெளிவந்த பிரபல்யமான கதை பின்னர் திரைப்படமாக வரும் போதெல்லாம் ஒருவித பரபரப்பு ஏற்பட்டே வந்துள்ளது. நாவல்களைப் படித்தோர் அத்திரைப்படங்களைப் பார்க்க அவாவுறுவதும், அந்தந்த நாவல்களின் பிரபல்யமும் எதிர்பார்ப்புகளுக்குக் காரணங்களாக இருக்கலாம்.

இத்தகைய நிலை ஒவ்வொரு காலகட்டத்திலும் காணப்பட்டே வந்துள்ளது. கல்கியின் தியாகபூமி, கள்வனின் காதலி, அகிலனின் வாழ்வு எங்கே?, பாவை விளக்கு, வேங்கையின் மைந்தன், மு.வ. வின் பெற்ற மனம், நாமக்கல் வே. ராமலிங்கம்பிள்ளையின் மலைக் கள்ளன், லஷ்மியின் பெண்மனம், கோ.வி. மணிசேகரனின் யாகசாலை, புஷ்பாதங்கத்துரையின் நந்தா என் நிலா, ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது, மகரிஷியின் பனிமலை, புவனா ஒரு கேள்விக்குறி, ஜெயகாந்தனின் உன்னைப்போல் ஒருவன், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், சில நேரங்களில் சில மனிதர்கள், உமாச்சந்திரனின் முள்ளும் மலரும், கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம்பாள் போன்ற நாவல்களும் இன்னும் பலவும் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.

இவற்றில் லஷ்மியின் "பெண்மனம்" நாவல் "இருவர் உள்ளம்" என்ற பெயரிலும், அகிலனின் "வாழ்வு எங்கே?" நாவல் "குலமகள் ராதை" என்ற பெயரிலும், "வேங்கையின் மைந்தன்" நாவல் "மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்" என்ற மகுடத்திலும் சினிமாவாக எடுக்கப்பட்டன. இவை நாவல் கொடுத்த நிறைவையும், திருப்தியையும் கொடுத்தனவா என்ற வினா, பல காலமாக விவாதிக்கப்பட்டே வந்துள்ளது.

நாவல் தனி ஒரு இலக்கிய வடிவம். அதன் சுவையும், அது ஏற்படுத்தும் பாதிப்புக்களும் திரைவடிவத்துடன் ஒப்பிடும்போது வேறுவேறானதுகளாகும். அவையிரண்டும் ஒரேயளவான பிரதிபலிப்புக்களை என்றுமே ஏற்படுத்த முடியாதவை. நாவல் திரைப்படமாகும்போது அவை ஒன்றையொன்று நெருங்கி ஒத்த தன்மைகளைக் காட்டும் விதத்தைப் பொறுத்து அதன் தாக்கங்கள் எதிரொலிக்கப்படும்.

சில இயக்குநர்கள் திரைக்கதைக்கான கருவை மட்டுமே நாவலில் இருந்து எடுத்துள்ளார்கள். நாவலின் கரு இயக்குநர்களின் எதிர்பார்ப்புக்களுக்கேற்ப திரைக்கதையாக மாற்றப்படும்போது நாவலின் முழுமையான விம்பம் அத்திரைப்படத்தில் அடிபட்டுப் போய்விடுகிறது. இது, நாவலைப் படித்துவிட்டு அத்திரைப்படத்தைப் பார்க்கும் வாசகனுக்குத் திருப்தியீனத்தையே ஏற்படுத்துகின்றது.

சிலவேளை நாவலைப் படைத்த நாவலாசிரியன் தான் உருவாக்கிய பாத்திரப் படைப்புக்களும் சம்பவக் கோவைகளும் சிதைக்கப்பட்டு, உருமாற்றப்பட்டு, திரிபடைந்து சித்தரிக்கப்படுவதைக் காணும்போது பெரும் ஏமாற்றத்தை வெளிப்படுத்துகின்றான்.

நாவலாசிரியன் அகிலன் அவர்கள், தனது சில நாவல்கள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டபோது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு, மேலும் தனது நாவல்கள் சினிமாவாக எடுக்கப்படத் தான் அனுமதிக்காததற்கு இதையே காரணமாகக் காட்டியுள்ளார்.

வாழ்வு எங்கே? நாவலைப் படித்துவிட்டு குலமகள் ராதை படத்தைப் பார்க்கும்போதும், பாவை விளக்கைப் படித்தபின்னர் அச்சினிமாவை ரசிக்கும்போதும் அகிலனின் நிலைப்பாடு புரியும்.

அந்த நாவல்களில் அகிலன், அற்புதமான காதற் கதைகளை தனது உயிரோட்டமான பாத்திரப் படைப்புக்கள் மூலம் வெகு நுட்பமாகக் கலையம்சங்களைக் கலந்து சித்தரித்துள்ளார். அகிலனின் பாத்திரப் படைப்புக்கள் திடமானவைகளாகக் காட்டப்பட்டிருக்கும்.

மகத்தான உரைநடைக் காவியமாக விமர்சகர்களால் கணிக்கப்பட்ட பாவை விளக்கு, வாழ்வு எங்கே? நாவல்கள் திரைவடிவம் பெற்றபோது நாவலில் கண்ட பாத்திரங்கள் திரையில் உலவியபோதும் அவை சோடைபோகவில்லை.

ஜெயகாந்தனின் நாவல்கள் திரைவடிவம் பெறும்போது, அவற்றுக்கான திரைக்கதை வசனம் போன்றவற்றை உருவாக்கும் பணியில் ஜெயகாந்தனே ஈடுபடுகிறார். இல்லாதவிடத்து அப்பொறுப்புக்கள் மீது தன் ஆளுமையைச் செலுத்துகிறார். இதன் மூலம் தனது நாவல்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட்டு சினிமாவில் தெரிவதாக நிறைவுகொள்கிறார். இத்திரைப்படங்களில் சாதாரண சினிமாவின் இலட்சணங்கள் இல்லாமற்போய் நாவல் அப்படியே திரைவடிவம் பெற்றிருப்பதைக் காணலாம். இதுதான் அதன் பலமும் பலவீனமுமாகக் காணப்படுகிறது.

ஜெயகாந்தன் தன் கருத்துக்களைப் பாத்திரங்கள் வாயிலாக வெளியிடும்போது படம், நாடகத் தன்மையானதாக மாறி, நத்தை வேகத்தில் நகர்வதைக் காணலாம். இவரது திரைப்படங்கள் அவரது கதைகளைப் படிக்கும் வாசகர்களை ஒத்த ஒருவகை ரசிகர் கூட்டத்தையே திருப்தி செய்து வந்துள்ளது.

இவற்றிற்கான காரணங்களாக ஜெயகாந்தனின் கதைகளில் கலையம்சங்கள் போதியளவு சித்தரிக்கப்பட்டிருக்காமையும், இதேநிலை அத்திரைப்படங்களில் தொடர்ந்திருப்பதையும் குறிப்பிடலாம்.

ஜெயகாந்தனின் நாவல்கள் திரைப்படங்களாக வெளிவரும்போதெல்லாம் எழும் சாதக, பாதக அபிப்பிராயங்களுக்கு ஜெயகாந்தனே பதில் சொல்வார். ஜெயகாந்தனின் இலக்கியக் கொள்கைகள் விவாதத்திற்குரியவையாயினும் சுவாரசியமாக இருக்கும்.

மு. வரதராசனின் நாவல்களில் பெற்றமனம் திரைப்படமாகியுள்ளது. மு.வ. வின் நாவல்கள் உண்மையில் வாழ்க்கை முறையாகவே கணிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்களில் மு.வ. வின் நூல்களைப் படித்த இளைஞர்கள் முறையாக வளர்ந்தார்கள்; வாழ்ந்தார்கள். வாழ்க்கை முறையை மட்டும் திரையில் பார்ப்பது திரைப்பட ரசிகர்களுக்கு அலர்ஜியை ஏற்படுத்தி இருக்கலாம். இது மு.வ. வின் பல நாவல்கள் திரைவடிவம் பெறாமைக்கான காரணமாக இருக்கலாம்.

நாவலாசிரியர் கொத்தமங்கலம் சுப்பு தன் கதைகளை ஆனந்தவிகடனிலேயே தொடர்கதைகளாக எழுதி வந்துள்ளார். சுப்புவின் கதைகள் வெளிவரத் தொடங்கிய காலங்களிலேயே விகடனின் பிரதிகளின் விற்பனை இலட்சக்கணக்கில் அதிகரித்து உலகத் தமிழர் வாழும் இல்லங்களில் எல்லாம் அலங்கரித்தன.

சுப்புவின் கதைகளில் இசைக் கலைஞர்களின் வாழ்வும், அவர்களின் உணர்ச்சிப் போராட்டங்களும் சித்தரிக்கப்பட்டிருப்பதுடன், கலாரசனையும் சற்றுத் தூக்கலாகவே இருக்கும்.

சுப்புவின் நாவலான "தில்லானா மோகனம்பாள்" திரைப்படமாக வந்தபோது அது பலதரப்பட்ட ரசிகர்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்தது. இதற்கு நாவலின் உயிரோட்டமான மூலக்கதையும், கைதேர்ந்த நடிகர்கள் பாத்திரங்களாகியதும், திரையுலக ஜாம்பவான்கள் திரைப்படத்தின் ஒவ்வொரு பொறுப்புக்களை ஏற்றதும் காரணங்களாகும்.

தி. ஜானகிராமனின் நாவல்கள் நடைமுறை வாழ்வை ஒட்டி அமைந்திருக்கும். தி.ஜா.வின் எழுத்தில் அற்புதமான சொல்லாட்சியும், மனித உறவுகளின் நுட்பமான பகுதிகளும் தொட்டுக் காட்டப்பட்டிருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக கதைக்கான கரு வாழ்க்கையில் இருந்து உருவாக்கப் பட்டிருப்பதே அவரது பெரிய பலமாகும். இப்படியான விசேடகாரணங்களினால் தி.ஜா. கலை இலக்கிய உலகில் மேலதிகக் கவனிப்பைப் பெற்றவராகத் திகழ்கிறார்.

தி.ஜா.வின் நாவல்களில் மோகமுள் அண்மைக்காலத்தில் திரைப்படமாகியது. மோகமுள்ளில் வயது குறைந்த காதலன், வயது கூடிய முதிர்கன்னி ஆகியோரின் காதல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது பிறழ்வான காதலாகக் கணிக்கப்பட்டும்கூட சுவாரசியமாகச் சம்பவங்களும், உரையாடல்களும், உணர்வு மோதல்களும் காட்டப்பட்டிருப்பது திரைப்படம் தயாரித்தோர்களின் கையைக் கடிக்காமல் விட்டதற்குக் காரணமாகலாம். இங்கு நாவல் வரிக்கு வரி அப்படியே திரைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதேபோன்ற இலக்கியத்தரமுள்ள பிரபல்யமடையாத ஒரு எழுத்தாளனால் எழுதப்பட்ட கதையை மோகமுள் படத்தைத் தயாரித்த குழாம் சினிமாவாக்கியிருந்தால் படம் இந்தளவாவது வெற்றியடைந்திருக்கும் என்பதும் சந்தேகமே.

மோகமுள்ளின் திரைப்பட வெற்றிக்கு இலக்கிய உலகில் தி.ஜா.வின் பிரபல்யமும், அவரது நாவல்கள் ஏற்படுத்தியிருந்த தனித்தன்மையான பாதிப்புக்களும் காரணங்களாக இருக்கலாம்.

தி.ஜா.வின் கதைகளில் பெண்மை இழிவுபடுத்தப் படுவதாகவும், கொச்சைப்படுத்தப்படுவதாகவும் பெண்ணியல் வாதிகள் தி.ஜா. இறக்கும்வரை குரல்கொடுத்து வந்துள்ளனர்.


இந்த விடயத்தில் தி.ஜா.வுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதில் அண்மைக்காலம்வரை ராஜம் கிருஷ்ணனே முன்னணி வகித்தார். மோகமுள் படமும் பெண்ணியல்வாதிகளின் கடும் சாடல்களுக்கு உள்ளானதாகும்.

ஒரு கதை சினிமாவாக எடுக்கப்படும்போது கதையை உணர்த்தும் பாரிய பொறுப்பின் பெரும்பகுதி கமராவுக்கு வந்துவிடுகிறது. துரதிஸ்டவசமாக தமிழ் சினிமாவின் சரித்திரத்தில் பெரும்பாலான நாவல்களின் கதை முழுவதும் வசனத்தாலே சொல்லப்பட்டு வந்துள்ளது.

நாவலுக்கும் திரைப்படத்துக்குமுள்ள வித்தியாசத்தைச் சொல்வதானால், நாவல் படித்து மனக்கண்ணில் காட்சிகளிலும், சம்பவங்களிலும் லயிப்பது. சினிமா பார்த்து ரசிப்பது.

சிறந்த நாவலை முழுமையாக ஆழ்ந்து அனுபவிப்பதற்குச் சில பயிற்சிகளுடன் உள்ளுணர்வுகளும், விழிப்புணர்வுடன் இயங்க வேண்டும். சினிமாவை ரசிப்பதற்கு, நாவலின் சுவையை நுகர்வதற்குரிய விசேட தன்மைகள் ரசிகனுக்கு இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

குறித்த நாவலை ஒவ்வொரு வாசகனும் அனுபவிக்கும் விதம் அவனது இலக்கியத் தரத்திற்கேற்ப வித்தியாசமானதாகும். நாவல் திரைப்படமாகும்போதும் ரசிகனின் தரத்திற்கேற்பவே அது அவனைத் திருப்திப்படுத்தும். பெரும்பாலும் இலக்கியத்தரமான நாவல்களே சினிமாவாகி யுள்ளன. இவை சாதாரண மசாலாத் திரைப் படங்களைவிட வித்தியாசமானவைகளாகவும், இலட்சியப் பிரதிபலிப்புள்ளதாகவுமே பெரும்பாலும் எடுக்கப்பட்டுள்ளன. தற்போதையத் தமிழ் திரைப்பட உலகு தொழில்நுட்ப ரீதியிலும், மற்றும் நவீனத்துவமான அம்சங்களிலும் வெகுவாக முன்னேறிவிட்டது. தற்போது நாவல்கள் சினிமாவாகுவதும் குறைந்துவிட்டது. மேற்குறிப்பிட்ட படைப்புக்கள் காலத்தை வென்று நிற்கின்றன.



மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றது.

# ஒரு கல்லறைக் குரல்

ஒரு தேசத்தின்
விடுதலைக்காய்
ஒரு தசாப்த
காலத்தின் முன்
புதைக்கப்பட்ட
புதை குழியிது.
உயிர்
பிரிவதுண்டு.
பிரிவதைப் பார்த்ததில்லை.
என்
உயிர் பிரிவதை
நானே பார்த்தேன்.
அப்போது.........
நானும் கூட
ஒரு சிலுவையற்ற
யேசு.
என்னிரு
கைகளாலே
குழி தோண்டினேன்.
"வொறு கியண்ட எப்பா"
தேவாரம்
இறுதிக் குரலாகப்
பாடப்பட்டது.
"உத்தோ ஔயாட்ட
றட்ட ஓணத?"
என் மேலும்
பல உடல்கள்
விறகுகள் போல்
அடுக்கப்பட்டது.
ஓ......
அவர்களுக்கு
குழியை மூடக்கூட
நேரமிருக்கவில்லை.
ஒரு வேளை
குழி ஏற்கனவே
நிறைந்திருக்கலாம்.

என் வயது வந்த
தம்பிகள் இருவரும்
வயது முதிர்ந்த
தாய் தந்தையும்
அப்போதைய
அகதி முகாமில்
இருந்தனர்.
அதுவும் கூட
"நலன்புரி நிலையங்கள்"
என
இப்போது
பெயர்மாற்றம்
பெற்றிருக்கலாம்.

ஆம்.......
இங்கு கொஞ்சம்
எனக்குச்
சுதந்திரந்தான்.
இருட்டைக்
காண்கிறேன்.
ரசிக்கிறேன்.
அடையாள அட்டையும்
கையுமாகத்
திரியத் தேவையில்லை!
தொழில் இல்லாமலேயே
வதை முகாம்களில்
கையொப்பமிடவும்
தேவையில்லை!

பெற்றோரை
நினைத்தால்தான்
பெரும் வேதனை.
"புலிக் குடும்பம்" என
முத்திரை குத்தி
வீட்டுடன் போட்டு
எரித்தவர்களாம்.

சுதந்திரத்தை
வேண்டிய
கைகளுக்கு
விலங்குகளையும்
குரல் கொடுத்த
வாய்களுக்கு
ரத்தக் கோப்பைகளையுமே
அவர்களால்
தர முடிந்தது.

இருந்தாலும்
ஒரு சின்ன நிம்மதி.
என் பின்
வந்தவர்களுக்கு
கல்லறைகள் கூட
இருக்கவில்லை
காக்கைகளுக்கு
உணவாகிப் போனதால்.

**திரு. எம். யோகராஜா**
ஆரம்ப கற்கை நெறி,
முதலாம் வருடம்.

# விவசாயத்தில் ஒருமுறைப்படுத்தப்பட்ட பூச்சிநோய் அடக்குமுறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் கிருமிநாசினிகளுக்குப் பெருமளவு பணத்தைச் செலவு செய்தும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முறைப்படி கட்டுப்படுத்த இயலாத காரணத்தால் மனக்குமுறல் அடைந்திருக்கும் இந்த நேரத்தில் ஒருமுறைப்படுத்தப்பட்ட பூச்சிநோய் அடக்குமுறை பற்றி ஆராய்வோம்.

"அடக்குமுறை" என்பது நோய்க் காரணிகளையும், பூச்சிகளையும் பயிர்களுக்கு நட்டமேற்படாத அளவுக்கு அவற்றின் எண்ணிக்கையைக் குறைப்பதேயாகும். இவற்றை முற்றிலும் அகற்றுவது மிகக் கடினமாகும். ஒருமுறைப் படுத்தப்பட்ட அடக்குமுறை என்பது எமது சூழலிலே இயற்கையாகக் காணப்படும் நமக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்களையும், ஒட்டுண்ணி களையும் ஏனைய பிராணிகளை உண்ணும் விலங்குகளையும் பாதுகாத்து எமக்கு உபயோகப் படக்கூடிய பல மாற்றுமுறைகளை ஒரு சிறந்த முறையிலே ஒன்றுசேர்த்துப் பயன்படுத்துவதேயாகும். இம்முறையிலே விஞ்ஞான அறிவு மாத்திரம் போதாது. பயிர்ப் பாதுகாப்புப் பகுத்தறிவுடனும், தத்துவ சாத்திர முறைப்படியும் அணுகுதல் வேண்டும். முடிவுகள் துரிதமாகவும், உறுதியாகவும் எடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் நாம் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாகவே சேதம் விளையலாம். இம்முறையின் முக்கிய நோக்கம் குறைந்த செலவிலே கூடிய வருமானத்தைப் பெறுவதே. சமூகக் கட்டுப்பாட்டையும், சூழல் கட்டுப்பாட்டையும் ஒருங்கிணைத்து எமது சூழலைப் பாதுகாப்பது மற்றைய நோக்கமாகும்.



இது ஒரு புதிய முறையல்ல. உலகத்தின் பல பாகங்களிலும் இம்முறையைக் கையாண்டு நல்ல பயனைப் பெற்றிருக்கின்றனர். இதன்மூலம் உணவுப் பிரச்சினையைத் திறம்படத் தீர்த்திருக்கின்றனர். "பெரு" நாட்டிலே பருத்தியைத் தாக்கும் பூச்சிகளையும், "இஸ்ரேல்" நாட்டிலே கிச்சிலியைத் தாக்கும் பூச்சிகளையும், "ஐரோப்பா" தேசத்திலே பழவர்க்கங்களைத் தாக்கும் பூச்சிகளையும், இந்தியாவிலும், ஜப்பானிலும் நெல்லைத் தாக்கும் பூச்சிகளையும் நன்கு கட்டுப்படுத்தியுள்ளனர்.

இம்முறையை நாம் கையாளவேண்டிய அவசியம் ஏன் என்பதை ஆராய்வோம். விவசாய இரசாயனப் பொருட்கள் தீவிரமாகவும், பகுத்தறிவுபாராத முறையிலும் நோயையும், பூச்சிகளையும் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட பூச்சியினங்கள் விவசாய இரசாயனப் பொருள்களுக்கு எதிரக்கும் சக்தியுடையவை எனக்கணிப்பிட்டுள்ளனர். எனவே இந்நிலையில் ஒரு முறைப் படுத்திய அடக்குமுறை மிக மிக முக்கியமானதேயாகும். இம் முறையைக் கையாளாவிட்டால எமது எதிர்காலம் இருளடைந்ததாகவே காணப்படும். நோய்க்காரணிகளையும், பூச்சிகளையும் செவ்வனே கட்டுப்படுத்தாவிடில் இவ்வுலகில் வாழும் மக்கள் பசிப்பிணியால் இறக்க நேரிடும். டி.டி.ரி. தொடக்கம் இன்றுவரை ஆயிரக்கணக்கான விவசாய இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்காகக் கோடிக்கணக்கான பணத்தை பல நாடுகள் ஆராய்ச்சியிலே செலவு செய்துள்ளன. ஆனால் பிழையான உபயோகத்தால் ஏற்படும் தீமைகளை அவர்கள் முன்னோடியாக அவதானிக்கவில்லை. இதுவரை பெருமளவு வெற்றிகண்ட போதிலும் பல அபாயங்கள் இப்போது காணப்படுகின்றன. இத்தகைய வலுவுள்ள இரசாயனப் பொருட்கள் பூமியிலும், காற்றிலும், நீரிலும் சேர்ந்ததனால் கோடிக்கணக்கான நன்மை செய்யும் நுண்ணுயிர்களுக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் பல பயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பூச்சிகள் இரசாயனப் பொருள்களுக்கு எதிர்க்கும் சக்தியை உண்டாக்கிக் கொள்கின்றன. அப்படித் தாங்களே ஒரு தாக்கத்தால் கட்டுப்பட்ட போதிலும் ஒருசில நாட்களில் மீண்டும் காணப்படுகின்றன. சில சமயங்களில் ஒரு பூச்சியினத்தைக் கட்டுப்படுத்த வேறோர் இனப் பூச்சித்தாக்கம் உதவுகிறது. பிழையான பாவனையால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. விளைபொருட்களில் நஞ்சு அதிகமாக இருப்பதால் பல தீமைகள் ஏற்பட்டுள்ளன. இக்காரணத்தால் பல அபிவிருத்தி அடைந்த நாடுகள் பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்த அசுத்தப்பட்ட பொருள்களைத் திரும்பவும் அந்நாட்டிற்கே திருப்பி அனுப்பிவைத்துள்ளனர். நாட்டில் மட்டுமல்ல காடுகளிலே வாழும் விலங்குகள் கூட பாதிக்கப்படுவதனால் சில நாடுகள் கிருமிநாசினியின் உபயோகத்தைச் சட்டபூர்வமாகக் குறைத்துள்ளன. மேற்குறிக்கப்பட்ட பிரச்சினைகள் ஒரு நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார ஈடுபாடுகளை மாற்றியமைத்துள்ளன.

இந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? மாற்றுமுறைகளை நாம் நன்கு அறியவேண்டும். அதை அறிந்தபின் அவற்றை ஒன்றுசேர்த்து நல்ல பலனைத் தரக்கூடிய வகையிலும், எமது சூழலைப் பாதிக்காத வண்ணமும் பயன்படுத்த வேண்டும். மாற்றுமுறை எனும்போது அதில் இரசாயனத் தடைமுறை ஒன்றாக இருக்கலாம். இதன் உபயோகம் முதல் அவசியமா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

பூச்சிகள் காணப்படினும் ஓர் அளவுக்குக் கூடினால் மட்டுமே அவை சேதம் விளைவிக்கின்றன. இந்த நேரத்தில் ஒரு விவசாய உத்தியோகத்தரின் ஆலோசனையை நாடவேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளிலே பூச்சிகளின் எண்ணிக்கை நாள்தோறும் எடுப்பதற்கும், அபாய நிலையை அடையும்பொழுது முன்னெச்சரிக்கை செய்ய ஒழுங்குகளும் செய்திருக்கின்றனர். இதன் முக்கிய நோக்கம் இயற்கையின் சமச்சீர் நிலையைக் குழப்பாமல் இருப்பதேயாகும். மற்றும் மாற்று முறைகள் பின்வருமாறு:-

1. ஒட்டுண்ணிகளையும், கெடுதிசெய்யும் பூச்சிகளையும் உண்ணும் பூச்சிகளைப் பெருமளவுக்கு அதிகரித்தல்.
2. பூச்சிகளுக்கு ஏற்படும் நோயைப் பெருக்குவது.
3. விவசாய முறைகளை மாற்றியமைப்பது.

அதில் சுழற்சிமுறை ஒன்றாகும். மற்றொன்று பெருமளவு விஸ்தீரணத்திலே ஒரு பயிரை நடுவதும், பயிரைத் துப்பரவாக வைத்திருப்பதும் ஆகும். தற்பொழுது தனது முதலீட்டில் ஒரு விவசாயி 30% அளவில் இரசாயனப் பொருட்களில் செலவிடுகிறான். உலகளாவிய ரீதியில் கணிக்கும்போது இது மிக அதிகம் என்றே கூற வேண்டும். அத்துடன் வெளிநாட்டுச் செலாவணி இல்லாமல் நாம் கஷ்டப்படும் இந்த நேரத்தில் இது விரும்பத்தக்கது அல்ல.

எனவே, ஒரு முறைப்படுத்திய அடக்கு முறையைக் கையாண்டு எமது விவசாய முயற்சியில் நாம் நல்ல பயன் பெறுவோம்.

**திரு. கு. காராளசிங்கம்**
*(விரிவுரையாளர்)*
[ Sp. Trd. Agri-1st Class, SLPS, Life Skills Trd Undp/Unesco ]

UNIVERSITY OF JAFFNA LIBRARY

# உண்மை வழி

**திருமதி. ராதிகா திலகசந்திரரத்தினம்**
இரண்டாம் வருடம்.விஞ்ஞானப் பிரிவு.

ஆர்ப்பரிக்கும் அலைகடலில் நடுக்கடல் அமைதியாக இருப்பது போல் ஆரவாரத்தோடு சலனப்படும், அல்லலுறும் மனங்களுக்கு அமைதியைத் தருவது ஆலய வழிபாடர்கும். நாம் பலம் பெற்றுத் தன்னம்பிக்கையோடு செயல்களைப் புரிவதற்கு இறை நம்பிக்கை ஒரு உந்துசக்தியாகின்றது.

ஆலய வழிபாட்டின்போது ஆலயச் சுத்தம் முக்கியமானது. அதேபோல் நாமும் தோய்ந்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து ஆலயம் சென்று அகத்தைத் தூயதாக்கி இறைசிந்தனையில் திளைப்பதன் நோக்கமென்ன? நாம் தூய்மையாக இருக்க வேண்டும் என்றுதானே?

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களினூடாக முத்தியடைய முடியும். அதற்கிணங்க சரியைத் தொண்டு, பஜனைகள், மந்திரங்கள், கிரியைகள் போன்றவற்றின் வழியே மனிதனை இழுத்து மனதை ஒருநிலைப் படுத்தி தீய சிந்தனையை வேரறுக்க விழைகின்றது சமயம். சமயத்தில் பற்றின்றி ஒழுக்கமான வாழ்வு வாழ்வது சிரமமானது. ஆணிவேராகச் சமய வாழ்வு இருந்தால்தான் அந்த விருட்சம் பரந்து விரிந்து நிழல் கொடுக்கும். ஆனால் சராசரி வாழ்வில் ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்கள் எம்மைப் பிடித்து செழும்பு பிடித்த பித்தளையாக்குகிறது. ஆம், ஆசை வழிச்சென்று தைரியத்தை இழக்கிறோம். கோபம் மிகுதியாகி மிலேச்சராக மாறுகின்றோம். ஆராயும் திறனின்றிக் காரண காரியங்களை அறியாமல் செம்மறி ஆடுகளாய் செல்கிறது எம் வாழ்வு.

நல்ல சிந்தனைகளோடு, நல்ல சொற்களைக் கூறி, நற்செயல்களில் ஈடுபட்டு, தர்மம் செய்து ஒழுகும் சிறப்பு அறமாகும். அதற்கேற்ப "கொடுத்தார்க்குக் குறைவில்லை. கொடுப்பவர் ஏழையாவதில்லை" என ஈகைக்கு சமயம் சிறப்பிடம் கொடுத்துள்ளது. ஆனால் பெரும்பாலும் நடப்பதோ, தனக்கு மிஞ்சியே தானம் என்று விருந்தினர் வருகையே வேண்டாத நிகழ்வாகிவிட்டது. "தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் வழி காட்டும்". என்பதெல்லாம் பேச்சோடு சரி, ஏழ்மையோடு இருக்கும் உறவினர்களைக்கூட கைதூக்கி விடும் குணம் இருப்பவர் களுக்கு இல்லை. வாழ்ந் தாரைக் கண்டு வெறுப்பதும், வீழ்ந்தாரைக் கண்டு சிரிப்பதும் இறை அன்பர்களுக்குப் பொருந்துமா? வணக்கம் வணக்கமென வாயால் பதிக்கிறார். இணக்கமறிந்து இணங்க எதிர்க்கிறார் என்று யோகர் சுவாமிகள் கூறியது போல மற்றவர்களில் குறைதேடி சண்டை போடுவதும் கற்ற கல்வியின்படி நடக்காமல் இருப்பதும் இறைபக்தியின் நிலையாகுமா?

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற் பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" ஆம், அயலாரின் குற்றங்களைக் காண்பது போலவே தம் குற்றங் களையும் காண்பாரானால் நிலைபெற்ற உயிர்கட்கு எத்தகைய தீமையும் உண்டாகுமோ என்பதை உணராது சமூகத்திலுள்ள மனிதர்களுடன் இணக்கமின்றிப் பகையைத் தேடித்திரியும் வன்மையாளர் இறைவணக்கம் என அலைந்து என்ன பயன்? அடக்கமின்றி ஆக்கிரமிப்பை பிரதானமாக நினைப்பவர்களால் அமைதியை ஏற்படுத்த முடியுமா? சிந்திக்க. வேண்டும்.

அடுத்து பொருள்பற்றி நோக்கும்போது,

"அறனீனும் இன்பமும்
ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

தீயவழிகளால் அல்லாமல் பொருள்தேடும் திறனையறிந்து தேடியதனால் வந்தடைந்த செல்வமானது அறவாழ்க்கையையும் இன்பத்தையும் ஒருங்கே கொடுப்பது ஆகும். ஆம் நீதி வழுவாது நேர்மையான முறையில் பொருள் தேடி பகுத்துண்டு சீரான முறையில் இல்லறத்தை நடத்த வேண்டுமென சமயம் கூறி நிற்கின்றது.

சமூக ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு எமது வாழ்வை முறையோடு கொண்டு செல்லவே சமயம் வழிகாட்டுகின்றது. உயர்சிந்தனா சக்தியுள்ள உயர் விலங்கான மனிதன் தனக்கே இயல்பான காமம், குரோதங்களிலிருந்து விடுபட சமயம் பாதை வகுக்கின்றது. அன்பு, அறம், தூய்மை என்பவற்றைக் கொண்ட பண்பட்ட மனிதனாக்கும் கவசமாகிறது சமயம். நற்சிந்தனைகள், நற்பயிற்சிகளின் நோக்கம் தன்னலமற்ற நிலைதான். எந்நிலையில் இருந்தாலும் தானும் வாழ்ந்து, மற்றவரையும் வாழவைக்க உண்மைச் சமயி தயங்கமாட்டான். குறைகளை விடுத்து நிறைகளைக் காணபதோடு, மற்றவர்களையும் அந் நிலைக்கு இட்டுச்செல்வான்.

பழிக்குப்பழி எனும் நிலைமறந்து "இன்னா செய்தாரை ஒறுத்து அவர் நாண நன்னயம் செய்வான்", இந்த நிலையை அடைய முடியாவிட்டாலும் இந்நிலையை அடைய முயற்சி செய்பவனே சமய வாழ்வு வாழ்பவனாவான்.

கடவுளைக் காண்பதற்குக் காவியுடுத்து காடு திரிய வேண்டியதில்லை. உலகை வெறுக்காமலே வையத்தில் வாழும் முறையை யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை போதிக்கிறது. அதாவது "கருமஞ் செய்யாமையை விரும்பாதே" கருமத்தைப் பற்றாதே என்றும், எல்லா இடத்திலும், எல்லோரிடத்திலும் ஈசனைக் காண்" என்றும் சுவாமிகள் கூறியிருக்கின்றார். எனவே உண்மையாக இறைவனை வணங்குபவன் ஒவ்வொரு மனிதனிலும் ஏதோ ஒருவிதத்தில் இறைவனைக் காணவேண்டும். அந்த உயரிய நிலையை அடைய முடியாவிட்டாலும், மற்ற மனிதர்களை மதித்து, நேசித்து வாழும் தன்மையைப் பெற்று வாழ்வான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மொத்தத்தில் உண்மையான சமய வாழ்வு பூரண உடல், உள ஆரோக்கியமுள்ள சமூகத்துக்குப் பொருத்தமான சிறந்த மனிதனை உருவாக்கித் தருகின்றது என்பதே நிஜமாகும்.

> *சமயம் என்பது வெளிமாதிரிகளில் தங்கியிருக்கவில்லை.*
> *அது ஒருமாதிரியுமற்ற தனித்த நிலையாகும்.*
> *அதாவது தனக்குள்ளே பெலத்துக் கொள்ளல் ஆகும்.*

UNIVERSITY OF JAFFNA LIBRARY



# விலங்குகளின் நடத்தை

## - ஓர் ஆராய்ச்சிக் கண்ணோட்டம்

புவியின் வயது சுமார் 450 கோடி ஆண்டுகள் ஆகின்றபொழுது பூமி தோன்றி சுமார் 400 கோடி ஆண்டுகள் வரை புவியில் எந்தவிதமான உயிரினங்களும் தோன்றவில்லை. அதன் பின்னர்தான் அமீபா (Ameaba) என்ற ஒற்றைக் கலம் மட்டும் கொண்ட (Unicelluaz) உயிரினம் தோன்றியது. அந்த அமீபா இற்றைக்கு 57 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்க வேண்டுமென்பதுதான் ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும்.

பல் கல (Cells) உயிரினங்கள் அதிலிருந்துதான் தோன்றின என்றும், முதலில் சுமார் 345 கோடி ஆண்டுகள் வரை கடலில் மட்டுமே உயிரினங்கள் தோன்றி வளர்ந்தன என்றும், அடுத்த 16 கோடி ஆண்டுகளில் ஊர்ந்து செல்லும் பிராணிகள் தோன்றின என்றும் அதற்குப் பிந்திய 65 கோடி ஆண்டுகளில்தான் பாலூட்டிகள் என்னும் உயிரினங்கள் தோன்றின என்றும், ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அதன் பின்னர் குரங்கு இனத்திலிருந்து மனித இனம் பரிணாம வளர்ச்சிபெற்று மனிதனாகப் பரிணமித்து சுமார் 10 இலட்சம் ஆண்டுகள்தான் ஆகின்றன. எனவே, மனித இனம் தோன்றி வளர்ந்த காலம் என்பது 10 இலட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்டதென்பது தெளிவாகின்றது.

விலங்கினத்தில் சிறப்பிடம் வகிக்கும் மனிதன் என்ற விலங்கு உலகெங்கும் பரவலாகக் காணப்படுகின்றது. அனைத்து மனிதர்களும் ஹோமோசெபியின் (Homo Sapien, Man the Wise) என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். உயிரினங்களைப் பொதுவாக முதுகெலும்புள்ளவை, முதுகெலும்பில்லாதவை என்று இருவகையாகப் பிரிக்கலாம். முதுகெலும்புள்ள பிராணிகள் ஒரே மூதாதையரிலிருந்து தோன்றின என்பது டார்வினின் விளக்கம். இந்தப் பெரிய குடும்பமான முதுகெலும்புள்ள பிராணிகளில் மனிதன் பாலூட்டி வகையைச் சேர்ந்தவன். பாலூட்டிகளை மற்ற முதுகெலும்புள்ள விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் முக்கியமான அம்சங்கள், அவை குட்டி ஈன்று பாலூட்டுவதும், உடலில் உள்ள உரோமமும், நடுச் செவியிலுள்ள மூன்று சிறிய எலும்புகளுமாகும்.

மனிதன் மற்ற விலங்குகளைவிட உதாரணமாகப் புலியைவிடக் குரங்கிற்கு நெருங்கிய உறவினன். குரங்கு வகையின் ஒரு பிரிவு வாலில்லாக் குரங்கு. வாலில்லாதிருப்பதும், தோள்பட்டை எலும்பு பக்கவாட்டில் இல்லாது தோளின் பின்பக்கம் பொருந்தியிருப்பதும், கடைவாய்ப் பற்களில் "Y" வடிவப் பள்ளம் இருப்பதும் மற்றக் குரங்குகளிலிருந்து வாலில்லாக் குரங்குகளை வேறுபடுத்திக் காட்டுகின்றன. இந்த அம்சங்கள் மனிதனுக்கு இருப்பதால் மனிதன் வாலில்லாக் குரங்கு வகையைச் சேர்ந்தவன்.

வாலில்லாக் குரங்குகள் (Gibbon), ஒராங் உடான் (Oranguttan), சிம்பன்சி (Chimpanze), கொரில்லா (Gorilla) முதலியன மற்ற விலங்குகளைவிட மனிதனுக்கு நெருங்கிய உறவுள்ள விலங்குகள். மனிதனை மனிதக் குரங்கிலிருந்து வேறுபடுத்தும் முக்கியமான அம்சங்கள் மூன்று காணப்படுகின்றன. அவையாவன அளவில் பெரிய மூளை, தட்டையான முகம், நேராக நின்று சீராக இருகாலில் நடக்கும் தன்மை.

பாலூட்டும் பிராணி இனங்களில் விநோதமான பல உயிர்கள் உண்டு. இவற்றுள் பெரும்பாலானவை நிலத்தில் வாழ்வனவாகும். அடுத்ததாக மரங்களின்மீதும் நிலத்தினடியிலும் வாழும் பிராணிகள். பாலூட்டி இனப் பிராணிகள் ஓடவும், ஆடவும், நீந்தவும், குதிக்கவும் கூடியவை.

பாலூட்டி இனப் பிராணிகள் பல மாமிசம் உண்பவை. குரங்குகள் தானியங்கள், காய்கறிகளை உண்பவை. மனிதனோ ஒரே நேரத்தில் மாமிசத்தையும், மாமிசமல்லாத உணவுகளையும் உண்ணக் கூடிய விசித்திரமான விலங்காகும். ஆனால் மாமிசத்தை மட்டும் உண்ணும் விலங்குகளான புலி, சிங்கம் என்பவற்றுக்குக் காணப்படும் கோரைப்பற்கள் மனிதனுக்குக் காணப்படுவதில்லை.

குழந்தை வளர்ப்புத் தொடர்பாக மனித விலங்கிற்கும், மனிதனோடு நெருங்கிய தொடர்புடைய விலங்குகளுக்குமிடையே வேறுபாடு காணப்படுகின்றது. கொரில்லா, சிம்பன்சி, கிபன் ஆகிய மூன்றும் முலைப்பால் கொடுக்கும் கட்டத்திற்கு அப்பால் தமது குட்டிகளின் தேவைகளை நிறைவேற்றுவதுமில்லை, அவற்றைத் திரும்பிக்கூடப் பார்ப்பதுமில்லை. இவ்விடயத்தில் மனித நடவடிக்கைகள் முன்னேற்றகரமானவை; வித்தியாசமானவை. மனிதக் குழந்தைகளுக்கு பிறப்பு முதலே பெற்றோரின் அன்பும், அரவணைப்பும், காப்பும் பல வருடங்களுக்கு அவசியமாகின்றன. தமது பிள்ளைகளைச் சீராகவும், சிறப்பாகவும் வளர்ப்பதற்கும் குழந்தைகளின் பல்வேறு உடலியல், உளவியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பெற்றோர் முயற்சிக்கின்றனர்.

ஓராங் உடான் (Oranguttan) எனப்படும் குரங்கு கூட்டமாக வாழ்வதில்லை. ஆண், பெண் குரங்குகள்கூடத் தனித்தனியேதான் வசிக்கின்றன. பெண் குரங்கு குட்டிகளோடு மட்டும் தனித்தனியாகத் திரியும். கிபன் குரங்குகள் மனிதர்களைப்போல் ஓர் ஆணுக்கு ஒரு பெண் எனக் குடும்பம் நடத்தும். இவை ஒருபோதும் மற்றக் கிபன் குரங்குகளோடு தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஆனால் கொரில்லாக் குரங்குகளின் குடும்ப வாழ்க்கை கிபன், ஓராங் உடான் என்பவற்றின் குடும்ப வாழ்க்கையைவிட வித்தியாசமானது. ஒரு கொரில்லாக் குரங்கிற்கு அரை டசினுக்குக் குறையாத மனைவியரைக்கொண்ட அந்தப்புரம் உண்டு. சிம்பன்சிகள் பெரிய கூட்டுக் குடும்பமாகவே வாழ்க்கை நடத்துகின்றன. ஏகப்பட்ட பெண்களையும், அரை டசினுக்குக் குறையாத ஆண்களையும் தாத்தா, பாட்டியையும் கொண்டு, குடும்பம் விரிந்து காணப்படும். சிம்பன்சிகள் மனிதர்களைப்போல் தங்கள் குட்டிகளின் செல்லச் செயல்களையும், விளையாட்டுக்களையும் மரத்தில் சாய்ந்தவாறு இரசித்து மகிழ்கின்றன.

மனிதனோ குழுவாக வாழும் இயல்புடையவன். மனிதனின் குழுவுணர்வுக்கு அடிப்படையான அம்சம் அவன் வாழும் குடும்பமே ஆகும். கணவன்-மனைவி உறவில் பிறக்கும் குடும்பம், பிள்ளைகள், பாட்டன், பாட்டி, மாமா, மாமி எனப் பல அங்கத்தவர்களைக் கொண்டதாக விரிந்து அமைகிறது. சிம்பன்சியின் வாழ்க்கையைப் போன்று மனிதன் கிராமத்தில் அல்லது ஊரில் பலருடன் இணைந்து வாழ்கின்றான். அத்துடன் ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்ற கிபன் குரங்கின் வாழ்க்கையை ஒத்ததாகவும் மனித வாழ்க்கை அமைந்துள்ளது.

ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்ற குடும்பம் நடத்தும் விலங்குகளில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் எடையிலும், உயரத்திலும் பெரிய வித்தியாசம் இருப்பதில்லை என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒருசோடிக் கிபன் குரங்குகளைப் பார்க்கின்றபோது எது ஆண், எது பெண் எனக் கூறுவது கடினமானது. ஆனால் ஆண் கொரில்லா, பெண் கொரில்லாவைவிட உருவத்தில் இரண்டு மடங்காக உள்ளது.

மனைவியைக் கவர்ந்துசெல்ல முற்படும் எதிரியைத் தடுத்து தனது அந்தப்புரத்தைக் காப்பாற்ற இவ்வுருவம் அதற்கு உதவுகிறது. நீரில் வாழும் பெண் சீல் 1000 இறாத்தல்கள் நிறையுடையதாக இருக்க ஆண் சீல் 3 தொன்கள் வரை எடையுடையது. ஆண் சீலுக்கு 40 இற்குக் குறையாத மனைவியர்கள் உண்டு என அறியப்படுகிறது. ஆனால், மனிதர்களில் உயரத்திலும், நிறையிலும், உருவத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே பெரிய வேறுபாடெதுவும் தென்படுவதில்லை.

இனப்பெருக்க உறுப்புக்களின் அளவிலும், இனப்பெருக்க முறைகளிலும் மனித விலங்கிற்கும் மனிதனோடு நெருங்கிய தொடர்புடைய விலங்குகளுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனிதனின் இரண்டு விதைகளினதும் சராசரி எடை $1\,^1/_2$ அவுன்சுகளாகும். 450 இறாத்தல்கள் எடையுள்ள கொரில்லாவினது இரண்டு விதைகளினதும் மொத்த எடை $1\,^1/_4$ அவுன்சுகளாகும். 100 இறாத்தல்கள் எடையுள்ள சிம்பன்சியினது விதைகளின் எடை 4 அல்லது $4\,^1/_2$ அவுன்சுகளாகும்.

இது மனிதனைவிட 3 மடங்கு அதிகமானதாகும். சிம்பன்சியின் இனப்பெருக்க முறையும் உடலுறவு முறையும் வித்தியாசமானது. இவை கூட்டமாக வசிக்கும் கணவன்-மனைவி உறவு முறைகள் கிடையாது. ஒவ்வொரு ஆண் சிம்பன்சியும் போட்டி போட்டுக்கொண்டு தினமும் பலதடவை பல பெண் சிம்பன்சிகளோடு உடலுறவு கொள்ளும். இவற்றிற்கு பெரிய விதை இருப்பதும் இதற்கொரு காரணமாகும். கொரில்லாக் குரங்குகளுக்குப் பல மனைவியர் இருந்தாலும் வருடத்திற்கு 4-5 தடவை மட்டுமே உடலுறவில் ஈடுபடுகின்றன. பெண் கொரில்லா பிரசவித்தவுடன் மறுபடியும் உடலுறவிற்குத் தயாராக 2-3 ஆண்டுகள் பிடிக்கும். ஓராங் உடானும் பெருமளவு கொரில்லாவைப் போன்ற உடலுறவு பாணியைக் கொண்டது.

உடலுறவில் ஈடுபடத் தேவைப்படும் நேர அளவும் மனித விலங்கிற்கும் ஏனைய விலங்குகளுக்குமிடையே வேறுபடுகின்றது. மனிதனுக்கு உடலுறவின் உச்சநேரம் 4 நிமிடங்களாகவும், சிம்பன்சிக்கு 10 செக்கன்களாகவும், கொரில்லாவுக்கு 1 நிமிடமாகவும், ஓடாங் உடானுக்கு 15 செக்கன்களாகவும் உள்ளது. கொரில்லாவின் இனப்பெருக்க உறுப்பு $1\,^1/_4$ அங்குலங்களாகவும், ஓராங் உடான் $-1\,^1/_2$ அங்குலங்களாகவும், சிம்பன்சி $-3\,^1/_2$ அங்குலங்களாகவும் உள்ளன. சிம்பன்சியும் மனிதனும் எப்பொழுதும் இனப்பெருக்கம் செய்யக்கூடிய விலங்குகளாகும். காரணம் இவை உஷ்ண சுபாவமுடையவை.

எனவே, மனித விலங்கு சிந்திக்கக்கூடியதும் செயற்றிறன் வாய்ந்ததுமான ஒரு விசித்திர விலங்கு எனினும் மனிதன் தனது இன்றைய வடிவத்தையும், அறிவையும் பெறப் பல்லாயிரம் வருடங்கள் பல படிகளைத் தாண்ட வேண்டியிருந்தது என்பது உண்மையே.

**Biologist. P. காந்தியடியான் [ B.Sc., Dip-in-Edu. ]**

*(விரிவுரையாளர்)*

மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றது.

# வளர்முக நாடுகளில் பெண்கள் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் பிரச்சினைகள்.

இன்று வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் வேலையின்மை, உணவுப்பற்றாக்குறை, படிப்பறிவின்மை, வீட்டுப்பற்றாக்குறை என்பன உலகறிந்ததே. எனினும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாடுகளில் வாழும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவற்றை உலகம் உற்றுநோக்குவதில்லை. அவற்றைத்தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுவதும் இல்லை. பன்னெடுங்காலமாகப் பெண்கள் சீதனக்கொடுமை, ஆணாதிக்கக் கொடுமை என பல துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதனால் அழிந்தும் வருகின்றார்கள். எனினும். அண்மைக்காலங்களில் இவற்றையெல்லாம் எதிர் கொண்டு

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்ற பாரதியின் பாட்டுக்கேற்ப பெண்கள் தொழில் பார்க்கும் நிலையை அடைந்துள்ளனர். இருந்தும் வேலைக்குச் செல்வதால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பெண் விடுதலை, சமஉரிமை என்று உலகறியப் பேசப்பட்டும் இவர்களின் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. முக்கியமாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தற்போது வேலை பார்க்கும் பெண்களின் தொகை அதிகரித்து வருவதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் இந்நாடுகளிலேயே வளர்வதும் வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ வேலைக்குச்செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம். மனித தேவைகள் அதிகரித்துச் செல்லச் செல்ல அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான பொருளாதார வளங்களையும் அதிகரித்தே ஆக வேண்டும். இதற்கு குடும்பத்திலுள்ள ஆடவன் மட்டும் உழைப்பில் ஈடுபட்டால் போதாது பெண்களும் ஈடுபட வேண்டுமென்று ஆண்கள் நினைக்கின்றனர். எனினும் அவள் தினமும் வீட்டில் ஊதியம் பெறாது உழைப்பதை அவர்கள் கண்டு கொள்வதேயில்லை. "நான் ஒருவன் மட்டும் உழைத்தால் எப்படி முன்னேறுவது?", "என் ஒருவனின் ஊதியம் இக்குடும்பத்திற்கு எம்மாத்திரம் போதுமானது?" என்பவைதான் இன்றைய கீழ்மட்ட, நடுத்தரக் குடும்ப ஆண்களின் புலம்பல். எனவே இவர்கள் ஒவ்வொருவரும் தனது மனைவியும் ஊதியம் பெறும் உழைப்பில் ஈடுபட வேண்டுமென விரும்புகின்றனர்.இவற்றை விட உயர்மட்டத்திலுள்ளவர்களும் உயர் கல்வி பெற்றவர்களும் சமூகத்தில் தமக்குச் சிறந்ததொரு அந்தஸ்த்தைப் பெறுவதற்காகத் தொழில் புரிய வேண்டுமென விரும்புகின்றனர். இவ்வாறான பல காரணங்களால் பெண்கள் தொழிலுக்குத் தள்ளப்படுகின்றார்கள். தொழில் புரிகின்றார்கள் இதனால் பல உடலியல், உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றார்கள என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சமூகத்தில் எந்த மட்டத்தில் உள்ள பெண்களாயினும் சரி அவர்களுக்கென்று குடும்பத்தில் சில பொறுப்புக்களும் கடமைகளும் உண்டு. தொழிலுக்குச் செல்வதால் இவை குறைவதில்லை. தன்து தொழில் கடமைகளை முடித்து விட்டு ஓடோடி வந்து வீட்டுக் கடமையைச் செய்ய வேண்டும். மீண்டும் அதிகாலை வீட்டுக்கடமைகளை ஓடியோடி முடித்து விட்டு அலுவலகம் செல்ல வேண்டும். இவ்வாறு காலை எழுந்ததிலிருந்து இரவு நித்திரைக்குச் செல்வது வரை பம்பரமாகச் சுழன்று கொண்டிருக்க வேண்டியிருக்கின்றது. இதனால் இவர்கள் படும் அவஸ்தையை யாரும் உணர்வதில்லை.

இவர்களுக்கு ஏற்படும் உடல் வலியையோ, களைப்பையோ யாரும் கவனத்தில் கொள்வதில்லை. தங்கள் கடமைகளைத்தானே இவர்கள் செய்கின்றார்கள். அதனை ஏன் பொருட்படுத்த வேண்டுமென எண்ணுகிறார்கள்.

இவைமட்டுமன்றி பெண்கள், தொழில்பார்க்கும் இடங்களில் பல ஆடவர்களுடன் பழக வேண்டியுள்ளது. இவை தொழில்ரீதியாக அவசியமானதாகவும் இருக்கும். பெண்கள் தமது கடமைகளைச் சரியாகவும் திறமையாகவும் செய்ய நினைப்பதால் மற்றவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் இனிமையாகவும் சில வேளைகளில் கடுமையாகவும் பேசவேண்டியுள்ளது. இவர்களின் வேலையிலும் திறமையிலும் பொறாமை கொள்வோர் இவர்களைப் பற்றிய அவதூறான கதைகளைப் பரப்பி விடுகின்றனர். இது பெண்களின் மதிப்பைக் குடும்பத்திலும் சமுகத்திலும் இழக்க வைக்கின்றது. இளம் பெண்களாயின் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை இது பாதிக்கச் செய்கின்றது. திருமணமான பெண்களாயின் கணவன் மனைவியிடையே வீண் சர்ச்சைகளை ஏற்படுத்தி குடும்பப் பிரிவுக்கு வழிவகுக்கின்றது. இவற்றுடன் பெண்கள், வேலை புரியும் இடங்களிலுள்ள ஆண்களின் காமப்பார்வைகளுக்கும் ஆளாகவேண்டியுள்ளனர். இதனால் இவர்கள் மனஉறுதியுடனும் பயஉணர்வுடனும் மிக அவதானமாகவே நடக்க வேண்டியுள்ளனர். தம்மை எந்த நேரமும் அவதானித்துக் கொண்டிருக்கும் பல கண்களிலிருந்தும் தன் பெயருக்கு இழுக்கு ஏற்பட்டு விடாமல் பாதுகாத்துக் கொண்டு தம் தொழிலைச் செய்ய வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர். இதனை விட அலுவலகங்களில் பெண்களின் கீழ் ஆண்கள் பணி புரிய வேண்டிய நிலையும் இன்று காணப்படுகின்றது. இவ்வாறான இடங்களிலுள்ள ஆண்கள் “நாம் ஒரு பெண்ணின் கீழ் வேலை செய்வதா?” எனும் எண்ணப்போக்கில் தமது கடமைகளைத் தவற விடுவதுடன் பெண் உத்தியோகத்தர் பற்றி “அவள் பொல்லாதவள், தலைக்கனம் கொண்டவள், அடங்காதவள்” என்று கதை கட்டி விடுகின்றனர். இதற்குக் காரணம்,

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்”

என்று பாரதி பாடி உருவாக்கிய புதிய பெண் சமுதாயத்தை இன்றைய ஆண்களால் ஏற்றுக் கொள்ள முடியாமையே.

குடும்பத்தில் தலைவன், தலைவி என இருவர் உள்ளபோதும் குடும்பத்தில் உள்ளோருக்கு அன்பும், பண்பும், அறிவும், பக்தியும் ஊட்டி அவர்களை நல்லதொரு சூழலில் வளர்ப்பவள் குடும்பத் தலைவியே. அதாவது குடும்பத்தை வழி நடத்துபவளே பெண். எனவே குடும்பத்தவரின் நெறி பிறழ்வான ஒழுக்கமற்ற நடத்தைக்கும் குடும்பத் தலைவியே காரணமாகின்றாள். அவள் சரியாக வழிநடத்தவில்லை என்பார்கள். எனவே அப்பொறுப்பையும் அவளே ஏற்க வேண்டும். இவ்வாறு பல சுமைகள் பெண்கள் மீது சுமத்தப்படுகின்றன. வேலைக்குச் செல்வதால் பெண்கள் தம் குழந்தைகளை அன்போடு அரவணைத்துக் கல்வி புகட்ட நேரமில்லை, கட்டியணைத்துக் கொஞ்சி விளையாட நேரமில்லை, அன்பு பாராட்ட நேரமில்லை. கடமை, கடமை என்று இயந்திரம் போல் வாழ்க்கை நடாத்த வேண்டியுள்ளது. இதனால் பிள்ளைகளுக்குத் தாய் மேலும் கணவனுக்கு மனைவி மேலும் அன்பு இல்லாமல் போகின்றது. வெறுப்பு ஏற்படுகின்றது. இதனால் பிள்ளைகள் நெறிதவறிப் போக வழி ஏற்படுகின்றது. குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இவற்றுடன் தற்போது வேலை தேடி வெளிநாடு செல்வதாலும் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஆண்கள் எந்நாட்டுக்குச் சென்று எவ்வாறு திரும்பி வந்தாலும் அவர்கள் ஒழுக்கமானவர்களாக மதிக்கப்படுகின்றார்கள். ஆனால் தமது குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக

வெளிநாடு செல்லும் பெண்கள் அங்கு ஊண், உறக்கமின்றி அல்லும் பகலும் உழைத்து அன்பும் பாசமுமின்றி தனிமையில் வாடி, தம்மை, பலரிடம் இருந்தும் பாதுகாத்து உழைத்துக் களைத்து வரும் போது அவர்களை ஏளனமாகப் பார்ப்போரே அதிகமாகவுள்ளனர். அவர்களது தியாகத்தை உணராமல் வெளிநாட்டில் அவர்கள் எப்படியிருந்தார்களோ எனும் சந்தேக பார்வையுடனேயே அவர்களைப் நோக்குகின்றனர். இனம், மதம், மொழியால் வேறுபட்ட சமூகத்தின் மத்தியில் தமக்கு ஏற்படும் துன்பங்களைத் தாமே எதிர்கொண்டு அவற்றிலிருந்து விடுபட்டு, பெரும் மகிழ்வுடன் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஓடிவரும் பெண்களுக்குக் கிடைப்பது என்ன? தூய்மையற்றவள் எனும் பட்டம். இதனால் இவர்களது எதிர்காலமே இருளாகின்றது.

இவ்வாறான நிலை ஏற்படக் காரணமென்ன? ஆணாதிக்கம். எவ்வளவுதான் பெண்கள் முன்னேற்றம் அடைந்தாலும் தமக்கு அடிமையாக இருக்க வேண்டும், என்று ஆண்கள் நினைக்கின்றனர். ஆண்களுக்குச் சமனான கல்விகற்றும், சமமான உத்தியோகம் செய்தும், சம ஊதியம் பெற்றும் அவளை அடிமையாக எண்ணுவது, இவர்கள் இன்னும் ஆணாதிக்கமெனும் மாயையிலிருந்து, அறியாமை இருளிலிருந்து விடுபட வில்லை என்பதையே காட்டி நிற்கின்றது. இவர்கள் புரிந்துணர்வுடன் பெண்களை நோக்குவோர்களாயின் பெண்களின் இப்பிரச்சினைகள் தீர்க்கப்படலாம். குடும்பப் பொறுப்புக்களிலும் கடமைகளிலும் ஆண்களும் பங்குகொள்வார்களாயின் வீடுகளில் பெண்கள் படும் துன்பங்கள் குறைக்கப்படும். வெளியிடங்களில் அதாவது தொழில் புரியும் இடங்களில் புரிந்துணர்வுடனும் சீரிய பார்வையுடனும் பெண்களை நோக்குவார்களாயின் பெண்களுக்கு ஏற்படும் வீண் கெட்ட பெயர்களும் நீக்கப்படும். அத்துடன் நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரியை அவரது தொழில் தகைமைகளைக் கொண்டு நோக்கும் போது அவர் ஆணாகவோ அன்றி பெண்ணாகவோ இருப்பினும் அவருக்கு அப்பதவிக்குரிய மரியாதையும் மதிப்பும் வழங்கப்பட வேண்டும். இதை விடுத்து பெண்ணின்கீழ் ஆண் வேலை புரிவது தாழ்வானது என்றும், அது ஆண்களை இழிவுபடுத்தும் செயலென்றும் எண்ணுவது மடமையே. அன்று பாரதிபாடிய

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி”

எனும் பாடலை ஆண்களும் பெண்களும் பாடி மகிழும் நாள் என்று உருவாகின்றதோ அன்றே இப்பிரச்சினைகள் தீர்க்கப்படும். உலக நாடுகள் பலவற்றில் பல மாநாடுகளில் பெண்களின் இப்பிரச்சினைகள் பேசப்படுகின்றன. இருப்பினும் அதற்கான தீர்வு பெறப்படுவதில்லை. இதற்கான தீர்வை ஆண்களாலேயே ஏற்படுத்த முடியும். ஆண்கள், “ஆணாதிக்கம்” எனும் மாயையிலிருந்து நீங்கி புரிந்துணர்வுடன் நோக்கும் நாள் உருவாக வேண்டும். அந்நாளை யாவரும் எதிர்பார்ப்போம். அதற்காக பிரார்த்திப்போம். அது நிறைவேற்றப்படும் போது பாரதியின் கனவு நனவானதை எண்ணி பெருமையுடன் கொண்டாடி மகிழ்வோம்.

**செல்வி. சுபாஜினி வேலாயுதம்,**
இரண்டாம் வருடம்,கணிதப்பிரிவு.

# மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் முத்தமிழ் மன்றத்தினால் நடாத்தப் பெற்ற கவிதை, கட்டுரை, சிறுகதை போட்டிகளின் முடிவுகள் - 1998

## கவிதைப் போட்டியில்

1ம் இடம் - செல்வி.ப.உதயகுமாரி. (முதலாம் வருடம், விஞ்ஞானப்பிரிவு).
2ம் இடம் - திரு.மா.யோகராஜன். (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
3ம் இடம் - செல்வி.க.லக்சுமிப்பிரியா. (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).

## கட்டுரைப் போட்டியில்

1ம் இடம் - திருமதி.ம.அரியரெட்ணம் (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
2ம் இடம் - திருமதி.க.நாகேந்திரகுமார். (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
3ம் இடம் - செல்வி.வே.சுபாஜினி. (இரண்டாம் வருடம், கணிதப்பிரிவு).

## சிறுகதைப் போட்டியில்

1ம் இடம் - திரு.எஸ்.பிரகாஸ். (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
2ம் இடம் - திருமதி.ம.அரியரெட்ணம் (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
3ம் இடம் - திருமதி.இ.இளையதம்பி (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).
” செல்வி.ம.மலர்விழி (முதலாம் வருடம், ஆரம்பக்கல்வி).

# ஆசிரிய மாணவர்

அகர முதற் கொண்டோம்
அறிவுலகம் புகுந்து விட்டோம்
இகபரசுகங்கள் தரும்
இங்கிதங்கள் புரிந்து கொண்டோம்.

பகலிரவாய்க் கண் விழித்து
பட்டினிகள் பல கிடந்து
படிப்பதனை நிறைவாக்க
பல நாட்கள் காத்திருந்தோம்.

எவர் எதனை நினைத்தாலும்
எங்கள் திறன் எம்முட்டனே
அவர் எழுதும் தலைவிதியை
அழித்தெழுத யாருளரோ?

கல்வியோ கரையிலதாய்க்
கண்ணுக்குத் தெரிந்தாலும்
செல்வத்துச் செல்வமென
தேடிக் கொஞ்சம் சேர்த்துக் கொண்டோம்.

பட்டு மூன்ற பாட்டினுக்காய்
படியளந்த எம்மீசன்
இட்ட பதவியிங்கே
இதமான நல்லாசான்.

சுடச்சுடரும் பொன்போலே
சிந்தையிலே தெளிவு பெற்றோம்
மடமையினை நீக்குகின்ற
மாண்பு தனை நாமடைந்தோம்.

அனைத்தையுமே கற்றுவிட்டால்
ஆசிரியராய் வரலாமா?
மனப்பாங்கு அறிவு திறன்
அறிந்திருத்தல் வேண்டாமா?

கசடறக் கற்ற கல்வி
கருத்திலிலே நிறைந்திடினும்
இசைவாக எடுத்துரைக்கும்
இயல்புகளை அறிதல் கடன்.

உள்ளத்தில் பெருநிறைவு
ஊக்கத்தில் தன்னிறைவு
வெள்ளமென அனுபவங்கள்
தருவதேயெம் கற்கை நெறி.

குருசீடக் கடமையினைக்
குறைவின்றி உணர்ந்து கொண்டால்
பெருமைவரும் சேவையிலே
பேர்வாழும் ஏட்டினிலே.

திருமதி. ஜீ. சவரி
முதலாம் வருடம், விஞ்ஞானப்பிரிவு.

# மாணவர் ஆளுனர் பேரவை - 1997/1998

*காப்பாளர்:*
திரு.வ.கனகசிங்கம்.
(முதல்வர்)

**1997 ம் வருடம்:**

முதலாம் பருவம்:
திரு.மு.மகாலிங்கம்.
திருமதி.உ.விமலகுமாரன்.

இரண்டாம் பருவம்:
திரு.எஸ்.ஜோன்மோஸஸ்.
திருமதி.றீ.அருள்தாஸ்.

மூன்றாம் பருவம்:
திரு.மு.மகாலிங்கம்.
செல்வி.கு.சுபத்திரா.

**1998 ம் வருடம்:**

முதலாம் பருவம்:
திரு.எஸ். ஜோன்மோஸஸ்
அருட்சகோதரி. அருள்மரியாAC

இரண்டாம் பருவம்:
திரு. மு. மகாலிங்கம்
செல்வி. க. திலகலோஜினி

மூன்றாம் பருவம்:
திரு.எஸ். ஜோன்மோஸஸ்
திருமதி.ரா.திலகசந்திரரத்தினம்

## விடுதித் தலைவர்கள்

**1997 ம் வருடம்:**

முதலாம் பருவம்:
திரு. மு. மகாலிங்கம்
செல்வி. கனகம்மா

இரண்டாம் பருவம்:
திரு. மு. மகாலிங்கம்
செல்வி. கனகம்மா

மூன்றாம் பருவம்:
திரு. மு. மகாலிங்கம்
செல்வி. கனகம்மா

**1998 ம் வருடம்:**

முதலாம் பருவம்:
திரு.எஸ்.ஜோன்மோஸஸ்.
செல்வி.வே.சுபாஜினி.

இரண்டாம் பருவம்:
திரு.எஸ்.ஜோன்மோஸஸ்.
செல்வி.வே.சுபாஜினி.

மூன்றாம் பருவம்:
திரு.எஸ்.ஜோன்மோஸஸ்.
செல்வி.வே.சுபாஜினி.

1998

# முத்தமிழ் மன்றம்,
# அரசினர் ஆசிரியர் கலாசாலை,
# மட்டக்களப்பு.

காப்பாளர்:
**திரு. வ. கனகசிங்கம்.**
(முதல்வர்)

பொறுப்பாளர்கள்:
**திரு. செ. வினாசித்தம்பி.**
(துணை முதல்வர்)
**திரு. பொ. கோவிந்தராஜா**
(விரிவுரையாளர்)

ஆலோசகர்கள்:
**திரு. வே. லக்ஷ்மிசுந்தரம்**
(பிரதி முதல்வர்)
**திரு. சி. கிருஷ்ணபிள்ளை**
(விரிவுரையாளர்)
**திரு. வ. தெய்வேந்திரன்**
(விரிவுரையாளர்)
**திரு. எஸ். ரவீந்திரன்.**
(விரிவுரையாளர்)

தலைவர்:
**திரு. மு. மகாலிங்கம்**

செயலாளர்::
**செல்வி. க. திலகலோஜினி**

பொருளாளர்:
**செல்வி. வே. சுபாஜினி**

உப தலைவர்:
**திரு. இ. என். குருஸ்**

உப செயலாளர்:
**திருமதி. ஜீ. சவரி**

நிர்வாகசபை
உறுப்பினர்கள்:
**திரு. எம். மோகனதாஸ்**
**திரு. எஸ். ஆர். பட்சேயக்**
**திரு. எஸ். பிரகாஷ்**
**திரு. என். செந்தில்தாசன்**
**திருமதி. ம. அரியரெட்ணம்**

## செயற்பாடுகள்

எமது கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வரும் கலைச்செல்வி மலரானது இவ்வாண்டும் அழகிய மலராக மலர்ந்து, அதன் மணத்தை நுகரவும், அதன் அழகை ரசிக்கவும் உங்கள் கரங்களில் தவழ்ந்து மகிழச் செய்கிறது.

இக்கலைச் செல்வியில் தரமான ஆக்கங்கள் இடம்பெற வேண்டுமெனும் நோக்கில் ஆசிரியமாணவர்களிடையே கவிதை, சிறுகதை, கட்டுரைப்போட்டிகளை நடாத்தி அவர்களை எழுதுவதற்குத் தூண்டியமை.

தனது சகோதர மன்றமான இலக்கிய மன்றத்துடன் இணைந்து ஒவ்வொரு புதன் கிழமையிலும் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை நடாத்தியமை.

ஆசிரிய மாணவர்களின் விருப்பத்திற்கமைய கூத்து நடிப்பதற்கான பயிற்சியை ஆரம்பித்தமை.

கலாநிதி மௌனகுரு அவர்கள் கலாசாலையில் "அனுபவப் பகிர்வு" எனும் தலைப்பில் உரையாற்றுவதற்கு ஒழுங்கு மேற்கொண்டமை.

சென்னை பல்கலைக்கழக கீழைத்தேய நாடகத்துறைப் பேராசிரியர் திரு. அரசு அவர்கள் "சினிமாவின் நிஜங்கள்" எனும் தலைப்பில் 04-08-98 அன்று கலாசாலை மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியமை.

எமது மன்றச் செயற்பாட்டுக்கு ஆலோசனை உதவி நல்கிய முதல்வர், துணைமுதல்வர், பிரதி முதல்வர், விரிவுரையாளர்கள், முத்தமிழ் மன்ற உறுப்பினர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செல்வி. க. திலகலோஜினி**
**மன்ற செயலாளர்.**

# இந்து மாமன்றம், அரசினர் ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு.

காப்பாளர்
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

பொறுப்பாளர்
**திரு. செ. வினாசித்தம்பி**
(துணை முதல்வர்)

ஆலோசகர்கள்
**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்**
(பிரதி முதல்வர்)
**திரு. பொ. கோவிந்தராஜா**
(விரிவுரையாளர்)
**திரு. வ. தெய்வேந்திரன்**
(விரிவுரையாளர்)
**திரு. கு. காராளசிங்கம்**
(விரிவுரையாளர்)
**திரு. க. வினாயகமூர்த்தி**
(விரிவுரையாளர்)
**திரு. கி. நடராஜா**
(விரிவுரையாளர்)
**திரு. எம். பாஸ்கரன்**
(விரிவுரையாளர்)

தலைவர்
**திரு. மு. மகாலிங்கம்**
செயலாளர்
**செல்வி. கு. சுபத்திரா**
பொருளாளர்
**திருமதி. உ. விமலகுமாரன்**
உபதலைவர்
**திரு. பி. நாகராஜா**
உபசெயலாளர்
**திரு. எஸ். மகேந்திரா**
உபபொருளாளர்
**செல்வி. ப. ஜெகதாம்பிகை**

உறுப்பினர்கள்
**திருமதி. இ. புவனேந்திரன்**
**திருமதி.ரா. திலகசந்திரரத்தினம்**
**திருமதி. தி. ரட்ணேஸ்வரி**
**செல்வி. ஏ. கீதா**
**செல்வி. கா. சிவநாயகி**
**செல்வி. எஸ் ஆனந்தி**
**செல்வி. வே. சண்பகாதேவி**
**திரு. ஏ. முரளிதரன்.**
**திரு. க. ரவீநதிரன்**
**திரு. பி. கிருபாகரன்**
**திரு. ந. செந்திதாசன்**

## செயற்பாடுகள்

"திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை"

*கலாசாலையில் இன்னருள் சொரியும் ஞானவிளக்காம் ஞானவிநாயகர் ஆலயத்திலே தினமும் காலைப் பூசையும், வெள்ளிதோறும் விஷேடபூசையும் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.*

*14-01-1998 பொங்கல் தினத்தன்று அதி விசேடபூசை ஆராதனைகள் நடத்தப்பட்டன.*

*முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களால் ஆலயத்தில் சரியைத் தொண்டு செய்யப்பட்டது.*

*25-02-98 மகா சிவராத்திரி தினத்தன்று நான்கு சாமப்பூசைகள் சிறப்பாகச் செய்யப்பட்டதுடன், இயல், இசை, நாடகங்கள் என்பனவும் விழாவினை மேலும் மெருகூட்டியதுடன், "மார்க்கண்டேயன்" நாடகம் சிறப்புற அமைந்தது குறிப்பிடத்தக்கது,.*

*சமயக்குரவர்களின் குருபூசைகள் அந்தந்தத் தினங்களிலே மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. அதேவேளைகளில் வில்லுப்பாட்டுகளும் நாயன்மாரின் வாழ்க்கை வரலாற்றினைச்சித்தரிக்கும் கதாப் பிரசங்கமும் இடம்பெற்றன.*

*நவராத்திரி தினத்திலே முதற்கண் கணபதிக்கு பொங்கல் சடங்கும், சரஸ்வதி மண்டபத்திலே சரஸ்வதி பூசைகளும் இயல், இசை, நாடகங்களும் சைவ மணங்கமழ அரங்கேறின.*

*ஆலயத்திலே பூந்தளிர்களுக்கு நீர்பெறும் பொருட்டு புதிய குழாய்கள் பொருத்தப்பட்டு சகல பாகங்களுக்கும் நீர் விநியோகம் செய்யப்பட்டது.*

*ஸ்ரீ ஞான விநாயகர் அமர்ந்திருக்கும் ஆலயத்தை புனரமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு குழுக்களும் நியமிக்கப்பட்டன.*

*மார்கழி மாதத்திலே 10 தினங்கள் திருவெம்பாவை கொண்டாடப்படுகின்றது. அத்தினங்களிலே ஒவ்வொரு நாளும் காலையில் திருவெம்பாவை ஓதலும் அபிடேக ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன.*

*எமது மன்றச் செயற்பாட்டிற்கு உதவிய நிருவாக பீடத்திற்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் இந்து மன்றத்தின்சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**திரு. மு. மகாலிங்கம்.**
*தலைவர், இந்து மாமன்றம்.*

# கிறிஸ்தவ ஒன்றியம்,
# அரசினர் ஆசிரியர் கலாசாலை,
# மட்டக்களப்பு.

காப்பாளர்
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

பொறுப்பாளர்
**திருமதி. ஜே. ஜே. யோகேந்திரன்**
(விரிவுரையாளர்)

ஆலோசகர்கள்
**திரு. செ. வினாசித்தம்பி**
(துணை முதல்வர்)
**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்**
(பிரதி முதல்வர்)
**திரு. எஸ். அருமைராஜா**
(விரிவுரையாளர்)
**திரு. வே. தேவராஜ முதலி**
(விரிவுரையாளர்)

தலைவர்
**அருட்சகோ. அருள்மரியா A.C**

செயலாளர்
**திரு. எஸ். மோசேஸ்**

பொருளாளர்
**திருமதி. நீற்றா அருள்தாஸ்**

உபதலைவர்
**திரு. ஏ. என். குருஸ்**

உபசெயலாளர்
**திரு. அ. அன்ரனி லீனஸ்**

உறுப்பினர்கள்
**திருமதி. எம் ஜெயராம்**
**திருமதி. எம். ஜே எவ். எவ். தர்மராஜா**
**திரு. எம். ரோபேட் ரவீந்திரன்**
**திரு. எஸ். மங்களச்சந்திரா**
**செல்வி. கே. கிறேஸ் ஞானமலர்**
**செல்வி. யோ. பிரேமினி**
**திரு. அ. விமலராசா**

## செயற்பாடுகள்

வெள்ளி தோறும் காலை 7.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை ஒவ்வொரு சபைக்குருக்களையும் அழைத்து ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

உலக இரட்சகரும் எமது மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் பிறப்பினை நினைவுகூறும் ஒளிவிழாவானது வழமைபோல் கடந்த வருடம் 25-11-97 அன்று ஆண்டவரின் கிருபையால் கொண்டாடப்பட்டது. பிரதம அதிதியாக திருமலை மட்டுநகர் ஆயர் அதி. வணக்கத்துக்குரிய யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் வாழ்த்துச் செய்தி வழங்கி இவ்விழாவைச் சிறப்பித்தார். மேலும் பல கிறிஸ்தவ சபைகளைச்சேர்ந்த குருமார்களும் வருகைதந்து, ஒளிவிழாவின் முக்கியத்துவம் பற்றியும், யேசு கிறிஸ்துவின் பிறப்புப் பற்றியும் எடுத்துரைத்து விழாவைச் சிறப்பித்தனர்.

இவ்வருடம் கிறிஸ்தவ ஒன்றிய மாணவர்களால் 02-04-98 அன்று விபூதிப்புதன் பூசையும், 03-07-98 அன்று நன்றித் திருப்பலியும் நடத்தப்பட்டது. 05-06-98 அன்று "யேசு" எனும் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. மேலும் வழமைபோல் முதியோர் இல்லம், புகலிடம் போன்ற நிறுவனங்களுக்குச் சென்று இயன்ற நன்கொடைகள் வழங்கப்பட்டன.

இவ்வருடம் கிறிஸ்தவ ஒன்றிய மாணவர்களால் ஒளிவிழாவானது நவம்பர் மாதத்தில் மிகவும் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

எமக்கு சகல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி வழிநடாத்திய முதல்வர், துணைமுதல்வர், பிரதிமுதல்வர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், ஏனைய சகல மாணவர்கள் அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்.

**திரு. எஸ். ஜே. மோசேஸ்,**
செயலாளர்.



# விளையாட்டு மன்றம்
# அரசினர் ஆசிரியர் கலாசாலை
# மட்டக்களப்பு.

காப்பாளர்
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

பொறுப்பாளர்
**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்**
(பிரதி முதல்வர்)

ஆலோசகர்கள்
**திரு. செ. வினாசித்தம்பி**
(துணை முதல்வர்)
**திரு. வ. தெய்வேந்திரன்**
(விரிவுரையாளர்)
**திரு. பொ. கோவிந்தராஜா**
(விரிவுரையாளர்)
**செல்வி. பவானி பாலசுந்தரம்**
(விரிவுரையாளர்)

தலைவர்
**திரு.எஸ். ஜே. மோஸஸ்**

உபதலைவர்
**திரு. கே. விஜயகுமார்**

செயலாளர்
**திரு. எ. ந. குருஸ்**

உபசெயலாளர்
**திரு. வீ. மோகனதாஸ்**

பொருளாளர்
**செல்வி. அ. ரஜனி**

உபபொருளாளர்
**செல்வி. ஏ. பிரதட்சணி**

உறுப்பினர்கள்
**செல்வி. எஸ். கனகம்மா**
**திருமதி. வை. புண்ணியராஜா**
**செல்வி. வே. சுபாஜினி**
**செல்வி. ரீ. சுபாஜினி**

## செயற்பாடுகள்

விளையாட்டு மன்றத்தின் செயற்பாடுகளுக்கு மகுடமிட்டாற்போல் எமது கலாசாலையின் 1998 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த மேமாதம் 28ஆந் திகதி விமரிசையாக கலாசாலை மைதானத்தில் நடைபெற்று முடிந்தன. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு நகர பிதா திரு. செழியன் பேரின்பநாயகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். மாணிக்கராஜா, புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் திரு. கே. நவரெட்ணம், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். குருகுலசிங்கம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிரின்ஸ் காசிநாதர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வழக்கமான தட கள நிகழ்வுகளோடு பெண்களுக்கு வலைப்பந்தாட்டமும், ஆண்களுக்கு கிரிக்கட், கரப்பந்தாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை, சிறப்பான விளையாட்டு விழாவுக்கு அடிகோலின. ஆசிரிய மாணவிகளால் சேலை அணிந்து கலாசார பின்னணியோடு செய்து காட்டப்பட்ட உடற்பயிற்சிக் கண்காட்சியானது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசில்களை திருமதி. எம். செழியன் பேரின்பநாயகம் அவர்கள் வழங்கினார்.

வருடாந்த விளையாட்டு விழாவினைத்தவிர இக்கலாசாலையில் தரமானதொரு கிரிக்கட் குழு உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்குழு மட்டக்களப்பு நகரிலுள்ள பல்வேறு கிரிக்கட் குழுக்களோடும் நட்பு ரீதியான பல போட்டிகளில் கலந்துள்ளது. இதே போன்று சிறப்பான வலைப்பந்தாட்ட குழுவும் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கரப்பந்தாட்டக் குழுக்கள் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைக் குழுக்களோடு, நட்புரீதியான போட்டிகளில் கலந்து கொண்டன.

விளையாட்டு மன்றமானது தனது வளர்ச்சிக்கு உதவிய முதல்வர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆகியோருக்கும் மன்றத்தால் நிகழ்த்தப்பட்ட சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய பழைய மாணவர்கள், ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள், பாடசாலை மாணவமாணவிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எதிர்வரும் ஆண்டும் அனைவரினதும் பேராதரவையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

நன்றி.

**திரு. ஏ. நவரெத்தினராசா குருஸ்,**
விளையாட்டு மன்றச் செயலாளர்.



# கணித - விஞ்ஞான மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

காப்பாளர்
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

பொறுப்பாளர்
**திரு. பொ. கோவிந்தராஜா**
(விரிவுரையாளர்)

ஆலோசகர்கள்
**திரு. செ. வினாசித்தம்பி**
(துணை முதல்வர்)
**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்**
(பிரதி முதல்வர்)
**திரு. க. வினாயகமூர்த்தி**
(விரிவுரையாளர்)
**திரு. வ. தெய்வேந்திரன்**
(விரிவுரையாளர்)
**திரு. கி. நடராஜா**
(விரிவுரையாளர்)
**திரு. எம். பாஸ்கரன்**
(விரிவுரையாளர்)
**திரு. மு. தேவராஜமுதலி**
(விரிவுரையாளர்)
**திரு. பொ. காந்தியடியான்**
(விரிவுரையாளர்)
**திருமதி. நி. இரவீந்திரநாத்**
(விரிவுரையாளர்)

தலைவர்
**திருமதி. ஜீ. பத்மாவதி**

செயலாளர்
**திருமதி. ரா. திலகச்சந்திரரத்தினம்**

பொருளாளர்
**செல்வி. வே. சுபாஜினி**

உபதலைவர்
**திரு. எஸ். ஆர். பச்சேக்**

உபசெயலாளர்
**திரு. எம். மோகனதாஸ்**

உறுப்பினர்கள்
**செல்வி. அ. றஜனி**
**செல்வி. க. திலகலோஜினி**
**திருமதி. உ. விமலகுமாரன்**

## செயற்பாடுகள்

கணித, விஞ்ஞான ஆசிரியர்களால் மாதிரி பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு கற்பித்தல் செயல்முறை தொடர்பான ஆலோசனையும் விமர்சனமும் மேற்கொள்ளப்பட்டமை.

மட்டக்களப்பு முன்னோடிப்பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான, கணிதம் சம்பந்தமான விவாதப் போட்டிகளை ஒழுங்குபடுத்தி வெகுமதி வழங்கி ஊக்குவித்தமை.

எம் மன்ற செயற்பாட்டுக்கு சகல வழிகளிலும் உதவி நல்கிய முதல்வர், துணை முதல்வர், பிரதி முதல்வர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. ரா. திலகசந்திரரத்தினம்,
மன்ற செயலாளர்.

# விவசாய மன்றம்,
# அரசினர் ஆசிரியர் கலாசாலை,
# மட்டக்களப்பு.

காப்பாளர்
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

பொறுப்பாளர்
**திரு. கு. காராளசிங்கம்**
(விரிவுரையாளர்)

ஆலோசகர்கள்:
**திரு. செ. வினாசித்தம்பி**
(துணை முதல்வர்)
**திரு. வே. லக்ஷ்மி சுந்தரம**
(பிரதி முதல்வர்)
**திரு. பொ. கோவிந்தராஜா**
(விரிவுரையாளர்)
**திரு. க. வினாயகமூர்த்தி**
(விரிவுரையாளர்)

தலைவர் :
**திரு. மு. மகாலிங்கம்**

செயலாளர் :
**திரு. எஸ். ஜே. மோஸஸ்**

பொருளாளர் :
**அருட். சகோ. அருள்மரியா**

உபதலைவர் :
**திரு. த. கோணேஸ்வரன்**

உப செயலாளர் :
**திரு. ந. செந்திதாசன்.**

உறுப்பினர்கள் :
**திருமதி. வ. நவரட்ணம்**
**திருமதி. த. பத்மாவதி**
**திரு. ம. விஜயராஜா**
**திரு. டி.ஜீ.பி. நிரஞ்சன்**
**திரு. ஏ. றொபர்ட்கரன்**
**திரு. இ. கண்ணதாசன்**
**திரு. தி. மதிவண்ணன்**
**திரு. அ. வீமலராசா**

## செயற்பாடுகள்

எமது கலாசாலையின் விவசாய மன்றத்துக்குரிய பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலத்தை பயிர்ச் செய்கைக்கு ஏற்ற விதத்தில் மாற்றியமைத்தமை.

கலாசாலைத் தோட்டத்தில் மரவள்ளி, வற்றாளை, நிலக்கடலை, வெண்டி, கத்தரி போன்ற உப உணவுப் பயிர்களைச் செய்து பயன்பெற்றமை.

நாற்று மேடைகள் தயாரித்து மிளகாய், கீரை, கத்தரி, வெண்டி, விதையில் உற்பத்தி செய்யப்படும் 3 மாத கோயம்புத்தூர் முருங்கை போன்ற பயிர்களைப் பயிரிட்டமை.

மா, பலா, வாழை, மாதுளை போன்ற பல இன மரங்களை நட்டு அவற்றின் பராமரிப்பு முறைகளைப் பற்றி அறிந்து கொண்டமை.

24.07.1998 அன்று சத்துருக்கொண்டான் விவசாய பண்ணைக்குச் சென்று நாற்றுமேடை பராமரிப்பு, பயிர்ச்செய்கை முறைகள், பயிர்வகைகள், நீர்ப்பாசன முறைகள், நோய்த்தடுப்பு முறைகள் பற்றி அறிந்து கொண்டதுடன் அங்கு இடம் பெற்ற விவசாய கருத்தரங்கில் கலந்து கொண்டமை.

அன்று “மன்றசா” நிலையத்தில் கோழிவளர்ப்பு, இறால் வளர்ப்பு அதன் பராமரிப்பு போன்றவற்றை அறிந்து கொண்டமை.

**எதிர்காலத்திட்டங்கள் :**

1. *எமது போதனாசியரின் ஆலோசனைக்கிணங்க விவசாயத் திணைக்களப் பகுதியிலிருந்து விவசாய உத்தியோகத்தர்களை அழைத்து பழ மரங்களை ஒட்டு முறையில் விருத்தி செய்யும் செய்முறைப் பயிற்சியைப் பெற உத்தேசித்துள்ளமை.*

2. *கண்டியிலுள்ள “கண்ணொறுவ” விவசாயப் பயிற்சி நிலையத்துக்குச் சென்று அதனை பார்வையிட உத்தேசித்துள்ளமை.*

3. *வெவ்வேறு இன அவரைப் பயிர்களையும், கீரை வகைகளையும் செய்கை பண்ணத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*எமது மன்றச் செயற்பாடுகளைத் திறம்பட நடாத்த உதவிய நிர்வாக பீடத்தினருக்கும் உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**திரு. எஸ். ஜே. மோசஸ்**
*மன்ற செயலாளர்*



# ஆண்கள் விடுதி மன்றம்,
# மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை,
# மட்டக்களப்பு.

*காப்பாளர் :*
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

*பொறுப்பாளர் :*
**திரு. வே. லக்ஷ்மிசுந்தரம்**
(பிரதி முதல்வர்)

*விடுதித்தலைவர் :*
**திரு. எம். மகாலிங்கம்**

*செயலாளர் :*
**திரு. எஸ்.ஜே. மோசேஸ்**

*பொருளாளர் :*
**திரு. பீ. நாகராஜா**

*உறுப்பினர்கள் :*
**திரு. ஆர். கண்ணதாசன்**
**திரு. பீ. பிரபாகரன்**
**திரு. வீ. மோகனதாஸ்**
**திரு. கே. விஜயகுமார்**
**திரு. கே. கங்கேஸ்வரன்**
**திரு. கே. ரவீந்திரன்**

## செயற்பாடுகள்

- ❑ *மாதத்திற்கு இரு தடவை மன்றத் தலைவரால் மன்றக் கூட்டம் கூடி, விடுதி ஒழுங்குகளைப் பரிசீலனை செய்வதோடு, விடுதியில் காணப்படும் குறைபாடுகள் இனம் காணப்பட்டு அவை விடுதி மேற்பார்வையாளருடாக நிவர்த்தி செய்யப்பட்டமை.*

- ❑ *விடுதிப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் கசட் றேடியோ, "அம்லிபயர்", மின்விளக்குகள் என்பன விடுதி மாணவர்களின் செலவில் திருத்தியமைக்கப்பட்டமை.*

- ❑ *வாரத்திற்கு ஒரு முறை விடுதியும், சுற்றுப்புறமும், விடுதி மாணவர்களால் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டமை.*

- ❑ *ஆண்கள் மாணவர் பேரவையினால் ஓய்வு நேரங்களில் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் "சிறுநூலக ஏற்பாடு", மற்றும் கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டமை.*

- ❑ *எமது விடுதி மன்றச் செயற்பாடுகள் அனைத்தையும் சிறப்பாக மேம்பாடடையச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிருவாகத்தினருக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**திரு. எம். மகாலிங்கம**
*விடுதி மன்றத் தலைவர்.*



# பெண்கள் விடுதி மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

*காப்பாளர்*
**திரு. வ. கனகசிங்கம்**
(முதல்வர்)

*பொறுப்பாளர்*
**செல்வி. என். பேரின்பநாயகி**

*விடுதித்தலைவி*
**செல்வி. வி. சுபாஜினி**

*உபதலைவி*
**செல்வி. பீ. பாலேஸ்வரி**

*செயலாளர்*
**செல்வி. அ. றஜனி**

*பொருளாளர்*
**திருமதி. நீ. அருள்தாஸ்**

## செயற்பாடுகள்

விடுதி மேற்பார்வையாளர் இல்லாத காரணத்தால் மாதமொருமுறை நடைபெறும் விடுதி மன்ற பொதுக்கூட்டம், மூன்று மாதத்திற்கு ஒருமுறை அதிபர் அவர்களால் நடாத்தப்பட்டது. மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்ட பின்னர் மாதமொருமுறை கூட்டம் நடைபெற்று மாணவிகளுக்கு விடுதியில் ஏற்படும் சிரமங்கள் பற்றி ஆராய்ந்து நிவர்த்தி செய்யப்பட்டன.

மாதா மாதம் விடுதி மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டு பொதுத் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. இதற்கான கணக்கறிக்கைகள் பொதுக்கூட்டத்தில் விடுதிப்பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டன.

விடுதி மாணவர்களால் ஒவ்வொரு தவணை ஆரம்பத்திலும் விடுதியும் அதன் சுற்றுப் புறச் சூழலும் துப்பரவு செய்யப்பட்டன.

விடுதியில் ஒழுங்கு, கட்டுப்பாடு பேணப்பட்டு மாணவர்கள் ஒற்றுமையாகவும் கட்டுப்பாடுடனும் நடப்பது சிறப்பான விடயம்.

எமது மன்றச் செயற்பாடுகளுக்கு உதவிய நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும், விடுதி ஆசிரிய மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செல்வி. அ. றஜனி**
மன்றச் செயலாளர்.

# தகிக்கும் தணலிடையே...

கதுப்புக்களை ஆதவன் பொற்கிரணங்கள் சுள்ளெனக்கிள்ள கொக்கட்டிச்சோலை சுயம்பு இலிங்கத்திற்குச் எண்ணெய்க்காப்பிட, கால்கடுக்க, மனம்நொந்து மண்முனைத்துறையில் தமது உறவினர், நண்பர், அயலவர் எனப்பலருடன் மட்டக்களப்பின் பல பகுதிகளிலிருந்தும் வந்து நின்ற சனத்திரளுள் திருமலை,புத்தளம், யாழ்ப்பாணம்,பதுளை போன்ற பிறந்தகங்களைக் கொண்ட மட்டு அரசினர் ஆசிரியர் கலாசாலை மாணவர் சிலரும் கலந்திருந்தனர். எதிர்பார்த்திருந்த படகுப்பாதை வாவியில் சலனத்தை ஏற்படுத்தி உந்தி முன்னோக்கி வரக்கண்டு, முன்னே நகரமுற்பட்டவர்களை இருள் பச்சை உடையினர் முட்கம்பி வேலி தடுத்தது. ஒரு தடை தாண்டி, அடுத்த தடையில் பொதிகள் பிரித்துப் பார்க்கப்பட்டு இளவயதினர் பலரின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட முன்னிற்பவர்களை மேலும் நகரவிடாது எரிகருவிகள் எச்சரித்தன.

கே. சுரேஸ்,
முதலாம் வருடம்,
விஞ்ஞானப்பிரிவு.

தடைகள் தாண்டியோடிப் படகில் இடம்பிடிக்கவும் படகு எந்திர ஒலி எழுப்பவும் சரியாக இருந்தது. "என்ன குமரன் அதிர்ந்து போனாய்" "கிளாலி கடல் கடந்தது ஞாபகம் வருகுது" குமரன் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மட்டு அரசினர் ஆசிரியர் கலாசாலை மாணவன். சிறிது சிறிதாக மண்முனைத்துறையிலிருந்து படகு விலகிக் கொண்டிருக்க குமரனின் ஆள்மன ஆறா நினைவுகள் அரும்பின.

அதிகாலை, ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றைந்து ஒக்டோபரில், நீர்வேலியின் எல்லையோரம் எல்லைகள், இலக்குகள் இன்றி குண்டுகள் வீழ்ந்து வெடித்து ஊரைத் தட்டியெழுப்ப சுந்தரமும் உறக்கத்தைக் கலைத்து சாளரத்தினூடு தன் கண்களை வெளியேவிட்டார். நாய்கள் குரைப்பதும் சனங்கள் அங்குமிங்கும் அலைவதும் அவரது மனத்தை படபடக்க வைத்தது. சுந்தரம் போல் குடும்பமும் விழித்துக் கொள்ள அனைவரையும் அந்தப் பெரு வெடிப்பு உலுப்பியது. முன்வீடு நிலத்துடன் சாய, உள்ளிருந்து அவலக்குரல்கள் எழும்பிய வேகத்திலே அடங்கிப்போயின. 'கிபிர்' விமானம் காறி உமிழ்ந்த நெருப்புக் கோளங்கள் அவ்வீட்டிலிருந்த அனைவரையும் உறக்கத்தைக் கலைக்காமலே உறங்கச் செய்தன. விமானங்களின் இரைச்சல் காதைப்பிளந்தது. சுந்தரத்தின் மகன் நிமலன் "அம்மா ஒருக்கா பாத்திட்டு வாரன்" "சீ வேண்டாம் மேல சுத்துறாங்கள்" நிமலனின் தாய் தடுத்தாள். "எங்களுக்கும்" நாளைக்கு இப்படித்தான்" சொல்லிக் கொண்டு முன்வீட்டை நோக்கி நடந்தான். அங்கே கைவேறு, கால்வேறாக சதைப்பிண்டங்கள்: இரத்த வெள்ளத்தில் உயிரற்ற சடலங்கள்: எட்டிப்பார்க்க, கட்டியழ எவருமின்றி சிதறிய வீட்டினுள் சிக்குண்டிருந்தன. "அ.. அ... ம்மா" இதற்கு மேல் நா யாருக்கும் எழாது. கண்கள் பனிக்க உலர்ந்த தொண்டையுடன் தன்னையறியாமல் நிமலனின் கால்கள் தன்மனை புகுந்தன. காலை ஏன் விடிந்ததோ தெரியவில்லை. விடிந்தும் விடியாதது போலரே உருக்குலைந்தது. "எதுக்கும் எடுக்கக் கூடியவற்றை எடுத்துக் கட்டுங்கோ. பிறகு எல்லாத்தையும் விட்டுட்டுத்தான் ஓட வேண்டும்." சயிக்கிளை உள்முற்றத்திலிருந்து வெளிமுற்றத்திற்கு உருட்டினார் சுந்தரம். சில மணித்துளிகளில அந்த மயான அமைதியை அருகில் கேட்ட துப்பாக்கிச்சத்தங்கள் கலைத்தன. 'எல்லையற்ற வானில் எவன் கேட்பான் எம்மை' என இயந்திரக்கழுகுகள் செட்டை விரித்தன. குண்டுகள் வீசிக் கொண்டாடி தமது இரைகளைத் தேடின. அகன்ற வானம் பொழிந்து விளைந்த பூமி எரிந்து கருகியது. வசதியாக கட்டிக் கொண்டவற்றுடன் சுந்தரம், மனைவி, நிமலன், சாரதா, ரேணுகா ஆகியோர் சயிக்கிள்களை வேகமாகத் தள்ளினர். சுந்தரத்தின் மூத்த மகன் வீடு நோக்கி, தம் வீடு கழிந்து சில யார் தூரம் முன் செல்ல வானம் அமைதியானது. "அப்பா நில்லுங்கோ என்ர புத்தகங்களையும் எடுத்திட்டு வாரன். 'அவனைத் தனிய விடாமல் நீங்களும் போங்கோ' சுந்தரத்தினையும் மனைவி அனுப்பினாள். மூவர் வெளியே நிற்கவும் இருவரும் உள்சென்றனர். 'குமரன் நீ கெதியென்று புத்தகங்களை எடு' 'நான் கிணற்றடியில் வாளியைக் கழற்றுறன்' சுந்தரம்

கிணற்றடிக்குச் செல்ல, பத்து யார் தள்ளி செல்லொன்று கூவி வந்தது. சுந்தரம் வீழ்ந்து படுத்துக் கொண்டார் நல்லவேளையாக செல் வெடிக்கவில்லை. ஏக காலத்தில் இரண்டு கிபிர்கள் போட்டி போட்டுக் கொண்டு சுந்தரத்தின் மேல் மாடியில் தொட்டுச் செல்வது போல இருந்தது. அடுத்த கணம், கந்தக மணமும் கரும்புகையும் எங்கும் பரவியது. சுந்தரம் தலையை நிமிர்த்தினார். கரும்புகை கரையவும் அந்த இரட்டை மாடியும் தரையோடு தலை சாய்ந்தது. "நிமலன் நிமலன்" கத்திக் கொண்டே சுந்தரம் வீட்டு வாசலை நோக்கினார். பதில் இல்லை. போட்டிக்கோ தரையை முத்தமிட்டிருந்த இடையே நிமலனின் இரு பாதங்களும் தெரிந்தன. நிமலனின் பாதத்ததைப் பிடித்து இழுத்தார். பாதம் அசையவில்லை.நிமலன் விளையாடிய மண்ணில் நிமலனின் குருதி பெருகிக் கொண்டிருந்தது. கண்கள் மங்கிக் கொண்டுவர கண்களிலிருந்து நீர் பொலு பொலு வென ஓடியது. ஓடிய கண்ணீரும் செந்நீரும் சங்கமித்து உறவு கொண்டாடின.

"ஐயோ என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ" உறக்கத்தில் சார்மனைக் கட்டிலில் இருந்த சுந்தரம் கத்தினார். சுந்தரத்தின் அலறல் கேட்டு எல்லோரும் ஓடி வந்தனர். தன்னைச் சுற்றி எல்லோரும் நிற்பதைக் கண்டு நிலைமையை ஊகித்துக் கொண்டவர் போல எழுந்து முற்றத்தினை நோக்கிச் சென்றார். சுந்தரத்தின் மனைவியும் அழத் தொடங்கினாள். "எல்லாம் விதிப்படிதான் நடக்கும் இனி என்ன செய்யிறது நடந்தது நடந்ததுதான்" கனகம் ஆறுதல் வார்த்தைகளைக் கூறினாள். என்னம்மா எங்கட ஊரில், எங்கள் வீட்டில் இருக்கேலாமல் சாகுறது விதியா" குமரன் உச்ச தொனியில் சொன்னான். 'ரிவிரச' நடவடிக்கை மூலம் யாழ்நகரைக் கைப்பற்ற பலப்பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது. உறவு ஒன்றைப் பறிகொடுத்த சுந்தரம் தனது மூத்த மகன் வீட்டில் குடும்பத்துடன் தஞ்சமடைந்திருந்தார்.

1995 ஒக்டோபர் திங்கள் நிறைவுற இன்னும் முப்பது மணிகள் மீதமிருக்கின்றன. அந்த மங்கிய விளக்கொளியில் சுந்தரம், சுந்தரத்தின் மனைவி, சாரதா, ரேணுகா ஆகியோருடன் கனகம், மகன் குமரன், மகள் நிசா, சுந்தரத்தின் மூத்தமகனைத் திருமணம்செய்த சாந்தி, பிள்ளைகள் தாட்சா, லக்சா எல்லோரும் ஒன்றித்திருந்தனர். நிசா சைக்கிள் டைனமோவைச் சுற்றி வானொலியை இயக்கிக் கொண்டிருந்தாள். காரைநகர், மாதகல் கரையோரமாக பீரங்கிகள் முழங்கின. நீர்வேலிப்பக்கமாக எறிகணை, விமான, உலங்குவானூர்தி இரைச்சல்கள் தொடர்ச்சியாகக் கேட்டன. தெருவோரம் மங்கிய வெளிச்சங்கள் ஆரவாரத்துடன் முன்னே வந்துகொண்டிருந்தன. "பிள்ளை, சண்டிலிப்பாய் பக்கமாய் சனங்கள் வருகுதுகள். திரும்பியும் ஓட்டமோ தெரியாது". மழைவிடவில்லை தலையில் துவாயுடன் படலைப்பக்கமாக கனகம் அரிக்கன் விளக்குடன் வந்தாள். சனக் கூட்டத்திலிருந்து ஒரு பெண் குழந்தையை தோளில் தாங்கியவாறும், இவளைத் தொடர்ந்து சயிக்கிளில் இரு பிள்ளைகளை வைத்துத் தள்ளாடி உருட்டிவந்தான் ஒரு மனிதன். சயிக்கிளின் பின்புறம் பல சாமான்கள் அடுக்கிக் கட்டப்பட்டிருந்தன. "அம்மா கொஞ்சம் தண்ணி தாறியளே." "ஓம் புள்ள வா உள்ளுக்க. புள்ள எங்க இருந்து வாறியள்" தண்ணீரை நீட்டினாள் கனகம்." "சுழிபுரத்திலிருந்து வாறம். எல்லாக் காம்பில இருந்தும் ஆமி வெளிக்கிட்டுட்டுதாம். எல்லா இடத்திலும் சண்டை நடக்கப் போகுதாம். செல், குண்டு என்று எல்லாம் வரும் உங்களுக்குத் தெரியாதே எல்லாச் சனமும் வெளிக்கிட்டு நாவற்குழிப் பக்கமாகப் போகுதுகள்" தூரத்தில் ஒலி பெருக்கிகள் பெண் சொன்னவற்றை உறுதி செய்வது போல் எதிரொலித்தன. அயல்வீடுகளில் கதவுகள் பலமாக அடித்துச் சாத்தப்படும் சத்தங்கள் தொடர்ந்தன. "அம்மா என்ன செய்யுறது?" சாந்தி பிள்ளையை அணைத்துக் கொண்டு விம்மினாள். "இந்த நேரம் பார்த்து, இரண்டு ஆம்பிள்ளையளும் இல்லை. வன்னிக்கு போன மனுசனையும் காணல்ல. லொறி கொண்டு போன மருமகனையும் காணேல்ல இந்த கும்மிருட்டில மழைக்கிள என்ன செய்யுறது கடவுளே" கனகம் அழுதுபுலம்பினாள். "ஐயோ அவர் இல்லாம நான் என்னண்டு வெளிக்கிடுறது" சாந்தி பலமாக அழுதாள். கனகம் பின்புற வேலிப்பக்கம் நின்று "சிவாமாஸ்டர்" கூப்பிட்டாள். சிவாமாஸ்ரர் வீட்டில சிவா, பிள்ளைகள், மனைவி, சிவாவின் மு மான தந்தை, ஆகியோர் ஒருவடோரெ வ முரண்பட்டுக்கொண்டிருந்தனர். சிவாவின் சாயா சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில் கொல்லப்பட, தகப்பனார் ஒ காலை இழந்தார். "எல்லாச்சனமும் போகுதுகள் பிள்ளைகளை வைச்சிருந்து பறிகொடுக்க போறியளே"

சிவாவின் மனைவி சினந்தாள். "அப்பு நடக்கேலாதவர் அவரை எப்படிக் கொண்டு இப்பபோறது?" "அப்ப இப்படியே இருக்கிறதே" "அப்ப நீங்கள் மூன்று பேரும் போங்கோ" நானும் அப்புவும் இருக்கிறம்" "அப்பா வாங்க போவம்"பிள்ளைகள் அழுதனர். "தம்பி நீ பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போ." நான் இந்த வீட்டை விட்டு வரமாட்டன். செத்தாலும் இந்த மண்ணில்தான் சாவன். நீங்கள் என்னைப்பார்க்காமல் உங்கட உயிர தப்பவையுங்கோ" சிவாவின் தந்தையார் உறுதியாகக் கூறினார். சிவாவிற்கு தந்தையா, பிள்ளைகளா? என்ற போராட்டம். சிவாவின் கண்களில் கண்ணீர். தந்தையார் தலையசைத்துப் போகுமாறு சைகைகாட்டினார். சிவாவின் இதயம் கனத்தது. உதிரம் சோர்ந்தது. தன்னை ஆளாக்கிய தந்தையை விட்டுப் போக மனம் இடம்கொடுக்கவில்லை.

இறுதியில் சிவா, மனைவி, பிள்ளைகளுடன் தந்தையிடமிருந்து விடைபெற்றார். "கவனமாப்போங்கோ" சிவாவின் தந்தை வழியனுப்பினார். இவற்றைப்பார்த்துக் கொண்டிருந்த கனகத்திற்கு தூக்கி வாரிப்போட்டது. "என்ன கனகம் எல்லாரும் போனால் நாங்கள் மட்டும் எவ்வாறு இருக்கிறது?" "இந்த வீட்டையும் சாமான்களையும் விட்டு, தென்னை முழுக்கக் காய்ச்சிருக்கு, வயலில் பயிர் இப்பதான் முளைவிடுது, ஆடு, மாடு, கோழி எல்லாத்தையும் விட்டுட்டு எப்படிப்போறது? போனமுறை அரைவாசித்தென்னையும் செல்பட்டு முறிஞ்சு போச்சுது" "அம்மாக்கு எந்த நேரமும் சொத்தப்பற்றித்தான் கவலை" எனக்குத்தான் தெரியும் நான் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேர்த்தது." விவாதித்துக் கொண்டிருக்க இது நேரமில்லை, ஊர் என்று இருந்து தான் என்ர பிள்ளை ஒன்று அநியாயமாய் போச்சுது. ஊரோடு ஒத்தோட வேணும். செல் விழுந்து ஏதாவது நடந்திட்டால் என்ன செய்யுறது. "தேவையானவற்றை எடுங்கோ" சுந்தரம் சொல்லி முடிக்க மௌனம் குடிகொண்டது. கனகம் மாடுகளையும் ஆடுகளையும் அவிட்டு விட்டாள். நிசா கோழிகளை திறந்து விட்டாள். "சயிக்கிள் பம்மை கொண்டு வா அக்கா" குமரன் கூப்பிட்டான். சுந்தரம் தாட்சாவை சயிக்கிள் பாரில் ஏற்றினார். குமரன், நிசா, சாரதா, ரேணுகா சயிக்கிள்களை உருட்டினர். சாந்தி குடையை விரித்து எடுத்து லக்சாவை தோளில் தாங்கினாள். கனகம் அரிக்கன் விளக்குடன் நடந்தாள். அனைவரும் அந்த சனக்கூட்டத்தில் சங்கமித்தபோது நேரம் இரவு 8.30 இருக்கும்.

குமரன் சயிக்கிளை வெட்டி வெட்டி ஓடினான். தெருவில் குழிகளில் தேங்கிய நீர், சயிக்கிள் குழிகளில் விழும் போது தெறித்தது "மருதடியானே எங்கள எங்கட வீடுகளில் இருக்க விடமாட்டாயா?" அழும் குரல்களில் வேண்டுதல்கள் ஒலித்தன. இவர்களுக்கு முன்னும் பின்னுமாகச் சனக்கூட்டம். அந்தோனியர் கோயிலடியில் வழமையாக எரியும் விளக்கு அணைந்திருந்தது. அயல் வீடுகளில் வெளிச்சங்கள் இல்லை. "இரவுக்கிடையில் நாவற்குழிப்பாலத்தை கடந்து விடவேணும் அந்தோணியாரே" கனகம் வேண்டினாள். ஆனைக்கோட்டைச்சந்தியில் போகும் போது குமரனின் செல்லப்பிராணி நடக்க மறுத்தது. குமரன் கூப்பிட்டான். அது அசையவில்லை. யாழ்நகரை அண்மிக்க சனநெரிசல் அதிகரித்தது. மழைபெய்த போதும் வியர்வை அதிகமாய் இருந்தது. கனகம் குடும்பம் 6 கிலோமீற்றர் தூரத்தை கால்கடுக்க, பசிவயிற்றைக்கிள்ள, நடந்து நகரின் மையத்தை அடைய இரண்டு மணித்தியாலங்கள் எடுத்தன. மழை கொட்டியது. ஒதுங்க இடமுமில்லை. ஒதுங்குவார் எவருமில்லை. பசி,தாகம், சோர்வு, களைப்பு, எரிச்சல், பயம் என்பவை எல்லோர் முகத்திலும் தென்பட்டன. "அம்மா பசிக்குது" தாட்சா அழுதாள். அவர்கள் உணவுகள் எதுவும் அவசரத்தில் எடுத்துவரவில்லை. கொஞ்சம் தண்ணீரைப்பிள்ளைக்குக் கொடுத்தாள் சாந்தி. ஆரியகுளம் சந்தியை கடந்து ஸ்ரான்லி வீதியூடே குண்டுவீச்சில் சிதைந்திருந்த புகையிரத நிலையத்தைக் கடந்து கச்சேரி வீதியை அடைந்தனர்.

பெருஞ்சமரிலிருந்து உயிர்காக்கவும் இராணுவப்பிடிக்குள் சிக்காமல் இருப்பதற்குமாக வலிகாமம் வாழ் ஐந்து லட்சம் பேரும் ஒரே நாளில் தங்கள் தோட்டங்களை, இருப்புக்களை, உறவுகளை உதறிவிட்டு பொருளாதார, சமூக ஆசார ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒருவர் ஒருவராக ஒன்றாக நடைப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர். குழந்தைகள் தமது பிஞ்சுப்பாதங்கள் சிவக்க, முதியவர் கால்கள் தள்ளாட வியர்வை சிந்த நடந்தனர். கச்சேரி, கடந்து செல்ல முடியவில்லை. அலையான மக்கள் கூட்டத்தினருடன் கனகம் குடும்பமும் அங்கலாய்த்தது. ஒவ்வொருவர் மனமும் பன்னிரண்டு மணியுள் நாவற்குழிப்பாலத்தை கடந்து விட வேண்டும் என்றே சிந்தித்தன. இராணுவப்பிடிக்குள் வந்துள்ள நீர்வேலி, அச்சுவேலியூடாக வல்லைவெளி கடந்து

கரவெட்டியை அடைகிறது ஒருபாதை. எந்நேரமும் எறிகணை வீச்சுக்குட்பட்டிருந்த இரண்டாவது பாதை கோப்பாயிலிருந்து பரந்த வெளிகடந்து கைதடியை அடைகிறது. மூன்றாவது அதிக மக்கள் பயன்படுத்தும் யாழ் கண்டி வீதி மக்கள் உயிருடன் காயங்களின்றி, இருக்கும். உறவுகளைப் பிரியாமல் நாவற்குழியை அடைவதற்கு யாழ் கண்டி வீதியைத்தவிர வேறு மார்க்கங்கள் அங்கு இல்லை. எப்படியும், எவ்வாறாயினும் நாவற்குழிப்பாலத்தை கடந்து விட வேண்டும். பசி, பட்டினி, துக்கம், துயரம், ஏக்கம், எதிர்பார்ப்பு, கண்களில் கண்ணீரே வற்றிவிட்ட இவர்களிடம் தம்மைத்தவிர இழப்பதற்கு இனியொன்றுமில்லை.

அருவிகள் பிரதான நதியைத்தேடுவது போல பல்வேறு தெருக்களிலிருந்தும் மக்கள் வெள்ளம் கண்டிவீதியில் ஒதுங்கியது. பொருட்களைக் கீழே குனிந்து எடுக்க முடியாதளவில் ஒருவர் மீது ஒருவர் உராய்ந்தபடி இருக்கவே குமரன்குடும்பம் இதற்குமேல் செல்ல முடியாது அப்படியே நின்றது. சைக்கிளை நகர்த்த முடியவில்லை. எறிந்துவிட வேண்டும்போல இருந்தது குமரனுக்கு. ஒருவர் கால்மீது இன்னொருவர் பாதத்தை அழுத்த முன்னே தள்ளப்படுவதும் பின்னே தள்ளப்படுவதுமாக இருந்தது. கனகமும், சுந்தரமும் தமது பிள்ளைகளை அடிக்கடி கூப்பிட்டுப் பார்த்தனர். "செம்மணியால் போயிருக்கலாம்" கனகம் வேதனையுடன். "பிள்ள அங்கு நின்று ஏலாமல்தான் இதால போக வந்தனாங்கள்" முதியவர் ஒருவர் முனகினார். குமரன் முன்னே காட்டி, "அம்மா அங்க சிவா மாஸ்டர்" என்றான். சிவா மாஸ்டர் சைக்கிளைத் தள்ளியபடி அருகில் சைக்கிள் கரியலில் இருந்த முதியவரை இமைக்க மறந்து பார்த்துக்கொண்டிருந்தான். "என்ன வேலை செய்திட்டன்? பெத்த தகப்பனையே விட்டுட்டு ஓடிவந்திட்டன்" எரிமலையாய் குமுறியது சிவாவின் இதயம். நேரம், சாமம் பன்னிரண்டு மணியாகியும் அசையாது அப்படியே நின்றது.

பென்ரிக்கோஸ் தேவாலயத்தைக் கடந்து, வைரவர் கோவிலடி வரையான 100 மீற்றர் தூரத்தைக் கடக்க அரைமணி நேரம் பிடித்தது. "ஐயோ! வீட்டில நின்றிருக்கலாம். இதுக்குமேல் நடக்கேலாது" நிசா அழுதாள். எல்லோர் முகத்திலும் இயலாமையின் பிரதிபலிப்பு. "இதுல கொஞ்சம் இருந்துட்டுப் போவோம்" சுந்தரம் பாதையிலிருந்து கோயிலடியை நோக்கி சைக்கிளை உருட்டினார். ஏனையோர் சுந்தரத்தைத் தொடர்ந்தனர். மழைகொட்ட பாதி நனைந்து பாதிநனையாத வாறு கோவில் தாழ்வாரத்திலும் விறாந்தையிலும் ஒதுங்கினர். மழை குறைய தூரத்தில் வெடிச்சத்தங்கள் பயமுறுத்தின. வடக்குப் புறமான விமான இரைச்சல்களும், வேட்டுக்களும் குறைவின்றிக் கேட்டன. அந்தக் கரிய இருளை விமானங்களின் பரா வேட்டுக்கள் பகலாக்கின. உலங்கு வானூர்திகள் நெருப்புத் துண்டுகளைத் தொடர்ந்து கக்கின. இவையெல்லாம் அவர்களைக் கோவிலில் தொடர்ந்து இருக்கவிடவில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு குமரன் கடிகாரத்தைக் கவனித்தான். மணி ஐந்தைக் காட்டி ஒலியும் எழுப்பியது கடிகாரம். ஆலயமணிகள் பத்துநிமிடங்கள் கழிந்தும் ஒலிக்கவில்லை. கிழக்கு வெளுத்து குருவிகள் கீச்சிட ஸ்ரான்லி கல்லூரியால் சென்று மாம்பழம் சந்தியை அடைந்தனர். நிலம் நன்றாகத் தெரிந்தது. சிவா மாஸ்டர் பரிதாபத்திற்குரியவராய் மாம்பழம் சந்தியில் நின்றார். மாம்பழம் சந்தியைக் குறுக்காகக் கடந்து புகையிரதப் பாதை வழியே முள்ளி வீதியிலுள்ள தமது உறவினர் வீட்டை அடைந்தனர் கனகம் குடும்பத்தினர். தென்னை மரங்களில் சைக்கிள்களைச் சாத்தியபின் மணலில் வீழ்ந்து படுத்தனர். ஒரு ஆறுதலாக இருந்தது. நித்திரை, பசி, தாகம் எல்லாம் சேர்ந்து வாட்டியது.

கனகம் நீரைச் சுடவைக்க சாந்தி தனது பிள்ளைக்கு மாவைக் கரைத்துப் பருக்கினாள். அரியாலையை அதிரவைத்தன கோப்பாய்ப் பக்க வெடியோசைகள். தேநீர் போடாது சுடுநீரைப் போத்தலில் ஊற்றினாள் கனகம். பொருட்களைச் சரிபார்த்து யூதா சிலையடியில் மக்கள் வெள்ளத்தில் கலந்தனர். சிலர் அங்கிருந்து வள்ளத்தில் நாவற்குழியை அடையலாம் என்று பூம்புகார் நோக்கி நடந்தனர். அரியாலை கண்டி வீதியில் சனத்திரளின் தலைகள் எங்கும் பரவியிருந்தன. இடையே சில வாகனங்களும் நின்றன. மழைநீர் குடையால் வடிவதைத் தனது பிஞ்சுக் கரத்தால் தாயின் தோளிலிருந்தவாறே தொட்டு நக்கிக்கொண்டிருந்தாள் குழந்தை லக்ஷா. கனகம் கண்களிலிருந்து கண்ணீர், மழைநீருடன் வயல்வெளிகளில் கலந்தது. காலை பத்துமணி அரியாலைக் குடியிருப்புகள் கழிந்து வயல்வெளி தொடங்கும் இடத்தில்

நின்றது கனகம் குடும்பம். ஆதவன் கருமுகில் களுக்கிடையே துயரம் தாங்காது மறைந்திருக்க, முகில் கண்களிலிருந்து துயரச் சொட்டுகளாக மழைத்துளிகள் வீழ்ந்தன. கோப்பாய்ப் பக்கமாக கிபீர், புக்காரா, மிகையொலி விமானங்கள் போட்டிபோட்டுக் குண்டுகளைத் தள்ளிக் கொண்டிருந்தன. ஆங்கே உதித்த புகை மண்டலங்கள் மண்ணிலிருந்து விண்ணோக்கிக் கொண்டிருந்தன. இடி மின்னலும் கொடுஞ் செல்லும் மண்ணைப் பிளந்தன.கோப்பாய்ப் பக்கமிருந்து புகைமூட்டங்களைக் கிழித்துக கொண்டு உறுமின அந்த இயந்திரக் கழுகுகள். குத்திப் பதிந்தன. எங்கும் அவலக்குரல் எழும்ப தமது இஷ்ட தெய்வங்களை வேண்டி அந்தந்த இடங்களில் சேறுசகதி, தண்ணீர், வெள்ளம் என்று பாராது குப்புறப் படுத்துக் கொண்டனர் அநேகர். விமானங்கள் மூன்றுமுறை சுற்றியபின் மீண்டும் கோப்பாய்ப்பக்கம் தம் தீநாக்குகளை நீட்டின. சைக்கிள் கனகம் மீது விழுந்ததால் தலையில் இரத்தம் வழிந்தது. உடை முழுதும் சேறு அப்பியது. சுந்தரத்தின் துவாயை எடுத்துத் தலையில் கட்டிக் கொண்டாள். நாவற்குழிப் பாலம் வரையில் வயல்களில் நெற்பயிர்கள். வயல்கள் சிலவற்றில் நெற்பயிர்களை மூடி வெள்ளம் நின்றது. வயல்கள் எங்கணும் சனக்கூட்டம். வீதியைவிட்டு தெற்குப்புற வயல்களில் குமரன் குடும்பத்துடன் இறங்கினான். எல்லோரும் தாம் முந்திவிட வேண்டுமென்று முண்டியடித்து முன்னேறினர். சீனப் பெருஞ்சுவர்போல் மனிதச் சுவரொன்று கண்டிவீதியில் கட்டுண்டிருந்தது. ஒரு பாதையில் ஒரு இரவில் ஐந்து இலட்சம் மக்களின் பாதம் பதிந்திருந்தது.

சேற்றில் கால்கள் புதைய சைக்கிள்களைத் தூக்கியும் உருட்டியும் பாலத்தை நோக்கி நகர்ந்தனர். பாலத்தின் தொடர்ச்சியான நீர்ச்சுனை குறுக்கிட சிலர் நீந்திக் கடந்தனர். சுந்தரம் சைக்கிளை இழுத்து நீர்ச்சுனையில் நடந்தார். நீர் மார்பளவிற்கு வந்தது. கனகம் பயத்தினால் நடுங்கினாள். சாந்தி பிள்ளையைத் தலைக்குமேல் பிடித்தபடி மார்பளவு நீரைக் கடந்தாள். உப்புநீர் உடல் முழுக்க ஒட்டியிருக்க சறுக்கும் தெருக்கரையைக் கடந்து தெருவின் மத்திக்கு வந்தனர். பாலத்தைக் கடக்கும்போது சனநெருசல் குறைந்தது. தெருக்கரையில் வாகனங்கள் தலைகீழாய்க் கிடந்தன. பாலத்தைக் கனகம் குடும்பம் கடந்தபோது ஒரு மெல்லிய ஒளி அவர்கள் முகங்களில் தென்பட்டது. "அம்மா நாலு மணியாச்சு" குமரன் சொன்னபடி திரும்பினான். "அம்மா அங்க அத்தான்" சாந்தி சொல்லிக்கொண்டே லொறியை நோக்கி அழுதபடி ஓடினாள். "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது போகுமிடம் தெரியாமல் பாழும் இந்த வயதில் வேரும் நடக்குதே" காற்றில் கலந்துவந்தது அந்த இசை. கொட்டும் மழையிலும் அந்த மனிதச் சுவர் கரையாது கண்ணுக்கு எட்டிய தூரம்வரை நீண்டுகொண்டே இருந்தது.

# தமிழ் இலக்கிய வளர்ச்சியில்

# மரபுக் கவிதையும் புதுக் கவிதையும்.

**திருமதி. ஜீ. சவரி**

*முதலாம் வருடம், விஞ்ஞானப் பிரிவு.*

கவிஞரின் உள்ளத்துடிப்பினைத் தெள்ளென உருவமைக்கும் பதிவேடு கவிதை. கவிதா உலகின் நாயகரோ பலர். இவர்கள் மத்தியில் தொன்று தொட்டுப் பரம்பரையாக நிலவி வருவது கவித் தென்றல். அன்றிலிருந்து இன்றுவரை கவிதா மண்டலப் பாவலர் பலரை நாம் பார்த்திருக்கின்றோம். அவர்களது கவி நடைகளையும், ஓசை நயங்களையும், கருத்தாழங்களையும் நயந்திருக்கின்றோம். இவர்கள் சொல்ல வேண்டியவற்றை சொல்ல வேண்டியபடி வாசகர்கள் வியக்கத்தக்க வகையில் கவித்துவத்தோடும், கலை உணர்வோடும் எடுத்து உரைக்கும் விதம் கவி உலகிற்கு பெருமையைத் தேடித்தர வல்லதன்றோ. காலத்திற்குக் காலம் இயற்கை மாறுவது போன்று பழையன கழிதலும், புதியன புகுதலும் வழமையன்றோ. பாவலர் பாநடையும் இதற்கு விதிவிலக்கல்லவே. பண்டைய மரபுக் கவிதை இன்றைய நவயுகத்திலே நவீன பாணியில் "புதுக்கவிதை" எனத் தோற்றம் பெறுகிறது.

மிகப் பழமையான காலம் முதல் அறிமுகமானது கவி வடிவம். அன்றைய சமூகம் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வரி வடிவமே கவி வடிவந்தான். இதன் பின்னரே வசன நடை கைவரப் பெற்றதாக அறிகின்றோம். ஆரம்ப கவிதை மரபு வழியமைந்ததாகவே இருந்தமை அறியக் கிடக்கின்றது. கவி உலகின் வழித்தோன்றலே மரபுக் கவிதை என்றால் மிகையன்று. மிக அண்மைக்காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குவது புதுக்கவிதை வடிவம் என்பது தெளிவு.

ஆம், மரபுக் கவிதை என்றால் என்ன? புதுக் கவிதை என்றால் என்ன? இவற்றிற் கிடையேயுள்ள வேறுபாடுகள் எவை? என்பதைச் சற்று நோக்குவோம். மரபுக் கவிதை என்பது மரபு வழிப்படி - அதாவது கவிதை மரபின் மரபு விதிக்கமைய யாக்கப்படுவதாகும். இதில் உயிரும் உடலும் இணைந்திருக்க வேண்டும். மரபுக்கவிதையில் உடலுக்கும், உயிருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அணிகள் மரபுக் கவிதையை அலங்கரித்து நிற்கின்றன. உவமைகள், உள்ளுறை உவமங்கள் என்பன கையாளப்படுவது இதற்குரிய சிறப்பம்சமாகக் கொள்ளப்படுகின்றது. யாப்பு விதிகளுக்கமைய கவி யாப்பது என்பது மிக நுணுக்கமாக, புலமை நிறைந்தவர்களால் மட்டுமே கையாளக்கூடியதொன்றாகும். "காரிகை படித்துக் கவி வடிப்பதை விட பேரிகையடித்துப் பிழைப்பது மேல்" என்னும் கூற்றிலிருந்து மரபுக் கவிதையின் கடினத்தன்மையை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. யாப்பு விதிகளுக்கமையாது வடிக்கப்படுவது புதுக்கவிதையாகும். புதுக்கவிதையில் உடலுக்கு அதாவது வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. புதுக்கவிதையில் குறியீடும், படிமமும் காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. புதுக்கவிதைக்கும் மரபுக் கவிதைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் நவீன கவிதை உருப் பெறுகின்றது. நவீன கவிதை மரபுக் கவியாகவும் இருக்கலாம். புதுக் கவியாகவும் இருக்கலாம்.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தில் உருவானது நவீன கவிதையாக்கம். புதுக்கவிதைக்கும், மரபுக் கவிதைக்கும் இடைப்பட்ட கோலமாக மிளிர்வது நவீன கவிதை வடிவம். புதுக்கவிதையின் ஆரம்ப கர்த்தாவாக புரட்சிக் கவி பாரதியைப் பார்க்கின்றோம். மரபுக்கவிதையில் பண்டைய இலக்கிய விற்பன்னர்கள் பலரைப் பார்த்து நயக்கின்றோம். அவர்களின் கவிதா சிருஷ்டிகளின் ஓசை, பொருள், அணிகள் எம்மனதைத் தொட்டு நிற்கின்றன. மரபுக் கவியில் ஓசை முதலியன அமைந்து சிறப்புப் பெறும் இயல்பை இராம காவியத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கைவண்ணத்தில் காணலாம். அத்தகைய கவிதையில் ஒன்று இதோ.

"உறங்குகின்ற கும்பகர்ண
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற தின்றுகாண்
எழுந்திராய் எழுந்திராய்
கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய்
இனிக்கிடந்து உறங்குவாய்."

கும்ப கர்ணனைத் தூக்கத்திலிருந்து எழுப்பும் வகையில் எழுதப்பட்டுள்ளது இப்பாடல். இப்பா வரியில் மரபுக் கவிதையின் சிறப்பம்சங்களை எம்மால் உணர முடிகிறது அல்லவா? கவிக்கே உரித்தான எதுகை, மோனை, ஓசை, நயம் இக்கவியில் நனி சிறந்து விளங்குகின்றன. பாடலின் ஓசை நயம் எவரையும் பாடத்தூண்டுவதாக உள்ளமையைக் காண்கின்றோம். மேலும் ஒரு பாடல் இராம காதையில் சூர்ப்பநகைப்படலத்தில் வருவதைக் காணலாம். சூர்ப்பநகை இராமனது திருமுகத்தைக் கண்டு மயங்கி நிற்பதை இப்பாடல் தெரிவிக்கின்றது. பாடல் இதோ,

"அதிக நின்றொளிரும் அழகன் வாண்முகம்
பொதியவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ
கதிர் மதியாமெனிற் கலைகடேயுமாம்
மதியெனின் மதிக்குமோர் மறுவுண்டென்பரால்"

இப்பாடலில் அதி, பொதி, கதி, மதி என எதுகைச் சிறப்பினையும் அதி - அதிகன், பொதி - பூவை, கதி - கலை, மதி - மதி - மறு எனவரும் மோனைச் சிறப்பினையும், கவிக்கே உரித்தான கவி நயங்களையும் காட்டியுள்ளார் கம்ப நாட்டாழ்வார். "கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும்" என்ற வாக்கியத்தில் கம்பரின் கவித்துவத்தை நாம் விளங்கிக் கொள்ளலாமே.

வான்புகழ் வள்ளுவம் தரும் குறளமுதங்களிலும் கூட மரபுக் கவிவளம் நிறைந்திருப்பதைக் காணலாம்.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு."

எனவரும் முதற் குறட்பா மரபுக் கவிநயத்தைச் சித்தரித்து நிற்பது தெளிவு. ஏன், வள்ளுவர் வாய்மொழியாம் அத்தனை குறட்பாக்களும் மரபுக்கவி மரபைத்தழுவியே தமது ஆழமான கருத்தைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. பண்டைய இலக்கியங்கள், பக்திப் பாசுரங்கள் யாவற்றிலும் மரபுக்கவி தனது கைவரிசையைக் காட்டி நிற்பது கண்கூடு.

விஷ்னு பக்தர்களான ஆழ்வார் வரிசையில் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடலொன்று மரபுக் கவி இயல்பைக் காட்டி நிற்கின்றது.

"பச்சை மாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

UNIVERSITY OF JAFFNA LIBRARY

இப்பாவடிவில் இசை நயம், ஓசை நயம், பொருள் நயம் என்பன சிறப்புற்றுக் காணப்படுவதுடன் சிறந்த பக்திச் சுவை சொட்டுவதையும் காண்கின்றோம். தொண்டரடிப் பொடியாழ்வாரின் இன்னொரு பாடல் சிறந்த கருத்தாழம், நகைச்சுவையோடும் அமைவதைக் காணலாம். இவ்வகையில் சைவநெறிச் சான்றோர் தேவார இலக்கியங்களையும் காணலாம்.

அப்பர் சுவாமிகளும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் தமது பாடலில் ஒரே கருத்தாழம் கொண்ட நகைச்சுவை உணர்வுடன் கூடிய இரசனை வெளியிட்டிருத்தல் காணலாம். இவ்வளவு காலமும் தாம் போலி வேடப் பக்தராக வாழ்ந்துவிட்டதை எண்ணி நகைப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அப்பர் சுவாமிகள் தமது பாடலை இப்படிப்பாடுகின்றார்.

> "கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
> காலத்தைக் கழித்துப் போக்கி
> தெள்ளியேனாக நின்று
> தேடினேன் நாடிக் கண்டேன்
> உள்குவார் உள்கிற்றெல்லாம்
> உடனிருந்தறுதி யென்று
> வெள்கினேன் வெள்கி நானும்
> விலாவறச் சிரித்திட்டேனே"

இவரது காலத்தின் பின்வந்த தொண்டரடிப் பொடியாழ்வாரும் இதே கருத்தைத் தமது பாடலிற் கூறுகின்றார்.

> "உள்ளத்தே உறையும் மாலை
> உள்ளுவான் உணர்வொன்றில்லா
> கள்ளத்தேன் நானுந் தொண்டாய்த்
> தொண்டுக்கே கோலம் பூண்டேன்
> உள்ளுவார் உள்ளிற்றெல்லாம்
> உடனிருந்தறுதி யென்று
> வெள்கிப்போய் என்னுள்ளே நான்
> விலாவறச் சிரித்திட்டேனே"

இவ்விரு மரபுக் கவிதைகளிலும் பண்ணிசை, பக்திச்சுவை, கருத்தாழம் மிக்க நகைச்சுவை, எதுகை, மோனை, ஓசை நயங்கள் எம்மை வியக்க வைத்து நயக்க வைக்கின்றனவே. மரபுக் கவியின் சிறப்பை இங்கே நாம் உணர முடிகிறது. மேலும் பக்தி இலக்கியங்கள், நாயனார், ஆழ்வார் பாசுரங்கள் யாவற்றிலும் மரபுக் கவியின் ஆட்சி பலம் பெற்றிருப்பதைப் பார்க்கின்றோம். "தோடுடைய செவியன் எனவரும் சமபந்தர் பாசுரம், பித்தா பிறைசூடி - எனவரும் சுந்தரர் பதிகம், முத்திநெறி அறியாத மூர்க்கரொடு- எனவரும் நெஞ்சையுருக்கும் மணிவாசகர் திருவாசகம், மேலும் அருணகிரி திருப்புகழ்மாலை, திருப்புராணங்கள் மரபுக்கவிதை வடிவமே என்பதை நாம் அறிவோம்.

பண்டுதொட்டு இன்றுவரை சீரான போக்குடன் கலை இலக்கியப் படைப்புகளில் தனது தன்னிகரில்லா ஆளுமையைச் செலுத்திவருவது மரபுக்கவி வடிவமேயாகும். சங்ககால முதற்கொண்டு இலக்கிய வடிவங்கள் அத்தனைக்கும் நிலைக்களனாக அமைந்து நிற்பது மரபுக்கவிதை. தமிழ் இலக்கியப் பெருஞ் சுடர்களான வள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்ற இலக்கியசிருஷ்டி கர்த்தாக்களின் கைவண்ணமாக மிளிர்வது மரபுக்கவிதை அல்லவா? மேலும் பக்தி இலக்கியங்களிலும், அறநூற் கவிதைகளிலும் எமது அறநெறிக் காவலர்கள் மரபுக்கவிநடையைச் சிறப்பாகக் கையாண்டிருக்கின்றனர்.

பழந்தமிழ் மூதாட்டி ஔவையும் தமது அறநூற் பாக்களில் மரபுக்கவிநடையை வடித்திருக்கிறார். வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் என வரும் பாமாலை மரபுக் கவிவடிவில் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இன்னும் பா வகைகளான வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, ஆசிரியப்பா அனைத்திலும் மரபுக் கவிநயங்களைக் காணக்கூடியதாக உள்ளது. ஔவை முதற்கொண்டு எமது பழந்தமிழ்ப் புலவர்கள் அனைவர் மத்தியிலும் நிலைபெற்று விளங்குவது மரபுக்கவி வடிவமேயாகும். இதன் வழிவந்த பிற்காலக் கவிஞர்களும் மரபுக் கவிகளாகவே விளங்கினர் என்பது தெளிவு.

மரபுக்கவிக்கேயுரித்தான யாப்பு இலக்கணவிதி முழுமைபெற்று விளங்குகிறது. மரபுக்கவிதையில் மோனை, எதுகை, பொருள், இசை அனைத்தும் ஒருங்கேயமைந்து கவிதையை மெருகூட்டி வளமாக்கி நிற்கின்றன; கவிதை வளம்பெற்று நிற்கின்றது. மரபுக் கவியில் வரும் அரும்பதங்கள், சொல்வளம், கருத்தாழம் என்பன கற்றோர் மத்தியில் மட்டும் மிகுந்த செல்வாக்குப் பெறுகின்றது. பாமரர் மத்தியில் இத்தகைய செல்வாக்கினை மரபுக் கவிதையால் பெறமுடிவதில்லை. மரபுக்கவிதையை உணரவும், நயக்கவும், ஆக்கவும் யாப்பிலக்கணம் கற்றுணர்ந்த சான்றோரால் மட்டுமே முடிகிறது. இவ்வகையில் மரபுக்கவிதை எல்லா மக்கள் மத்தியிலும் தனது செல்வாக்கை இன்றைய நிலையில் செலுத்த முடியாதுள்ளது என்பதையும் நாம் மறுக்க முடியாது.

இந்நிலையில் புதுக் கவிதையின் தோற்றம் இன்றைய உலகின் தேவையாக இருந்தது என்பதை நாம் உணரலாம். நவீன காலகட்டத்தில் சமூகத்தில் ஏற்பட்ட அகநிலை மாற்றம் புதுக் கவிதையின் தோற்றத்திற்கு வழிவகுத்தது எனலாம். கவிஞரின் உள்ளத்துணர்வை அப்படியே வெளிப்படுத்த யாப்பிலக்கண விதிகள் சரியான வாய்ப்பைத் தராத நிலையே புதுக் கவிதை தோன்றக் காரணம் எனலாம். புதுக்கவிதைக்குக் குறிப்பிட்ட வடிவமே இல்லை. அதற்கு உயிரே முக்கியம். புதுக்கவிதையின் முன்னோடியாக விளங்குபவர் பாவலர் பாரதி என்பர். பாரதியின் வசனக்கவிதை புதுக்கவிதைக்கு அத்திவாரமிட்டதென்பர். பாரதியார் வசனக் கவிதையின் சில வரிகள் இதோ!

> "மங்கியதோர் நில்வினிலே கனவிலிது கண்டேன்
> வயது பதினாறிருக்கும் இளவயது நங்கை
> பொங்கி வரும் பெருநிலவு போன்ற ஒளிமுகமும்
> புன்னகையின் பெருநிதியாம் போற்றவரும் தோற்றம்
> துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
> தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
> அங்கதனில் கண்விழித்தேன் அடடா ஓ அடடா
> அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றேயறிந்தேன்."

உள்ளத்து உணர்வுகளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்க, புரிந்துகொள்ள, எளிதாக எடுத்தியம்ப இலகுவாக ஒரு தெள்ளிய பாநடையாகப் புதுக்கவிதை உருப்பெற்றது எனல் பொருந்தும். கலைஞர் மத்தியிலும், கலாரசிகர் மத்தியிலும் புதுப்பொலிவு காட்டிப் புத்துணர்வை ஊட்டி நிற்பது புதுக்கவிதை எனலாம்.

புதுக்கவிதை முதன்முதலாக 1940 இல் மணிக்கொடி பத்திரிகையில் அறிமுகமாகி வளம்பெற்றது எனலாம். கவிஞர்கள் ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் (க.நா. சுப்புரெத்தினம்) ஆகியோர் முன்னணியில் திகழ்ந்தனர். 1960 இல் புதுக்கவிதை புதுப்பொலிவு காட்டி நின்றது; "எழுத்து" சஞ்சிகை மயன், எஸ். வைத்தீஸ்வரன், பசுவையா, சி. மலி போன்ற கவிஞர்கள் புதுக்கவிதைக்கு மெருகூட்டினர். இக்கவிகள் அகவய உணர்வுகளை வெளிப்படுத்தினர். மேலும் புதுக்கவிதையின் பண்பில் மாற்றங்கள் ஏற்படலாயின. இந்தவகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கதோர் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்கவிதையின் படிமம், குறியீடு, செறிவு என்னும் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன. புதுமைக் கவிஞர் நா. காமராஜனின் கறுப்பு மலர்கள் - கண்ணீர்ப் பூக்கள் எனவரும் புதுக்கவிதை இவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. மேலும் மீரா, மேத்தா, சிற்பி, அப்துல் ரகுமான், புவியரசு ஆகியோரின் கவிதைகளும் சிறப்பாக அமைந்துள்ளன.

இளங் கலைஞர் தருமு, அருட்சிவராமின் "விடிவு" எனும் தலைப்பில் அமைந்த புதுக்கவிதை இவ்வாறு கூறுகின்றது.

"பூமித் தோலில் அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து படரும்பொழுது
கதிர்கள் கமழ்ந்து விரியும் பூ
இருளின் சிறகைத் தின்னும் பூமி
வெளிச்சச் சிறகில் மிதக்கும் தோகை"

இப்புதுப்பாவில் எளிமையும், இனிமையும், சுவையும் ஒருங்கே கையாண்ட புலவரின் திறமை வியக்கத்தக்கது. படிமம், குறியீடு, செறிவு, நயங்கள் காணப்படுகின்றன. இயற்கை ரசனை கவியில் இழையோடியுள்ளது. ரா. மீனாட்சி, திரிசடை, திலகவதி போன்றோரினதும் திரைப்படக் கவிஞர் வாலி போன்றோரின் சில கவிதைகளும் புதுக்கவிதை வடிவினவாகும்.

ஈழக்கவிகளில் பழமைக்கும், புதுமைக்கும் இடைப்பட்ட கவிஞர்கள் பலரைப் பாரக்கலாம். மயில்வாகனப் புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், சுவாமி விபுலானந்தர் போன்றோரை இவ்வகையில் குறிப்பிடலாம்.

கவிஞர் மகாகவியின் கவிதைகளில் அங்கதச்சுவை இழையோடுவதைப் பின்வரும் பாடல் வரிமூலம் குறிப்பிடக்கூடியதாக உள்ளது.

"எங்களுர்க்கடையில் ஓர் தொங்கும் தராசில்
சங்கரப் பிள்ளையார் சாமான் நிறுப்பார்
அதிலே
ஆனையை அவரொரு தட்டில் ஏற்றிப்
பூனையை மற்றதிற் போட்டுக் கொடுப்பார்
எச்சிறிது எப்பெரிதினுக்கும்
ஒப்பு என இவர்படி ஓர் உண்மை விளக்கமே"

1980 இலிருந்து இன்றுவரை அதிகமாகப் புதுக்கவிதைகள் இனக்கலவரம், சீதனம், எதிர்ப்புமுறை (இன ஒடுக்கல்) போன்ற பொருட்களில் எழுந்தன. கவிஞர் நு.ஃமானின் "புத்தரின் படுகொலை" என்ற தலைப்பில் யாழ் பொதுநூலக எரிப்புப் பற்றிய உட்பொருளை வைத்து எழுதப்பட்ட புதுக்கவிதை சிறந்த கவிதையெனத் தெரிவு செய்யப்பட்டது. இதோ அதில் ஒரு சிறு துளி.

"நேற்று என்கனவில் புத்தர் பெருமான்
சுடப்படுகிறார்
சீருடை அணிந்த அரக்கர்
அவரைக் கொன்றனர்"

மேலும் சேரனின் (மகாகவியின் மகன்) சோலைக்கிளி, துருவச்சுவடுகள் (புகலிடக் கவிதைகள்) போன்ற கவிதைகளும் "நிருபா"வின் எனது மகள் வளர்ந்தவள் என்ற கவிதையும், புதுக் கவிதைகளின் புதுப்பொலிவாகத் தென்படுகின்றன. எளிமை, சுவை, படிமம், குறியீடு, செறிவு எனப் புதுக்கவிதையின் புது வண்ணங்கள் எழிலூட்டக் கவியை வடித்துள்ளனர் புதுக் கவிஞர்கள்.

பழமைக்கும், புதுமைக்கும் பாங்காகக் கவிவடித்த பாவலர்களையும் நாமறிவோம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கவிஞர் கண்ணதாசன் போன்றவர்கள் எம்மால் மறக்கமுடியாத கவி வள்ளல்கள் அன்றோ?

# புற்றுநோய்

திருமதி. நி. ரவீந்திரநாத்
(B.Sc. , Dip-in-Ed.)
(விரிவுரையாளர்)

எமது உடலில் கலப்பிரிவானது சீராக நடைபெறுவதனால் வெவ்வேறு கலங்கள், இழையங்கள், அங்கங்கள் என்பன சீரான முறையில் உருவாகின்றது. சில வேளைகளில் வெவ்வேறு காரணங்களின் நிமித்தம் உதாரணமாக கர்ப்பகாலம், மருந்துவகைகளைப் பாவித்தல், தொற்றுநோய் ஏற்படல் போன்றவற்றால் உடலில் மாற்றங்கள் ஏற்படலாம்.

உடலில் சாதாரணமாக உருவாகிய கலங்கள் அழிவதனாலும், புதிய கலச் சேர்க்கையாலும் தொடர்ச்சியான ஒரு திருத்தம் நடைபெறுகின்றது. சிலரில் கலப்பிரிவிலும், வளர்ச்சியிலும், மாற்றம் ஏற்பட்டு புதிய வளர்ச்சிகள் (New Growths) உருவாகலாம். இவற்றில் சில தீங்கு விளைவிக்கக் கூடியதாக மாறலாம். புது வளர்ச்சிகளும் மற்றும் சிலவற்றில் ஆரம்பத்தில் இருந்தே கலங்கள் ஒழுங்கின்றி வெவ்வேறு பருமன், அமைப்பு ஆகியவற்றுடன் உருவாகி அருகிலுள்ள இழையங்களைத் தாக்குவதுமல்லாமல் உடலின் வெவ்வேறு பாகங்களுக்குப் பரவி உடற்றொழில்களையும் பாதிக்கச் செய்கின்றன. இவ்வளர்ச்சிகள் தீங்கான வளர்ச்சிகள் அல்லது புற்றுநோய் (Cancer) எனப்படும்.

புற்றுநோயானது அது உருவாகும் கலத்தை அடிப்படையாகக் கொண்டு பல வகைகளாகப் பிரிக்கலாம். மேலணிக் கலங்களில் இருந்து உருவாகுபவை Carcinoma எனவும், தொகுப்பு இழையங்களில் இருந்து உருவாகுபவை Sarcoma எனவும், Adenocarcinoma எனவும், சிறுநீர்ப் பையிலிருந்து உருவாகுபவை Osteosarcoma எனவும் இரைப்பை, சதையி, ஈரல் என்பவற்றில் இருந்து உருவாகுபவை பஎலும்பு, நிணநீர்க்கலம், நார்க்கலம் என்பவற்றிலிருந்து உருவானவை Fibrosarcoma எனவும், வெண்கலங்களில் இருந்து உருவாகுபவை Leukaemia எனவும் அழைக்கப்படும்.

புற்றுநோய் பொதுவாக ஏற்படுத்தும் விளைவுகள் உடம்புமெலிதல், இரத்தச்சோகை போன்றனவாகும். எனினும் பல அங்கங்களைப் பாதித்துப் பாரிய விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது.

புற்றுநோய் உடலுக்கு ஏற்படுத்தும் தீங்குகளின் உக்கிரம் பலகாரணிகளில் தங்கியுள்ளது. இது புற்றுநோயின் வகையிலும், நோயாளியின் உடல் நிலையைப் பொறுத்தும் அமையும். உதாரணமாக, Sarcoma குறைந்த வயதிலே தோன்றி விரைவில் பரவி Carcinoma வைவிட அதிகளவில் தீங்கு விளைவிக்கும்.

ஈரலில் உண்டாகும் Carcinoma மார்பில் ஏற்படும் Carcinoma வைவிடக் கூடிய தீங்காகும். நிறம் கூடிய தோலில் உருவாகும் புற்றுநோய் நிறம் குறைந்ததைவிடக் கூடிய விளைவை ஏற்படுத்தும்.

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளாக பசியின்மை, உடல் மெலிதல், உணவை விழுங்குவது கடினமாக இருத்தல், அஜீரணம், குருதியிழப்பு, மார்பில் அல்லது வேறு இடங்களில் கட்டி, சீக்கிரம் ஆறாத புண், தொடர்ச்சியான இருமல், ஏற்கனவே உள்ள மச்சத்தில் மாற்றம், தணியாத மஞ்சட்காமாலை போன்றவை காணப்படும்.

புற்றுநோயைத் தவிர்க்கக் கூடுதலான இரும்புச்சத்து, விற்றமின் A நிறைந்த உணவு வகைகளை உண்ணலாம்.

அதிகளவு புரதம், கொழுப்பு உள்ள உணவுகளையும், அதிக சூடான சரக்குக் கலந்த உணவுகளையும் தவிர்க்கலாம். பூஞ்சணம் பிடித்த உணவு, அதிக இனிப்புள்ள உணவு வகைகளை விலக்குதலால் நன்மை பயக்கும். மதுபானம், புகைத்தல், வெற்றிலை தவிர்த்தல், தொழிற்சாலைக்கு அருகில் குடியிருப்பதைத் தவிர்த்தல், மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தொடர்ந்து மருந்துகள் பாவித்தலைத் தவிர்த்தல், புற்றுநோயாக மாறக்கூடிய நீண்டகால நோய்களுக்கு விரைவில் சிகிச்சை பெறுதல் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதாலும் இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

**இரத்தப் புற்றுநோய்**

இந்த நோய் பொதுவாக வெள்ளை அணுக்களைப் பாதிக்கும். அபூர்வமாகச் சிவப்பு அணுக்கள் கூடப் பாதிக்கப்படலாம். இந்த வெள்ளை அணுக்களின் கட்டுக்கடங்காத பெருக்கம் எலும்பு மச்சை, ஏனைய இழையங்கள், உறுப்புக்களைப் பாதிக்கும். இதனால் இரத்தச் சோகையும் இரத்தத்தின் உறையும் தன்மையும் குறைவதால் இரத்தக் கசிவும் ஏற்படும்.

இதற்குப் பின்வருவன காரணமாக அமையலாம் என நம்பப்படுகிறது.

1. குடும்பவம்சப் பாரம்பரியம்.
2. பரம்பரை நோய்கள்.
   உதாரணமாக Down's Syndrome, இரத்தப் புற்றுநோய்க்கு அதிக காரணம்.
   Jancoin's என்ற பரம்பரை இரத்தச் சோகை நோயும் புற்றுநோயாக மாறும் தன்மை வாய்ந்தது.
3. ஒளிக்கதிர் வீச்சு.
4. இரசாயனப் பொருட்கள் உ-ம் : பென்சீன்.
5. புற்றுநோய்க்குக் கொடுக்கும் மருந்துகள் உ-ம் : Alkylating Agents
6. நோய்க் கிருமிகள் (Virus)

இரத்தப் புற்றுநோய் இரண்டு வகையாகக் காணப்படலாம்.

1. திடீரென ஏற்படும் நோய்
2. நாள்பட்ட வகையில் ஏற்படும் நோய் - இது பெரியவர்களை அதிகமாகப் பாதிக்கும்.

**இரத்தப் புற்றுநோயின் அறிகுறிகளாவன ;**

இரத்தச்சோகை, காய்ச்சல், களைப்பு, இரத்தக்கசிவு (ஈறுகள், மூக்குத் துவாரங்களிலிருந்து) இவை தவிர எலும்பு மூட்டுக்களில் வலி அபூர்வ அறிகுறியாக வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி ஏற்படும்.

**இப்புற்றுநோய் ஏற்பட்டுள்ளதை அறிய ;**

இரத்தப் பரிசோதனை, எலும்பிலிருந்து இரத்தம் எடுத்துப் பரிசோதித்தல் - Chemotheraphy

இதற்குச் சிகிச்சையாக மருந்துகளை உபயோகிக்கலாம். ஒளிக்கதிர்வீச்சைப் பயன்படுத்தலாம். (Radiotheraphy) எலும்பு மச்சையை மாற்றுதல்.

எனவே யாவரும் எமது உணவுப் பழக்கவழக்கத்தையும் நடத்தைகளையும் மாற்றிக்கொண்டும், ஆரம்பத்திலேயே புற்றுநோயை இனங்கண்டு சிகிச்சையைப் பெறுவதன் மூலமும், புற்றுநோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டுக்கொள்வோம்.

## வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிப்பெறுபேறுகள் - 1998.

| | திருமகள் | கலைமகள் | மலைமகள் |
|---|---|---|---|
| தலைவர் | திரு. எஸ். ஜே. மோஸஸ் | திரு. எம். மகாலிங்கம் | திரு. கே. உதயகுமார் |
| செயலாளர் | செல்வி. வீ. சுபாஜினி | திருமதி. ரீ. ராதிகா | திருமதி. ஆர். அருள்தாஸ் |
| தலைவி | செல்வி. ஆர். கே. திலகலோஜினி | செல்வி. கே. சுபத்திரா | அருட்சகோதரி அருள்மரியா |
| பொருளாளர் | செல்வி. எஸ். கனகம்மா | திருமதி. எம். ஜெயராம் | திருமதி. யூ. விமலகுமாரன் |
| வி.தலைவன் | திரு. எஸ். தயாபரன் | திரு. ரீ. கோணேஸ்வரன் | திரு. எம்.பி. நிரஞ்சன் |
| வி.தலைவி | திருமதி. ஆர். புவனேந்திரன் | செல்வி. ஏ. மங்களேஸ்வரி | செல்வி. பீ. உதயகுமாரி |

| நிகழ்ச்சிகள் | | வெற்றி பெற்றோர் | இல்லம் |
|---|---|---|---|
| 100 மீ ஆண் | 1. | திரு. எ. மனோகரன் | மலைமகள் |
| | 2. | திரு. எம். இரவீந்திரன் | மலைமகள் |
| | 3. | திரு. ரீ. கோணேஸ்வரன் | கலைமகள். |
| 100மீ பெண் | 1. | திருமதி. ஜெ. நிர்மலா | கலைமகள் |
| | 2. | செல்வி. ரீ. சுபாஜினி | மலைமகள் |
| | 3. | செல்வி. எம். ஜெயந்தி | திருமகள் |
| 200 மீ ஆண் | 1. | திரு. ஏ. மனோகரன் | மலைமகள் |
| | 2. | திரு. ரீ. கோணேஸ்வரன் | கலைமகள் |
| | 3. | திரு. கே. உதயகுமார் | மலைமகள் |
| 200 மீ பெண். | 1. | செல்வி. எம். ஜெயந்தி | திருமகள் |
| | 2. | செல்வி. எஸ்.குமாரி | கலைமகள். |
| | 3. | செல்வி. எஸ். தேவராணி | மலைமகள் |
| 400 மீ ஆண். | 1. | திரு. கே. ரவீந்திரன் | கலைமகள் |
| | 2. | திரு. பீ. ஆர். தம்பிதுரை | திருமகள் |
| | 3. | திரு. ரீ. விஸ்வலிங்கம் | மலைமகள் |
| 400 மீ பெண். | 1. | திருமதி. ஜெ. நிர்மலா | கலைமகள் |
| | 2. | செல்வி. கே. இந்திராகாந்தி | திருமகள் |
| | 3. | செல்வி. எஸ்.குமாரி | கலைமகள் |
| 800 மீ ஆண். | 1. | திரு. எம். தேவகிருபாகரன் | மலைமகள் |
| | 2. | திரு. எஸ். பிரகாஸ் | கலைமகள் |
| | 3. | திரு. எஸ். கங்கேஸ்வரன் | திருமகள் |
| 1500 மீ ஆண். | 1. | திரு. எல். நாகலிங்கம் | மலைமகள் |
| | 2. | திரு. எஸ்.ஜே. மோஸஸ் | திருமகள் |
| | 3. | திரு. எம். விஜயராஜா | திருமகள் |
| 3000 மீ. ஆண். | 1. | திரு. எம். தேவகிருபாகரன் | மலைமகள் |
| | 2. | திரு. எம். விஜயராஜா | திருமகள் |
| | 3. | திரு. எஸ். மோகனேஸ்வரன் | மலைமகள் |
| நீளம் பாய்தல் | 1. | திரு. கே. ரவீந்திரன் | கலைமகள் |
| ஆண். | 2. | திரு. பீ. ஆர். தம்பிதுரை | திருமகள் |
| | 3. | திரு. எஸ். மாதவன் | திருமகள். |

| | | | |
|---|---|---|---|
| நீளம் பாய்தல் பெண். | 1. | திருமதி. ஜே. நிர்மலா | கலைமகள் |
| | ௨. | செல்வி. எம். கங்கேஸ்வரி | மலைமகள் |
| | ௩. | செல்வி. ஆர். கே. திலகலோஜினி | திருமகள் |
| உயரம் பாய்தல் ஆண். | 1. | திரு. கே. உதயகுமார் | மலைமகள் |
| | ௨. | திரு. எஸ். ஆர். பச்சேக் | திருமகள் |
| | ௩. | திரு. எம். விஜயராஜா | திருமகள் |
| உயரம் பாய்தல் பெண். | 1. | திருமதி. ரீ. ராதிகா | கலைமகள் |
| | ௨. | செல்வி. எஸ். குமாரி | கலைமகள் |
| | ௩. | செல்வி. வை. பிரேமினி | மலைமகள் |
| | | செல்வி. வீ. சுபாஜினி | திருமகள் |
| தட்டெறிதல் ஆண். | 1. | திரு. கே. உதயகுமார் | மலைமகள் |
| | ௨. | திரு. எம். பீ. டிறஞ்சன் | மலைமகள் |
| | ௩. | திரு. ரீ. செல்வகுமார் | கலைமகள் |
| தட்டெறிதல் பெண். | 1. | செல்வி. பீ. உதயகுமாரி | மலைமகள் |
| | ௨. | செல்வி. எம். கங்கேஸ்வரி | மலைமகள் |
| | ௩. | செல்வி. எஸ். கனகம்மா | திருமகள் |
| தண்டு போடுதல் ஆண். | 1. | திரு. கே. விஜயகுமார் | திருமகள் |
| | ௨. | திரு. எஸ். தயாபரன் | திருமகள் |
| | ௩. | திரு. எஸ். மங்களச் சந்திரா | கலைமகள் |
| தண்டு போடுதல் பெண். | 1. | செல்வி. எம். கங்கேஸ்வரி | மலைமகள் |
| | ௨. | செல்வி. பீ. உதயகுமாரி | மலைமகள் |
| | ௩. | செல்வி. எஸ். கனகம்மா | திருமகள் |
| ஈட்டி எறிதல் ஆண். | 1. | திரு. எம். பீ. டிறஞ்சன் | மலைமகள் |
| | ௨. | திரு. எஸ். தயாபரன் | திருமகள் |
| | ௩. | திரு. பீ. பிரபாகரன் | கலைமகள் |
| ஈட்டி எறிதல் பெண். | 1. | செல்வி. ஏ. மங்களேஸ்வரி | கலைமகள் |
| | ௨. | செல்வி. கே. உதயகுமாரி | திருமகள் |
| | ௩. | செல்வி. எஸ். ஆனந்தி | திருமகள் |
| தத்தி மிதித்துப் பாய்தல் ஆண். | 1. | திரு. டி. ஜீ. பி. நிரஞ்சன் | கலைமகள் |
| | ௨. | திரு. கே. ரவீந்திரன் | கலைமகள் |
| | ௩. | திரு. எஸ். ஆர். பச்சேக் | திருமகள் |
| சமநிலை ஓட்டம் பெண். | 1. | செல்வி. பீ. உதயகுமாரி | மலைமகள் |
| | ௨. | செல்வி. எஸ். சாருலதா | திருமகள் |
| | ௩. | செல்வி. எஸ். ஆனந்தி | திருமகள் |
| சந்தை ஓட்டம் பெண். | 1. | செல்வி. எம். ஜெயந்தி | திருமகள் |
| | ௨. | செல்வி. கே. சுபத்திரா | கலைமகள் |
| | ௩. | திருமதி. ஏ. சுபத்திரா | கலைமகள் |
| தடைதாண்டி ஓட்டம் ஆண். | 1. | திரு. எம். தேவகிருபாகரன் | மலைமகள் |
| | ௨. | திரு. டி. ஜீ. பி. நிரஞ்சன் | கலைமகள் |
| | ௩. | திரு. எம். கேதீஸ்வரன் | திருமகள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எலி ஓட்டம் ஆண். | ௧. | திரு. ஏ. விமலராஜா, ரவீந்திரன் | | | | கலைமகள் | |
| | ௨. | திரு. பீ. கிருபாகரன், கங்கேஸ்வரன் | | | | திருமகள் | |
| முட்டி உடைத்தல் ஆண். | ௧. | திரு. கே. பாஸ்கரன் | | | | திருமகள் | |
| கயிறு இழுத்தல் | ௧. | கலைமகள் | ௨. | திருமகள் | ௩. | மலைமகள் | |
| புகையிரத ஓட்டம் | ௧. | மலைமகள் | ௨. | திருமகள். | ௩. | கலைமகள். | |

குழு விளையாட்டுப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| கிரிக்கெட் | ஆண்கள் | ௧ம் இடம் | மலைமகள் |
| | | ௨ம் இடம் | கலைமகள் |
| | | ௩ம் இடம் | திருமகள் |
| வலைப்பந்து | பெண்கள் | ௧ம் இடம் | கலைமகள் |
| | | ௨ம் இடம் | திருமகள் |
| | | ௩ம் இடம் | மலைமகள் |

| | | |
|---|---|---|
| சிறந்த விளையாட்டுக்குழு : | பெண்கள் | கலைமகள் |
| சிறந்த விளையாட்டுக்குழு : | ஆண்கள் | மலைமகள் |

௧௯௯௮ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரர் : திரு. கே. இரவீந்திரன் - கலைமகள்
சிறந்த விளையாட்டு வீராங்கனை : திருமதி. ஜே. நிர்மலா - கலைமகள்.

இல்லங்களின் நிலை : ௧ம் இடம் மலைமகள் இல்லம்.
௨ம் இடம் கலைமகள் இல்லம்.
௩ம் இடம் திருமகள் இல்லம்.

இல்ல அலங்காரம் : ௧ம் இடம் திருமகள் இல்லம்
௨ம் இடம் மலைமகள் இல்லம்
௩ம் இடம் கலைமகள் இல்லம்.

அணி நடை : ௧ம் இடம் திருமகள் இல்லம்.
௨ம் இடம் கலைமகள் இல்லம்.
௩ம் இடம் மலைமகள் இல்லம்.

# அமரர் நல்லையா அவர்களின் அடியைப் பின்பற்றி...

- திரு. வே. லக்ஷ்மி சுந்தரம்,செயலாளர்,நல்லையா அறக்கட்டளை நிதியம்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனும் வள்ளுவர் வாக்கியத்திற்கிணங்க வாழ்வோர் சிலரே. அவர்களுள் கிழக்கிலங்கையிலே மட்டக்களப்பு நகரிலே புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்து புகழோடு மறைந்த திரு. வி. நல்லையா அவர்களும் ஒருவராவார். அவர் மட்டக்களப்பு மண்ணுக்கு ஆற்றிய அருமை பெருமைகள் சொல்லிடங்கா. 15வருடகால அரசியல் வாழ்வில் வாய்மை, நேர்மை, தோழமைப் பண்புகளுடனும் வாழ்ந்து அரசியல்வாதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். அரசியலில் மாபெரும் சக்தியாக விளங்கிய அக்காலத்தில் மட்டக்களப்பு மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தொழிற்துறை மேம்பாட்டிற்காகவும் வைத்திய தொடர்பாடல் சேவைக்காகவும் அரும்பணி ஆற்றியவர்.

இவர் கல்விக்காக ஆற்றிய சேவையில் பல கல்விக் கூடங்களை நிறுவியமை குறிப்பிடத்தக்கது. அதில் தமிழர்களுக்கென மட்டக்களப்பில் ஓர் ஆசிரிய கலாசாலையை உருவாக்கியமையும் ஒன்றாகும். இக்கலாசாலை பல நூற்றுக்கணக்கான பயிற்றப்பட்ட கணித, விஞ்ஞான, தமிழ், சமய, ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கிய பெருமையுடன் இன்றும் தனது பணியை மேற்கொண்டு வருகின்றது. தனது சேவையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்த மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை தனது □பொன்விழா□ வைக் கொண்டாடுவதற்கு முன் 'நன்றி மறப்பது நன்றன்று' எனும் வாக்கிறிகிணங்க 1994இல் அமரர் நல்லையா சிறப்பு மலரை வெளியிட்டு அவரது உருவச் சிலையையும் கலாசாலை வளவினுள் திறந்து வைத்து அமரர் நல்லையா அவர்களைக் கௌரவித்து, அத்துடன் நின்று விடாது அவரின் பெயரில் 'அறக்கட்டளை நிதியம்' ஒன்றை அமைப்பதும் இக்கலாசாலையின் பேராவலாக இருந்தது. இதனை உருவச்சிலை திறப்புவிழா வைபவத்தின்போது வெளிப்படுத்தியிருந்தேன். அது இன்று நிறைவேற்றப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் இந்நிகழ்வு அவரது சேவைகளுக்கு உறுதி கூறுவதாகவும் அமைவதையிட்டு பெருமை கொள்கிறேன். இவ்வறக்கட்டளை நிதியமானது நல்லையா அவர்களின் புதல்வியாகிய திருமதி. நளினி காசிநாதன் அவர்களால் வழங்கப்பட்ட நிதியும் சேர்க்கப்படவுள்ளது. மட்/மாவட்டத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியெய்தி, உயர்கல்வியைத் தொடர வசதி குறைந்த மாணவருக்கு உயர்கல்வியைத் தொடருவதற்கான பண உதவியை வழங்குவதே இவ்வறக்கட்டளை நிதியத்தின் நோக்கமாகும். இவ்வருடம் திருமதி. நளினி காசிநாதனால் வழங்கப்பட்ட நிதியத்திலிருந்து இரு மாணவருக்கான புலமைப் பரிசிலும் வழங்கப்பட்டு இந்நிகழ்வு ஆரம்பிக்கப்படுகின்றது. இப்புலமைப் பரிசிலானது அடுத்த ஆண்டில் 6 ஆக அதிகரிக்கப்படுவதுடன் அதற்கடுத்த ஆண்டுகளில் மேலும் விஸ்தீரிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

சிரேஷ்ட ஆசிரிய மாணவர் - 1998





# படத்திலுள்ள சிரேஷ்ட மாணவர் விபரம் — 1997/1998

## முன்வரிசையில் (இடமிருந்து வலமாக)

| | |
|---|---|
| திருமதி. ம. ஜெயராம் | - *சின்னக்கடை, மன்னார்.* |
| செல்வி. சி. கனகம்மா | - *பிரதான வீதி, மல்வத்தை, அம்பாறை.* |
| செல்வி. கு. சுபத்திரா | - *பாடசாலை வீதி, கிரான்.* |
| செல்வி. க. திலகலோஜினி | - *இல 42/41B, ஏ.பி.எம். சாலி மாவத்தை, அவிசாவளை.* |
| செல்வி. வே. சுபாஜினி | - *912/1, 5ம் குறுக்குத்தெரு, கோயிலடி, பாலையூற்று, திருகோணமலை.* |
| திருமதி. ரா. திலக சந்திரரெத்தினம் | - *யோகவாசா, பெரியகடை, மன்னார்.* |
| திருமதி. எம்.ஜே.எவ்.எவ். தர்மராஜா | - *காமலீன், சின்னக்கடை, மன்னார்.* |
| திருமதி. றீ. அருள்தாஸ் | - *3ம் கட்டை, பள்ளத்தோட்டம், திருகோணமலை.* |

## இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

| | |
|---|---|
| அருட்சகோதரி. அருள்மரியா | - *இல.88, ஆனந்தராஜகருண மாவத்தை, பொரல்ல. கொழும்பு-10,* |
| திருமதி. ஆர். சோதிநாதன் | - *விரிவுரையாளர்.* |
| திரு. எம். பாஸ்கரன் | - *விரிவுரையாளர்.* |
| திரு. சி. கிருஷ்ணபிள்ளை | - *விரிவுரையாளர்.* |
| திரு. வ. கனகசிங்கம் | - *முதல்வர்.* |
| திரு. செ. வினாசித்தம்பி | - *துணை முதல்வர்.* |
| திருமதி. கே. தவராஜரெட்ணம் | - *விரிவுரையாளர்.* |
| திருமதி நி. ரவீந்திரநாத் | - *விரிவுரையாளர்,.* |

## மூன்றாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

| | |
|---|---|
| திருமதி ஜே.ஜே. யோகேந்திரன் | - *விரிவுரையாளர்.* |
| திரு. பொ. காந்தியடியான் | - *விரிவுரையாளர்.* |
| திரு. மு. தேவராஜ முதலி | - *விரிவுரையாளர்.* |
| திரு பொ. கோவிந்தராஜா | - *விரிவுரையாளர்.* |
| திரு. வ. தெய்வேந்திரன் | - *விரிவுரையாளர்.* |
| திரு. க. வினாயக மூர்த்தி | - *விரிவுரையாளர்.* |
| திரு. எம். அருமைராஜா | - *விரிவுரையாளர்.* |
| திரு. எம். ரவீந்திரன் | - *விரிவுரையாளர்.* |
| திரு. கு. காராளசிங்கம் | - *விரிவுரையாளர்.* |

## நான்காம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

| | |
|---|---|
| திரு. எஸ். ஜோன் மோஸஸ் | - *இல.190, பிரதான வீதி, றக்குவானை.* |
| திருமதி. உ. விமலகுமாரன் | - *பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்.* |
| செல்வி. அ. றஜனி | - *இல 20/24, பண்டாரநாயக்க சதுரம், தலவாக்கலை.* |
| செல்வி. அ. ஈஸ்வரபாலகி | - *A3A5, புளுமெண்டல் பிளெட்ஸ், கொட்டாஞ்சேனை.* |
| திருமதி. வ. நவரட்ணம் | - *"தினேசவாஷா", துறைநீலாவணை-5.* |
| செல்வி. ஆ. மங்களேஸ்வரி | - *தென்னை நகர், தோப்பூர்.* |
| திருமதி. யோ. புண்ணியராஜா | - *கோட்டைக்கல்லாறு, கல்லாறு.* |
| திருமதி. இ. புவனேந்திரன் | - *இல.11/39, மத்திய முகாம், அம்பாறை.* |
| திருமதி. ப. ஜெயரட்ணம் | - *பிரதான வீதி, பெரிய போரதீவு.* |
| திரு. மு. மகாலிங்கம் | - *இல.11/65C, மத்திய முகாம், அம்பாறை.* |

## படத்திலுள்ள கனிஷ்ட மாணவர் விபரம் — 1998/1999

### கணித, விஞ்ஞானப்பிரிவு

**முன்வரிசையில் (இடமிருந்து வலமாக)**

| | |
|---|---|
| திரு. கே. விநாயகமூர்த்தி | - விரிவுரையாளர். |
| திரு. வீ. தெய்வேந்திரன் | - விரிவுரையாளர். |
| திரு. சீ. கிருஷ்ணப்பிள்ளை | - விரிவுரையாளர். |
| திரு. எம். பாஸ்கரன் | - விரிவுரையாளர். |
| திரு. வீ. லக்ஷ்மி சுந்தரம் | - பிரதி முதல்வர். |
| திரு. வீ. கனகசிங்கம் | - முதல்வர். |
| திரு. கே. நடராஜா | - விரிவுரையாளர். |
| திரு. கே. காராளசிங்கம் | - விரிவுரையாளர். |
| திரு. எஸ். அருமைராஜா | - விரிவுரையாளர். |
| திருமதி. ஜே.ஜே. யோகேந்திரன் | - விரிவுரையாளர். |
| திரு. எம். தேவராஜ முதலி | - விரிவுரையாளர். |

**இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

| | |
|---|---|
| திரு. கே. எல். பிரதீபன் | - இல.174, முனீஸ்வரம், சிலாபம். |
| திரு. கே. சுதாகரன் | - செல்வநகர், ஆரையம்பதி-02. |
| திரு. என். செந்திதாசன் | - பிரதான வீதி, தம்பிலுவில்-01. |
| திரு. கே. கனகசுந்தரம் | - பிரதான வீதி, தம்பிலுவில்-01. |
| செல்வி. எஸ். தேவராணி | - நட்டுண்கெட்டிய, றக்குவாணை. |
| செல்வி. ரீ. சாந்தி | - இல.69, உடையார் வீதி, கல்முனை-02. |
| செல்வி. பீ. உதயகுமாரி | - இல.34, கதிரேசு வீதி, வவுனியா. |
| திருமதி. எ. சுபத்திரா | - பிரிவு இல.02, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| செல்வி. எஸ்.பகவதி | - கோஸ்கொல்ல, ஹொரம்பாவ. |
| செல்வி. வி. சந்திரகலா | - பளுகாமம்-01, பெரியபோரதீவு. |
| திருமதி. ஜி. சவரி | - தென்றல் வீதி, தம்பிலுவில்-01. |
| திருமதி. ரீ. ரட்னேஸ் | - பிரிவு இல.02, புதுக்குடியிருப்பு. |
| செல்வி. கே. தட்சாயிணி | - சந்தைவீதி, தம்பிலுவில்-02. |
| செல்வி. பீ. ஜெகதாம்பிகை | - ஆலையடிவேம்பு வீதி, அக்கரைப்பற்று-07. |
| செல்வி. உமாபதி | - முதலியார் வீதி, அக்கரைப்பற்று. |
| திரு. கே. ராமகிருஸ்ணன் | - செட்டிபாளையம் தெற்கு, செட்டிபாளையம். |
| திரு. வீ. மோகன்ராஜ் | - ஒதும்பை, தெமோதரை, பதுளை. |
| திரு. ஏ. ஆனந்தராஜ் | - கரகெஸ்தன்ன, குருத்தலாவை. |
| திரு. கே. ஜெகதீஸ்வரன் | - இல.125, ஸ்ரேசன் வீதி, வவுனியா. |

**மூன்றாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

| | |
|---|---|
| திரு. ரீ. சத்தியசீலன் | - றூறல் கோட் வீதி, ஆரையம்பதி-02. |
| திரு. ஏ. விமலராஜா | - உயிர்த்த ராசன் குளம், முருங்கன், மன்னார். |
| திரு. ரீ. தேவராஜா | - பிரிவு இல. 06, மட்/துறைநீலாவணை |
| திரு. எம். தேவகிருபாகரன் | - புதுக்குடியிருப்பு, தம்பலகாமம். |
| திரு. ரீ. விஸ்வலிங்கம் | - லிங்கம் ஸ்ரோர்ஸ், பாண்டிருப்பு, கல்முனை. |
| திரு. எம். கங்கேஸ்வரன். | - கூனித்தீவு 09, மூதூர். |
| திரு. எஸ்.ஆர். பச்சேக் | - சென்/யூட் வீதி, பிரிவு இல-08, பேசாலை. |
| திரு. எம். பீ. டிறஞ்சன் | - ரீச்சர்ஸ் குவாட்டர்ஸ் பற்றிமா ஆர்.சி.ரி. கிளிநொச்சி. |
| திரு. பீ. ஆர். ஜீவானந்தம் | - இல-01, லவ் லேன், மட்டக்களப்பு. |
| திரு. வீ. மோகனதாஸ் | - "பரமேசகம்" முனைத்தீவு, பெரிய போரதீவு. |
| திரு. கே. சுரேஸ் | - இல-14, பாடசாலை வீதி, சிவநகர் பிரிவு-10, உருத்திரபுரம். |
| திரு. எஸ். ரவிச்சந்திரன் | - சாஸ்த்திரியார் வீதி, மொரக்கொட்டாஞ்சேனை. |
| திரு. எஸ். ராகுலகுமார் | - இல-95, மத்திய வீதி, மட்டக்களப்பு. |
| திரு. கே. உதயகுமார் | - இல.143, உமா மில் றோட், கொம்மாந்துறை, செங்கலடி. |
| திரு. எஸ். மதணரமணன் | - இல-01, ஏழாம் கட்டை, பசறை வீதி, டெபெத்த றெல்கத்தன. |
| திரு. பீ. பத்மநாதன் | - இல.111, கண்டி வீதி, மல்லவபிட்டிய. |
| திரு. எம். ரவீந்திரன் | - "மலரகம்", அப்ஸ்ரெயார் வீதி, வாழைச்சேனை. |
| திரு. டீ. சதீஸ்குமார் | - இல52, லோவர் பசார், பூண்டுலோயா. |
| திரு. எம். செந்தில்நாதன் | - "அம்பிறைவாசம்", காரைத்தீவு -02. |

கனிஷ்ட மாணவர் கணித - விஞ்ஞானப் பிரிவு



# கனிஷ்ட மாணவர் ஆரம்பப் பிரிவு - A



# கனிஷ்ட மாணவர் விபரம் - 1998/1999 ஆரம்பப் பிரிவு - A

**முன்வரிசையில் (இடமிருந்து வலமாக)**

செல்வி. ரீ. நித்தியராணி - *பனங்காடு, அக்கரைப்பற்று.*
செல்வி. எஸ். புஸ்பலதா - *அக்கரைப்பற்று -07.*
செல்வி. வீ. கௌரி - *"பரமேசகம்", முனைத்தீவு, பெரியபோரதீவு.*
செல்வி. எம். மஞ்சுளா - *பைப் வீதி, பாண்டிருப்பு - 02, கல்முனை.*
செல்வி. ஏ. வனிதா - *தம்பையா வீதி, காரைதீவு.*
செல்வி. ரீ. துவாரகாயினி - *ஜே 1/30 கௌசிங் கொலனி, என்.எப்.சி.*
செல்வி. கே. லட்சுமிப்பிரியா - *பிரதான வீதி, கொம்மாதுறை.*
செல்வி. பீ. பவானிதேவி - *இல. 28/3 லோவர் வீதி, உவர்மலை.*
செல்வி. எம். ஜெயந்தி - *புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.*
திருமதி. இ. இளையதம்பி - *வன்னியார் வீதி, அக்கரைப்பற்று-08.*
திருமதி. பீ. உதயகுமார் - *அட்டப்பள்ளம், நிந்தவூர்-10.*

**இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

திரு. எஸ். இரவீந்திரன் - *விரிவுரையாளர்.*
திரு. எஸ். அருமைராஜா - *விரிவுரையாளர்.*
திரு. கே. காராளசிங்கம் - *விரிவுரையாளர்.*
திரு. எம். பாஸ்கரன் - *விரிவுரையாளர்.*
திரு. சீ. கிருஷ்ணபிள்ளை - *விரிவுரையாளர்.*
திரு. வே. லக்ஷ்மி சுந்தரம் - *பிரதி முதல்வர்.*
திரு. வி. கனகசிங்கம் - *முதல்வர்.*
திரு. கே. நடராஜா - *விரிவுரையாளர்.*
திரு. வ. தெய்வேந்திரன் - *விரிவுரையாளர்.*
திருமதி. ஜே. ஜே. யோகேந்திரன் - *விரிவுரையாளர்.*
திரு. எம். தேவராஜ முதலி - *விரிவுரையாளர்.*
திரு. கே. வினாயகமூர்த்தி - *விரிவுரையாளர்.,*

**மூன்றாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

திரு. எம். யோகராஜன் - *சந்தை வீதி, அக்கரைப்பற்று.*
திரு. எம். குணசேகரம் - *மட்/தேத்தாத்தீவு-01.*
செல்வி. கே. கங்கேஸ்வரி - *பாடசாலை வீதி, மாங்காடு.*
செல்வி. எம். மலர்விழி - *தபாலக வீதி, கன்னங்குடா.*
திருமதி. எம். ஜெயப்பிரகாஸ - *ஆர். டி. எஸ். வீதி, பெதாளை, வாழைச்சேனை.*
செல்வி. கே. கமலாம்பிகை - *காயான்மடு, கன்னங்குடா.*
செல்வி. வீ. சசிகலா - *45ஏ, ஆலையடிவேம்பு.*
செல்வி. ஈ. யோகேஸ்வரி - *சாகாம ரோட், அக்கரைப்பற்று-08.*
செல்வி. எஸ். சாருலதா - *கோவில் வீதி, ஆலையடிவேம்பு.*
செல்வி. கே. ஜி. ஞானமலர் - *மீராஓடைச்சந்தி, வாழைச்சேனை.*
செல்வி. ஜே. லியோனி - *திருமலை வீதி, வாகரை.*
செல்வி. பீ. சுகந்தினி - *இல. 229, பேராற்று வெளி, கந்தளாய்.*
செல்வி. ஏ. தமிழ்வாணி - *பாடசாலை வீதி, குருக்கள் மடம்.*
செல்வி. ஏ. பிரதட்சணி - *13/104, மத்திய முகாம்.*
செல்வி. வி. சுகிர்தராணி - *கன்னங்குடா - 02.*
செல்வி. எஸ். லோகினி - *திருமலை வீதி, வாகரை.*
செல்வி. எம். கங்கேஸ்வரி - *சிவன்கோவில் வீதி, செட்டிப்பாளையம்.*
திருமதி. கே. சுபாச்சந்திரன் - *192/02, திருமலை வீதி, வாகரை.*
திருமதி. ஜே. நாகேந்திரகுமார் - *விநாயகர் வீதி, சேத்துக்குடா.*
திரு. ஏ. ரவிசங்கர் - *பன்குடா வெளி, செங்கலடி.*
திரு. எஸ். தயாபரன் - *ஒழுங்கை இல.07, கல்லடி.*

## நான்காம் வரிசையில் (இடமிருந்து வலமாக)

| | |
|---|---|
| திரு. எஸ் ஜெயந்திரன் | - பிரதான வீதி, கோட்டைக்கல்லாறு. |
| திரு. எம். ரவீந்திரன் | - கோளாவில்-01. |
| திரு. கே. பாலச்சந்திரன் | - 181, விபுலானந்தர் வீதி, பொத்துவில் - 11. |
| திரு. எஸ் ரவீந்திரக்குமார் | - 161, அம்மன்கோவில் வீதி, கல்முனை - 02. |
| திரு. கே. விஜயகுமார் | - கோவில் வீதி, திருக்கோவில். |
| திரு. என். ரவீந்திரன் | - காளிகோவில் வீதி, தேவபுரம், மொறக்கொட்டாஞ்சேனை. |
| திரு. பீ. கிருபாகரன் | - ஈச்சந்தீவு, நாவற்காடு. |
| திரு. ஈ. சசிகரன் | - சித்தாண்டி -02. |
| திரு. பீ. சுந்தரலிங்கம் | - பிரிவு -05, சித்தாண்டி. |
| திரு. ஏ. அன்ரனிலீனஸ் | - இல.03ஏ, ஸ்ரீரன் வீதி, மட்டக்களப்பு. |
| திரு. ரீ. கேதீஸ்வரன் | - கோரவெளி வீதி, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை. |
| திரு. எஸ். கந்தசாமி | - கோவில் வீதி, மொறக்கொட்டாஞ்சேனை. |
| திரு. எஸ். மங்களச்சந்திரா | - திருமலை வீதி, வாகரை. |
| திரு. ஈ.என். குரூஸ் | - இல. 36/9 வைத்தியசாலை வீதி, மட்டக்களப்பு. |
| திரு. ஆர். கண்ணதாசன் | - பிரதான வீதி, தம்பிலுவில்-02. |
| திரு. பீ. நாகராஜா | - வில்லியம் பிள்ளை வீதி, தம்பிலுவில். |
| திரு. ரீ. தயாபரன் | - துறைநீலாவணை- 08. |
| திரு. எஸ். யமுனாகரன் | - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை. |
| திரு. ரீ. மதிவண்ணன் | - சந்தைவீதி, வந்தாறுமூலை. |
| திரு. கே. பிரதாகர் | - பத்தினியார் கோவில் வீதி, ஏறாவூர். |
| திரு. கே. கோணேஸ்வரன் | - திருமால் வீதி, களுவாஞ்சிக்குடி. |
| திரு. கே. டி. நிராஜன் | - கடற்கரை வீதி, திருக்கோவில். |
| திரு. என். ரொபேட் ரவீந்திரன் | - உடையார் வீதி, களுவாஞ்சிக்குடி. |
| திரு. எஸ். கலைக்குமார் | - அட்டப்பள்ளம், நிந்தவூர் - 10. |

## படத்தில் இல்லாதோர்

| | |
|---|---|
| செல்வி. ஆர். சுகுணகலா | - பிரதானவீதி, குருக்கள் மடம், |
| செல்வி. கே. இந்திராகாந்தி | - கன்னங்குடா. |

கனிஷ்ட மாணவர் ஆரம்பப் பிரிவு - B





# படத்திலுள்ள கனிஷ்ட மாணவர் விபரம் – 1998/1999

## ஆரம்பப்பிரிவு – B

**முன்வரிசையில் (இடமிருந்து வலமாக)**

செல்வி. எஸ். நவஜோதி - *திருமலை வீதி, வாகரை.*
செல்வி. கே. சுகுணா - *இல.428,பிரிவு4, வாரிங்ககுட்டியூர், வவுனியா.*
செல்வி. ஆர். ரூபவதி - *இல.32/3, முரசுமோட்டை, பரந்தன்.*
செல்வி. கே. சிவநாயகி - *கள்ளிமேடு, தம்பலகாமம்.*
திருமதி. ஏ.வீ. பாமினி - *இல.50, சிவபுரி, திருகோணமலை.*
திருமதி. கே. நவரட்ணராஜா - *வினாயகபுரம், ஈச்சிலம்பற்றை.*
செல்வி. எஸ். திசுபத்மினி - *பிரிவு இல.08 கேணித்தீவு, சம்பூர்.*
செல்வி. ரி. லீலாராணி - *இல.76, பெரியதம்பனை, வவுனியா.*
செல்வி. எஸ். ஜெயானந்தி - *பிள்ளையார் கோவில் வீதி, மயிலம்பாவெளி.*
செல்வி. ரீ. சுதர்ஷனி - *183, பழைய கல்முனை வீதி, நொச்சிமுனை.*

**இரண்டாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

திரு வீ. தெய்வேந்திரன் - *விரிவுரையாளர்.*
திரு. எஸ். இரவீந்திரன் - *விரிவுரையாளர்.*
திரு. எஸ். அருமைராஜா - *விரிவுரையாளர்.*
திரு. சி. கிருஷ்ணப்பிள்ளை - *விரிவுரையாளர்.*
திரு. எம். பாஸ்கரன் - *விரிவுரையாளர்.*
திரு. வீ. லக்ஷ்மி சுந்தரம் - *பிரதி முதல்வர்.*
திரு. வீ. கனகசிங்கம் - *முதல்வர்.*
திரு. கே. நடராஜா - *விரிவுரையாளர்.*
திரு. கே. காராளசிங்கம் - *விரிவுரையாளர்.*
திருமதி. ஜே.ஜே. யோகேந்திரன் - *விரிவுரையாளர்.*
திரு. எம். தேவராஜ முதலி - *விரிவுரையாளர்.*
திரு. கே. விநாயகமூர்த்தி - *விரிவுரையாளர்.*

**மூன்றாம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

திரு. கே. இரவீந்திரன் - *167, பிரதான வீதி,"அன்பு இல்லம்", திருகோணமலை.*
திரு. ரீ. சதீஸ்வரன் - *பிரிவு இல.04, சம்பூர், மூதூர்.*
செல்வி. ஜி. தங்கம்மா - *பாணமைப்பற்று, கோமாரி -01.*
திருமதி. வீ. பிரபாகரன் - *ஊவா ஹையிலன், பண்டாரவளை.*
செல்வி. எஸ். ஆனந்தி - *இல.46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.*

செல்வி. ரீ. சுபாஜினி - *இல.02, சமாது லேன், திருகோணமலை.*
செல்வி. கே. வாசுகி - *சிவன் கோவிலடி, ஒட்டிச்சுட்டான்.*
செல்வி. எஸ். அருந்ததி - *பூ நகர், ஈச்சிலம்பற்றை.*
செல்வி. ஏ. கீதா - *97/ஏ/1, ஒறேஞ்பீல்ட், றக்குவானை.*
செல்வி. எஸ். பாலேஸ்வரி - *730, மேற்குக் கொலனி, தம்பலகாமம்.*
செல்வி. வீ. செண்பகாதேவி - *"அன்பு இல்லம்" 167, பிரதான வீதி, திருகோணமலை.*
செல்வி. வை. பிரேமினி - *இல.04, தக்கியா வீதி, திருகோணமலை.*
செல்வி. கே. உஷாநிதி - *இல.50, சிவபுரி, திருகோணமலை.*
செல்வி. எஸ். கே. ஏ. சச்சி - *இல.32, வைத்தியசாலை வீதி, மன்னம்பிட்டி.*
செல்வி. கே. உதயகுமாரி - *பிரதான வீதி, ஈச்சிலம்பற்றை.*
திருமதி. எம். அரியரட்ணம் - *479/3, புதுக்கல்முனை வீதி, நாவற்குடா.*
திரு.எஸ். மகேந்திரா - *240/10, திரு ஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.*
திரு. ஆர். தேவராசா - *இல.56, கொலனி வீதி, மன்னம்பிட்டி.*

**நான்காம் வரிசையில் (இடமிருந்து வலமாக)**

| | |
|---|---|
| திரு. ரீ. புவனேஸ்வரன் | - *பிரிவு இல.06, சம்பூர், மூதூர்.* |
| திரு. எஸ். மோகனேஸ்வரன் | - *273, லிங்கபுரம், கிளிவெட்டி.* |
| திரு. வீ. சுரேஸ்குமார் | - *பிரிவு இல.06, ஈச்சிலம்பற்றை, மூதூர்.* |
| திரு. எஸ். கமலநாதன் | - *திருமலைவீதி, வாகரை.* |
| திரு. கே. பாஸ்கரன் | - *இல.203, கரப்பள்ளை, செவனப்பிட்டிய.* |
| திரு. எஸ். பிரகாஸ் | - *73/2 வார் றோட், மட்டக்களப்பு.* |
| திரு.எஸ். மாதவன் | - *விபுலானந்தா வீதி, வாழைச்சேனை.* |
| திரு. வீ. பிரபாகரன் | - *பிரிவு இல.02, கட்டைபறிச்சான், மூதூர்.* |
| திரு. ஏ. றொபேட் கரன் | - *புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.* |
| திரு. எல். நாகலிங்கம் | - *பிரிவு இல.06, ஈச்சிலம்பற்றை, மூதூர்.* |
| திரு. எம். விஜயராஜா | - *ஆர்/பி4, தங்கநகர் கிளிவெட்டி.* |
| திரு. ஜி. திருநாவுக்கரசு | - *டீ.வீ.கே. இல்லம், ராஜபுரம், கரடியனாறு.* |
| திரு. ரீ. செல்வகுமார் | - *ஸ்பிரீங் வூட், றக்குவானை.* |
| திரு. வீ. நடராஜசேகரம் | - *பளுகாமம்-01.* |
| திரு. டீ.ஜி.பி. நிரஞ்சன் | - *இல.12, கருணை புரம் வாழைச்சேனை.* |
| திரு. ஏ. முரளீதரன் | - *154, வீரபுரம், நேரியகுளம்.* |
| திரு. கே. சிவராஜா | - *அரசடித்தீவு வடக்கு, கொக்கட்டிச்சோலை.* |
| திரு. ஜீ.ஏ. ஞானசீலன் | - *இல.71, குட்செற் றோட், வவுனியா.* |
| திரு. கே. தேவராஜா | - *சேச் வீதி, மூதூர்-07.* |
| திரு. பீ. ராஜாதம்பித்துரை | - *நாயக்கர் சேனை, மண்புரி.* |
| திரு. ஏ. மனோகரன் | - *மகிழூர், களுவாஞ்சிகுடி.* |
| திரு. ரீ. கோணேஸ்வரன் | - *திருமலை வீதி, 49, மைல் போஸ்ட், மாவடிச்சேனை.* |
| திரு. கே. சச்சிதானந்தம் | - *மாங்காடு, செட்டிப்பாளையம்.* |
| திரு. கே. கருணாமூர்த்தி | - *37/1, சணல் லேன், திருகோணமலை.* |

# நன்றி சொல்லும் வேளையிது !

தமிழ்த்தாயின் பாதங்கள் எழில்பெறும் வண்ணம் ஆண்டுதோறும் எமது கலாசாலை முத்தமிழ் மன்றமானது 'கலைச்செல்வி' எனும் நறுமலரை தமிழ் அன்னைக்கு சமர்ப்பணம் செய்கின்றது. இவ்வரும் பணியில் இணைந்ததால் யாம் இன்புற்றிருக்கும் இவ்வேளையில்,

இம்லர் வெளியிட்டுக்கு ஒத்துழைப்பும், ஆலோசனையும் வழங்கிய
கலாசாலை முதல்வர், விரிவுரையாளர்கள்

மலர் சிறப்பாக மலர்வதற்கு சீரிய வழியில் நெறிப்படுத்திய
திரு. செ. வினாசித்தம்பி (துணைமுதல்வர்)
திரு. பொ. கோவிந்தராஜா (விரிவுரையாளர்)

செல்வியை அழகுபடுத்தும் முன்அட்டையை வடிவமைத்த
திரு. எஸ். ரவீந்திரன் (பகுதி நேர விரிவுரையாளர்)

கலாசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றிய
சகல ஆசிரிய மாணவர்கள்

நடுவர்களாக இருந்து ஆக்கங்களைத் தெரிவு செய்து அவற்றை செம்மைப்படுத்த உதவிய
திரு. செ. வினாசித்தம்பி (துணைமுதல்வர்)
திரு. சி. கிருஷ்ணபிள்ளை (பகுதி நேர விரிவுரையாளர்)
திரு. எம். பாஸ்கரன் (பகுதி நேர விரிவுரையாளர்)

சிந்தனையைத்தூண்டும் கட்டுரைகள், நெகிழ வைக்கும் கவிதைச்சரங்கள், சமகால
நிகழ்வுகளைச்சித்தரிக்கும் சிறுகதைகள், மேலும் பல ஆக்கங்கள் என்பவற்றை
வழங்கிய ஆசிரிய மாணவர்கள்

மலரின் இதழ்களுக்கு
ஆசியுரை வழங்கிய மிஷன் தலைவர், மேதகுஆண்டகை, வாழ்த்துக்கூறிய
அறிஞர்கள் ஆக்கங்களை மனமுவந்தளித்த பேராளர்கள், விரிவுரையாளர்கள்
மன்ற அறிக்கைகளை தொகுத்தளித்த மன்றச்செயலாளர்கள்

விளம்பரம் தந்துதவிய
வர்த்தகர்கள்

மனமுவந்து நிதியுதவி வழங்கிய
சகல ஆசிரிய மாணவர்கள்

புகைப்படங்களை அழகுற எடுத்த
படப்பிடிப்பாளர் திரு. சி. கஜன் அவர்கள்

இம்மலரை உருவம் கொடுத்து கணனி முறையில் அச்சேற்றி வெளியிட்ட
மருதமுனை இளம்பிறை பதிப்பகத்தார்,
மருதமுனை ஜன்னா ரைப்செற்றிங் நிறுவனத்தார்,
வடிவமைப்பு செய்த பாண்டிருப்பு ஜீவா அவர்கள்

மேலும் பல உதவிகள் நல்கிய
கலாசாலை காரியாலய அலுவலர்கள்

மலருக்காக சகல விதத்திலும் மனமகிழ்வுடன் பணியாற்றிய
முத்தமிழ் மன்றத்தினர்
மலராக்கக் குழுவினர்

அத்துடன் இம்மலரின் சிறப்பிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணைபுரிந்த அனைத்து
நெஞ்சங்கள் மேற்கூறிய அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பில்
உளங்கனிந்த நன்றிகளை நவில்வதில் உவகை அடைகின்றோம்.

நன்றி.

250062

LIBRARY
UNIVERSITY OF JAFFNA

ARCHIVES

LIBRARY
UNIVERSITY OF JAFFNA

University of Jaffna
250061
Library


250061

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன வடிவமைப்புக்களில் அமைந்த திருமண அழைப்பிதழ்கள்.

எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பொருத்தமான காட்டுகள் (Cards) எல்லாத்தரங்களிலும் விலைகளிலும் உண்டு.

**மிகவும் நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

- VPP ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
- நாடு பூராகவும் விற்பனை முகவர்கள் தேவை.



உடன் தொடர்பு கொள்ளவும்

யூகே UKAAYE

**F-87, PEOPLES PARK, COLOMBO-11.**

**Telephone : 326810. Fax : 421571.**

**கிளை - 42/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.**

**Telephone : 065/23283.**

Cover Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13.